SrIrangam rAjagopura nirmAna kaimkaryam

(HH 44th paTTam SrImad Azhagiya Singar's
aruL mozhigaL as appeared in SrI nrusimha Priya magazine)



Compiled by

SrImaTham sishyas

sadagopan.org



SrIranganAthar - SrIrangam

Source for the text in this eBook: SrI nrusimha priya magazine.

Sincere thanks to : 1) Oppiliappan Koil SrI varadAchAri SaThakopan swami for hosting this title in SrIhayagrivan eBooks series. 2)Nedumtheru SrI Mukund Srinivasan, SrI Parthasarathy and Smt Jayashree Muralidharan for compiling/ assembling the text.

CONTENTS

SrIrangam rAjagOpuram kaimkaryam -

44th paTTam SrImad Azhagiya Singar's aruL mozhigaL 1 - 121

sadagopan.org

sadagopan.org

HH 44th paTTam MukkUr SrImad Azhagiya Singar

ஸ்ரீரங்க திவ்யதம்பதி

ஸ்ரீஅழகியசிங்கரின் அருள்மொழி
ஸ்ரீரங்கம் தெற்கு ராஜகோபுரத்தின் மேல்பாக கைங்கர்யத்தின் துவக்கம்

श्रीरङ्गनाथदिव्याज्ञाप्रेरितोऽहं शुभे दिने ।
राजगोपुरसंपूर्तिं कर्तुमिच्छामि तन्मनाः ॥
सर्वे भवन्तः शिष्याश्च सुहृदश्च मनस्विनः ।
अनुकूलाश्च दातारो भवेयुरिति वेदम्यहम् ॥

ஸ்ரீரங்கநாததிவ்யாஜ்ஞாப்ரேரிதோஹம் ஶுபே தினே |
ராஜகோபுரஸம்பூர்த்திம் கர்த்துமிச்சாமி தந்மநாः ॥
ஸர்வே பவந்தः ஶிஷ்யாஶ்ச ஸுஹ்ருதஶ்ச மநஸ்விநः|
அநுகூலாஶ்ச தாதாரோ பவேயுரிதி வேத்ம்யஹம் ॥

sadagopan.org

sadagopan.org

ஸ்ரீ அஹோபிலமடத்தில் எழுந்தருளியிருந்த மதுரகவிகளான நாற்பத்தொன்று ஆசார்யர்களுடைய அநுக்ரஹ விசேஷத்தால் இப்பொழுது ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஆசார்ய ஸ்தானத்தை வஹித்து ஸமாச்ரயணை, பரந்யாஸ, காலக்ஷேபாதிகளை யதாசக்தி நடத்திக்கொண்டு வருகிறேன். எண்பத்தைந்து வயதான ஒரு கிழவன் நான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்த வயதில் ஸ்ரீரங்கநாதன் என் நெஞ்சில் புகுந்துகொண்டு 'அந்த ப்ரவிஷ்டட: ஸாஸ்தா, என்கிறபடி, எப்பொழுதும் இடைவிடாமல் நியமிக்கிறான்.

அதாவது நான் தெற்கு முகமாகப் படுத்துக்கொண்டு விபீஷண ராஜ்யமான இலங்கையையும் பார்த்துக்கொண்டு இருப்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே? கனகிதெற்குக் கோபுரம் பூமியிலிருந்து நாற்பத்தாறு அடி உயரம் கட்டி மேலே மூடியிருப்பதும் தெரிந்ததே. அதற்கு மேல் என் பத்தினியான ஆண்டாளின் தேசமான ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரத்தைப் போல் பதினொரு நிலைகள் (மாடிகள்) கட்டிச் சிகரங்கள் கட்டினால்தானே எனக்கும் பெருமையாக இருக்கும்?

''சுமார் நாலு வருஷகாலமாக உனக்கு ஞாபகப்படுத்திக் கொண்டு வருகிறேன். ஸ்ரீ அஹோபிலத்தில் ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹன் ஸந்நிதி ராஜகோபுரத்தைக் கட்டிவிட்டாய். நாலும் மடத்தில் வெள்ளி மண்டபத்தில்தானே படுத்துக் கொண்டிருக்கிறேன்! வஞ்சனை வேண்டாம்! சீக்கிரம் எனக்கும் கோபுரத்தின் மேல்பாகத்தைக் கட்டி முடித்துவை. அரசாங்கத்திலும் தேவஸ்தான அதிகாரிகள் மனஸ்விலும் புகுந்து சீக்கிரம் உத்தரவு கொடுக்கும்படி பண்ணுகிறேன். கவலை வேண்டாம்'' என்று இரண்டு மூன்று மாதமாக நியமித்துக்கொண்டிருக்கிறான் ஸ்ரீரங்கநாதன். அதற்குத் தகுந்தாற்போல் ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனும் நியமிக்க ஆரம்பித்துவிட்டான். எனக்கு உள்ள அசக்தியை நினைத்து எவ்வளவோ அவர்களிடத்தில் வேண்டிக் கொண்டேன். ''நீதான் இந்தக் காரியத்தை ஆரம்பித்து முடித்து வைக்க வேண்டும்'' என்று தைரியம் சொல்லி நியமித்திருக்கிறான் ஸ்ரீரங்கநாதன்.

''இவ்வளவு காலம் ஏன் தேவரீர் கோபுரத்தைத் திருவுள்ளம் பற்றவில்லை?'' என்று அடிக்கடி கேட்கிறேன்.

''உனக்காகத்தான் இதுவரை காத்திருந்தேன். வீணைக் காலத்தைப் போக்காதே: பிரயத்னம் செய்'' என்று உறுதியாக நியமித்துவிட்டான். பிரயத்னம் செய்தேன்' பலமாக்கி விட்டான். அரசு உத்தரவும் கிடைத்துவிட்டது. ரூபாய் ஒரு லக்ஷம் தேவஸ்தானத்தில் கட்டியும் விட்டேன்.

கோபுரம் பூர்த்தியாவதற்குச் சுமார் இருபது லக்ஷம் ஆகும் என்று ஸ்ரீரங்கநாத ஸ்வாமி தேவஸ்தான அதிகாரிகள் அபிப்பிராயப்பட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். இது விஷயம் தினசரிப் பத்திரிகைகளிலும் பிரகராமாகிவிட்டது. பத்திரிகைகளைப் பார்த்தவுடன் முதலில் கொஞ்சம் பயம் ஏற்பட்டது. பிறகு ஸ்ரீரங்கநாதனே தைரியத்தை உண்டுபண்ணினான். ''பணத்துக்குக் கவலைப்படவேண்டாம் 'தேஸோ விசால: ப்ரபவோ ப்யதந்தா:-

பெரிய தேசம்: தனிகர்களும் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள் வெகு நாளாக இல்லாத இந்தக் கோபுர நிலைகளை (மாடிகளை)க் கட்டுவதற்குப் பரம ஆஸ்தையோடு முன்வருவார்கள், வெகு சீக்கிரத்தில் கவலை இல்லாமல் கட்டி முடித்து விடலாம்" என்று ஸ்ரீரங்கநாதன் நியமித்திருக்கிறது போல் தோன்றுகிறது.

நானும் யோசித்துப் பார்த்தேன்: 'இந்தக் காரியத்தை ஆரம்பித்து, இது பர்யந்தம் எல்லா விஷயமும் அநுகூலமாக முடிந்திருக்கும்போது இந்தக் கைங்கர்யத்தைச் செய்யாமல் நிறுத்திவிட்டால் எத்தனையோ லக்ஷக்கணக்கானவர்கள் கைதட்டிச் சிரிப்பார்களே! நம்மடத்தில் கீர்த்திக்கும் குறைவல்லவா? ஆகையால் எப்படியாவது செய்து முடிக்கவேண்டும்' என்று நிர்மாணம் செய்து விட்டேன்.

மடத்துச் சிஷ்யர்களையோ அபிமானிகளையோ கேட்டுப் பணம் ஸம்பாதித்து ராஜகோபுரத்தைக் கட்ட மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. என் அபிப்பிராயத்தை அறிந்த அனேக சிஷ்யப் பிரமுகர்கள், "இதரர்களைக் கேட்டு வாங்கிக் கட்ட வேண்டாம். எங்களுக்கும் அந்தக் கோபுர கைங்கர்யத்தில் ஸம்பந்தம் இருக்க வேண்டாமா? நாங்களும் அந்தப் புண்ணியத்தை அடைய வேண்டாமா? ஆகையால் எங்களுக்குப் பெருமான் தோன்றப்பண்ணுகிறபடி நாங்களாக ஸமர்பிக்கும் திரவியத்தை அழுயெங்கர் ஸ்வீகரித்து, கோபுர கைங்கர்யத்தில் சேர்த்து, எங்களை தன்யர்களாக்க வேண்டும்" என்று நிர்ப்பந்தம் செய்கிறார்கள்.

அவர்களுடைய உற்சாகத்தைப் பார்த்தால், மடத்துக்குச் செலவே இல்லாமல் கட்டி முடித்துவிடலாம் போல் இருக்கிறது. சரண்யன் கிருபையால் எது எப்படி வேண்டுமானாலும் நடக்கட்டும்' என்று நிர்மானித்திருக்கிறேன். சித்திரை மாதக் கடைசிக்குள் ஸ்ரீரங்கம் போய்ச் சேர்ந்து, அங்குள்ள தேவஸ்தான நிர்வாக அதிகாரிகளையும், என்ஜினியர்களையும் கலந்து ஆலோசித்துக் கட்டவேண்டிய விஷயத்தைத் நிர்மாணித்து வைகாசி முதலில் கட்டிடவேலை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளேன். முன்பு கட்டின ஒரு லக்ஷத்துடன் மேலும் ஐந்து லக்ஷம் ரூபாய் எடுத்துச் செல்ல நிட்டமிட்டிருக்கிறேன்.

யார் எவ்வளவு பணம் கொடுத்தாலும் இப்பொழுது வாங்குவதில்லை. கட்டவேண்டிய பதினேழு நிலைகளில் (மாடிகளில்) இரண்டு நிலைகள் கட்டி முடித்த பிறகு, மூன்றாவது நிலை கட்ட ஆரம்பித்த பிறகுதான், நிர்ப்பந்தம் இல்லாமல் ஸந்தோஷத்தோடு அவர்களாகவே முன்வந்து கொடுக்கும் திரவியத்தை யோசித்து ஸ்ரீரங்க திவ்ய தம்பதிகள் நியமனமாஸல் வாங்கிக் கொண்டு கோபுர கைங்கர்யத்தில் சேர்த்துக் கொள்ள உத்தேசித்திருக்கிறேன்.

நான் கோபுரத்தைக் கட்டி முடிக்காமல் மத்தியில் ஸ்ரீவைகுண்டம் போய்விட்டேனேயானால், எனக்குப்பின் இந்த ஸ்தானத்திற்கு வரும் ஸ்ரீமடாதிபதி பூர்த்தி செய்துவிடுவார்.

சிஷ்யர்கள் சக்தி உள்ளவர்களோ, சக்தி இல்லாதவர்களோ, தங்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கடன் வாங்கியாவது

sadagopan.org

கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் செய்வது போல். நூறு ரூபாய்க்குக் குறையாமல் அந்த அழகியசிங்கரிடத்தில் கொடுத்தால் சுலபமாகக் கோபுரத்தைக் கட்டிவிடுவார் என்பது நிச்சயமான விஷயம். அல்லது நானே ஸ்ரீலக்ஷ்மீநரசிம்ஹன் காடாக்ஷத்தால் கோபுரம் கட்டி முடிக்கவேண்டிய அளவு பணத்தை வங்கியில் தனியாக போட்டுவிட்டு ஸ்ரீவைகுண்டம் போனாலும் வருகிற ஸ்ரீ அழகியசிங்கர் உத்ஸாஹத்துடன் கட்டி முடித்துவிடுவார். எப்படி இருந்தாலும் ஆரம்பித்த காரியம் முடிந்தேவிடும்.

"ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் பூர்ண விச்வாஸத்தோடு எப்படி நியமித்தாலும் செய்ய சித்தமாக அனேகம் பேர் இருக்கிறார்களே. அவர்களுக்கு இவ்விஷயத்தை நியமித்தால் உற்சாகத்தோடு செய்து முடித்துவிடுவார்களே" என்று என்னைக் கேட்கிறார்கள். "என்னால் இந்தக் கோபுரம் கட்டி முடிக்க முடியாது" என்று எப்போது தோன்றுகிறதோ, அந்த ஸமயத்தில் அவர் களைக் கேட்கும்படி ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹன் நியமித்தால் கேட்கும் படியாக இருக்கலாம். இப்பொழுது பணத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறபடி யோசித்துப் பார்த்தால் யாரையும் சிரமப் படுத்த வேண்டியதில்லை என்ற எண்ணமே பூர்ணமாக இருக்கிறது.

இதனால் தங்களைக் கலந்து கோபுரம் கட்ட ஸ்ரீமதழகிய சிங்கர் ஆரம்பிக்கவில்லையே என்று பெரிய தனிகர்களான ச்ரேஷ்யர்களுக்கு என்னிடத்தில் வருத்தம் இருந்தாலும் இருக்கலாம். அவர்களைக் கலக்காமல் செய்வதற்கு முக்யமான காரணங்கள் இருக்கின்றன.

அந்தத் தனிகர்கள் நம் மடத்திற்கு அநுகூலமான அனேக கைங்கர்யங்களை உத்சாகத்தோடு அனேக லக்ஷரூபாய் செலவில் செய்து கொண்டு வருகிற படியால், இந்தச் செலவையும் அவர் களுக்கு உண்டுபண்ண இஷ்டம் இல்லாததுதான் முக்ய காரணம். அதனால் அவர்களே யோசித்துப் பார்த்தால் என்னிடத்தில் கோபம் கொள்ளமாட்டார்கள் என்று திடமாக நம்புகிறேன்.

இந்த விஷயத்தில் என்னைப் பரிஹாஸம் செய்கிறவர்களும் இருக்கிறார்கள். "ஏதோ பொழுதுபோக்குக்கு வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்" என்றும் சிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது ஒரு லக்ஷம் ரூபாய் கோயில் அதிகாரிகளிடம் கட்டின விஷயத்தைத் தினசரிப் பத்திரிகைகளில் படித்துவிட்டு ஒருவிதமாக ஸந்தோஷமடைந்து எனக்குக் கடிதம் போடுகிறார்கள்.

நான் புகழ் வருவதற்காக இந்தக் காரியத்தில் இறங்கவில்லை. இதனால் மடத்திற்கு லாபம் கிட்டும் என்ற எண்ணத் தோடும் ஆரம்பிக்கவில்லை. மேலும், மடத்துக்கு உள்ள சொத்துக்களைச் செலவழித்துவிட வேண்டும் என்ற எண்ணம் என்ன ளவும் இல்லை.

sadagopan.org

ஸ்ரீரங்கநாதனுடைய திருடமான நியமனத்தினால்தான் நான் ஆரம்பிக்கிறேன். 'ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே ஸ்வயமேவ காரயதி,— வெகு சீக்கிரத்தில், 'ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே ஸ்வயமேவகாரிதவான்' என்றும் ஓர் அருள்மொழி எழுதும்படி ஸ்ரீரங்கநாதன் அநுக்ரஹம் பண்ணவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

என்னிடத்தில் அன்புள்ளவர்கள் எல்லோரும் ஸ்ரீரங்கநாதனைப் பிரார்த்தனை செய்துகொண்டிருப்பீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

சுபமஸ்து

ஸ்ரீ அழகியசிங்கரின்
அருள்மொழி

இந்த ஸித்தார்த்த வருஷம் நமக்கு முக்கியமான வருஷங்களில் ஒன்றாகும். ஏனென்றால் நம் ஸ்ரீமதஹோபில மடத்தில் முதல் ஸ்ரீமதழகியசிங்கராக எழுந்தருளி, லக்ஷ்மீ நரஸிம்ஹனை ஆராதித்துக் கொண்டும், ஸ்ரீ நரஸிம்ஹன் நியமனத்தால் திவ்யதேச ஸஞ்சாரம் செய்து -ஆச்ரிதரக்ஷணத்தோடு திவ்யதேசங்களில் அநேக விதமான ஜீர்ணோத்தாரண கைங்கர்யங்களையும் செய்து கொண்டு வந்த ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய 600 ஆவது திருநக்ஷத்திரம் பூர்த்தி பெறுவது இந்த ஸித்தார்த்த வருஷப் புரட்டாசித் திருக்கேட்டையிலே யாகையால் இந்த வருஷம் எல்லா வருஷங்களைக் காட்டிலும் மேன்மை பெற்று விளங்குகிறது என்பதில் ஸந்தேஹமில்லை.

இந்த வருஷம் சித்திரை மாதம் முதலே அநேக சுப ஸமாசகங்கள் நிகழ்ந்து வருகின்றன. இவற்றுக்கு ஏற்ப, ஸ்ரீரங்கநாதனுடைய தெற்கு கோபுர மேல்பாகத்தில் பதினைந்து நிலைகள் கட்டி அந்த ராஜகோபுரத்தை பூர்த்தி செய்து ஸ்ரீரங்கத்தை சோபிக்கும்படி பண்ணி, ஸம்ப்ரோக்ஷணத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்ற உறுதியுடன் வேலையைத் துவங்கியிருப்பது சுபங்களில் மிக முக்கியமான சுபமாகும்.

sadagopan.org

இந்தத் திருப்பணி, ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய 600 ஆவது திருநக்ஷத்ரத்தின் கொண்டாட்டமாக அமைத்திருப்பது. ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனுடையவும் ஸ்ரீரங்கநாதனுடையவும் அநுக்ரஹத்தால்தான் என்பது கையில் கனிபோல் காணப்பெறுகிறது. தாமாகவே எல்லாம் அமைந்து வருகிறது.

இந்த அறுநூறாவது வருஷக் கொண்டாட்டத்தை அனேக நகரங்களிலும், அனேக திவ்யதேசங்களிலும், அனேக ஸ்ரீக்ராமங்களிலும் நடத்துவார்கள் என்பதில் எள்ளளவும் ஸந்தேஹமில்லை. இவ்விஷயத்தில் நானொன்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த உலகில் மனிதராகப் பிறந்தவர்கள் ஆண்களோ பெண்களோ யாராக இருந்தாலும் ஸௌத்தமான பாஷையோடு, குடும்ப ரக்ஷணத்துக்காக அரசாங்க பாஷையையும் படிக்க வேண்டும். ந்யாயமான வழிகளில் பணத்தை ஸம்பாதிக்க வேண்டும். அந்தப் பணத்தில் ஓரளவு தர்மத்துக்காக ஒதுக்க வேண்டும். தர்மத்துக்காக ஒதுக்கின பணத்தைக்கொண்டு, நாம் நல்லகதி அடைவதற்கு எந்த தர்மத்தைச் செய்தால் பயனேற்படுமோ அந்த தர்மத்தைச் செய்ய வேண்டும். நாமே எதையாவது தர்மம் என்று நிர்மாணம் செய்துகொண்டு செய்யக் கூடாது. சாஸ்திரங்கள் சொல்லியிருக்கும் தர்மங்களைத் தாம் நாம் செய்யலாம். அப்படிச் செய்தால்தான் அந்தத் தர்மங்கள் நம்மை ஸம்ஸாரஸாகரத்திலிருந்து கரையேற்றிவைக்கும். நல்ல லோகத்தை அடையலாம்.

உங்களுக்கு நன்முகத் தெரிந்த விஷயத்தையே அடிக்கடி எழுதுவது ந்யாய்யமன்று. சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற தர்மங்களைப் பார்த்தால், அவைகளில் நாம் முக்யமாகச் செய்யக் கூடியனவாகவும், ஸுலபமாகச் செய்யக்கூடியனவாகவும் பல தர்மங்கள் உள்ளன. அன்னதானம், கோயில்களில் தீபாராதனம், திருத்துழாய் கைங்கர்யம், புஷ்ப கைங்கர்யம், சந்தனக்காப்பு முதலிய அநேகங்களில் கோயில் கட்டுதல், குளம் வெட்டுதல், கோபுரம் கட்டுதல் திருமதில்கள் கட்டுதல் முதலிய அனேக தர்மங்களையும் சாஸ்திரம் சொல்லியிருக்கிறது.

ஸ்ரீவைகுண்டம் என்கிற லோகத்தில் அனேக கோடி மதில்கள், அநேககோடி கோபுரங்கள் நிறைந்திருக்கின்றன. அதேபோல், பூலோக வைகுண்டமென்று கொண்டாடப் பெறுகிற ஸ்ரீரங்க க்ஷேத்ரத்திலும் அநேக ப்ராகாரங்கள் அனேகம் மதில்கள், அனேகம் கோபுரங்கள் நிறைந்திருக்கின்றன. புண்ணியசாலிகள் ஸ்ரீரங்க க்ஷேத்ரத்துக்கு வந்து மதில்களுடைய அழகையும், கோபுரங்களுடைய அழகையும் தேனில் ஸேவித்து, இந்த க்ஷேத்ரத்தில் ஆதிசேஷதல்பத்தில் சயனித்துக்கொண்டிருக்கிற ஸ்ரீரங்கநாதனையும் ஸேவித்துப் பரவசர்களாயிருப்பார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை.

இப்படி 'பூலோக வைகுண்டம்' என்று ஸகல ஆழ்வார்களும் ஆசார்யர்களும் கொண்டாடியிருக்கிற இந்த ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தில் பூர்த்தியாகாமல் குறையாகவுள்ள நான்கு

sadagopan.org

கோபுரங்களுக்குள் 'ராயர் கோபுரம்' என்று பெயர் பெற்ற தற்கு கோபுரம் பூர்த்தியாகாமல் இருக்கிறது. இது எல் லோருக்கும் தெரிந்த விஷயம். அந்தக் கோபுரத்தைப் பதினைந்து (15) நிலைகள் கட்டிப் பூர்த்திசெய்து ஸேவிக்க வேண்டும் என்று எனக்கு அடங்காத ஆவல் உண்டாகி அதற் காக ப்ரயத்னம் செய்து அரசாங்க அனுமதியும் பெற்று இந்த க்ஷேத்ரத்திலுள்ள பெரியோர்களுடைய அனுமதியும் பெற்று கோபுரம் கட்டுவதற்கு கோபுரத்தைச்சுற்றிச் சாரங்கள் கட்ட முனைத்தக்காலும் நட்டாகிவிட்டது. ஸுமார் ரூ 50 லக்ஷம் கோபுரம் பூர்த்தி பெறுவதற்கு வேண்டி இருக்கிறது.

எத்தனையோ தானம் - தர்மம் செய்ய உத்தேசித்துக் கொண்டிருக்கிற ஸ்த்ரீகளோ புருஷர்களோ ஒவ்வொருவரும் இந்தக் கோபுர கைங்கர்யத்தை முக்யமாக மனத்தில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு ரூபாய் வீதம் ஐம்பது லக்ஷம் (பேர்கள்) தர்மிஷ்டர்கள் கொடுத்தார்களேயானால் ஸுலபமாக கோபுர கைங்கர்யம பூர்த்தி பெற்றுவிடும் என்பதில் எவருக்காவது ஸந்தேஹம் உண்டாகுமா? அல்லது இருபத்தைந்து லக்ஷம் தர்மிஷ்டர்கள் ரூ 2 ரூ வீதம் கொடுத்தார்களேயானால் பூர்ண மாகிவிடும் என்பதில் ஸந்தேஹமில்லை. இப்படி எழுதியிருப்பது வெடிக்கையென்று நினைக்கவேண்டாம். இது ஸுலபமாக நடக்கக் கூடிய வழிதான். அநேக தர்மிஷ்டர்கள் லக்ஷக்கணக்கில் கோபுர கைங்கர்யத்துக்குக் கொடுப்பதாகத் தீர்மானமாகச் சொல்லி யிருக்கிறார்கள். அதில் முதல் முதலாக ஸ்ரீமத் திருக்டந்தை ஆண்டவன் அத்யுத்ஸாஹத்தோடு நியமித்திருக்கிறார். அடுத்தது பம்பாய தர்மசீலரான ஸ்ரீ ஆர். ராமானுஜ அய்யங்கார் அவ ருக்காக நான் கோபுரத்துக்குச் செலவழிக்கிற ரூபாய் எத்தனை லக்ஷமானாலும் ஸந்தோஷமாகக் கொடுக்க ஸித்தமாக இருக் கிறார். திருவல்லிக்கேணி வக்கீல் ஸ்ரீ என். ஜி. க்ருஷ்ண அய்யங் கார் கோபுரத்தில் ஒரு நிலை கட்டுவதற்கு வேண்டிய பணம் கொடுப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறார். பெருகவ ழ்ந்தான் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஒரு நிலை கட்டுவதற்கு ஸித்தமாக ஒத்துக்கொண்டிருக்கிறார். ஸ்ரீ கேஸவ அய்யங்கார் (திருவல்லிக் கேணி) குமாரர் ஸெண்ட்ரல் கவர்மெண்ட் வக்கீல் ஸ்ரீபரா ஸர அய்யங்கார் ஒருநிலை கட்டுவதாக அங்கீகரித்திருக்கிறார். கோமல்-வக்கீல் ஸ்ரீராம அய்யங்கார் எத்தனை நிலை கட் டுவாரோ? அவருடைய உத்ஸாஹத்தை வெளியில் சொல்லவில்லை. என்னுடைய பூர்வாஸ்ரமம் முதற்கொண்டு என்னிடத்தில் மிகவும் அன்புள்ளவரான காமகோடி பீடம் சந்த்ரஸேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் (பரமாசார்ய பெரியவாள்) நான் இந்தக் கோபுரம் கட்டுவதைக் கேட்டு மிகவும் உத்ஸாஹத்தோடு தன்னுள் முடிந்தவரையில் திருப்பதி முதலிய தேவஸ்தானங் களுக்குச் சொல்லிப் பூர்ண ஒத்தாசை செய்வதாக அநேகம் ஆப்தர்களிடத்தில் நியமித்திருக்கிறதாகவும் கேள்விப்படுகிறேன். இப்படியெல்லாம் இவர்கள் செய்தது போக அநேக தர்மிஷ் டர்கள் ஆயிரக்கணக்கில் கொடுப்பதாகவும் சொல்லியனுப்பு கிறார்கள். இந்த ஸமயத்தில் பம்பாயிலிருந்து ஒரு ஸிஷ்யர் தன் புத்ரன் மூலமாக 5,000 ரூபாய்க்கு ஒரு 'செக்' அனுப்பியிருக் கிறார். இன்னும், மேலும் அநேக ஆஸ்திகர்களான ரெட்டி

sadagopan.org

யார்கள், முதலியார்கள் முதலானவர்களும் இந்தக் கைங்கர்யத்தில் ஈடுபடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நம் ஸ்ரீமத் ஆதிவண் ஸடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய 600-ஆவது ஆண்டு கொண்டாட்டத்திற்காக ஸேவஸாதிக்க உத்தேசமித்திருக்கிறவர்கள் அந்தத் த்ரவ்யத்தை இந்தக் கோபுர கைங்கர்யத்திற்காக அனுப்பிவைத்து ஸந்தோஷப்பட வேண்டியது முக்யமான விஷயம் என்று என்னுடைய பூர்ணமான அபிப்ராயம்; இந்த வருஷம் புரட்டாஸி திருக் கேட்டைக்குள் இந்தக் கோபுரத்தில் மூன்று நிலைகளாவது பூர்த்தி பெற்றுவிடும் என்று பூர்ண நம்பிக்கையோடு இருக்கிறேன். எல்லோரும் அப்பொழுது அந்தத் திருக்கேட்டைத் திருநக்ஷத்ரத்துக்கு இங்கு வந்து கோபுரத்தைக் கண்டு ஆனந்தித்து ஸ்ரீரங்கநாதனுடைய கடாக்ஷத்துக்குப் பாத்திரர்களாக ஆவீர்கள் என்று நம்புகிறேன். இப்படி எழுதியிருக்கிறபடியினால் எல்லோரையும் ஒருமிதமாகப் பலம் கேட்பதாக யாரும் நினைக்கக்கூடாது. எவர் எவர்களுக்கு ஜந்மாந்தரத்தில் பண்ணின புண்யங்களோ, இந்த ஜன்மத்தில் பண்ணின புண்யங்களோ பலம் கொடுக்க ஆரம்பிக்கின்றனவோ அப்பொழுது அவர்களாக கோபுர கைங்கர்யத்துக்குக் கொடுக்கக்கூடிய தனத்தைத் தடுக்க, யாராலும் முடியாது. எது எப்படியிருந்தாலும் கோபுரம் பூர்ணமாகக் கட்டி முடிந்துவிடும் என்கிற நம்பிக்கை எனக்குப் பூர்ணமாக இருக்கிறது. அது ஸபலமாகும்படி எல்லோரும் பகவானை ப்ரார்த்திக்க வேண்டும்

இந்தக் கோபுர கைங்கர்யத்தில் பரிபூர்ண விச்வாஸத்தோடு ஸம்பந்தம் வைத்துக் கொள்கிறவர்களும், ஆமோதிக்கிறவர்களும் வாக்ஸஹாயம் செய்கிறவர்களும் பகவத் கடாக்ஷத்துக்குப் பாத்திரர்களாகி, இந்த உலகிலும் ஸமஸ்தபோகங்களையும் அனுபவித்து ஆசார்ய கடாக்ஷத்தினால், பகவத் ப்ராப்திக்கு ஹேதுவான உபாயாநுஷ்டானத்தைச் செய்து 'கொடியணி நெடுமதில் கோபுரம் குறுகினர்' என்றபடி, ஸ்ரீவைகுண்டத்தில் ப்ரகாசிக்கிற பெரியதான பகிராவணிற கொடிகளால் அலங்க்ருதமான மதில்களையும் கோபுரங்களையும் ஸேவித்து ஆனந்த பரவசர்களாகி, உள்ளே ஆதிசேஷணிற சிங்காஸனத்தில், ஸ்ரீரங்கநாதனைப்போல் ஸேவை ஸாதிக்கிற பரமபுருஷனை ஸேவித்து எப்பொழுதும் ஆனந்தபரிபூர்ணர்களாகவே இருப்பார்கள்.

ஒரு பெரிய உபன்யாஸகர் கம்பராமாயண ப்ரவசனம் மூலம் ரூ. 5 லக்ஷம்வரை ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதன் ராயகோபுரம் கைங்கர்யத்திற்கு வருவித்துத் தருவதாகக் கடிதம் எழுதியிருக்கிறார். அவருடைய கடிதம் இந்த இதழில் ப்ரசுரமாகியிருக்கிறது அவருக்கு ஸம்மத ஸூசகமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் மேலும் செய்யும் கம்ப ராமாயண உபன்யாஸத்தில் ஏராளமாக திரவிய சகாயம் செய்து ஸ்ரீரங்கம் ராய கோபுர கைங்கர்யத்தை ஆஸ்திக பக்தர்கள் பூர்த்தி செய்விக்க வேணும் என்றும் கோரப்படுகிறார்கள்.

சுபமஸ்து

sadagopan.org

ஸ்ரீ அழகியசிங்கரின் அருள்மொழி

இந்தக் கலியுகத்தில் இந்த ஸித்தார்த்தி வருஷம் வைகாசி மாதம் முதல்தான் இவ்வுலகில் பிறந்திருக்கும் நம்முடைய இந்த மனுஷ்ய ஜன்மம் பலன் பெற்றதாகிக்கொண்டு வருகிறது. எதனால் என்று அறிய விரும்புகிறீர்களா? எத்தனையோ புண்ணிய காரியங்களுக்கும் மேற்பட்டதான பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் ஸ்ரீரங்கநாயிகாஸமேதனான ஸ்ரீரங்க நாதனுடைய திருக்கோயிலில் மிகவும் முக்கியமான தெற்குக் கோபுரத்தின் மேல்பாகத்தைக் கட்டிப் பூர்த்திசெய்து ஸ்ரீரங்க நாதனுடைய திருவுள்ளம் உகக்கும்படிச் செய்ய ஆரம்பித் திருக்கிறபடியால்,

अद्य मे सफलं जन्म जीवितं च सुजीवितम् ।

அத்ய மே ஸபலம் ஜந்ம ஜீவிதம் ச ஸுஜீவிதம்।

என்கிறபடி, ஜன்மம் ஸபலமாகிக்கொண்டு வருகிறது. நாம் பிறந்த பயனைப் பெற்று வருகிறோம்;

நன்றாக யோசித்துப் பாருங்கள். ஸ்ரீமதஹோபில மடத்தில் ஸ்ரீமதாதி வண் சடகோப யதீந்திர மஹாதேசிகன் முதல், நாற் பத்து மூன்றாவது பட்டம் ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ வீரராகவ சட

sadagopan.org

கோபயநிந்திர மகாதேசிகன் வரையில் பூர்த்தியாகாமல் இருந்த ஸ்ரீஅஹோபில க்ஷேத்திரத்திலுள்ள ராஜகோபுரம் இப்பொழுது பூர்த்தியடைந்ததைக் கண்டு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் பரம ஸந்தோஷமடைந்துள்ளான். அதனால் அந்தக் கோபுர கைங்கர்யத்தில் ஸம்பந்தப்பட்டவர்கள் எல்லோரையும் பரிபூர்ணமாகக் கடாக்ஷித்து ஸகல போகங்களையும் அநுபவிக்கச் செய்துகொண்டிருக்கிறான்.

அதுபோல் ஆயிரக்கணக்கான வருஷங்களாகப் பூர்த்தியாகாமல் கோபுரவாசல் (மேல்பாகம்) மாத்திரம் மூடப்பட்டுப் பல காரணங்களால் அத்தோடு குறையாகவே இருக்கிறதற்குக் கோபுரத்தை நினைத்து நினைத்து அது பூர்த்தியடைய வேண்டிய காலத்தை இந்த லித்தார்த்தி வருஷத்தில் நிர்மாணம் செய்து வைகாசி மாதம் ஆரும் தேதி எல்லா ஆஸ்திகர்களோடும் சேர்ந்து மேல்பாகத்தைக் கட்ட ஆரம்பிக்கும்படி நியமித்தான். அவன் நியமனப்படி எல்லா ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்களும் எல்லா அதிகாரிகளும் ஸகல மதஸ்தர்களும் ஆரம்ப உத்ஸவத்தை நடத்தி வைத்தார்கள்.

இந்தக் கோபுர கைங்கரியத்தில் அன்றுமுதல் சரீரத்தாலும் மனத்தாலும் வாக்காலும் ஸம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிற பக்தர்களுடைய உத்ஸாஹத்தைத் திருவுள்ளத்தில் கொண்டு ஸ்ரீரங்கநாதன் பக்தர்களுக்கும், இதற்கு மேல் கோபுர கைங்கரியத்தில் ஸம்பந்தப்படப் போகிறவர்களுக்கும் பரிபூர்ண அநுக்ரகத்தைப் பண்ண ஆரம்பித்துவிட்டான். இவர்களைவிட, பிறவி பெற்றுப் புண்ணியத்தை அடைந்தவர்கள் யார் என்றால், இவர்களைப் போல் இந்த ராஜகோபுரத்தின் பூர்த்தி கைங்கரியத்தில் மனஸ்ஸுடன் ஸம்பந்தம் வைத்துக்கொள்ளுகிறவர்களே ஆவார்கள் என்றுதான் பதில் சொல்லும்படியாக இருக்கிறது. இதில் எழுதியிருக்கிற விஷயங்கள் எல்லாம் உண்மையேதான்.

இது எப்படித் தெரிகிறது என்று நீங்கள் கேட்காமல் இருக்கமாட்டீர்கள். சொல்லுகிறேன். இதைக் கேட்டு ஆனந்திப்பதோடு, கோபுர கைங்கரியத்தில் சிரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு வைகாசி மாத ஆரம்பத்தில் இருந்த கவலைக்கு அளவில்லை. அந்தக் கவலை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்து இப்பொழுது கவலையற்றிருக்கிறேன். என்ன காரணம் என்றால், முதலில், 'இந்தக் கோபுர கைங்கரியம் ஐம்பத்திரண்டு லக்ஷம் ரூபாய் இருந்தால்தான் பூர்த்தியாகும்' என்ற முடிவிற்கு வந்தேன். 'இது எப்படிக் கிடைக்கும்? கோபுர கைங்கரியம் எவ்விதம் பூர்த்தியாகும்? இது நடக்கக் கூடியதாகத் தோன்றவில்லையே' என்று முதலில் கவலை இருந்தது.

அப்பொழுது ஸ்ரீரங்கநாதன் ஓர் உபதேசம் பண்ணியது போல் தோன்றியது. அது என்னவென்றால், "பூமண்டலத்தில் எத்தனை நதிகள் இருக்கின்றன, தெரிகிறதா? அவற்றில் ஓடுகிற வெள்ளத்தைப் பார்த்திருக்கிறாய் அல்லவா? அவ்வளவும் மேகத்திலிருந்து அப்படியே வெள்ளமாக விழுந்ததா? பல துளிகளாக விழுந்து பெருவெள்ளமாக ஆகியிருக்கிறதாகப்

sadagopan.org

தெரிந்துகொண்டிருக்கிறாய் அல்லவா? அப்படியே மேகம் போல் இவ்வுலகத்தில் எத்தனை கோடி தர்மிஷ்டர்கள் இருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியாமற் போனாலும் எனக்குத் தெரிந்துதானே இருக்கிறது. நான் மழை பொழிய மேகங்களுக்கு உத்தரவு கொடுப்பது போல், அந்தத் தர்மிஷ்டர்களுடைய மனத்தில் புகுந்து, கோபுரத்தைக் கட்டுவதற்கான மழை பொழிய உத்தரவு கொடுக்கப்போகிறேன். கோபுரம் கட்டக் கோடிக்கணக்கான பணம் தேவைப்பட்டாலும் கவலை வேண்டாம்'' என்று தைரியம் சொல்லுவது போல் இருந்தது. கவலை என்னிடத்திலிருந்து எங்கேயோ ஓடிவிட்டது.

இப்பொழுது எனக்கு இருக்கும் ஸந்தோஷத்திற்கு எல்லை காண முடியவில்லை. அதற்குத் தகுந்தாற்போல் பெரிய மகான்கள் எல்லோரும் ஸ்ரீரங்கநாதனின் நியமனத்தின் பேரில் கோபுர கைங்கரியத்தில் பங்குகொள்ள ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதை முன் அருள்மொழியில் எழுதியிருக்கிறேன். நான் யாருக்கும் இன்று வரையில் கோபுர கைங்கரியத்திற்குப் பணம் அனுப்ப வேண்டும் என்று தனியாக எழுதவில்லை. தினசரி பேப்பர்களில் வெளிவந்திருக்கும் விஷயங்களைப் பார்த்து, ஸ்ரீரங்கநாதன் தோன்றப் பண்ணினபடி செக் மூலமாகவும் மணியார்டர் மூலமாகவும் நேரிலும் தங்களுடைய சக்திக்கு மேலாகவே பணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பம்பாய் செம்பூரிலிருந்து ஸம்பத் என்பவர் ஐயாயிரம் ரூபாயும், திருப்பதியிலிருக்கும் பூதேரி ஆராவமுதன் ஐயாயிரம் ரூபாயும், சேலம் எஸ். விஜயம் நாலாயிரம் ரூபாயும், இவருடைய வாக்கினால் சேலம், கே. வி. ராதாகிருஷ்ணன் செட்டியார் இரண்டாயிரத்தைந்நூறு ரூபாயும் கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி ஆயிரக்கணக்கிலும் நூற்றுக்கணக்கிலும், ஐம்பது, இருபது, பத்து, ஐந்து, ஒன்று, ஐம்பது பைசா இப்படியாகத் தினந்தோறும் பணம் வந்துகொண்டே இருக்கிறது. சுமார் ஐம்பத்திரண்டு லக்ஷம் தர்மிஷ்டர்களைப் பார்க்க விடமாட்டார்கள் போல் இருக்கிறது. அவரவர் ஆயிரக்கணக்காக உத்ஸாகத்தோடு அனுப்புவதைப் பார்த்து, நானும் மிகவும் உத்ஸாகத்தோடு இருக்கிறேன். ரசீதுப் புஸ்தகம் முழுவதும் போட்டு முடியவில்லை. வந்தவுடன் மற்றவர்களுக்கும் ரசீது அனுப்பிவிடுவார்கள். இப்படி நடந்து கொண்டிருக்கிற காரியங்களைப் பார்த்தால் ஸ்ரீரங்கநாதனுடைய கிருபை நன்றாகத் தெரிகிறது.

என்னைவிட இளப்பமான மனிதன் பூமண்டலத்தில் யாரும் இல்லை என்று எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது. என்னை ஒரு வியாஜமாகக் கோபுர கைங்கரியத்திற்கு எந்தக் காரணத்தினால் தேர்ந்தெடுத்திருக்கிறானோ! எனக்குத் தெரியவில்லை. ஒருகால் தன் பிள்ளை இவன் என்று என்னை நினைத்து இவனை வியாஜமாக்கிக் கோபுரத்தைப் பூர்த்தி செய்துகொள்ள நினைத்தானோ என்னவோ? தெரியவில்லை.

''நீ மாத்திரம் எப்படி ரங்கநாதனுக்குப் பிள்ளை?'' என்று கேட்டால், ''என் அப்பா ரங்கநாதன். என் அம்மா ரங்கநாயகி. என் அம்மா ரங்கநாயகிக்கு நான்காவது

sadagopan.org

வயதில் கல்யாணம். என் அப்பாவிற்கு அப்போது வயது பதின்மூன்று. வேதவித். அவருடைய ஐந்து பிள்ளைகளில் நான் மூதல் பிள்ளை. ஆக, நான் ரங்கநாதனுக்கும் ரங்கநாயகிக்கும் பிறந்தவனைபடியால் என்னை ஸ்ரீரங்கநாதன் தம் பிள்ளை என்று நினைத்து, தம் பிள்ளையைக் கொண்டு தம் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்ள நினைத்து எல்லோரையும் எனக்கு ஒத்தாசை பண்ணும்படி நியமித்துக் காரியங்களை நடத்திக் கொண்டு வருகிறார் என்றே எனக்குத் தோன்றுகிறபடியால் மிகவும் உத்ஸாகத்தோடு இருக்கிறேன்.

மேலும்—

दाता न दापयति, दापयिता न दत्ते,
यो दानदापनपरो मधुरं न वक्ति ।

தாதா ந தாபயதி, தாபயிதா ந தத்தே.
யோ தாநதாபநபரோ மதுரம் நவக்தி ||

என்கிறபடி, உலகில் நல்ல காரியங்களுக்குக் கொடுக்கிறவர்கள் அனேகர் இருக்கிறார்கள். அவர்கள் தங்களால் முடிந்ததைக் கொடுத்துவிட்டுக் கையைக் கூப்பி அனுப்பிவிடுவார்கள். இதரர்களுக்குச் சிபாரிசு செய்ய வேண்டும் என்றால், 'என்னால் முடியாது, வழக்கமில்லை' என்று சொல்லிவிடுவார்கள். சிலர் தாங்கள் ஒரு பைசாகூடக் கொடுக்கமாட்டார்கள். இதரர்களுக்குத் தம்மால் முடிந்த வரைக்கும் சொல்லி வாங்கிக் கொடுப்பார்கள். "உம்முடையதாக ஏதாவது கொடுக்க வேண்டும்" என்று கேட்டால், "நான் வாங்கிக் கொடுத்தேனே; அதில் பாதி நான் கொடுத்ததாக நினைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிடுவார்கள். தாமும் கொடுத்துப் பிறரையும் கொடுக்கும்படிச் செய்கிறவன் எவனாவது ஒருவன்தான் இருப்பான் என்று சொல்லியிருக்கிற பழமொழியை எல்லோரும் பொய்யாக ஆக்கிவிட வேண்டும். அதாவது - இந்தக் கோபுர கைங்கரியத்தில் எல்லோரும் தாங்களும் கொடுத்துத் தங்கள் இஷ்டமித்ர பந்துக்களையும் கொடுக்கும்படி பண்ணி ஸ்ரீரங்கநாதனுடைய கடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாக ஆகவேண்டும்.

சுபமஸ்து

ஸ்ரீரங்கநாதனுடைய ராஜகோபுர கைங்கர்யத்தையே நினைத்துக்கொண்டிருப்பதால் வேறு எந்த விதமான அருள் மொழியையும் எழுதத் தோன்றவில்லை. ராயர்கோபுரம் என்ற ராஜகோபுரத்தின் நான்கு பக்கங்களிலும் சாரம் கட்டியாகி விட்டது. கோபுரத்தின் மேல்பாகத்தில் முதல் நிலை கட்டுவதற்கு முன்பு, மேல்பாகத்திலுள்ள மேடு பள்ளங்களை ஸமமாகச் செய்வதற்கு ஒன்பது லக்ஷம் ரூபாய் செலவு பிடிக்கும் என்று பெரிய ஆபீஸர்கள் நிர்மாவித்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய ஜல்லி, சிமெண்ட் முதலிய ஸாமான்கள் வாங்கப் பெற்று வருகின்றன.

sadagopan.org

தண்ணீர் ஸப்ளைக்காகக் குழாய்கள் அமைக்கப்பெற்று விட்டன. பைப் ஒன்று சுமார் ஆயிரம் ரூபாய் ஆகிறது. இது வரையில் சாரம் கட்டுவதற்குத் தொண்ணூறாயிரம் ரூபாய் பிடித்திருக்கிறது. ராமாள்களை மேலே ஏற்றுவதற்கு, இருபத்தையாயிரம் ரூபாயில் ஒரு யந்திரம் வாங்கியிருக்கிறது.

கோபுரத்துக்காகச் செலவழிக்கும்போது உத்ஸாஹம் அதிகமாகிக்கொண்டே வருகிறது. காரணம் என்னவென்றால் நாள் தவறாமல் 5000, 4000, 2500 2000, 1000, 500 என்று பணம் (செக்) வந்துகொண்டிருக்கிறது. செலவுக்குத் தடை இல்லாமல் ஸ்ரீரங்கநாதன் கொடுத்து வருகிறபடியால் உத்ஸாஹம் மேலிட்டுக்கொண்டிருக்கிறது.

மேலும், இந்தக் கோபுர பூர்த்தி கைங்கர்யத்தில் உத்ஸாஹமுள்ள திருக்கள்ளம் வித்வான், பெருக்காரணை வித்வான் முதலியவர்களும் ரசீது புஸ்தகங்களைப் பெற்றுச் சென்றிருக்கிறார்கள். சுமார் ஒரு லக்ஷம் ரூபாய்க்குக் குறை வில்லாமல் வசூல் செய்வார்கள் என்பது சில காரணங்களாலே தெரிகிறது. மேலும் சிலர் ஆங்காங்கு வஸூல் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

சேலம், ஸ்ரீமான் எஸ். விஜயராகவாசார்ய ஸ்வாமி ஒருவரே இதுவரை தம்முடையதும் நண்பர்களுடையதுமாகச் சுமார் இருபதினாயிரம் ரூபாய் அனுப்பியிருக்கிறார். ஆவணி மூலம் தொடங்கியிருந்து கட்டிட வேலை ஆரம்பமாகிறது. இவ்விடத்தில் ஆஸ்திகர்கள் மிகவும் உத்ஸாஹத்துடன் அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மிகவும் முக்கியமான விஷயம்—நாம் நூறு வயது வரையில் இருந்து தினந்தோறும் பணத்தை வைத்துக்கொண்டு அழுது பார்த்துக்கொண்டிருந்தாலும், இந்த உடம்பை விட்டுப் போகும்போது ஒரு பைசாகூட எடுத்துக்கொண்டு போக முடியாது என்பதை நாம் அனைவரும் அறிந்தவர்தாம். ஸ்ரீரங்கோ புருஷோத்தமோ அணிந்துகொண்டிருக்கிற கடுக்கன்களோ கம்மல்களோ அவ்விடத்தில் தெருப்புப் படுவதற்கு முன் கழற்றப்பட்டுவிடுகின்றன. உயர்ந்த புடவைகள் வேஷ்டி முதலியனவும் வீட்டிலேயே அவிழ்க்கப்படுகின்றன.

ஒருவனுக்குக் கோடிக்கணக்கில் பணம் இருந்தாலும் அண்ணன் தம்பி சண்டையால், தகப்பனின் முதல் நாள் திவஸ வுக்கே கடன் வாங்க நேருகிறது. எல்லாவற்றையும் நன்றாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நாம் தூங்குகிற சமயத்திலும் விழித்துக்கொண்டிருக்கிற சமயத்திலும் திருடர்கள் எவ்வளவோ சாமர்த்தியமாக நம்முடைய பணத்தை அபகரித்து விடுகிறார்கள். வீட்டில் தெருப்புப் பிடித்துக்கொண்டால் நோட்டுக்கள் கட்டுக் கட்டாக எரிந்துவிடுகின்றன. எப்படியோ, நாம் சம்பாதித்த பணம் நமக்கு உபயோகப்படுவதில்லை.

ஆகையால், நாம் சம்பாதிக்கும் பணத்தை நம்மோடு கொண்டுபோக ஒரே வழிதான் இருக்கிறது. அந்த வழி என்ன என்றால்? உங்களுக்குத் தெரியாததன்று. ஆனாலும் சொல்லுகிறேன். ஜாக்கிரதையாகக் கேளுங்கள். நாம் சம்பாதிக்கும்

sadagopan.org

பணத்தை வேறு ஸாமான்களாக மாற்றிவிட்டால், உடலை விட்டுப் போகும்போது கூடவே கொண்டு போகலாம். வேறு ஸாமான்களாக என்றால் என்ன தெரியுமா? பணத்தைச் செலவழித்து அனேகவிதமான புண்ணியங்களைச் சேர்த்து மூட்டை கட்டி வைத்துக்கொண்டால், எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் போகும்போது அந்தப் புண்ணிய மூட்டையைக் கூடவே எடுத்துச் செல்லலாம். இவன் ப்ரஹ்மலோகம் போனாலும், இந்திரலோகம் போனாலும், சிவலோகம் போனாலும் அந்தப் புண்ணியங்களுக்குத் தகுந்தபடி ஸுகங்களை அநுபவிக்கலாம்.

தான் ஸம்பாதித்த பணத்தைக் கொண்டு பகவத்ப்ரீதியை மாத்திரம் உத்தேசித்து அனேக தர்ம காரியங்களைச் செய்தால் அவற்றால் உண்டாகும் புண்ணியம் இவனை ஆறு அங்கங்களோடு கூடிய பரந்யாஸம் என்ற சரணாகதியை ஸ்ரீமந்நாராயணனிடத்தில் ஆசார்யன் மூலமாகவோ தானாகவோ செய்யும்படி செய்து, ஸ்ரீவைகுண்டம் செல்லும்படி செய்கிறது. ஆகையால், ஏதாவதொரு விதமான புண்ணியத்தைச் செல்வத்தின் மூலம் ஸம்பாதித்துவிட்டால் அந்தப் புண்ணியத்தை உடலை விட்டுப் போகும்போது கூடவே எடுத்துக்கொண்டு போய், ஸ்வர்க்கம் முதலிய லோகங்களை அடைந்து, அங்கு அந்தப் புண்ணியத்துக்குத் தகுந்த ஆனந்தத்தை அநுபவிக்கலாம். முன் சொன்ன எல்லா விஷயங்களையும் சேர்த்து, சாஸ்திரங்களில் ஸாரமாகச் சொல்லியிருக்கிறபடியை அறியலாம்.

அர்த்தா: க்ருஹே நிவர்த்தந்தே
ஶ்மஶாநே மித்ரபாந்தவா:|
ஸுக்ருதம் துஷ்க்ருதம்
சைவ கச்சந்தமநுகச்சதி || என்று.

ஒருவன் கஷ்டப்பட்டுப் பணத்தைச் சம்பாதித்து மனம் போனபடி கெட்ட விஷயங்களில் செலவு செய்தானேயானால், பாவங்களை மூட்டை கட்டிக்கொள்கிறான். பணத்தைச் சம்பாதித்துச் சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறபடி நல்ல காரியங்களில் செலவழித்தானேயானால் புண்ணியங்களை மூட்டைகட்டிக் கொள்கிறான். இந்தப் புண்ணிய பாவங்கள் இரண்டும்தாம், இவன் உடலை விட்டுப் போகும்போது இவனை விடாமல் கூடவே செல்கின்றன. புண்ணியங்களையும் செய்யாமல், வயிற்றுக்கும் தின்னாமல், பணத்தைச் சேர்த்து வைத்தால், அந்தப் பணம் இவன் போகிறபோது கூட வருகிறதில்லை. வீட்டிலேயே தங்கி விடுகிறது. மித்திரன், பந்து முதலானோர் அந்த இடம் வரையில் கூட வருவார்கள். பிறகு வீட்டுக்குத் திரும்பிவிடுவார்கள். எவரும் கூடவே வருவதில்லை. ஆகையால், தன்னோடு கூடவே கொண்டு போவதற்குத் தகுந்த புண்ணியமாகப் பணத்தை மாற்றிக் கொள்ளுங்கள் என்று சாஸ்திரம் கட்டளையிடுகிறது.

மேலும், நாம் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கும்போதே நம்முடைய பணம் நம்மை அழ வைத்துவிட்டு ஓடிப்போகிறது. வரி விதித்து எடுத்துக் கொண்டுபோய் விடுகிறார்கள் அக்கினி பகவான் கணக்கில்லாமல் அழித்து விடுகிறார். கிருடர்கள் கொள்ளையடிக்கின்றனர். அயோக்கியர்களான பிள்ளைகள் அப்பொழுதே அழிக்கின்றனர். ஏற்படுகிற

sadagopan.org

வியாதிகளால் அழியும் பணத்துக்கு அளவே இல்லை. போதாத குறைக்கு வியாபாரம் பண்ணத் தெரியாமல் கம்பெனிகளை ஆரம்பித்து, மூன்று தலைமுறையாக வந்த குடும்பப் பணத்தை ஒழித்துவிட்டு கடன் கொடுத்தவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறவர்களையும் காண்கிறோம்.

ஆகையால் நாம் சம்பாதிக்கிற பணம் நமக்கு இங்கும் அங்கும் உபயோகப்பட வேண்டும். தர்மம் தலைகாக்கும். ஏழைகளோ பணக்காரர்களோ அவரவர்களுக்குத் தகுந்தபடி நல்ல காரியங்களில் எதையாவது ஒன்றைச் செய்ய வேண்டும். தங்களால் செய்ய முடியாவிட்டால் செய்கிறவர்களுக்கு உபகாரம் செய்ய வேண்டும். இந்த விஷயங்களையெல்லாம் நன்கு அறிந்த மகான்கள், இப்பொழுது கடைபெற்று வருகிற, ஸ்ரீரங்கத்திலுள்ள தெற்கு ராஜகோபுரக் கட்டிடத் திருப்பணிக்கு ஸந்தோஷமாகப் பணத்தைச் செக் மூலமாகவும், மணியார்டர் மூலமாகவும், இதரர்களின் மூலமாகவும், நேரிலும் கொடுத்து வருகிறார்கள். பல தர்மிஷ்டர்கள், நாம் எவ்வளவு கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று ஆலோசித்துக்கொண்டிருக்கின்றனர். இது அழகியசிங்கருக்கு எப்படித் தெரியும் என்று கேட்டால், ஸ்ரீரங்கநாதன் அப்பொழுதைக்கப்பொழுது என் மனஸ்ஸில் தோன்றப் பண்ணுகிறான்.

ஒரு வேடிக்கை—மைலாப்பூரிலிருந்து இழுவர் ஒருவர் வந்தார். அவரை நான் பார்த்தேன். அவர் ஊருக்குப் போகும்போது ரெயில் சார்ஜ் கேட்கப் போகிறார் என்று நினைத்தேன். "எப்பொழுது ஊருக்குப் போகப்போகிறீர்?" என்றேன். அவர் பதில் சொல்லவில்லை. அவர் கண்களிலிருந்து ஜலம் வழிந்தது. "வருத்தப்பட வேண்டாம். போகும்போது சார்ஜ் கொடுக்கிறேன்" என்று சொன்னேன். அந்தத் தாத்தா, 'நான் சார் ஜுக்குப் பணம் வைத்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, மேலும் வருத்தப்பட்டார். "ஏன் வருத்தப்படுகிறீர்?" என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்ன விஷயம்—"ஸ்ரீரங்கம் ஹைஸ்கூலைப் பார்த்தேன். எல்லோரும் கோபுர கைங்கர்யத்துக்குக் கொடுக்கிறார்களே; நம்மால் ஒன்றும் கொடுக்க முடியவில்லையே என்று வருத்தப்பட்டேன். பகவான் எனக்கு ஒரு விஷயம் தோன்றப் பண்ணினான். அதாவது, ஒரே பெண்தானே உனக்கு? பாப்பிள்ளை ஸம்பாதிக்கிறான். உனக்குச் சாப்பாடு போடுகிறான் உனக்கென்று வைத்துக்கொண்டிருக்கிற மூவாயிரம் ரூபாயில் முடிந்தவரை கொடு என்று. எண்பத்தெட்டு வயது ஆகிவிட்டது. ஏதோ அந்தப் பணத்தில் கொஞ்சம் பேங்கிலிருந்து கடன் வாங்கிக் கொண்டு வந்தேன். அதை ஸமர்ப்பிக்க வெட்கமாக இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே நோட்டுக்களைப் புஷ்பத்தில் மறைத்து வைத்து, எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும்போது ஸமர்ப்பித்தார்.

அவர் சொன்னதையெல்லாம் கேட்டவுடன் எனக்கும் வருத்தம் ஏற்பட்டது. எனக்கு எத்தனையோ யோசனைகள் உண்டாயின. "ஓய் தாத்தா: உம்மைப் பெருமான் நியமித்தாரா?" என்று கேட்டேன். 'ஆமாம்" என்றார் அவர். "எவ்வளவு ஸமர்ப்பித்திருக்கிறீர்?" என்று கேட்டேன்.

sadagopan.org

"ஏதோ கிஞ்சித்" என்றார். பகவான் எவ்வளவு நியமித்திருக்கிறான என்று பார்த்தேன். பத்து நூறு ரூபாய் நோட்டுக்களும். ஒரு ஒரு ரூபாய் நோட்டும் இருந்தன. ஐந்து நிமிஷம் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ஆயிரத்தொரு ரூபாய்க்கு ரசீது கொடுக்கச் சொன்னேன். "ரசீது வேண்டாம்" என்றார் அவர். நிர்ப்பந்தமாகக் கொடுத்தேன். ரசீதைப் பெற்று பிரஸ்ஸில் வைத்துக்கொண்டார்.

ஸ்ரீரங்கநாதன் தன் கோபுரத்தைப் பூர்த்தி செய்து கொள்ள இம்மாதிரியெல்லாம் பல தர்மிஷ்டர்களின் மனஸ்ஸில் தோன்றப்பண்ணி ஸமர்ப்பிக்கும்படி செய்கிறான். இப்படி எழுதுவதெல்லாம் பணம் ஸம்பாதிப்பதற்கு என்று நினைக்க வேண்டாம். நான் எழுதாமற் போனாலும் தர்மசிந்தையுள்ளவர்கள் அனுப்பாமல் இருக்கப்போவதில்லை. சரியாக நடக்கக் கூட முடியாத ஒரு பாட்டி என்னிடம் வந்தாள். தயங்கித் தயங்கி நின்றாள். "என்ன பாட்டி! எங்கே வந்தாய்?" என்று கேட்டேன். "கோபுரத்துக்கு எல்லோரும் கொடுக்கிறார்களே. நானும் கொடுக்க வேண்டாமா?" என்றாள். "கொடுத்தால் வாங்கிக்கொள்கிறேன்" என்றேன். அந்தக் கிழவி, "எனக்கு ஐந்து ரூபாய் யாசகம் கொடுக்க வேண்டும்" என்றாள். கொடுத்தேன். அதை வாங்கி, "ஸ்ரீரங்கநாதனுடைய கோபுர கைங்கர்யத்தில் இதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்" என்று ஸமர்ப்பித்தாள். அவள் செய்த காரியம் என்னை ஆனந்தத்தில் ஆழ்த்திவிட்டது. யாசித்தாவது கைங்கர்யம் செய்ய நினைத்த கிழவியின் பெருமை போற்றத்தக்கதே.

ஒரு வருஷத்துக்குள் கோபுர கைங்கர்யம் பூர்த்தி பெற்று விடும் என்று நினைகிறேன். ஸம்ப்ரோக்ஷணத்தை நன்றாக நடத்திவைத்து எல்லோரையும் ஆனந்திக்கச் செய்யவேண்டும் என்று ஸ்ரீரங்கநாதனைப் பிரார்த்திக்கிறேன்.

சுபமஸ்து

ஒரு விஷயம் எல்லோரும் அறியவேண்டும். பகவானுடைய க்ஷேத்திரங்களில் மிகவும் உயர்ந்தது ஸ்ரீரங்கக்ஷேத்திரம். இந்த ஸ்ரீரங்கத்தில் தெற்குப் பக்கத்தில். ராயர்கோபுரம் என்று பெயர் பெற்ற ஒரு பெரிய கோபுரம் இருப்பது தெரிந்ததே. அந்தக் கோபுரம் அடிமட்டம் வரையில் கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கிறது. கோபுர வாசல் மேல் மூடப்பட்டிருக்கிறது. இதுவரை நாற்பத்தாறு அடி உயரம் இருக்கிறது.

இதை 'ராயர் கோபுரம்' என்றும், 'மொட்டை கோபுரம்' என்றும் சொல்லுகிறார்கள். இந்த மொட்டை கோபுரத்தின் மேல்பாகம் மேடுபள்ளமாக இருக்கிறது. மேற்கு மேற்கு நீளம் 165 அடி. தெற்கு வடக்கு அகலம் 96 அடி. மேல்பாகத்திலுள்ள நாலு பக்கங்களிலும் 14 அடி அகலம் கருங்கல் கட்டிடம் அஸ்திவாரம் இருக்கிறது. இதைப் பலப்படுத்திய பிறகுதான்

sadagopan.org

முதல் நிலை கட்டவேண்டும். இதற்கு வேண்டிய சாரங்கள் கட்டிமுடித்து விட்டனர். மேலே சாமான்களை ஏற்றுவதற்கும், ஜலவசதிக்கும் வேண்டிய ஸௌகர்யங்கள் செய்தாகிவிட்டன. மேடுபள்ளங்களைச் சரிப்படுத்திவிட்டு. கோபுரத்தின் முதல் நிலையைக் கட்டப்போகிறார்கள். 'அனேகமாக, ஐப்பசி மாதம் பதினைந்து தேதிக்குள் முதல் நிலை கட்டி முடித்துவிடும்' என்று நினைக்கிறேன்.

முதல் நிலையிலிருந்து பதினேழாவது நிலைகளையும், செங்கல், சிமெண்ட், சுண்ணாம்பு முதலியவற்றால்தான் கட்டத் திட்டமிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள பெரிய கோபுரங்கள் எல்லாமே கோபுர வாசலுக்குமேல் செங்கலால்தான் கட்டப் பெற்றிருக்கின்றன. ஆகையால்தான் இந்த ராஜகோபுரத்தையும் 46 அடி உயரம் கருங்கல் கட்டிடமாய் அமைத்த கோபுர வாசல்மேல் 185 அடி உயரம், 18 நிலை செங்கல், சிமெண்ட், சுண்ணாம்பு முதலியவற்றால்தான் கட்ட நிச்சயித்திருக்கிறார்கள். இப்பொழுதுள்ள அஸ்திவாரம், இப்பொழுது கட்ட உத்தேசித்துள்ள பாரத்துக்குமேல் பாரம் ஏற்றினால் தாங்காது என்றும் சொல்லுகிறார்கள். ஆகையால் இவ்விஷயத்தை எல்லோரும் ஆமோதிப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

இப்பொழுது நடந்துவருகிற கோபுர கைங்கர்யச் செலவுக்கு ஸ்ரீரங்கநாதன் ஒருவனையே திருடமாக நம்பியிருக்கிறேன். அவன் அவர் அவர் மனத்தில் புகுந்து கோபுர கைங்கர்யத்துக்கு நியமிக்கிறானோ அவரவர்கள் அதிஸந்தோஷத்துடன் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். எவர்களுடைய பணம், தன் கோபுர கைங்கர்யத்தில் சம்பந்தப்படவேண்டாம் என்று நினைக்கிறானோ அவர்களுக்கு இவ்விஷயத்தில் சிரத்தை இன்னாமல் செய்து விடுகிறான்.

இப்படி எழுதிக்கொண்டிருக்கும் சமயத்தில், சென்னையிலுள்ள ஸ்ரீ ஆர். கோபாலஸ்வாமி ஐயங்கார் கோபுர கைங்கர்யத்துக்கு அனுப்பிய 1001 ரூபாய்க்கான செக் வந்து சேர்ந்தது. திருக்கள்ளம் ஸ்ரீமத் ஹரி கவாசிசார்யர் மூலம் 5000 ரூபாய்க்கான பல செக்குகள் கிடைத்தன. மணியார்டர் மூலம் சில்லறையாக 250 கிடைத்தது. ஆக 6250 ரூபாய் ஸ்ரீ ரங்கநாதன் அனுக்ரஹமாய் கிடைத்தது. சந்தோஷம் அடைந்தேன்.

ஒரு பெரிய ஸந்தோஷம் என்னவென்றால் இதுவரையில் எவ்விதமான தடங்கலும் இல்லாமல் கோபுர வேலை நடந்து கொண்டு வருவதேதான். மேலும் பூர்த்தியடையும் வரையில் ஸ்ரீ ரங்கநாதன் எவ்விதத் தடங்கலும் இல்லாமல் பூர்த்தி செய்து விடுவான் என்று அவன் திருவடிகளையே நம்பியிருக்கிறேன்.

கோபுர கைங்கர்யத்திற்குப் பணம் கொடுக்கக் கையெழுத்துப்போட்டிருக்கிறவர்களும், பணம் கொடுக்க வேண்டும் என்று நிர்மானம் செய்து கொண்டிருக்கிறவர்களும் சீக்கிரமாகவே கொடுத்து விட்டார்களேயானால் வரவு செலவு பண்ணுவதற்கு சௌகர்யமாக இருக்கும்.

sadagopan.org

மற்றவர்களும் யோசித்துப் பார்க்கவேண்டும். எப்படியென்றால் கோபுர கைங்கர்யத்திற்குப் பணம் கொடுத்திருப்பவர்களுக்கும் கொடுக்காமல் இருக்கிறவர்களுக்கும் விந்தியாசம் உண்டா? இல்லையா? என்று கொடுத்தவன் முட்டாள், கொடுக்காதவன் கெட்டிக்காரன் என்று நிர்மாணம் செய்துவிடலாமா? கூடாது நல்ல விஷயங்களில் தங்கள் திரவியத்தைக் கொடுத்துப் புண்ணியத்தைச் சம்பாதிக்கிறவன்தானே ஸமர்த்தன். ஸத்விஷயத்தில் பணத்தைக் கொடுக்காதவன் எப்படிக் கெட்டிக்காரனாவான்? "நமக்குப் பகவான் தனத்தைக் கொடுத்திருப்பது நல்ல விஷயங்களில் செலவழிப்பதற்காகத்தான்" என்று நினைத்து ஸந்தோஷமாக முடிந்தவரையில் தானம் தர்மம் பண்ணுவதுதான் உசிதம். "அறஞ்செய விரும்பு"—தர்மம் செய்ய ஆசைப்படு. அதற்கே அளவற்ற பலன் உண்டு என்று கிழவி சொல்லியிருக்கிறாள். நினைப்பதற்கே, ஆசைப்படுவதற்கே பலனுண்டு என்றால் தர்மத்தைப் பண்ணினால் எவ்வளவு பலன் வரும் என்று யோசித்துப் பாருங்கள்.

ஒருவன் கேட்கிறான்—சரணாகதி பண்ணிக் கொண்டவன் மோக்ஷம் தவிர வேறு எந்தப் பலனையும் அபேக்ஷிக்கக்கூடாது என்று சொல்லுகிறார்களே அவர்கள் கோபுர கைங்கர்யத்திற்கு எந்தப்பலனை உத்தேசித்துப் பணத்தைக் கொடுக்கிறது?—என்று.

இவ்விதம் கேட்கிறவர்களுக்கு நாம் மேலே சொல்லப் போகிறபடிதான் பதில் சொல்லவேண்டும். சரணாகதி ஆனபிறகு தாய்தகப்பன்மார்களைக் காப்பாற்றுகிறார்களே எந்தப்பலனை உத்தேசித்து? சரணாகதி பண்ணிகொண்ட பிறகு குடும்பத்தை ரக்ஷிக்கிறார்களே, எந்தப் பலனை உத்தேசித்து? சரணாகதியான பிறகு பந்துஸம்பந்தத்தில் ஆசை உண்டாகிறதே, எந்தப் பலனை உத்தேசித்து? மோக்ஷார்த்தம் சரணாகதி செய்து கொண்ட பிறகு பணத்தை ஸம்பாதிக்கிறார்களே எந்தப் பலனை உத்தேசித்து? சரணாகதியான பிறகு ஸ்தாரீகளோ புருஷர்களோ உயர்ந்த ஆடை ஆபரணங்களை அபேக்ஷிக்கிறார்களே, எந்த எண்ணத்தினால்? சரணாகதியான பிறகு பால், நெய், தயிர் முதலான புஷ்டியைத்தரும் ஆஹாரங்களாலே சரீரத்தை வளர்க்கிறார்களே, எந்தப் பலனை உத்தேசித்து? இம்மாதிரி அநேக விஷயங்களைக் கேட்டால் என்ன பதில் சொல்லுவார்களோ, அந்த மாதிரி பதில்தான் சரணாகதி ஆனபிறகு புண்ணியகார்யங்களைச் செய்தால் பலன் என்று பதில் சொன்னால் தெரிந்துக்கொள்வார்கள்.

இப்படிப் பதில் கேட்டுவிடுவது சரிதானா? வாஸ்தவமான பதில் என்னவென்று கேட்டால், எந்த நல்ல காரியங்கள் செய்தாலும் பகவத்ப்ரீதியை உத்தேசித்துச் செய்தால் விரோதமில்லை "பகவத் ப்ரீத்யர்த்தம்" என்று நினைத்து சரணாகதன் எல்லா நல்ல காரியங்களையும் செய்தால் சரணாகதியின் பலனுக்கு விரோதமில்லை. மேலே கேட்ட விஷயங்களுக்குத் தனித்தனியாகப் பதில் சொல்ல வேண்டாமா என்றால் சொல்ல வேண்டியது அவசியம் தான். வேறு ஒரு ஸமயத்தில் சொல்லுகிறோம்.

ஸ்ரீ ரங்கநாதன் எனக்கு ஏற்பட்ட ஸந்தேகத்திற்குப் பரிஹாரம் சொல்லி ஸந்தேகத்தைப் போக்கி உத்ஸாஹத்தை உண்டு பண்ணினான். அனேக தர்மிஷ்டர்கள் கோபுரத் திருப்

sadagopan.org

பணியில் உத்ஸாஹத்தோடு வந்து கலந்துகொண்டு தங்களால் முடிந்த வரையில் ஸஹாயம் செய்வார்கள் என்று முடிவு செய்திருந்தேன். சில காரணங்களால் அவர்களுடைய ஒத்தாசை குறைந்துவிடுமோ என்று தோன்றிற்று. கொஞ்சம் பயம் உண்டாவதற்குள் ஸ்ரீரங்கநாதன், "பயப்படாதே. அவர்கள் பின்வாங்கினால் அனேகம் ஆயிரம் தர்மிஷ்டர்களை முன்வந்து நின்று ஏற்றுக்கொள்ளும்படி செய்கிறேன்" என்று என் மனத்தில் படும்படி நன்றாகச் சொன்னான். அதற்குத் தகுந்தாற்போல் சில விஷயங்களை நடத்திக் காட்டினான். எனக்கு உத்ஸாஹம் அதிகமாகிவிட்டது. இந்த ஸ்ரீ நரஸிம்ஹப்ரியாவில் எனது அருள்மொழியை வாசிக்கிற தர்மிஷ்டர்களான நீங்கள் வஞ்சனையில்லாமல் ஸ்ரீரங்கம் ராஜகோபுர கைங்கர்யத்திற்கு முடிந்தவரையில் கொடுப்பதோடு ஒவ்வொருவரும் ஸுமார்பத்துப் பேருக்காவது விஷயங்களை எடுத்துச் சொல்லி, கோபுரத்திற்குக் கொடுக்கும்படி செய்யவேண்டும். "ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி" என்று ஆண்டாள் திருவுள்ளப்படி செய்து, அவளுடைய திருப்பக்கும் பாத்திரர்களாக ஆகவேண்டும். எல்லோரும் சிரத்தை எடுத்துக்கொண்டால் சீக்கிரத்தில் கோபுரத்தின் சிகரத்தை ஸேவித்து ஆனந்திக்கலாம்.

திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவன் அதிகமான உத்ஸாஹத்தோடு பெங்களூரில் ப்ரசாரம் செய்வதாகத் தகுந்த மனுஷ்யர்கள் மூலம் கேள்விப்பட்டுப் பரமஸந்தோஷத்தை அடைகிறேன்.

சுபமஸ்து

लोकास्समस्तास्सुखिनो भवन्तु ।

லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து.

உலகில் நல்ல தர்ம காரியங்களைச் செய்பவர், உலகிலுள்ளோர் ஸகல விதத்திலும் ஸந்தோஷமடைவதற்கும், இதரர்களுக்கு ஹிம்ஸை இல்லாமல் ஸுகமாக வாழ்வதற்கும் வேண்டி, உள்ள நாட்களிலெல்லாம் உழைத்துப் புண்ணியங்களை ஸம்பாதித்துள்ளார்கள். அந்தப் புண்ணியத்தின் பயனாக நல்ல லோகங்களை அடைந்து ஸந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிற அந்த மகான்களைப்பற்றி நாம் மிகவும் ஸந்தோஷப்பட வேண்டுமே தவிர அவர்களைப்பற்றி நாம் வருத்தப்படவே கூடாது.

sadagopan.org

ஆனால் அந்த மகான்களை நாம் இழந்துவிட்டோம் என்கிற வருத்தம் நமக்கு ஒவ்வொரு ஸமயத்திலும் உண்டாகிக் கொண்டேதான் இருக்கும். நம்முடைய முன்னோர் ஆசார்ய கடாக்ஷம் பெற்று ஸ்ரீவைகுண்டத்தை அடைந்து பரமானந்தாநுபவம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்பதில் எவ்வித ஸந்தேகமும் இல்லை. அவர்களைப்பற்றி எந்த விதத்தில் வருத்தப்பட வேண்டியிருக்கும்? என்றால், அவர்கள் நம்முடன் இருந்து கொண்டு நமக்கு ஸமயங்களில் புத்தி சொல்லிச் சீர்திருத்தியும், நம்முடைய கஷ்டங்களை அடிக்கடி பகவானிடத்தில் பிரார்த்தித்துக்கொண்டும் இருந்த அந்த மகான்களை இழந்துவிட்டோமே என்றுதான். நல்ல உலகங்களில் ஆனந்தித்துக்கொண்டிருக்கும் அவர்களை நினைத்து ஸந்தோஷப்பட்டுக்கொண்டுதான் இருக்க வேண்டும்.

ஸ்ரீரங்கத்தில் இதற்கு முன்னால் திருப்பணி கைங்கர்யங்களைப் பண்ணி ஸ்ரீரங்கநாதன் கடாக்ஷம் பெற்று இருக்கிறவர்களின் கோஷ்டியில் நாமும் சேர வேண்டும் என்று நினைத்து இந்தக் கோபுரபூர்த்தி கைங்கர்யத்தை நாம் ஆரம்பிக்கவில்லை. 'எதற்காக ஆரம்பித்தோம்?' என்று எத்தனை நாழிகை யோசித்துப் பார்த்தாலும் காரணம் ஒன்றும் தெரியவில்லை. ஸ்ரீரங்கநாதனுக்குத் தெரிந்திருக்கும்!

'பெரிய மகாராஜாக்கள் செய்ய வேண்டிய காரியத்தை ஆரம்பித்துவிட்டோமே! எப்படிச் செய்து முடிக்கப்போகிறோம்?' என்கிற பயமும் உண்டாகவில்லை. கற்களை நான் தூக்கப் போகிறேனா? கட்டிடங்களை நான் கட்டப்போகிறேனா. பயப்படுவதற்கு?

புண்ணியம் பண்ணிய அதிகாரிகளின் சொற்படி வேலை செய்கிறவர்கள் உத்ஸாஹத்தோடு வேலை செய்கிறார்கள். அவர்கள் வேலை செய்யும்போது அவர்களின் கஷ்டத்தைப் பார்த்து வருத்தமுண்டாகிறது. அவர்கள் தகுந்த கூலி வாங்கிக் கொண்டு ஸந்தோஷப்படுகிறார்கள். அவர்களுக்குத் தெரியாமலே புண்ணியம் மூட்டை மூட்டையாகச் சேருவதைப் பார்த்து எனக்கு உண்டான ஸந்தோஷத்திற்கு அளவே இல்லை. வியர்த்தமான காரியங்களுக்காகக் கோடிக்கணக்கில் செலவு செய்கிறவர்களைக்காட்டிலும் ஸத்விஷயங்களில் செலவு செய்கிறவர்கள் எவ்வளவு மேம்பட்டவர்கள் என்பதை நம்மால் அளவிட்டுச் சொல்ல முடியாது. எல்லாக் காரியங்களையும் கணக்கில் எழுதி மார்க் போட்டு, அந்தக் காரியங்களுக்குத் தக்கபடி புண்ணியங்களையும் கணக்கில் எழுதி, ஸமயம் வந்தபோது பலன் கொடுக்கிற தெய்வத்திற்குத்தான் தெரியும். வீண்செலவானால் அதற்குத் தக்க பலன். புண்ணியச் செலவானால் அதற்குத் தக்க பலன். சாஸ்திரங்களைக் கொண்டுதான் அறிய முடியும்.

ஸ்ரீரங்கநாதன் கோபுர கைங்கர்யத்திற்குப் பணம் கொடுக்கிறவர்கள் ஸ்ரீஅழகியசிங்கர் தாக்ஷிண்யத்திற்காகத்தான் கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்களைப் பார்த்து நான் சொன்ன விஷயம்: "நீங்கள் சொல்வது சரியல்ல. ஸ்ரீரங்கநாதன் தான் அவர்களுக்குத் தோன்றப்பண்ணிக் கோபுர கைங்கர்யத்திற்குக் கொடுக்கச் செய்கிறான்."

sadagopan.org

சொல்லுகிறேன், கேளுங்கள்: ஹைதராபாத்திலிருந்து ரங்கதாஸன் என்று பெயருடைய பிராம்மணரல்லாத ஒருவர் வந்து இருபத்தையாயிரம் ரூபாய் கொடுத்து, "இது முதல் தவணையாக இருக்கட்டும்" என்று சொன்னாரே: அவர் என் தாக்ஷிண்யத்திற்காகவா கொடுத்தார்? ஸ்ரீரங்கநாதனுக்காகத் தான் கொடுத்தார். யோசித்துப் பாருங்கள்.

அனேக மடாதிபதிகள் இந்தக் கைங்கர்யத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டு காரியம் செய்கிறார்களே: அவர்கள் என் தாக்ஷிண்யத்திற்காகவா, ஸ்ரீரங்கநாதன் திருவுள்ளம் உகப்பதற்காகவா, சிரத்தையுள்வர்களாக இருக்கிறார்கள்?

கோவாரிலிருந்து ஒரு மாத்வ ஸ்திரீ தன் பின்னேயிடத்தில் ஆயிரம் ரூபாய் கொடுத்து அனுப்பினாளே! யாருக்காக?

ஒரு ரத்தின வியாபாரி தன் குமாஸ்தாமூலம் ஐந்து நூறு ரூபாய் கொடுத்தனுப்பினாரே: எனக்கும் அவருக்கும் என்ன ஸம்பந்தம்?

ஒரு வியாபாரி பணம் வாங்கிக்கொள்ளாமல் ஒரு லாரி ஜல்லி (கற்கள்) கொடுத்தாரே: யாருக்காக? முக்கால்வாசிப் பேர் ஸ்ரீரங்கநாதன் திருவுள்ளம் உகப்பதற்காகவே கொடுத்திருக்கிறார்கள். ஸ்ரீரங்கநாதனுடைய பிரீதியோடு என்னுடைய பிரீதியையும் உத்தேசித்துக்கொடுத்திருக்கலாம். என்னுடைய பிரீதியை மாத்திரம் உத்தேசித்துக் கொடுத்திருக்கிறவர்கள் யாராவது இருந்தால் அவர்களும் "ஸ்ரீரங்கநாதர் ப்ரீயதாம்" என்று சொல்லிவிட வேண்டும். ஸ்ரீரங்கநாதனின் ப்ரீதியை மாத்திரம் நினைத்துக் கொடுத்தவர்களும், "பாகவதர்களும் ஸந்தோஷிக்க வேண்டும்" என்று நினைக்க வேண்டும்.

ஜெர்மனியிலிருந்து சிலர் வந்து கோபுர வேலையைப் பார்க்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். பணத்தைப்பற்றிக் கவலை இல்லை. எப்படியோ பணம் வந்துகொண்டிருக்கிறது. என் உடம்பில் சக்தியும் அவன் அநுக்ரஹத்தினால் அதிகரித்துக் கொண்டு வருகிறது. அதிகாரிகளுடைய மனோபாவமும் மிகவும் நன்றாக இருந்துகொண்டு வருகிறது. முன்பு இருந்த எண்ணத்தையும் மாற்றிக்கொண்டு எல்லோரும் ஸந்தோஷிக்கிறதாகத் தெரிகிறது. எல்லாம் சீக்கிரத்தில் நன்றாக முடிய வேண்டும் என்று ஸ்ரீரங்கநாதனைப் பிரார்த்திப்பீர்கள் என்று பூர்ண நம்பிக்கையோடு இருக்கிறேன்.

சுபமஸ்து

ஸ்ரீரங்கத்தில் கோபுரத்திலுள்ள, கட்டவேண்டிய திறந்திருந்த பாகங்களை நல்ல கருங்கல்லால் கட்டிப் பூர்த்தி செய்தாகிவிட்டது. மூடியிருக்கிற கோபுரவாசலுக்குச் சரியாக நான்கு புறங்களிலும் பதினெட்டு அடி உயரம் ஜல்லி, காங்க்ரீட் போட்டு முடிந்துவிட்டது. இந்தப் பதினெட்டு அடி உயரத்துக்கு மேலே முழுவதையும் கம்பி கட்டி மூடப்போகிறார்கள். இதுவும் ஒரு பெரிய நிலை மாதிரி அமைந்துவிடுகிறது. பிறகு, முதல் நிலை கட்ட ஆரம்பிக்கப் போகிறார்கள். தை மாதத்துக்குள் முதல் நிலை முடிந்துவிடும் என்று நினைக்கிறேன்.

sadagopan.org

இரண்டாம் நிலையைத் திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவன் கட்டித் தருவதாகத் திருவுள்ளம் பற்றியாயிருக்கிறது. எல்லாம் ஸந்தோஷமாகவே பூர்த்தி பெறும். கோபுரகைங்கர்யம் வெகு சீக்கிரத்தில் பூர்த்திபெற்று ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற வேண்டும் என்று எல்லோரும் பகவானைப் பிரார்த்திக்க வேண்டும். இதுவரை 25, 10, 5 4, 2½, 2, 1½, 1 ஆயிரம் என்று பல ரசீதுகள் கொடுக்கப்பெற்றிருக்கின்றன. ஒரு ரசீதுப் புஸ்தகத்தில் நூறு ரசீதுகள் உள்ளன. சுமார் 1,75,000 ரூபாய் கைக்கு வந்தது கோபுர கைங்கர்யத்தில் உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது.

50 ரூபாய் ரசீது ஐம்பது கொடுக்கப்பெற்றிருக்கிறது. 250 ரூபாய் ரசிதில் 60 கொடுத்திருக்கிறது. 100-50 ரூபாய்க்கான ரசீதுகளும் கொடுக்கப்பெற்றிருக்கின்றன. ஸ்ரீரங்கநாதன், தர்மிஷ்டாகள் மனத்தில் புகுந்து கொடுக்கும்படி செய்து செலவுக்குத் தட்டுப்பாடில்லாமல் செய்து வருகிறான். பணத்தைப் பற்றிய கவலையே இல்லை. ஸ்ரீமான் கமிஷனர் முதலான எல்லோருடைய உத்ஸாஹமும் மேலிட்டுக்கொண்டு வருகிறது.

குழந்தைகள்கூட இரண்டு ரூபாய் ஐந்து ரூபாய் கொடுத்து ரசீதை வாங்கிக் கண்களில் ஒற்றிக்கொள்கின்றன. பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கிறது. எல்லோரையும் ரக்ஷிப்பதற்கு ஸ்ரீரங்கநாதன் இப்படி ஒரு காரியத்தைச் செய்யும்படி என்னை நியமித்து ஆரம்பிக்கும்படிச் செய்து வேடிக்கை பார்க்கிறான் நான் எல்லா பரத்தையும் அவன் திருவடிகளில் ஒப்புவித்துவிட்டு ஸ்ரீரங்கநாதன் எப்படிச் செய்கிறான் என்று வேடிக்கை பார்க்கிறேன். இந்தக் கோபுர கைங்கர்யம் எப்படிப் பூர்த்தியாகப் போகிறது என்று மற்ற எல்லோரும் வேடிக்கை பார்க்கிறார்கள் தேவதைகள் எல்லோரும் கோபுர ஸம்ப்ரோக்ஷணத்தன்று புஷ்பமாரி பொழியப் புஷ்பங்களைக் கைகளில் வைத்துக்கொண்டபடியே எதிபார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் எல்லோரும் இன்று முதற்கொண்டே கோபுர கைங்கர்யத்தை உத்தேசித்து ஸ்வர்ணமாரி பொழிய வேண்டும். நமக்கு ஏது பணம் என்று கவலைப்பட வேண்டாம். ஸ்ரீரங்கநாயகியைப் பிரார்த்தித்தால் அளவற்ற பணத்தை அவள் கொடுக்க சித்தமாக இருக்கிறாள். கவலை வேண்டாம்.

தர்மங்களுக்குள்ளே உயர்ந்த தர்மம் கோபுரத்தைப் பூர்த்தி செய்வதாகும். மனுஷ்யனைப் பிறந்தவன் தன்னை அறிய வேண்டும். தேவர்களில் பிரம்ம ருத்ர இந்த்ராதிகளை அறிய வேண்டும். சடைமுடியன் சதுர்முகன் இந்திரன்

sadagopan.org

முதலானோர் எவனுடைய அனுக்கிரகத்தினால் உயர்ந்த பதவியை அடைந்திருக்கிறார்கள் என்பதை அறிய வேண்டும். இவர்களுக்கும் அனுக்கிரகம் செய்கிறவன் எப்படிப்பட்டவனாக இருக்கிறான் என்பதை அறிய வேண்டும். பாப பலன்களை அனுபவிக்கிற இடங்களை அறிய வேண்டும். புண்ணிய பலன்களை அனுபவிக்கிற இடங்களை அறிய வேண்டும். அந்தப் புண்ணிய பலன்களுக்குள்ளே எந்தப் புண்ணியம் மிகவும் உயர்ந்தது? அளவற்ற பலனைத் தரக்கூடியது? அவற்றுக்குள்ளே எந்தப் புண்ணியம் ஸ்ரீவைகுண்டத்தில் எப்பொழுதும் பகவானுடனே இருந்து கொண்டு அவனைப் போலவே ஆனந்திக்கும்படி பண்ணுகிற புண்ணியம் என்று தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் மிகவும் முக்கியமானதாகும்.

நமக்கு முக்கியமான விஷயங்கள் எல்லாம் நாமே யோசித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ள முடியாதவை இவற்றைச் சாஸ்திரங்களைக் கொண்டே அறிய வேண்டும் தாமாகச் சாஸ்திரங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ள முடியாது. இவற்றை எல்லாம் முன்பு பெரியோர்கள் மூலமாகத் தெரிந்து கொண்டிருக்கிற ஒரு ஸதாசார்யனின் உபதேசத்தினால் தான் தெரிந்து கொள்ள முடியும்.

புண்ணியம் எது, பாவம் எது என்பதையே நாம் அறிந்து கொள்ள முடியாது. நாமாக யோசித்தாலும், புஸ்தகத்தைப் பார்த்தாலும் சில புண்ணியங்கள் நமக்குப் பாவங்கள் மாதிரி தோன்றிவிடும். ஆகையால் வேத சாஸ்திரங்களை தன்கறிந்த முன்னோர்களான ஆசார்ய பரம்பரையிலே வந்த ஆசார்யர்கள் மூலமாகவேதான் அறிய வேண்டும். அப்படி அறியும்போது ஸாதாரணை புண்ணியங்கள் சில, உயர்ந்த புண்ணியங்கள் சில என்று அறிந்துகொள்ளலாம் வேதத்தில் சொல்லியிருக்கிற அந்த அந்தப் பலன்களை அடைவதற்காக அந்த அந்த யாக யஜ்ஞாதிகளை அறிந்துகொள்வது ஒரு வகை. அந்தப் பலன்களில் ஆசை வைக்காமல் "பகவத் ப்ரீதியை உத்தேசித்துச் செய்கிறேன்" என்று ஸங்கல்பித்துக்கொண்டு யாகயஜ்ஞாதிகளைப் பண்ணுவது உயர்ந்த தர்மம். அப்படிப் பண்ணும்போது அந்த யாகாதிகளில், பிரம்மா, ருத்ரன், இந்திரன், யமன், வருணன், வாயு முதலான தேவதைகளை உத்தேசித்து ஹோமங்கள் பண்ணும்போது அந்த அந்தத் தேவதைகளின் உள்ளே இருக்கிற பரமாத்மாவை நினைத்துக்கொண்டு, அவர்களுக்கும் உயிராக இருக்கக்கூடிய பரமாத்மாவிற்கென்று ஹோமங்களைப் பண்ணினால் எல்லாம் பகவானுடைய ப்ரீதியையே உத்தேசித்துச் செய்ததாக ஆகிவிடுகிறது என்று சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறபடியால் எல்லாப் புண்ணிய காரியங்களையும் பகவத்ப்ரீதியை உத்தேசித்துச் செய்தால் அது உயர்ந்த புண்ணியங்களில் சேர்ந்து விடும். ஆனால், "பகவத்ப்ரீதியை உத்தேசித்துத் திருமஞ்சனம் பண்ணுகிறார்கள். பகவத்ப்ரீதியை உத்தேசித்து, கோதானம் பண்ணுகிறார்கள்; திருவிளக்கு ஏற்றுகிறார்கள்; ப்ரதக்ஷிணம் செய்கிறார்கள். இதைப் போல் அனேக காரியங்களைப் பகவத் ப்ரீதியை மாத்திரம் உத்தேசித்துச் செய்கிறார்கள். அதனால் அவர்களுக்குப் பகவான் மோக்ஷத்தைக் கொடுத்துவிடுவாரா?"

sadagopan.org

என்று கேட்கலாம். கட்டாயம் மோக்ஷத்தைப் பகவான் கொடுப்பார்.

"அப்படியானால் எதற்காக ஸரணாகதி பண்ண வேண்டும்? 'ப்ரபத்நாதத்யேஷாம் ந திஷ்டி முகுந்தோ நிஷ்டபதம்' என்று, ஸரணமடைந்தவன் தவிர இதரர்களுக்குத் தன்னுடைய முக்கிய மான ஸ்ரீவைகுண்டத்தைத் தரமாட்டான் என்று ஸ்ரீதேசிகன் ஸாதித்திருக்கிறாரே? ஸாதாரணமான புண்ணியங்களுக்கே மோக்ஷம் கிடைத்துவிடுமானால் ஸ்ரீதேசிகன் உபதேசித்திருப்பது எப்படிப் பொருந்தும்?" என்று கேட்கலாம்.

இந்தக் கேள்வி சரியான கேள்விதான். பதில் சொல்லு கிறேன், கேளுங்கள். பலனைக் கருதுபவர் யஜ்ஞயாகாதிகளில் அந்த அந்தத் தேவதைகளை உத்தேசித்து ஹோமம் பண்ணினால் பூமண்டலத்திலும் ஸ்வர்க்கம் முதலிய லோகங்களிலும்தான் சில பலன்களை அநுபவிக்கலாம். அதே யாகாதிகளை, பகவானை உத் தேசித்துப் பண்ணினால், அதிகமான பலனை அநுபவிக்கலாம். இவை எல்லாம் கொஞ்சகாலம் அநுபவித்தபிறகும் அல்லது அதிக நாள் அநுபவித்தபிறகும் முடிந்துவிடும் முன் சொன்னபடி அந்த அந்தத் தேவதையின் பெயரைச் சொல்லி ஹோமம் செய்யும் போது அந்த அந்தத் தேவதையின் அந்தர்யாமியான பகவா னுடைய ப்ரீதியை உத்தேசித்து ஹோமங்கள் செய்தால், அளவற்ற பலன்-அழியாத பலன் கிடைக்கிறது என்பது சாஸ்திரஸம்மத மான விஷயம்.

எப்படி என்றால், அவிதம் ஹோமம் பண்ணுகிறவனுக்கு உள்ள ரஜோகுண தமோகுணங்களை விருத்தியடைய விடாமல் தடுத்து ஸத்துவகுணங்களை விருத்தியடையச் செய்கிறது பகவானின் மஹிமை. அப்பொழுது அல்பமான பலன் களில் இச்சை ஏற்படாமற்செய்து நிரதிசயமான ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய மோக்ஷத்தில் ஆசையை உண்டுபண்ணுகிறது. அதனால் அளவற்ற பலனைத் தரக்கூடிய உபாயத்தை—ஸரணாகதி யைப் பண்ணும்படியான புத்தியை உண்டுபண்ணுகிறது. உடனே ஆசார்யாநுக்ரஹத்தினால் ஸரணாகதி பண்ணுகிறான். அதனால் பகவான் ஸந்தோஷமடைந்து மோக்ஷத்தைக் கொடுக் கிறான். யோசித்துப் பாருங்கள். மோக்ஷத்தையடைய ஸரணாகதி பண்ணும்படியான புத்தி எதனால் வந்தது? முன் சொன்னபடி பகவானை உத்தேசித்து யஜ்ஞயாகாதிகள் பண்ணினபடியினால் தானே வந்தது? ஆகையால், "ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே ஸ்வயமேவ காரயதி" என்று, நல்ல காரியங்களைப் பண்ணினால், பரம்பரையாக மோக்ஷம் வந்துவிடுகிறபடியினால், இதர பலன் களை உத்தேசிக்காமல் பகவத்ப்ரீதியை மாத்திரம் உத்தேசித்து நல்ல காரியங்களைப் பண்ணினால் மோக்ஷம் வரும் என்று சொன்னேன்.

ஆகையால், இந்தக் கோபுரகைங்கர்யத்தில் இதர பலன் களை உத்தேசித்து ஒரு தாசை பண்ணினாலும் பலன் வருகிறது. இதர பலன்களை உத்தேசிக்காமல், 'அச்யுதः ப்ரீயதாம்' என்று பகவத்ப்ரீதியை மாத்திரம் உத்தேசித்துக் கைங்கர்யத்தில் ஸம்பந்தப்பட்டால் மோக்ஷம் தந்து ஆனந்திக்கச் செய்வான் ஸ்ரீரங்கநாதன் என்பதில் ஸந்தேஹமே இல்லை. நல்ல ஸமயத்தை உபயோகப்படுத்திக்கொள்ளுங்கள்; நல்ல பலன் கிடைக்கும்.

sadagopan.org

ஸ்ரீ அழகியசிங்கரின்

அருள்மொழி

अद्य मे सफलं जन्म जीवितं च सुजीवितम् ।
यद्गोपुरस्य संपूर्त्यै यत्नवान् रङ्गिणोऽहम् ॥

ஒரு ஆச்சர்யமான விஷயம். இந்த அருள்மொழி எழுத ஆரம்பித்தபோது மனஸ்ஸில் தோன்றிற்று. அதாவது, இது வரையில் கோபுரவேலை எவ்வளவு ஆகியிருக்கிறது என்பதை எழுத வேண்டும் என்று எழுத ஆரம்பித்தேன். அந்த ஸமயத்தில் காஞ்சி ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளுடைய ஸ்ரீகார்யம் ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி ஐயர் புன்னிரிப்போடு வந்து சேர்ந்தார்; உடனே வரவேற்றேன். அவர் என்னைப் பார்த்து, "ஸ்வாமிகள் ஏதோ கவலைப்படுகிற மாதிரி தோன்றுகிறதே! என்ன விஷயம்?" என்று கேட்டார். "ராயகோபுரம் சீக்கிரமாகப் பூர்த்தியாக வேண்டும். கையெழுத்துப் போட்டிருப்பவர்களிடமிருந்து சீக்கிரமாகப் பணம் வரவில்லை என்கிற கவலைதான்" என்று சொன்னேன். உடனே அவர், "நம்முடைய காஞ்சி ஸ்ரீகாம கோடி பீடாதிபதி ஸ்வாமிகள் கோபுர கைங்கர்யத்துக்காக ஒரு லக்ஷம் ரூபாய்க்குச் 'செக்' ஸமர்ப்பித்து வரும்படி நியமித்திருக்

sadagopan.org

கிறார்கள்'' என்று சொல்லி, 'செக்'கையும் ஸமர்ப்பித்தார். உடனே அவர்களைப் பார்த்து, ''பரம ஸந்தோஷம்! இந்த லக்ஷ ரூபாயுடன் கோபுரத்தின் மேல்தள அஸ்திவாரம் பூர்ணமாக ஆகி விடுகிறது. இதற்கு மேல், கோபுரத்துக்கு க்ரமமாக முதல் நிலை கட்டவேண்டியதுதான். அதற்கு, ஸுமார் நாலு லக்ஷம் ரூபாய் பாங்கியில் கட்டியிருக்கிறேன். அதைக் கொண்டு முதல் நிலை பூர்த்தியாகிவிடும். அதற்குள், அநேக இடங்களிலிருந்து ஸுமார் பதினைந்து லக்ஷ ரூபாய் வரை வருவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்ரீகாஞ்சி காமகோடி [illegible] பீடாதிபதிகளால் கோபுரத்தின் மேல்தள அஸ்திவாரம் பூர்த்தியானது யற்று எனக்கு ரொம்பவும் ஸந்தோஷம். அதுவரை பூராவும் இவர்கள் கட்டியதாகவே நான் நினைக்கிறேன்'' என்று சொன்னேன். அதற்கு அவரும், கூட வந்திருந்த சில்கூர் ஸுந்தரராஜனும், ''ஸ்ரீகாஞ்சிப் பெரியவர்களுடைய அபிப்பிராயமும் அவ்விதமே'' என்றும் ''இந்த நிலை பூராவுக்கும் மேலும் பணம் வந்துகொண்டிருக்கும்'' என்றும் சொன்னார்கள். இந்த வார்த்தையைப் பக்கதநில் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஸ்வாமிகளுடைய பெரிய மனஸ்ஸை வெகுவாகப் புகழ்ந்தார்கள்.

ஒரு விஷயம், எல்லோருக்கும் தெரிவிக்கிறேன். கோபுர கைங்கர்யத்துக்கு எவ்வளவு பணம் வேண்டுமோ அதற்கு மேல் வஸூல் பண்ண உத்தேசமில்லை. கோபுர கைங்கர்யத்துக்குப் பணம் கொடுக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருப்பவர்கள் தாமதித்தால் அவர்களுடைய பணம் அந்தக் கைங்கர்யத்தில் சேரும் என்று நிச்சயம் சொல்ல முடியாது. முந்திக்கொள்பவர்களுக்குத்தான் கோபுர கைங்கர்ய புண்ணியம் கிடைக்கும். இந்தக் கோபுர கைங்கர்யம், மற்ற எல்லாக் கைங்கர்யங்களுக்கும் மேற்பட்டது என்பதைப்பற்றி ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகள் ஒரு ஸ்ரீமுகத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அந்த ஸ்ரீமுகத்தை இந்த 'ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா' ஸஞ்சிகையில் பிரசுரம் செய்திருக்கிறார்கள். அதை வாசித்து ஆனந்தப்படுவீர்கள் என்று நம்புகிறேன். அவர்கள் செய்திருக்கிற பிரசாரம் மூலமாகவும் அவர்களுக்குச் செல்வாக்கு இருக்கிற கவர்ன்மெண்டுகள் மூலமாகவும் பணம் லக்ஷக்கணக்கில் வஸூல் பண்ணி எவ்வளவு நிலைகள் முடியுமோ அவ்வளவு நிலைகள் கட்டுவதற்கு ஒத்தாசை செய்ய உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. வரும் தை மாஸம் 4 அல்லது 5 தேதியில் கோபுரத்தின் முதல் நிலை கட்டுவதற்கு ஸ்தபதிகளை வரவழைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. முதல் தடவை, பத்து லக்ஷம் செங்கல்களுக்கு அட்வான்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸுமார் ஐயாயிரம் மூட்டை ஸிமெண்ட் (கண்ட்ரோல் விலைக்கு) வாங்குவதற்குக் கோவில் அதிகாரிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இதை எழுதிக்கொண்டிருக்கும் ஸமயத்தில் தேவகோட்டையிலிருந்து பெரிய தர்மிஷ்டரான வகீல் பார்த்தஸாரதி ஐயங்கார் வந்து சேர்ந்து ஸுமார் ரூ 15,000 பதினையாயிரத்துக்குக் குறையாமல் வஸூல் பண்ணிக் கொடுப்பதாகப் பரமஸந்தோஷத்துடன் கையெழுத்திட்டிருக்கிறார். ஆகையால், கோபுர கைங்

sadagopan.org

கர்யத்துக்குப் பணம் கொடுக்க முந்திக்கொள்பவர்களுக்குத் தான் இடம் உண்டு என்று முந்தி எழுதியிருப்பதற்கு இது ஓர் அடையாளம்.

மத்யாஹ்னம் மூன்று மணிக்குக் கோபுரத்துக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம் பிரதிநிதிகளை அழைத்துக்கொண்டு போயிருந்தேன். கோபுரம் இழக்குப் பக்கம், வடக்குப் பக்கம் பூராவும் அஸ்திவாரதளம் போட்டாகிவிட்டது. மேற்குப் பக்கம் பூர்த்தி பெறும் நிலையில் இருக்கிறது. இது பூர்த்தி பெற்றதும் தெற்குப் பக்கத்தில் சில இடங்கள் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. கோபுரத்தின்மேல், குழாய்மூலம் ஜலம் வருகிறது. ஜல்லியைக் கலக்கும் மெஷின் பெரிய ஜல்லியைக் கலக்கிக் கொடுக்கிறது. வேலையைப் பார்க்க, (கோவிலுக்கும் மடத்துக்கும் வரும் ஸேவார்த்திகள்) மேலே ஏறிப் பல இடங்களில் கவனிக்கிறார்கள். சுறுசுறுப்பாக வேலை நடக்கிறது. கற்களை மேலே ஏற்றுகிறார்கள். மணல் மேலே வருகிறது. ஒருவர் நூற்றிருரு ரூபாய் கோபுர கைங்கர்யத்துக்குக் கொடுத்தார். இரண்டு நாட்களுக்கு முன்பு கோபுரவேலை நடப்பதை 'போட்டோ' எடுத்தார்கள். அதைக் கொண்டுவந்து காண்பித்தார்கள். அதைப் பார்த்தேன்; ஸ்ரீமத் மதுராந்தகம் ஸ்ரீ வீரராகவாசார்யர் ஸ்வாமியும் அதில் ஸேவை ஸாதிக்கிறார். இரண்டு நாட்களுக்கு முன் கோபுர வேலையைப் பார்க்க அவரும் வந்திருந்தார். ஸுமார் இரண்டு மணி நேரம் என்னுடன் இருந்தார். அப்போது போட்டோ எடுக்கப்பட்டது.

ஸ்ரீகாமகோடி மடம் ஸ்ரீ கார்யம். திருவானேக்காவல் சங்கர மடத்து ஏஜெண்ட், சென்னை, மற்றும் பல இடங்களிலிருந்தும் வந்திருப்பவர்கள் இவர்களுடன் கோபுரத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தேன். திடீரென்று நினைவு வந்தது. "கோபுரப்படிகளின் மீது இரண்டு படிக்கற்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார்களே. அதைப் பார்க்க வேண்டும்" என்று எழுந்திருந்தேன். "எவ்வளவு கஷ்டப்பட்டு வேலையாட்கள் செய்கிறார்கள்! அவர்களுக்கு எவ்வளவு புண்ணியம்!" என்று ஆச்சரியப்பட்டேன். ஒரு சிறிய பெண் கூலிவேலையாள் ரொம்பவும் சுறுசுறுப்பாக வேலை செய்தது. 'பெரிய கூலியாட்களைவிட இவ்வளவு உத்ஸாகமாக வேலை செய்கிறதே! என்ன காரணமாக இருக்கும்?' என்று யோசித்தேன். "ஓஹோ! ஸ்ரீரங்கநாதன் கோபுர கைங்கர்யம் அல்லவா" என்று தோன்றிற்று. கோபுரத்தின் மேல்படி வேலை முடிவடைந்தது. ஸந்தோஷமாகக் கீழே இறங்க ஆரம்பித்தேன். ஸ்ரீகாமகோடி மடத்தின் ஸ்ரீகார்யம் முதலியவர்கள் விடை பெற்று, சென்றார்கள். நாளைக்கு ஸ்ரீவைகுண்ட ஏகாதசி. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிலுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். கோபுர வேலையையும் சாரத்தையும் கீழிருந்து பார்த்துக் கையைக் கூப்புகிறார்கள் அவர்கள், "சீக்கிரமாக இந்த வேலை பூர்த்திபெற வேண்டும்" என்று ஸ்ரீரங்கநாதனைப் ப்ரார்த்தித்தது போலத் தெரிகிறது. நாளைக்கும் இதேபோல் வேலை நடக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு ஆச்ரமத்துக்கு வருகிறேன். ஆச்ரமத்தில் கோபுரத்துக்குப் பணம் கொடுக்க எல்லோரும் நின்றுகொண்டிருந்தனர். மேலேகாரியங்கள் நடக்கவேண்டும்.

sadagopan.org

கோபுரத்துக்கு எப்படிப் பணம் கொடுக்கிறது? என்று யோசிக்க வேண்டாம். நம் பெரியோர்கள் நமக்காகச் சேர்த்து வைத்திருக்கிற சொத்திலிருந்தும் இந்தத் தர்மத்தில் கைங்கர்யம் பண்ணலாம். நாம் கஷ்டப்பட்டு ஸம்பாதித்திருக்கிற பணத்திலிருந்தும் பண்ணலாம். நமக்கு எந்த விதத்திலும் பணம் மிச்சப்படாமல் போனாலும் நம் கிருகங்களில் ஏற்படும் சுப காரியங்களுக்குக் கடன் வாங்கிச் செய்வது போலக் கடன் வாங்கியும் கோபுர கைங்கர்யத்தில் உபயோகப்படுத்தலாம். அதுவும் தவிர பல பேரிடத்தில் யாசித்துப் பணம் சேர்த்தும் செய்யலாம். அதுவும் தவிரப் பல தர்மிஷ்டர்களைக் கொடுக்கும்படி செய்து அந்தப் புண்ணியபலனைப் பெறலாம். எப்படியாவது இந்த பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டால் ஜன்மம் எடுத்ததற்குப் பலன் ஏற்பட்டதாகும். எந்தக் காரியத்தையும் நான் செய்கிறேன் என்று அஹம்பாவத்துடன் செய்யக்கூடாது.

மோக்ஷத்திற்காகச் ஶரணாகதி ஆனவர்கள் இந்தக் கைங்கர்யம் செய்யும்போது, சரணாகதிக்கு ஒத்தாசையாக இது இருக்கட்டும் என்று எள்ளளவும் எண்ணக்கூடாது. 'பகவத் ப்ரீத்யர்த்தம்' என்று ஸங்கல்பித்துக்கொண்டு பகவத்ப்ரீதியை மாத்திரம் உத்தேசித்துச் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் சரணாகதி பண்ணிக்கொண்டவர்களுக்குப் பிறகு ஏதாவது புத்திபூர்வமாகப் பாபம் ஏற்பட்டிருந்தாலும் அதற்கு இந்தக் கோபுர கைங்கர்யம் பிராயச்சித்தமாகும். அந்தப் பாபம் விலகிவிடும்.

அதனால் சரணாகதி பண்ணிக்கொண்டவர்கள் எந்தப் பலனையும் உத்தேசித்து எந்தத் தர்மத்தையும் செய்யக்கூடாது; ஆகையால் நல்ல கதியை அடைய உத்தேசித்திருக்கிற ஸர்வ பக்தர்களும் ஸ்ரீரங்கநாதன் ப்ரீதியை உத்தேசித்தே இந்தக் கோபுர கைங்கர்யத்தையும் செய்யவேண்டும்.

சுபமஸ்து

अद्य मे सफलं जन्म जीवितं च सुजीवितम् ।
यद्रङ्गिगोपुरस्याद्य संपूर्तिं प्रार्थयाम्यहम् ॥

அத்ய மே ஸபலம் ஜந்ம, ஜீவிதம் ச ஸுஜீவிதம் |
யத் ரங்கிகோபுரஸ்யாத்ய ஸம்பூர்த்திம் ப்ரார்த்தயாம்யஹம்||

இந்த ச்லோகத்தின் அர்த்தத்தை விளக்கிக் கூறுகிறேன்.

அத்ய மே ஸபலம் ஜந்ம—என்னுடைய பிறப்பு நல்ல பலனைப் பெற்றுவிட்டது. எப்பொழுது நான் ஸ்ரீஅஹோபில மடத்தில் நாற்பத்தோராவது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹஸடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருவடிகளை ஆச்ரயித்து அந்த மஹாதேசிகனுடைய அநுக்ரஹத்தினால் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவடிகளில் சரணாகதியைப் பண்ணி முடித்தேனோ அப்பொழுதே எனது ஜன்மம் ஸபலமாகிவிட்டது. பிறவி எடுத்ததற்குப் பலன் மோக்ஷத்தை அடைவதுதானே! "மோக்ஷத்தை அடைவது ஒன்று தானா பலன்?" என்று கேட்கலாம். ஆம், அதுதான் பலன்.

sadagopan.org

ஸ்ரீவைகுண்டத்தை அடைவதுதான் முக்கியமான, உயர்ந்த பலன். இந்தப் பிறவியில் அநுபவிக்கக்கூடிய இதர ஸுகங்கள் எல்லாம் அல்பங்கள். எப்பொழுதும் நீடித்திருக்கமாட்டா. கஷ்டமும் கலந்தனவாகவே இருக்கும். இது நம்முடைய அநுபவத்தில் தெரிந்ததுதான். ஸ்வர்க்கம் முதலிய லோகங்களில் அநுபவிக்கிற ஆனந்தங்களும் அல்பங்கள்தாம்; அழிந்துபோகக்கூடியவைதாம். இவற்றை நாம் நன்முகத் தெரிந்துகொண்டுவிட்டால், அழிவில்லாத ஆனந்தாநுபவம் ஏற்படக்கூடிய ஸ்ரீவைகுண்டத்தை அடைய விருப்பமில்லாதவன் எவனும் இருக்கமாட்டான். இதில் யாதொரு ஸந்தேகமும் இல்லை.

இதைப்பற்றி யோசித்துப் பார்ப்போம். இப்பொழுது நம் கண்களால் பார்த்துக்கொண்டிருக்கிற மனிதன் முதல் மிருகங்கள், பக்ஷிகள், நாய் நரிகள், பாம்பு தேள் முதலியவை யாவும் உயிருள்ளவைதாமே. 'இந்த உயிர் என்று சொல்லப்படுகிற ஜீவாத்மாக்களில் வித்தியாசம் உண்டா? இல்லையா?' என்று முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். ஆசார்யன் மூலமாகச் சாஸ்திரங்களைக் கொண்டு பார்த்தால் எல்லா ஜீவாத்மாக்களும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன என்று தெரிகிறது.

எவ்விதம் இருக்கிறதாகத் தெரிந்துகொள்ளலாம் என்றுக் கேளுங்கள், சொல்லுகிறேன். அந்த ஜீவாத்மாக்களைக்காட்டிலும் சின்ன வஸ்து வேறு எதுவும் கிடையாது. அவ்வளவு சிறியது. ஜீவாத்மாக்களுக்கு அழிவு—நாசம் என்பது கிடையாது. கடவுளைப் போல் எப்பொழுதும் அழியாமல் இருக்கின்றன. ஜீவாத்மாக்கள் உண்டாகிற வஸ்துக்களிலும் சேரா; அழிந்து போகிற வஸ்துவிலும் சேரமாட்டா. புண்ய பாபங்களுக்குத் தக்கபடி மனுஷ்ய உடலோடு பிறக்கிறான். மிருக உடலோடு பிறக்கிறான். பக்ஷி உடலோடு பிறக்கிறான். தேவசரீரத்தோடு பிறக்கிறான்; உடலில்தான் ஆண் பெண் என்கிற வித்தியாசம். உள்ளே இருக்கிற ஆத்மாக்களில் வித்தியாசம் கிடையாது. பூச்சி, புழு, கொசு முதலிய ஸகல வஸ்துக்களிலும் உள்ள ஆத்மாக்கள் எல்லாம் ஒரே விதமாகத்தான் வித்தியாசம் இல்லாமல் இருக்கின்றன. உடலில்தான் ஸ்திரீ புருஷர்கள் என்கிற வித்தியாசம். இந்த விஷயங்களைக் கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு நன்முக உபதேசித்திருக்கிறான்.

யோசித்துப் பார்ப்போம். உலகிலுள்ள மனுஷ்யன் முதல் ஸர்வ வஸ்துக்களிலும் உள்ள ஆத்மாக்களில் வித்தியாசமில்லை; உடலில்தான் ஸ்திரீகள் என்றும், புருஷர்கள் என்றும், ஆடு மாடுகள் என்றும், நாய் நரிகள் என்றும் வித்தியாசங்கள். இந்த வித்தியாசங்கள் ஜீவாத்மாக்களுக்கு எதனால் ஏற்பட்டன? என்றால், அந்த அந்த ஆத்மாக்கள் செய்த புண்ணிய பாபங்களால் தான் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதற்கு மேல்தான் நாம் நன்முக யோசிக்க வேண்டும்.

இப்பொழுது நாம் மனுஷ்யராகப் பிறந்திருக்கிறோம். நாம் என்று சொல்லுகிற ஆத்மாவிற்கு அழிவு கிடையாது. நம்முடையது என்று சொல்லுகிற இந்த உடலுக்குக் கட்டாயம் அழிவு உண்டு என்பதைத் தெரிந்துகொண்டிருக்கிறோமா?

sadagopan.org

இல்லையா? நாம் வித்தியாசம் சொல்லலாமே தவிர இந்த உடலுக்கு அழிவு இடையாது என்று சொல்ல முடியாது. இந்த உடலை விட்டுப் பிரிந்த ஆத்மாவிற்குப் பிறவி—மறுஜன்மம் கட்டாயம் உண்டு.

மறுஜன்மம் என்ன வரும் என்றால், புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி அடுத்த பிறவி இருக்கும் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. இறந்து போனவன் நிறையப் புண்ணியம் பண்ணியிருந்தால் மறுபடியும் மனுஷ்யனாகப் பிறக்கிறான். பாவங்களை நிறையச் செய்தவனுகில் நாய், பன்றி, நரி, கழுதை முதலிய ஜந்துக்களாகப் பிறக்கிறான் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்த விஷயங்களை நன்கு அறிந்துகொண்டு, நாம் யோசிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்று உண்டு. அதாவது—

"நமக்கு அடுத்த பிறவி என்ன வரும்? மறுபடியும் மனிதப்பிறவி ஏற்படுமா? அல்லது வேறு மிருகம் முதலியவற்றில் பிறவி ஏற்படுமா?" என்று நாமே யோசித்துப் பார்க்கலாம். எப்படி என்றால்? ஒரு கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு, நமக்குப் புத்தி தெரிந்த நாள் முதல் நாளது தேதிவரை நாம் என்ன புண்ணியம் பண்ணியிருக்கிறோம், என்ன பாவம் பண்ணியிருக்கிறோம் என்று எழுதிப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் புண்ணியம் பண்ணினது மிகவும் குறைவாகவே இருக்கும். நாம் பண்ணின பாவங்களை யோசித்து எழுத ஆரம்பித்தால் எத்தனை நாள் எழுதினாலும் எழுத முடியாது.

எத்தனையோ விதங்களான பாவங்களைப் பண்ணியிருக்கிறோம்; ஸாரரை ஏமாற்றுவது போல் தெய்வத்தைக்கூட ஏமாற்றிவிட்டதாக நினைத்து ஆபாஸமான எத்தனையோ காரியங்களைச் செய்திருக்கிறோம். அவற்றையெல்லாம் நினைத்தால், 'பாவமே செய்து பாவியானேன்' என்று வருத்தப்படும்படிதான் இருக்கும். அப்படி நாம் பண்ணியிருக்கிற பாவங்களுக்குப் பலனாகப் பிறவி வந்ததேயானால், நாயாகப் பிறக்கிறோமோ? பன்றியாகப் பிறக்கிறோமோ? கழுதையாகப் பிறக்கிறோமோ? ஒட்டகமாகப் பிறக்கிறோமோ? வேறு எந்தமாதிரி பிறக்கிறோமோ? எந்த மாதிரியான பிறவி வரும் என்று மாத்திரம் யாராலும் சொல்ல முடியாது. அப்படி மிருகங்களாகப் பிறந்துவிட்டால் எப்படிப் பகவானை அறிந்துகொண்டு நல்லகதி அடைய முடியும்?

பகவானைத் தெரிந்துகொள்ளக் கூடிய அறிவு உள்ள மனித ஜன்மத்தைப் பெற்றிருக்கிற நாம், இந்த மனிதப் பிறவியில் இருக்கிற கஷ்டங்களையும், அல்ப ஸுகங்களையும், இந்த மனுஷ்ய சரீரம் அழிந்துவிடுவதையும் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படி யோசித்துப் பார்த்தவர்கள், 'ஆதலால் பிறவி வேண்டேன்' என்று வருத்தப்பட்டிருக்கிறார்கள். இந்த மனுஷ்ய ஜன்மத்திலேயே அளவற்ற கஷ்டங்கள் இருக்குமானால் மிருகங்களாகப் பிறந்தால் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படும் என்பதைக் கூறவும் வேண்டுமா? அவை படும் கஷ்டங்களை நாம் நேரில் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறோம்?

ஆகையால் நமக்கு அடுத்த பிறவி எந்த மாதிரி வருமோ என்று பயந்து, பிறவி வராமலே இருப்பதற்கு வேண்டிய காரியங்

sadagopan.org

கனைச் செய்து முடித்துவிட வேண்டும். ''மறுபிறவி எப்படி வருமோ? எத்தனையோ கோடிக் கணக்கான ஜன்மங்கள் வீணாகப் போனது போல்தானே இந்த ஜன்மமும் போய்விடும்? மறுபிறவி நம் இஷ்டம் போல் வராதே. என்ன செய்வோம்?'' என்று வருந்த வேண்டும்.

அந்த வருத்தத்தைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பெரியோர்களை ஆச்ரயித்துத் தண்டம் ஸமர்ப்பித்து, ''மறுபிறவி வராமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று பிரார்த்திக்க வேண்டும். அவர் கிருபை பண்ணி, நம்மைப் பார்த்து, ''நீ வருந்த வேண்டிய விஷயம்தான் இது. மறுஜன்மம் என்ன வருமோ? அது அறிய முடியாததுதான். ஆனால் இந்த ஜன்மத்தைப் பெற்றிருக்கிறோம் அல்லவா? இது இப்படியே இருக்காது. இது கட்டாயம் அழியும்; நீயே பார். பால்யத்தில் இருந்தது போல் இருக்கிறதா உன் உடம்பு? அதோ அவரைப் பார். அவரைப் போல நீயும் கிழவனாக ஆகவேண்டியதுதான். அதோ பார், எத்தனை பேர் இறந்துவிட்டார்கள்! அப்படித்தான் நீயும் இறந்துபோக வேண்டியவன்;

''மரணம் எப்பொழுது என்று சொல்ல முடியாது. ஆனால் நிச்சயம் இந்தச் சரீரம் அழிந்துவிடும். மறுபிறவி வராமல் தடுப்பதற்கான காரியத்தைச் சீக்கிரம் செய்துவிடலாம். எப்படி என்றால்? 'மாம் உபேத்ய புநர்ஜன்ம ந வித்யதே' என்றபடி, என்னை ஸ்ரீவைகுண்டத்தில் வந்து அடைந்துவிட்டானேயானால் அவனுக்குப் பூமண்டலத்திலோ வேறு உலகங்களிலோ பிறவி இடையாது' என்று பரமாத்மா சொல்லியிருக்கிறான். அவனை அடைய என்ன காரியம் செய்ய வேண்டும் என்றால் அதற்கும் அந்தப் பரமாத்மாவே, 'மாமேகம் சரணம் வ்ரஜ அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச: — என்னை நீ சரணமாக அடை. உன்னை நான் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன். உனக்குக் கட்டாயம் மோக்ஷத்தைக் கொடுக்கிறேன். கவலைப்படாதே' என்று ஸத்தியம் பண்ணிச் சொல்லியிருக்கிறான். ஆகையால் பகவானைச் சரணமடை'' என்று உபதேசிப்பார்கள். அப்படியே செய்தோமானால் முக்தி அடையலாம்.

அவர்களின் உபதேசப்படி விஷயங்களை அறிந்து வருந்தினேன். ஆசார்யனை அடைந்தேன். லக்ஷ்மீநரஸிம்ஹனைச் சரணமடைந்தேன். அவனருள் பெற்றேன். அன்றைய தினமே எனது ஜன்மம் ஸபலமாகிவிட்டது. நான் லக்ஷ்மீநரஸிம்ஹனை ஆசார்யன் சொல்லிக் கொடுத்தபடி சொல்லி சரணமடைந்தபோது, 'எடுத்திருக்கிற பிறப்பு முடிந்த பிறகு மோக்ஷம் கொடுக்க வேண்டும்' என்று பிரார்த்தித்தபடியே பகவான் அநுக்ரஹம் பண்ணியதால் இவ்வளவுகாலம் ஜீவித்திருந்தும்—அந்த ஜீவிதம் — ஜீவிதம் — இப்பொழுது ஸபலமாகிறது.

யத்—எதனால் என்றால். ரங்கிகோபுரஸ்ய—அந்த—ஸ்ரீரங்கநாதனுடைய தெற்கு வாசலில் உள்ள ஸ்ரீராயர் கோபுரம் என்று பிரஸித்தமான, நாற்றுக்கணக்கான வருஷங்களாகப் பூர்த்தி ஆகாமல் நாற்பத்தாறு அடி உயரமுள்ள கோபுரவாசல் மேல் பாகத்திலிருந்து பதின்மூன்று நிலைகள் ஸ்ரீரங்கநாதன்

sadagopan.org

நியமனத்தினால் கட்ட ஆரம்பித்து வேலை நடந்துகொண்டிருப்பதால் இத்தனை நாள் உயிரோடிருந்ததும் ஸபலமாகிறது. ஸ்ரீரங்கநாதன் முதலில் நியமித்தபடியே என்னுடைய புத்தியை மாறுமல் இருக்கும்படிச் செய்து தன் கோபுரத்தைக் கட்டிப் பூர்த்தி செய்துகொண்டானேயானால் இதற்குமேல் என்னை எவ்வளவு காலம் இங்கு இருக்கும்படி ஸங்கல்பித்து இருக்கிறானே அவ்வளவு காலம் ஜீவித்திருப்பது ஸபலமாகிவிடும். என் பிரார்த்தனையைத் தலைக்கட்டிவிடுவான் என்று அவன் திருவடிகளையே தியானம் செய்துகொண்டிருக்கிறேன். ஸ்ரீரங்கநாயகியும், "கவலைப்பட வேண்டாம்; அப்படியே நடத்துகிறேன்" என்று அபயம் கொடுத்துக்கொண்டே இருக்கிறாள்.

எல்லோரும் ஸ்ரீரங்கநாதன் கோபுர கைங்கர்யத்தில் விடாமல் ஈடுபட வேண்டும்.

சுபமஸ்து

ஸ்ரீ:

ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அழகியசிங்கரின் அருள்மொழி

ஸ்ரீரங்கம் ராயகோபுர கைங்கர்யப் பத்திரிகை

ஆஸ்திகர்களான தர்மசீலர்களுக்கு ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹம் பண்ணி வேண்டிக்கொள்வது என்னவென்றால், எனக்கு வயது எண்பத்தாறு ஆகிவிட்டது. இந்த வயதில் ஸ்ரீரங்கநாதன் என் மனத்தில் புகுந்துகொண்டு, "பூலோக வைகுண்டமெனப் புகழும் ஸ்ரீரங்கம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் ராயகோபுரம் என்று பிரஸித்தமாக இருக்கும் கோபுரத்தை, கோபுரவாசலுக்கு மேற்புறத்திலிருந்து 13 நிலைகள் கட்டிப் பூர்ணகோபுரமாகச் செய்ய உன்னைத்தான் இவ்வளவு நாள் கழித்துத் தேடிப் பிடித்திருக்கிறேன். நீ அஹோபிலத்தில்

sadagopan.org

கோபுரத்தைப் பூர்த்தியாகக் கட்டினால் அல்லவா? அதைப் போல் இந்தக் கோபுரத்தையும் கட்டி முடிக்க வேண்டும். செலவிற்கு நீ கவலைப்பட வேண்டியதில்லை. நீ ஆரம்பித்தால் போதும்; நான் எல்லோருடைய மனத்திலும் புகுந்து பணம் கொடுக்கும்படி செய்கிறேன்" என்று சொல்லி, என் மனத்தை இந்தக் கோபுர கைங்கர்யத்தில் ஈடுபடச் செய்துவிட்டான். பிறகு ஸ்ரீதேவஸ்தானக் கமிஷனர் உத்தரவைப் பெற்றுக் கோவில் அதிகாரிகளின் ஒத்தாசையோடு வேலை நடந்து வருவது யாவரும் அறிந்ததே.

இந்தக் கைங்கர்யத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ஒரு நிலை கட்டுவதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கிறார். வக்கீல் பராசர ஐயங்கார் ஒரு நிலை கட்டுவதாகவும், என். ஜி. கிருஷ்ண ஐயங்கார் ஒரு நிலை கட்டுவதாகவும், பெருகவாழ்ந்தான் ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஒரு நிலை கட்டுவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளனர். கோபுர கைங்கர்யத்தின் ஆரம்பவிழாவில் கோயிலில் நடந்த பெரிய உத்ஸாகஸபையில் அவர்களாகவே யாருடைய நிர்ப்பந்தமும் இல்லாமல் ஒப்புக்கொண்டது ஸ்ரீரங்கநாதனுடைய நியமனத்தினால்தான் இருக்க வேண்டுமென நினைத்தேன். உடனே எனக்கு இருந்த பயம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. அன்றுமுதல் கோபுரத்திற்குப் பணம் எப்படியோ வந்துகொண்டே இருக்கிறது. ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஆசார்யர்களிடமிருந்து முதல் தவணையாக ஒரு லட்சம் ரூபாய்க்கான செக் வந்து சேர்ந்தது. "கவலையே வேண்டாம்" என்று அவர்களுடைய ஸ்ரீமுகமும் வந்து சேர்ந்தது. திருப்பதி தேவஸ்தானத்திலிருந்தும் அதிகாரிகளின் மனத்தில் ஸ்ரீரங்கநாதன் புகுந்து, நாம் எதிர் பார்த்த தொகைக்கு மேல் அதிகமாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் தெரியவருகிறது. 'கோபுர கைங்கர்யத்திற்கு என்னால் முடிந்த வரையில் வெளிநாடுகளில் ஏற்பாடு செய்கிறேன்' என்று சொன்ன ஒரு கனவான், ஸ்ரீரங்கநாதனின் அநுக்ரஹத்தால் இப்பொழுது நம் இந்தியாவின் மத்திய நிதிமந்திரியாக வந்திருப்பது மிக்க சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறது. எனக்கு முன்பின் தெரியாதவர்கள்கூட ஆயிரக் கணக்கான ரூபாய் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

அநேகமாகக் கோபுரவேலையில் மேல்மட்டம் அடிப்படை இன்னும் பதினைந்து தினங்களில் முடிந்துவிடும். பிறகு, முதல் நிலை கட்ட ஆரம்பமாகும். கோபுரம் வெகு சீக்கிரமாகக் கட்டி முடிந்துவிடும். முழுவதும் கட்டி முடிக்கச் சுமார் ஐம்பத்திரண்டு லட்சம் ரூபாய் பிடிக்குமென்று உத்தேசமாக அதிகாரிகள் நிர்மானம் செய்திருக்கிறார்கள். இப்பொழுதுள்ள விலைவாசிகள், கூலிகள் முதலியவற்றைப் பார்த்தால் நிறையத்தான் செலவாகுமென்று தோன்றுகிறது. 'எனக்கு ஒரு கவலையுமில்லை; எல்லாவற்றையும் ஸ்ரீரங்கநாதன் பார்த்துக்கொள்வான்' என்று வேதாந்தம் பேசிக்கொண்டு, வாயை மூடிக்கொண்டு இருக்கக் கூடாது. "ஆஸ்திகர்களே நீயும் சங்கோசப்படாமல் கேட்டால் தான் அவர்களும் சந்தோஷமாகக் கொடுப்பார்கள்" என்று ஸ்ரீரங்கநாதன் அடிக்கடி நியமிக்கிறான். ஆகையால் நானும் எல்லாத் தார்மிகர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இதர

sadagopan.org

தர்மகாரியங்களுக்குச் செலவு செய்வது போல், ஸ்ரீரங்கநாதன் திருவுள்ளப்படி தொடங்கியிருக்கும் மிக முக்கியமான தெற்கு ராயகோபுரமான ராஜகோபுர கைங்கர்யத்திலும் சிரத்தை எடுத்துக்கொண்டு பொருளுதவி செய்வதுடன் உங்கள் இஷ்ட மித்திர பந்துக்களையும் பொருளுதவி அளிக்குமாறு எடுத்துரைத்து, கோபுரத் திருப்பணியைப் பூர்த்தி செய்வதுடன் ஸ்ரீரங்கநாயகா ஸமேத ஸ்ரீரங்கநாதன் திவ்ய அநுக்ரஹத்தைப் பெற்று ஸகல ஸம்பத் ஸம்ருத்தர்களாக ஆனந்தித்துக்கொண்டிருக்க வேண்டுமென ஸ்ரீரங்கநாதன் நியமனப்படி கேட்டுக்கொண்கிறேன். என் மனுவிஷ்டத்தைப் பூர்த்தி செய்துவைப்பீர்களென நம்பியிருக்கிறேன்.

ஸ்ரீமஹாகோபுரீ.

ஒருவன் கோயில்களிலோ உத்ஸவங்களிலோ பெருமானின் திருவடி முதல் திருமுடி வரை பார்த்தானேயானால் எல்லாப் பாபங்களும் போய்விடுகிறதுகள்: என்று சொல்லி பகவானே ஸேவியுங்கோள் நல்ல கதியை அடையலாம் என்கிறது.

அதேமாதிரி தர்மகார்யங்களுக்கு ஒத்துழைத்தாலும் அவர்களுக்கும் யமபயம் இடையாது. கோபுர கைங்கர்யத்தில் ஒத்தாசை செய்கிறவர்களை வாழ்த்தினாலும் அவர்களைப் பார்த்தாலும், அவர்கள் பெயரைச் சொன்னாலும் அவர்கள் வீட்டுக்குப் போனாலும் நம் பாபங்கள் போய்விடும் என்றால் நாமே கோபுர கைங்கர்யத்திற்குக் கைகொடுத்து உதவினால் எவ்வளவு புண்யம் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

இப்பொழுது கோபுரத்தில் அஸ்திவாரம் பூர்ணமாகிவிட்டது. முதல் நிலை கட்ட ஆரம்பித்துவிட்டார்கள். மிகவும் உத்ஸாஹத்தோடு காரியங்கள் நடைபெற்று வருகின்றன. எல்லா அதிகாரிகளும் இந்த பெரிய கோபுரத்தை வெகு சீக்கிரத்தில் கட்டி முடித்து ஸேவிக்கவேண்டும் என்கிற ஆவலோடு ஒத்துழைக்கிறார்கள். எல்லோரும் க்ஷேமமாக இருக்கவேண்டும் என்று ஸ்ரீரங்கநாதன் அநுக்ரஹம் பண்ண வேண்டும்.

जिह्वे कीर्तय धार्मिकान् गुरुतरं श्रीगोपुरं स्मारयेः
पाणिद्वन्द्व समर्पितार्थमनघं संप्राप्य शुद्धो भव ।
दातॄन् लोकय गोपुराय धनिनां गच्छाङ्घ्रियुग्मालयं
श्रीरङ्गेश्वरगोपुरस्य निधये मूर्धन्नमाधोक्षजम् ॥

ஜிஹ்வே கீர்தய தார்மிகாந் குருதரம் ஸ்ரீ கோபுரம் ஸ்மாரயோ
பாணித்வந்த்வ ஸமர்பிதார்த்தமநகம் ஸம்ப்ராப்ய சுத்தோபவ|
தாத்ரூந் லோகய கோபுராய தநிநாம் கச்சாங் ரியுக்மாலயம்
ஸ்ரீரங்கேச்வர கோபுரஸ்ய நிதயே மூர்த்தந் நமாதோக்ஷஜம்||

எப்பொழுதும் நான் இவ்விதம் அநுஸந்தானம் செய்து வருகிறேன். நீங்களும் இதை அநுஸந்தித்தால் பரம க்ஷேமத்தை அடையலாம்.

ஜயம்.

sadagopan.org

ஸ்ரீரங்கக்ஷேத்திரத்திலுள்ள பிராகாரங்களில் மிகவும் பெரிய தான தெற்குக் கோபுரத்தின் மேல்பாகத்தைப் பூர்த்தி செய்ய, பகவந்நியமனத்தை முன்னிட்டு ஆரம்பித்து, கோபுரவேலை நடந்துகொண்டு வருவது தெரிந்ததே. ராயர் கோபுரம்

என்றும், மொட்டை கோபுரம் என்றும் பெயர் பெற்ற இந்தக் கோபுரத்திலுள்ள மேடுபள்ளங்கள், மூடாமல் இருந்த இடங்கள், இடிந்துபோயிருந்த இடங்கள் எல்லாவற்றையும் சரிப்படுத்தி ஒருவிதமாக அஸ்திவாரம் போட்டு முடித்துவிட்டோம்; இதற்கு மேல்தான் பதின்மூன்று நிலைகள் கட்டி முடிக்கவேண்டும்;

இப்பொழுது முதல் நிலை கட்ட ஆரம்பித்தாகிவிட்டது; இந்த முதல் நிலை மட்டும் சுமார் இருபத்திரண்டு அடி உயரம் கட்ட அதிகாரிகள் பிளான் போட்டிருக்கிறார்கள். இதற்குச் சுமார் பத்து லக்ஷம் செங்கற்கள் வேண்டியிருக்கின்றன. பெரிய கற்கள்-சேம்பர் கற்கள், ஒரு ரூபாய்க்கு நாலு கற்கள்தாம் கொடுக்கிறார்கள். ஆக, செங்கல் கிரயம் இரண்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம் ரூபாய் ஆகிறது. ஸிமெண்ட் இரண்டு லக்ஷம் ரூபாய்க்கு வாங்கவேண்டியிருக்கிறது. மணலுக்கு நாற்பதினாயிரம் ரூபாய் ஆகிறது. ஜல ஸப்ளைக்குப் பத்தாயிரம் ரூபாய்க்கு மேலாகும்; இந்த முதல் நிலை கட்டி முடிய மூன்று மாதங்களாகும். தினந்தோறும் இருநூறு ஆட்கள் வேலை செய்கிறார்கள். இவர்களுக்குக் கூலி வகையரா இரண்டு லக்ஷம் ரூபாய் ஆகும். இவை தவிர்த்துச் சில்லறைச் செலவுகளும் மேற்பார்வையாளர் (ஸூபர் விஷன்) செலவுகள் முதலியன வேறு இருக்கின்றன. மொத்தம் கூட்டி இப்பொழுது போடவில்லை. எவ்வளவு குறைந்தாலும் ஆறு லக்ஷத்திற்குக் குறையாமல் செலவாகும். இதற்கு ஸ்ரீரங்க நாதன் ஸித்தமாகக் கையில் வைத்துக்கொண்டு இருக்கிறார்; கொஞ்சங்கூடக் கவலையே இல்லை. தினந்தோறும் சுமார் நாலு மணிக்கு மேல் ஸ்ரீகோபுரத்திற்குப் போய், அங்கு அத்யுத்ஸாகத்தோடு மிக்க ஸந்தோஷத்துடன் ஜனங்கள் வேலை செய்வதை நேரில் பார்த்துப் பரமானந்தத்தை அநுபவித்துக்கொண்டிருக்கிறேன். இந்த விஷயங்களைக் காதாலே கேட்டு எல்லோரும் ஆனந்தமடைவதற்காக எழுதுகிறேன்;

எவ்வளவோ மகான்கள் கோபுர கைங்கர்யத்தில் பங்கு கொள்வதாக வாக்களித்துள்ளார்கள்; ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதிகள் மிகவும் உத்ஸாஹத்தோடு நேரிலும் பத்திரிகைகள் மூலமாகவும் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறார்கள்; காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் மஹாவித்வான் ஸ்ரீ அண்ணங்க ராசாரியர் ஸ்வாமியும் தினந்தோறும் உஷ: காலத்தில்,

वेदान्तदेशिकमुनीन्द्रपदारविन्दं ध्यात्वा प्रभातसमयेऽनुदिनं च याचे ।
श्रीरङ्गराज निजगोपुरकैङ्करीं त्वं क्षिप्रं प्रपूरयितुमुत्सुकमानसः स्याः ॥

sadagopan.org

என்று பிரார்த்தித்துக்கொண்டே எழுந்திருப்பதாக ஸ்ரீமுகம் அனுப்பி இருக்கிறபடியாலும் ஸ்வாமியின் பிரார்த்தனையத் தலைக்கட்டியே வைப்பான் ஸ்ரீரங்கநாதன் என்பதில் திருடமான நம்பிக்கை உள்ளவனாகவும் இருக்கிறபடியால் எவ்விதமான கவலையும் இல்லாமல் ஸந்துஷ்டனாக இருக்கிறேன். நீங்களும்

பெரிய காரியம் எப்படி முடியும் என்று எனக்காகக் கவலைப் படாமல் ஸந்துஷ்டர்களாக இருந்துகொண்டு காஞ்சி ஸ்ரீ ஸ்வாமி யைப் போல் ஸ்ரீரங்கநாதனைப் பிரார்த்தித்தால் அதிலோலப மாகக் கோபுர கைங்கர்யம் பூர்த்தி பெற்றுவிடும்.

ஸ்ரீகோபுர கைங்கர்யத்துக்குக் கொடுப்பதாகக் கையெழுத் துப் போட்டிருக்கிற மஹான்கள் சற்றுச் சீக்கிரமாக அனுப்பி விட்டால் முதல் நிலை கட்டுவதற்கே அவர்கள் பணம் உபயோகப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சில பெரிய வர்கள், கோபுர கைங்கர்யத்துக்கு நம்மிடம் பணம் கேட்க வில்லையே என்று நினைத்திருப்பதாகத் தெரிகிறது. அவர் களுக்கு ஸந்தர்ப்பம் எப்படி இருக்குமோ என்ற எண்ணத்தால் தான் அவர்களைக் கேட்கவில்லை. அவர்கள் பணம் என் கையில் இருக்கிறமாதிரிதான். கோபுர கைங்கர்யம் பூர்த்தி பெறு வதற்குள் அவர்கள் பணம் என் கைக்கு வந்துவிடும். அதைப் பற்றிக் கவலை இல்லை.

கோபுர கைங்கர்யத்துக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்கள் உடனே கொடுத்துவிட வேண்டும். மனம் மாறிக்கொண்டே இருக்கும். அது மாறுவதற்குள் கொடுத்து விட வேண்டும். தர்மசிந்தனை உள்ளவர்கள் கொடுப்பது பற்றி ஆலோசிக்க வேண்டும். அல்லது, தாமே தனியாக அமர்ந்து ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

'இதுவரை நாம் எவ்வளவு பணம் ஸம்பாதித்திருக்கிறோம்? அதில் அநாவசியமான விஷயங்களுக்காக எவ்வளவு செலவழித் திருக்கிறோம்? மிச்சம் எவ்வளவு?' என்று யோசித்துப் பார்த் தால் நல்ல காரியங்களுக்காக நாம் செலவழித்தது நூற்றுக்கு ஐந்து பங்குகூட இருக்காது என்று நிச்சயம் தீர்மானிக்கலாம்.

'பிறர்க்கே உழைத்து ஏழையானேன்' என்று மஹான்களே சொல்லும்போது நாம் மாத்திரம் ஆத்மாவுக்காக உழைத்துப் பணக்காரர்களாக ஆகியிருப்போமா? இனிமேலாவது மனத்தை அடக்கி, அநாவசியச் செலவுகளைக் குறைத்துப் பணத்தை மிச்சப் படுத்தி, கோபுரத்தைக் கட்டி அந்தக் கோபுரத்தை ஸேவி யுங்கள். எந்தக் கோபுரத்தை என்றால், ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கும் கொடியணி நெடுமதில் கோபுரத்தைத்தான்.

ஸ்ரீரங்கம் பூலோக வைகுண்டமாகையால், கொடிகளால் அலங்கரிதமான, ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதி தெற்குக் கோபுரத்தைப் பூர்த்திசெய்து ஸேவித்து ஆனந்திக்க வேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம்.

வங்காதிபதியான விபீஷணனுக்குத் தெரிவித்தால் அவர் ஸ்ரீகோபுர ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவத்துக்கான செலவை ஏற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டாகி யிருக்கிறது. கவலை இல்லை.

sadagopan.org

ஸ்ரீராம பட்டாபிஷேகத்துக்கு விபீஷணன் வந்து செலவழித்ததுபோலவும், ஸ்ரீகிருஷ்ணன் நியமனப்படி அச்வமேத யாகத்துக்குப் பணம் அனுப்பியது போலவும், ஸ்ரீகோபுர கும்ப்ரோக்ஷண மஹோத்ஸவச் செலவையும் அவர் நிச்சயம் ஏற்றுக் கொள்வார்.

சபம்

அத்யைவ ஸுதிநம் சமே. ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாயிகா ஸமேத ஸ்ரீரங்கநாதனுடைய கிருபையால் ராயகோபுரத்தில் செய்யவேண்டிய மேல்பாகத்திலுள்ள அஸ்திவாரங்கள் எல்லாம் பூர்ணமாக முடிந்துவிட்டன. இதுவரையில் கட்டப்பட்டதற்குச் செலவான விவரம் இந்த அருமொழியிலேயே எழுதுகிறேன்.

இப்பொழுது முதல் நிலை கட்ட ஆரம்பித்துப் பன்னிரண்டு அடி உயரம் இன்றுவரை கட்டப்பட்டிருக்கிறது. முதல் நிலையை இருபத்தோரடி உயரம் கட்டத் திட்டம் - ப்ளான் - போட்டிருக்கிறார்கள். இப்பொழுது பார்த்தாலே பரமானந்தம் உண்டாகிறது; முதல் நிலை இருபத்தோரடியும் கட்டி முடிந்தவுடன் பார்த்தால் பிரம்மானந்தமாக இருக்கும் என்பதில் ஸந்தேகமில்லை. ஆஸ்திகர்கள் தங்கள் சக்திக்கும் அதிகமாகவே பணம் அனுப்பிக்கொண்டிருக்கிறபடியால் எனக்கு எவ்விஷயத்திலும் எவ்வித சிரமமுமில்லை.

இப்பொழுது கோபுரத்தைப் பார்க்கிறவர்களில் ஆச்சரியப்படாதவர் யாருமில்லை. பார்க்க வந்தவர்களில் ஒருவர், கண்களில் ஜலம் பெருக நின்றார். "ஏன் வருத்தப்படுகிறீர்?" என்று கேட்டேன். அதற்கு அவர், "இந்தக் கோபுரக் கட்டிடத்திற்கு என்னால் உதவி ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று வருத்தப்படுகிறேன்" என்றார்.

"இந்தக் கோபுர கைங்கர்யத்திற்கு எவ்வளவு ரூபாய் உதவி செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்?" என்று கேட்டேன்.

"ஐந்நூறு ரூபாயாவது கொடுத்தால் கொஞ்சம் திருப்தியாக இருக்கும். நான் என்ன செய்வேன்?" என்று மேலும் வருத்தப்பட்டார்.

அவர் வருத்தப்பட்டுக்கொண்டிருப்பதை அவர் அருகில் நின்று பார்த்துக்கொண்டிருந்த ரெட்டியார் ஒருவர், அவரைப் பார்த்து, "நீர் வருத்தப்பட வேண்டாம்; நான் இந்த ராயகோபுரத்திற்கு ரூபாய் கொண்டு வந்திருக்கிறேன். இதில் ஐந்நூறு ரூபாய் உமக்குத் தருகிறேன்; வருத்தப்படவேண்டாம்" என்று சொல்லி அவரிடத்தில் கொடுத்தார். அதை வாங்கி ஸந்தோஷத்துடன் என்னிடத்தில் கொடுத்தார்.

"எதற்காக நீர் அவரிடத்தில் பணத்தைக் கொடுத்தீர்?" என்று ரெட்டியாரைக் கேட்டேன்.

sadagopan.org

"அவருக்கு வருத்தம் நீங்கட்டும் என்று கொடுத்தேன்" என்றார்.

மற்றவரும், "என் வருத்தம் நீங்கிவிட்டது: என் பணமும் கோபுரத்திற்குச் சேர்ந்துவிட்டது" என்று மந்தோஷத்தோடு பதில் சொன்னார்.

உடனே ரெட்டியார் பேருக்கு ரசீது கொடுத்து விட்டேன்.

இந்த முதல்நிலை கட்டுவதற்கு ஸ்தபதி ஒருவரைப் புதிதாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்: ஆடி மாதம் ஸங்கல்பம் ஆரம்பிப்ப தற்குள் முதல் நிலை முடிந்துவிடும் என்று வேலை செய்கிறவர்கள் சொல்லுகிறார்கள். முதல் நிலை கட்டுவதற்கு வேண்டிய செங்கல், ஸிமெண்ட், கம்பிகள், மணல் முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்து அட்வான்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதல் நிலை கட்டுவதற்கு வேண்டிய ரூபாய் பாங்கில் வைக்கப்பட்டிருக் கிறது. கவலை இல்லை.

இரண்டாம் நிலை கட்டுவதற்குத் திருக்குடந்தை ஸ்ரீமதாண் டவன் திருவுள்ளம் பற்றியிருக்கிறபடியால் இரண்டாவது நிலை கட்டுவதற்கும் பணத்திற்குக் கவலை இல்லை.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் மிகவும் உத்ஸாஹத் தோடு வடதேசத்தில் பிரசாரம் பண்ணிக்கொண்டு இருப்ப தாக அடிக்கடி ஸமாசாரம் தெரிந்துகொண்டிருக்கிறது. அதனால் நம்முடைய உத்ஸாஹம் மேலும் அதிகமாகிறது.

ஸ்ரீரங்கநாதனும், "கவலைப்பட வேண்டாம். கோபுரம் முழுவதும் கட்டி முடிந்து ஸம்ப்ரோக்ஷணம் ஆனபிறகு உன்னை ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துக் கொள்ளுகிறேன்" என்று நியமிக்கிறமாதிரி தோன்றுகிறது. "லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து" என்கிறபடி எல்லோரும் கோபுர ஸம்ப்ரோக் ஷணத்தை ஸேவித்து, தந்யர்களாக ஆகவேண்டும் என்று பகவானைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன்.

சுபமஸ்து

ஸ்ரீரங்கம் கோபுரத்தில் மேல்பாகம் அஸ்திவாரத்திற்கு வாங்கிய ஸாமான்கள் விவரம்

விஷ்வக்ஸேனரா தனம் அநுஜ்ஞை வகையரா	...	450	00
தேவஸ்தானத்தில் டிபாஸிட் கட்டினது	...	1,00,000	00
புஷ்பம் பழம் சந்தனம் முதலியவை	..	15	00
செங்கல் 1,10,666 க்கு	..	22,147	00
பெரிய ஜல்லி 292 லாரி, சின்ன ஜல்லி 41 லாரி ஆக 333 லாரிக்கு	..	64,906	00
ஸிமெண்ட் 5631 மூட்டைக்கு	...	1,74,186	00
மணல் 369 லாரிக்கு	...	16,075	00
கம்பி	..	50,474	00

sadagopan.org

ஸ்ரீரங்கத்திலுள்ள தெற்குக் கோபுரத்தின் வேலை வேகமாக நடந்துகொண்டு வருகிறது. (ராயர் கோபுரம்) மொட்டைக் கோபுரம் என்ற பெயர் போய்விட்டது. முதல் நிலை கட்ட ஆரம்பித்து ஒரு பாதி கட்டியாகிவிட்டது. அதாவது 21 அடி உயரத்தில் பாதி, பத்தரை அடி கட்டியாகிவிட்டது. பார்க்கப் பார்க்கப் பரமானந்தம் உண்டாகிறது. அனேக ஆஸ்திகர்கள் கோபுரத்தின் மேலே ஏறிப் பார்த்து ஸந்தோஷமடைகிறார்கள்; வருக்குப் போய் முடிந்தவரை பணம் அனுப்புகிறார்கள்.

காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் நல்ல ஸமயத்தில் ஒரு லக்ஷம் ரூபாய் அனுப்பி ஒத்தாசை செய்தார்கள். கல்கத்தா ஸேட்ஜி ஒரு லக்ஷம் ரூபாய் அனுப்பி வைத்தார்கள்.

திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவன் என்னிடத்தில் (ரூபாய் 50,000) ஐம்பதாயிரம் ரூபாய் இரண்டாவது நிலை கட்டுவதற்குக் கொடுத்து வைத்திருக்கிறார். ஸ்ரீமதாண்டவன் இரண்டாவது நிலை முழுவதையும் கட்டுவதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கிற படியால் அது ஆரம்பிக்கும்போது ஐம்பதாயிரம் ரூபாயை ஆண்டவன் ஸந்நிதியில் திருப்பி ஸமர்ப்பித்துவிட வேண்டும். தனியாக வைத்திருக்கிறேன்.

திருப்பதி தேவஸ்தானம் முதலிய இடங்களிலிருந்து எவ்வளவு ஒத்தாசை கிடைக்குமென்று நிச்சயமாகத் தெரியவில்லை.

டில்லி, கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களில் உள்ள ஆஸ்திகர்கள் பணம் அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனாலும் எல்லோரும் சிரத்தை எடுத்துக்கொண்டால் வேண்டிய அளவுக்கு மேல் பணம் சேர்ந்துவிடும். சுலபமாகக் கோபுரத்தைக் கட்டி முடித்துவிடலாம்.

மூன்றாவது நிலை கட்டுவதற்கு எவ்வளவு ரூபாய் பிடித்தாலும் தாம் கட்டுவதாக ஸ்ரீ N. G. கிருஷ்ணய்யங்கார் சொல்லியிருக்கிறார். அதைப்போல் பெருகவாழ்ந்தான் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் நான்காவது நிலை கட்டுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

அதைப் போல் ஸ்ரீ கேசவய்யங்கார் குமாரர் இந்தியாவின் ஸொலிஸிடர் ஜனரல் பராசர ஐயங்கார் ஐந்தாவது நிலை கட்டுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

சென்னையிலுள்ள வைதிக ஆஸ்திகர்கள் ஒரு நிலை கட்டத் தீர்மானித்திருப்பதாக ஆப்தர் மூலமாகத் தகவல் கிடைத்திருக்கிறது. சென்னை 97, பவழக்காரத் தெருவிலிருக்கும் ஹாஜி S. முகமதுஜான் என்னும் முஸ்லிம் ஆஸ்திகர் ஸ்ரீரங்கநாதன் கோபுர கைங்கர்யத்துக்காக ரூபாய் 1,000/- வடுஜூர் C. ஸ்ரீநிவாஸன் (Asst. Commissioner of Income-tax, Salem மூலம்) கொடுத்து அனுப்பியுள்ளார்;

"யஸ்மித் ம்லேச்சேபி வர்த்தத்த தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹி அஹம்" என்கிறபடி பரம ப்ரீதியோடு (ரூபாய் 1,000) கொடுத்து, மறுபடியும் ஸமயங்களில் கொடுப்பதாயும் சொல்லி அனுப்பியுள்ளார். அந்த முஸ்லிமுக்கு இருக்கிற பக்தியை நினைத்து "பக்தரஷ்டவிதா" என்கிற பகவத் வாக்கியத்தைப் பரிபூர்ணமாக நம்பினேன்.

sadagopan.org

கோபுரம் கட்டுவதற்கு உதவி செய்கிறவர்களுக்கு என்ன புண்ணியம் வருகிறது என்றால், குறிப்பாகக் கேளுங்கள்; ஒருவன் மற்றொருவனை அழைத்துக்கொண்டு கோவிலுக்கு உள்ளே போய் அங்கே கர்ப்பக்ருஹத்திலுள்ள ஸ்ரீரங்கநாதனை ஸேவிக்கும்படி செய்தானேயானால் தன்னுடைய பாவங்கள் போய்விடுவது போல் அவனுடைய பாவங்களும் அவனை விட்டு விலகி அவனும் நற்கதி அடைகிறான் என்பதில்.

ஆபீடாத் மௌளிபர்யந்தம் பஶ்யத: புருஷோத்தமம் |
பாதகாநி ஆஶு நஶ்யந்தி கிம் புநஸ்தூபபாதகம் ||

என்கிறபடி எள்ளளவும் ஸந்தேஹமில்லை.

இப்படி நேரில் கண்களாலே ஸேவித்து அநுபவிப்பதைக் காட்டிலும், ஸ்ரீரங்கநாதனை மனஸ்ஸிலால் நினைத்து அநுபவித்தால், ''ஸம்ருதோ யச்சதி ஸோபநம்'' என்கிறபடி உடனே ஸகல ஸோபனத்தையும் மனத்தால் நினைக்கிறவனுக்குப் பகவான் கொடுக்கிறான்.

நேரில் ஸேவிப்பதைக்காட்டிலும் மனத்திலால் நினைப்பவனுக்கு வருகிற பலனுக்கு அளவு சொல்ல முடியாது.

ஆகையால் ஸ்ரீரங்கநாதனுடைய கதற்குக் கோபுரம் 226 அடி உயரமும் கட்டி முடிந்துவிட்டால் அந்தக் கோபுரத்தைக் கண்ணாலே பார்த்துக் கைகூப்புகிறவர்களுக்கெல்லாம் ஆதிசேஷன் மேல் சயனித்துக்கொண்டிருக்கிற ஸ்ரீரங்கநாதனுடைய ஞாபகம் உடனே வருகிறது.

அப்பொழுது ஸ்ரீரங்கநாதன் அவன் ஜன்மத்தை ஸபலமாக்குகிறான்.

கோபுரத்தைப் பார்த்துக் களிக்கிறவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் ஸ்ரீரங்கநாதனை நினைக்காமல் இருக்கமாட்டார்கள்.

''ப்ரபாவ ஏஷ ஸாமாந்ய: யஸ்ய யஸ்ய அச்யுதோத்ருதி'' என்று ப்ரஹ்லாதன் சொன்னபடி பெரிய பெரிய ஆபத்துக்களிலிருந்தும் விடுபட்டு க்ஷேமத்தை அடைவார்கள்.

ஆகையால் கோபுரம் கட்டி முடிப்பதற்கு முடிந்த அளவு ஒத்தாசை செய்தால் கோபுரத்தை ஸேவித்து ஸ்ரீரங்கநாதனை நினைத்து அநேக கோடிப் பேர்கள் நற்கதியடைய உபயோகப்படுகிறபடியால் நம் பணமும் நல்ல விஷயத்தில் உபயோகப்படுவதோடு அவ்வளவு ஜனங்களையும் பகவானை நினைக்கும்படி செய்கிற புண்ணியமும் நமக்கு உண்டாகிறது என்பதில் ஸந்தேஹமுண்டோ? யோசித்துப் பாருங்கள்.

sadagopan.org

ஒரு நினத்திற்கு ஒரு அணு வீதம் கோபுரத்திற்காக உண்டியில் போட்டாலும் போதுமானதே. இதை எழுதிக் கொண்டிருக்கும்போது ஸ்ரீரங்கம்வாஸி சேஷம் ஸ்ரீநிவாஸா சாரியர் குமாரர் கோபுரத்திற்கு ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்தார். நான் அவரைக் கேட்டேன். "நீர்தாம் ஆரம்பத்தில் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்திரே? மறுபடி எதற்குக் கொடுக்கிறீர்?" என்று. அவர் சொன்ன பதில்—"நான் ஒவ்வொரு நிலை கட்ட ஆரம்பிக்கும்போதெல்லாம் ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக ஸங்கல்பம் செய்துகொண்டிருக்கிறேன். மூன்று கொடுத்தது அஸ்திவாரத்திற்கு. இப்பொழுது கொடுத்தது முதல் நிலைக்கு" என்று. நான் ஆனந்தமடைந்தேன்.

கோபுரத்தின் மாஹாத்ம்யத்தை எவ்வளவு எழுதினாலும் எழுத முடியாது. உங்களுக்கும் தெரியாத விஷயமில்லை. இஷ்ட மித்திர பந்துக்களுக்கும் சொல்லி, கோபுரப் புண்ணியத்தில் பங்கெடுத்துக்கொள்ளும்படி செய்வீர்கள் என்று நம்பியிருக்கிறேன். 2-7-60 வரை கோபுரத்திற்கு வரும்படி அனுப்பியிருக்கிறவர்களுடைய பெயர்களையும் ரூபாயையும் ஜாபிதா எழுதியிருக்கிறோம்.

இதில் மூன்றியமாய், காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அனுப்பிய ரூபாய் ஒரு லக்ஷமும், கல்கத்தா ஸேட்ஜி கொடுத்த ஒரு லக்ஷம் ரூபாயும் பெரிய தொகையாக விளங்குகின்றன.

சுபம்

ஜாபிதா

கீழே குறிப்பிட்டவர்கள் மூலம் வரவு

		ரூபாய்
1	ஆஸ்தான வித்வான் திருக்கள்ளம் நரஸிம்மராகவாசாரியார்	88,916
2	ஆடிட்டர் கிட்டு ஸ்வாமி, திருச்சி	31,505
3	கோமல் வக்கீல் ஸ்ரீ ராமய்யங்கார்	4,053
4	எஸ். விஜயராகவாசாரியார்	71,088
5	ரங்காச்சார், ஹைதராபாத் காஜிகொடா	16,750
6	வடுவூர் நரஸிம்மாசாரியர், ஆராதகர்	4,861
7	தையார் கண்ணன், ஸந்நிதி பரிசாரகம்	10,505
8	திருச்சி கிருஷ்ணசாமி செட்டியார்	15,000
9	ராஜாமணி	1,261
10	எல். சேஷாத்ரி, குறிச்சி	3,750
11	என். ஜி. கிருஷ்ணையங்கார் ஸ்வாமி	20,158
12	கோயமுத்தூர் வாத்யார் கிருஷ்ணன்	4,000
13	சோழியம்பாக்கம் ரங்கஸ்வாமி, மடைப்பள்ளி கைங்கர்யம்	37,969
14	ஆதனூர் ராகவன்	3,625
15	ராயப்பேட்டை ரங்கநாதன், சென்னை	30,141
16	கல்கத்தா ரங்காச்சார் குமாரர் ராகவாசாரியர்	6,021

sadagopan.org

ஆனந்தகரமான ஸமாசாரத்தை அறிந்து ஆனந்தம் அடைவதற்காக இந்த விஷயத்தை எழுதுகிறேன். திருக் குடந்தை ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீரங்கநாதன் தெற்குக் கோபுரத் தைக் கடாக்ஷித்துவிட்டுப் பரம ஸந்தோஷத்துடன், "ஸங்கல் பத்தின் முடிவுக்குள்ளேயே இந்தக் கோபுரத்தின் முதல் நிலை பூர்த்தி பெற்றுவிடும் என்று தோன்றுகிறது. நான் உடனே இரண்டாவது நிலை கட்ட ஆரம்பித்துவிடுகிறேன். திருக் குடந்தையில் ஸங்கல்பம் நடந்தாலும் நடுவிலேயே ஸ்ரீரங்கம் வந்துவிடுகிறேன். கோபுர கைங்கர்யம் முக்கியமானதாகி, பாதியில் முடித்துக்கொண்டு வருவதில் தோஷமிராது. இரண் டாவது நிலை கட்ட எவ்வளவு பணம் செலவழித்தாலும் கவலை இல்லை. நான் பார்த்துக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய செங்கல், ஸிமெண்ட், மணல் கம்பிகள் இவை யாவற்றையும் நானே வாங்கிக்கொள்கிறேன்" என்று ஸாதித்தாயிற்று. செங்கல் முதலிய ஸாமான்களுக்காக அட்வான்ஸும் கொடுத்து விட்டு, ஸங்கல்பத்துக்காகத் திருக்குடந்தை எழுந்தருளியா யிருக்கிறது.

ஹிந்து பத்திரிகை நிர்வாகி அவர்கள், திருக்கள்ளம் ஆஸ்தான வித்வான் மூலம் பத்தாயிரம் ரூபாய் அனுப்பியிருக் கிறார். பம்பாய்வாஸியான ஸ்ரீமான் பி. என். கிருஷ்ணமா சாரியர் என்பவர், ஸேட்டுகள் மூலம் மூன்றாம் நிலை கட்டுவதற் கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகத் தகுந்த மனுஷ்யர்கள் மூலம் தெரிகிறது.

"நாங்கள் கோபுரத்துக்குக் கொடுக்க வேண்டும் என்று நினைக்காமற் போனாலும் எங்களுடைய பத்தினி முதலிய பந்துக்கள், 'எத்தனையோ கலியாணம் கார்த்திகை முதலியவற் றுக்குக் கடன் வாங்கியாவது செலவழிப்பது போல், கோபுர கைங்கர்யத்துக்கும் முடிந்தவரை அனுப்புங்கள்: இந்தப் புண்ணியம் பிறகு வராது' என்று உருக்கமாகச் சொல் கின்றனர். அதைக் கேட்டவுடன் கோபுரம் தெளிவில் நிற் கிறது. கோபுரத்தின் மேல் ஜனங்கள் வேலை செய்துகொண் டிருப்பதைப் பார்த்துக்கொண்டு, புன்சிரிப்போடு, ஸ்ரீ அழகிய சிங்கர் ஒரு தடியை வாங்கிக்கொண்டு நிற்பதும் தோன்று கிறது. இந்த எண்பத்தைந்து வயஸில், நம்முடைய க்ஷேமத்தை உத்தேசித்துத்தானே தம் சரீரத்தையும் பார்க் காமல் நின்றுகொண்டிருக்கிறார்? கோபுரம் கட்டுகிற செலவுக்குத் தட்டுப்பாடில்லாமல் எப்படியோ பணம் ஸம்பாதித்துச் செல வழிக்கிறார். நாமும் முடிந்தவரை ஸமர்ப்பிக்க வேண்டும் என்று தோன்றுகிறது. தாமதிக்கக் கூடாது என்று நினைத்து, ஏதோ கையில் கிடைத்ததைக் கொண்டு வந்தோம்" என்று சொல்லி ஸமர்ப்பிக்கிறார்கள்.

ஒருவருக்கு ஸ்வப்னத்தில் லக்ஷ்மீநரஸிம்ஹன் ஸேவை ஸாதித்து, "தாமதிக்காதே. என் ஆராதகன் கஷ்டப்படுகிறான். உன் சக்திக்கு அதிகமாகவே வஸூல் செய்து அனுப்பு" என்று நியமித்தாராம். அவர் ரஸீதுப் புஸ்தகங்களைப் பெற்றுக்

sadagopan.org

கொண்டு முடிந்தவரை வஸூல செய்து அனுப்பிக்கொண்டே இருக்கிறார். ஒவ்வொரு தடவையும், பணம் அனுப்பும்போது, "சேதுபதித்தத்திற்கு அனில் மாதிரி அடியேனும்" என்று எழுதிக்கொண்டே இருக்கிறார்.

இப்படி நான் எழுதுவதெல்லாம் கோபுரத்துக்குப் பணம் ஸம்பாதிப்பதற்கு ஒரு வழி என்று நினைக்க வேண்டாம்; நான் கோபுரத்துக்குப் பணம் ஸம்பாதிக்கிறவனன்று. கோபுர கைங்கர்யத்துக்கு ஸ்ரீரங்கநாயிகா ஸமேத ஸ்ரீரங்கநாதக் கிழவனும், கம்பக் குழந்தையான ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹனும்தாம், தாங்கள் அவர்களுக்குக் கொடுத்த ஸம்பத்திலிருந்து ஸம்பா திக்து எனக்குப் பணம் அனுப்புகிறார்கள். நான் கண்ணை மூடிக் கொண்டு செலவழிக்கிறவன்தான். ஸ்ரீமான்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அன்பனாக நான் செல வழித்துக்கொண்டிருக்கிறேன்.

வேலை வேகமாக நடந்துகொண்டிருக்கிறது: ஸதஸஸின் பூர்த்தி தினமான திருநக்ஷத்திரத்தன்று, முதல் நிலைமேல் வித்வத் ஸம்பாவனையும், தேவஸ்தான நிர்வாகிகளுடன், இரண் டாம் நிலை கட்டுவதற்கான ஆரம்ப விழாவும் (முஹூர்த்தம்) நடத்தி ஆனந்திக்க நினைத்திருக்கிற விஷயத்தை அனைவருக்கும் தெரிவித்திருக்கிறேன். வந்திருந்து, ஆனந்தித்து அநுக்ரஹம் பெறுபவர்கள் நிறைந்த புண்ணியம் செய்தவர்களாயாவார்கள்.

'विचित्रा देहसम्पत्तिरीश्वराय निवेदितुम्—விசித்ரா தேஹ ஸம் பத்தி: ஸ்ரீஸ்வராய நிவேதிதும்' என்கிறபடி, பகவான் நமக்கு அழகான சரீரத்தைக் கொடுத்திருப்பதற்கு முக்கியப் பிரயோ ஜனம் இந்தச் சரீரத்தை அவன் விஷயமாகவே உபயோகப் படுத்துவதுதான் என்று நிர்மானம் செய்துகொண்டு, பகவத் விஷயத்திலேயே உபயோகப்படுத்த வேண்டும்.

இப்படியே சரீரத்திலுள்ள கருவிகள் எல்லாவற்றாலும் பகவானைப் பூஜித்துப் பகவத்கடாக்ஷம் பெறலாம். அப்படியே இந்தச் சரீரத்தால் ஸம்பாதித்த ஸகல நல்ல வஸ்துக்களாலும் பகவானைப் பூஜித்து ஸகல புண்ணியங்களையும் அடைந்து அதன் பலனாக ஸகல லோகங்களிலும் ஆனந்தத்தை அடையலாம்.

இவ்விதமே இந்தச் சரீரத்தில் உள்ள மநோ வாக் காயங் களால் ஸ்ரீமந்நாராயணனுடைய செங்கமலத் திருவடிகளின் ஆத்மாவை ஸமர்ப்பித்து, பரந்யாஸம் செய்தோமேயானால், நித்யமாய் அழிவில்லாததாய் ஆனந்தமயமான ஸ்ரீவைகுண் டத்தை அடைந்து மறுபிறப்பில்லாமல் எல்லையில்லாத ஆனந் தத்தை அங்குள்ளவர்கள் போல் அநுபவித்துக்கொண்டிருக்க லாம் அப்படியே அழகான சரீரத்தையுடைய நாமும் ஸர்வ விதத்தாலும் ஸ்ரீரங்கநாதனுடைய தெற்குக் கோபு கைங்கர் யத்தில் ஸம்பந்தப்பட்டால், உபாயத்தில் ஸம்பந்தப்பட்டு அநுஷ்டித்து எழிற்பதமெறி ஆனந்தத்தை அடையலாம். தெரிந்தவர்களுக்கு அதிகம் எழுதவேண்டியதில்லை. ப்ரயத்னம் செய்து பகவத்கடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாக வேண்டும்.

சுபம்

sadagopan.org

ஸ்ரீ அழகியசிங்கரின்

அருள்மொழி

अद्य मे सफलं जन्म जीवितं च सुजीवितम् ।
यद्रङ्गिणो गोपुरस्य सौधमेकं प्रपूरितम् ॥

அத்ய மே ஸபலம ஜந்ம ஜீவிதம் ச ஸுஜீவிதம் |
யத் ரங்கிணோ கோபுரஸ்ய ஸௌதமேகம ப்ரபூரிதம் ॥

ஒரு ரஸமான விஷயம்: ஸ்ரீரங்கத்தில் உள்ள ராயர் கோபுரத்தில் (தெற்குக் கோபுரத்தில்) முதல் நிலை அனேகமாகப் பதினேந்து தினங்களுக்குள் பூர்த்தி பெற்றுவிடும். அதற்கு வேண்டிய ஸகல ஸாமான்களும் ஸித்தமாகச் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவன், இரண்டாம் நிலை கட்டுவதற்கான ஸகல பாரத்தையும் ஏற்றுக்கொண்டிருக்கும் விஷயம் பாதுகாமூலம் அனைவரும் அறிந்ததே ஆகையால் அதைப் பற்றின கவலை எனக்கு இல்லை.

சுமார் இருநூறு ஜனங்களுக்குமேல் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பார்க்கும்போது ஒருவிதமாகத் தோன்றுகிறது. ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள கோபுரங்கள் சாச்வதமானவை; பழுதற்றவை. ஆகையால் அங்கே கோபுரம் கட்டியோ, பழுது பார்த்தோ ஆனந்திக்க அவகாசம் இல்லாததனால் அந்தக் குறையைத் தீர்த்துக்கொள்ளவே நித்யஸூரிகளும் முக்தர்களும் ஸ்ரீரங்கத்துக்கு வந்து, ஸ்திரீகளாகவும் புருஷர்களாகவும் வேஷம் போட்டுக்கொண்டு ஸ்ரீரங்கநாதன் திருவுள்ளப்படி கோபுரம் கட்டுகிறார்களோ என்று தோன்றுகிறது. அவர்கள் ஸைவ்யர்கள் என்றும் தோன்றுகிறது. அவர்கள் எல்லா ஜன்மாக்களிலும் பண்ணிய புண்ணியங்கள்தாம் அவர்களை இந்த மாபெரும் கைங்கர்யத்தில் ஈடுபடச் செய்திருக்கின்றன.

ஆஸ்திகர்கள் கோபுர கைங்கர்யத்துக்கு வழக்கம்போல் தனம் ஸஹாய செய்து அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். பம்பாய் ஸ்ரீஅஹோபில மடம் ஆராதகர் இதுவரை மூப்பதாயிரம் ரூபாய் ஸஹாய செய்து அனுப்பியிருக்கிறார். அனேகம் ஆஸ்திகர்கள் கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கொடுக்கக் கூடிய புண்ணியம் எப்பொழுது பலிக்குமோ தெரியவில்லை. ஸ்ரீரங்கநாதன் திருவுள்ளம்போல் நடக்கிறது. கவலை இல்லை.

ஸ்ரீரங்கம் ராயகோபுரத்தின் இரண்டாவது நிலையை ஸ்ரீமதாண்டவன் கட்ட ஆரம்பித்த உத்ஸவத்தில் நடந்த விஷயங்களை எல்லாம் தினசரிப் பத்திரிகைகள் (பேப்பர்) மூலமாகவும், நேரில் பார்த்தவர்கள் மூலமாகவும் நீங்கள் தெரிந்து

sadagopan.org

கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். மூன்று மாதங்களுக்குள் இரண்டாவது நிலை கட்டி முடித்துவிடும் என்று நிச்சயமாகத் தோன்றுகிறது. இதற்கு வேண்டியதைச் செய்ய, பொறுப்புள்ள அதிகாரிகள் பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மூன்று மாதத்திற்குள் அடுத்த நிலை—மூன்றாவது நிலையைக் கட்டப் பணத்தைச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. முன்பு ஒரு நிலை கட்டுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறவர்கள் என்ன சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது இன்னும் எனக்குத் தெரியவில்லை. செய்தால் ஸந்தோஷம். எதற்கும் நாம் ஸித்தமாகத்தான் இருக்க வேண்டும்.

நான் ஓர் ஏழையாக—பிச்சைக்காரனாக இருந்துதான் பகவத்கடாக்ஷத்தினால் அஹோபில மடாதிபதியாக வந்திருக்கிறேன். இது பொய்யான விஷயமல்ல. இந்த ஸ்தானத்தில் பதவியில் இருந்துகொண்டு சிஷ்யர்களையோ அபிமானிகளையோ கோபுர கைங்கர்யத்திற்குப் பணத்தைக் கொடுத்து உதவி செய்யும்படி யாசகம் செய்வது ஆஸ்தானத்திற்குத் தகுந்ததாக இராது. ஆகையால் தர்மிஷ்டர்களான நீங்கள் தர்மகார்யத்தை உத்தேசித்து எவ்வளவு கொடுத்தாலும் பரம ஸந்தோஷத்தோடு வாங்கிக்கொள்கிறேன்.

சிலர், 'கொடுத்தவர்களையே அடிக்கடி கேட்பது நியாயமா?' என்று கேட்கிறார்கள். 'கறந்த பசுவையே கறக்கலாமா? இறைத்த கிணற்றையே இறைக்கலாமா?' என்று நான் அவர்களைத் திருப்பிக் கேட்கிறேன். இளந்தோறும் ஒரு பசு வாங்க மாட்டார்கள். கறக்கும் பசுவைத்தான் அனேக மாதம் கறப்பார்கள். தினமும் ஒரு இணறு வெட்டமாட்டார்கள். வெட்டின கிணற்றைத்தான் அனேக வருஷம் இறைப்பார்கள். கொடுத்துக் காட்டவே கேட்கிறார்கள். பெருமான் கேட்டதை எல்லாம் கொடுக்கிறவனைபடியால் அடிக்கடி எல்லோரும் பெருமானைக் கேட்டு வருகிறார்கள் என்று தெரிந்து கொண்டு ஸந்தோஷமாகக் கொடுங்கள். ஸ்ரீரங்கநாதன் எல்லோருடைய மனத்திலேயும் வாஸம் செய்கிறான். நாம் உடலை விட்டுப் போகும் போது நம்முடைய பணத்தை மூட்டைகட்டித் தலையில் தூக்கிக் கொண்டு போகப் போவதில்லை என்பது எல்லோருக்கும் தன்னுகத் தெரிந்த விஷயம்தானே? வாரிக் கொடுங்கள். புண்யத்தை மூட்டை கட்டுங்கள். கூடவே கொண்டு போகலாம்; கோபுரத்தைக் கட்டுங்கள். புண்யத்தை மூட்டை மூட்டையாகக் கட்டுங்கள். உங்களைச் சேர்ந்தவர்களுக்கும் புத்தி சொல்லுங்கள். கடைசிப் பக்ஷம் இந்த ஸ்ரீரங்க கோபுரத்திற்கு என்னிடத்தில் அபிமானம் உள்ளவர்கள் ஓர் ஆயிரம் ரூபாயாவது கொடுங்கள். எங்காவது வஸூல் செய்தாவது கொடுங்கள்; ஆரம்பித்த கார்யத்தைப் பூர்த்திசெய்து வையுங்கள்; உங்களுக்கு ஸ்ரீரங்கநாதன் கடாக்ஷமும், ஸ்ரீலக்ஷ்மீ திருவிம்ஹன் கடாக்ஷமும் பரிபூர்ணமாக நீடித்து நிற்கும். கடைசிப் பக்ஷம் இந்தக் கோபுரத்தைக் கட்டிப் பூர்த்தி செய்வதற்கு ஆவலோடு பணத்தைக் கொடுக்க முன்வருகிறவர்களைத் தடை செய்யாமல் இருந்தாலும் அவர்களுக்கும் கோபுரம் கட்டிய புண்ணியம்

sadagopan.org

தடையில்லாமல் வரும் என்பதைப் பெரியோர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ளுங்கள். இந்தப் புண்ணியம் உங்களை நல்ல போகே ாக்யங்களை அநுபவிக்கச் செய்து மோக்ஷமடைய ஸரணாகதி பண்ணிக்கொள்ள வேண்டிய புத்தியை உண்டுபண்ணி உங்களை ரக்ஷிக்கும். நல்ல ஸந்தர்ப்பத்தைக் கைவிடாதீர்கள்.

அஸ்திவாரத்திற்கு எட்டேகால் லக்ஷம் ரூபாய் செலவாகியிருக்கிறது. முதல் நிலை பூர்த்தியானதற்குச் சுமார் பதினைந்து லக்ஷம் ரூபாய் பிடித்திருக்கிறது. இது வரையில் சுமார் பதினாறு லக்ஷம் ரூபாய் வஸூல் ஆகி உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. இவற்றைக் கேட்டுப் படித்து ஸந்தோஷமடையுங்கள்.

சுபமஸ்து

View from SrIranga vimanam

sadagopan.org

ஸ்ரீ அழகியசிங்கரின் அருள்மொழி

अद्य मे सफलं जन्म
जीवितं च सुजीवितम् ।
श्रीरङ्गगोपुरस्यास्य द्वितीयं
सौधमीक्षतः ॥

இரண்டாவது நிலை கட்டுவதற்கான வேலை இன்று தொடங்கி விட்டபடியால் இரண்டாம் நிலை பூர்த்தி பெற்றுவிட்டதாகவேனக்குத் தோன்றுகிறது. இரண்டாம் நிலையைக் கட்ட ஆரம்பித்திருக்கிற திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவனுக்கு இருக்கும் உத்ஸாஹத்தில் பாதி உத்ஸாஹங்கூட எனக்கு இருப்பதாகத் தோன்றவில்லை. மாஸிமாதப் பூர்த்திக்குள் இரண்டாம் நிலை பூர்த்தி பெற்றுவிடும் என்று ஸ்ரீமதாண்டவன் ஸாதித்தாகிறது.

ஸ்ரீமதாண்டவனுடைய அந்தரங்க சிஷ்யர்கள் கோபுரத்தின் முதல் நிலைமேல் ஏறி வேலைகளைத் துரிதப்படுத்துகிறார்கள். "இதைக் கட்டி முடிக்கிறவரை வேறு எந்த வேலையையும் கவனிக்கப் போகிறதில்லை" என்று ஸ்ரீமதாண்டவன் ஸாதித்துக் கொண்டிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். கேட்கக் கேட்க ஸந்தோஷமாக இருக்கிறது. டி. வி. எஸ். லாரிகள் வந்து வேலை செய்துகொண்டிருக்கின்றன.

sadagopan.org

sadagopan.org



சீக்கிரத்தில் மூன்றும் நிலை கட்ட ஆரம்பிக்க வேண்டும். அதற்கு எட்டு லக்ஷம் ரூபாய் வேண்டியிருக்கிறது. எந்தப் புண்ணியவான்கள் தாராளமாகக் கொடுத்து மூன்றும் நிலையைப் பூர்த்தி செய்து வைக்கப்போகிறார்களோ? ஸ்ரீரங்கநாதன் யார் மனத்தில் புகுந்து நடத்தி வைக்கப் போகிறானோ? தெரிய வில்லை. முன்னால் சொல்லமாட்டேன் என்கிறான்.

ஒரு தவறு நான் செய்திருக்கிறேன். அது என்ன என்றால், காஞ்சிபுரம் ஸ்ரீ ப்ரதிவாதிபயங்கரம் மஹாவித்வான் வயோ விருத்தர் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமி ஸந்நிதியில், "ஒரு நிலையைத் தேவரீரைச் சேர்ந்தவர்கள் மூலம் கட்டிக் கொடுக்க வேண்டும்" என்று விண்ணப்பம் செய்யாததுதான் அது. அதை அவர் பொருட்படுத்தாமல், தம் உத்ஸாஹத்துக்குத் தக்கபடி பூர்த்தி செய்து வைப்பார் என்று நம்புகிறேன். ஸ்ரீரங்கநாதன் நியமனப்படிதான் இந்த விஷயத்தை எழுதினேன்.

இந்தக் கோபுர கைங்கர்யத்துக்கு உபயோகப்படுத்துகிற பணம்தான் நம்முடையது. கஷ்டப்பட்டு ஸம்பாதிக்கிற பணத்தை அரசாங்கத்தார் எடுத்துக்கொண்டு போய்விடும்படி, கணக்கில் காட்டாமல் வைத்துவிட்டு வருத்தப்பட்டுக்கொண் டிருக்கிற வியாபாரிகள், நடிகைகள், நடிகர்கள் முதலானோர் செய்தியைப் பேப்பர்களில் பார்த்து நான் வருத்தப்படுகிறேன். இவர்களின் பணம் கோபுர கைங்கர்யத்துக்கு அப்போதைக் கப்போது கொஞ்சம் கொஞ்சமாகவாவது சேர்ந்திருந்தால் பகவான் ஸந்தோஷப்பட்டிருப்பாரே, வீணாகப் போய்விட்டதே என்றுதான் வருத்தப்பட்டேன். இப்பொழுதும் தவறில்லை. ரங்கநாதனுக்குக் கொடுங்கள். ஸந்தோஷமாக வாழலாம்.

கோபுரம் கட்ட உத்தேசிக்கிறவர்கள், என்னிடம் பணம் கொடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லை. அவர்களே நேரில் வந்து கட்டிஞலும் கட்டலாம். அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் மூலமும் கட்டலாம். எப்படியாவது பதின்மூன்று நிலைகள் கட்டி முடிந்தால் போதும்.

நான் இதை எழுதிக்கொண்டிருக்கும்போது ஸ்ரீரங்கநாதன் ஒரு விஷயம் சொல்வது போல் தோன்றியது. அதாவது, "அடா பைத்தியமே! நம்பினவனே நான் கைவிடுவேனே? நீயா கோபுரம் கட்டுகிறாய்? அந்த எண்ணத்தை விட்டுவிடு. என் பக்தன் ஆண்டவன் இரண்டாம் நிலை கட்டி முடிப்பதற்குள்ளே, மேல் நிலைகளைக் கட்டுவதற்குப் போட்டி போட்டுக் கொண்டு அனேகம் பக்தர்களை வரும்படிச் செய்கிறேன். உனக்கா கோபுரம் கட்டுகிறாய்? எனக்கு அல்லவோ கோபுரம் கட்டுகிறாய்? தர்மிஷ்டர்கள் பணத்தைச் செலவழித்துக் கோபுரத்தைக் கட்டி, மகாபாவிகளையும் ஸேவிக்கச் செய்து, அவர்களின் பாவங்களையும் ஒழித்து, புண்ணியசாலிகளாக ஆக்கி, அதனால் வரும் புண்ணியங்களையும் அடைந்து, புத்திர பௌத்திர பாரம்பர்யமாக ஆனந்திக்கப் போகிறார்கள். உனக்குக் கவலையே வேண்டாம்" என்று நியமிப்பது போல் தோன்றியது.

திருப்பதியிலிருந்து பணம் வந்துவிடும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பம்பாயிலிருந்து ஐந்து லக்ஷம் ரூபாய் வருகிறது என்று ஆசை காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

sadagopan.org

காமகோடி பீடாதிபதிகள் சுமார் ஆறு லக்ஷம் செலவழித்து ஒரு நிலைமை முழுவதும் கட்டுவார்கள் என்று எதிர்பார்த்து, முதல் தடவையாக ஒரு லக்ஷம் ரூபாய் பெற்றுக்கொண்டிருக்கிறேன். மீதமுள்ள தொகையும் சீக்கிரம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

வேறு எந்த மடாதிபதியினிடமும் கைநீட்டி யாசிக்கிற உத்தேசம் இதுவரை இல்லை. அவர்களாகக் கொடுத்தால் பரம ஸந்தோஷம். நங்களுக்குப் பிறகு அநுபவிக்கச் சரியானவர்கள் இல்லையென்றால் அநியாயமாக வீணாக அடிக்காமல் ஸ்ரீரங்கநாதன் கோபுரத்திற்கு அந்தச் செல்வத்தைக் கொடுத்து ஆனந்திக்கலாம். யாருக்கும் தெரியாத விஷயம் ஒன்றும் இடையாது.

மார்கழி மாதத்தில் திருப்பாவை உபந்யாஸம் பண்ணுகிற வித்வான்கள் தங்கள் வரும்படியில் ஒரு பாதியாவது கோபுரத்திற்கு ஸமர்ப்பிக்கலாம். வைதிக வருத்தியில் இருப்பவர்களும் தங்கள் வரும்படியில் கொஞ்சமாவது ஸமர்ப்பித்து வரலாம். கோபுரம் கட்ட ஆசையுள்ளவர்கள் எல்லோரும் அவரவர் சக்திக்கு அநுகூலமாக ஸமர்ப்பிக்கலாம்; தன்யர்கள் ஆகலாம். கனவில் கண்ட பணமூட்டைகளிலிருந்து விழித்த பிறகு ஒரு பைஸாவையாவது எடுத்துக்கொள்ள முடிகிறதா? நன்றாக யோசித்துப் பாருங்கள். அதைப் போல்தான் முன்ஜன்மத்தில் சேர்த்த பணமும் இந்த ஜன்மத்தில் உபயோகப்படாமல் போய் விட்டது. அப்படியேதான் இந்த ஜன்மத்தில் சேர்த்து வைக்கிற பணமும் மறுபிறவியில் உபயோகப்பட்டுப் போகிறதில்லை. இவ்வளவு பணம் சேர்த்து வைத்தோம் என்கிற விஷயமும் மறந்து போய்விடுகிறது. சிலருக்கு இந்த ஜன்மத்தில் சம்பாதிக்கிற பணம் இந்த ஜன்மத்திலேயே உபயோகப்படுகிறதில்லை. ஒரே ராத்திரியில் திருடன் கொண்டு போய் விடுகிறான். அல்லது குதிரைப் பந்தயத்தில் கோடிக்கணக்காக ஸம்பாதித்து விடலாம் என்று நினைத்து உள்ள சொத்தையும் அழித்து விடுகிறார்கள்.

ஒரு கதை வெகு நாட்களுக்கு முன் ஒருவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இந்தக் கதை அனேகம் பேருக்குத் தெரிந்திருக்கலாம். பம்பாய் நகரத்தில் நடந்த விஷயமாம். ஒரு பெண்ணுக்கு பன்னிரண்டு வயது ஆனவுடன் ஒரு விதமான அறிவு உண்டாயிற்றும். அந்தப் பெண்ணுக்கு முன் ஜன்மத்தில் நடந்தவை எல்லாம் நன்றாகத் தெரிந்தனவாம். முன் ஜன்மத்தில் பத்து லக்ஷம் ரூபாய் ஸம்பாதித்து வைத்திருந்தாளாம். அந்த ஜன்மத்தில் கல்யாணராமன் என்ற பெயருள்ள புருஷனுக இருந்தானாம். அப்பொழுது அவளுக்கு இரண்டு பிள்ளைகளாம். அந்த ரூபாயைத் தங்கமாகவும் வெள்ளியாகவும் மாற்றி வீட்டுச் சுவர்களுக்குள் பாளையில் போட்டுப் புதைத்து வைத்திருந்தானாம். பிள்ளைகளுக்கும் தெரியாதாம். அந்த ஜன்மம் முடிந்தவுடன் இப்பொழுது ஒரு பெண்ணுகப் பிறந்தாளாம். இப்பொழுது அந்த ஜன்ம விஷயமான ஞாபகம் வந்தவுடனே, வேகமாக முன்ஜன்மத்தில் பிறந்த பிள்ளைகளைப் போ சொல்லி அழைத்து, "நான் உங்களுக்குப் பதின்மூன்று வருஷங்களுக்கு முன் தகப்பனாராக இருந்தேன். நான் இறந்தபிறகு எனக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நன்றாகச் செய்துகொண்டு

sadagopan.org

வருகிறீர்கள். இப்பொழுது நான் பிறந்த இடத்தில் என் தாயார் தகப்பனார்கள் இறந்துவிட்டார்கள். இப்பொழுது எனக்கு முன்ஜன்மத்தில் நடந்தவை எல்லாம் நன்றாகத் தெரிகிறபடியால் நீங்கள் என் பிள்ளைகள் என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. இந்த ஜன்மத்தில் உங்களுக்கும் எனக்கும் எவ்வித உறவும் இல்லை. இந்த வீடு என்னுடையது. கஷ்டப்பட்டுப் பணத்தை ஸம்பாதித்து இந்த வீட்டைக் கட்டினேன். இப்பொழுது எனக்குப் பன்னிரண்டு வயதாகிவிட்டது. எனக்குப் பணம் செலவழித்துக் கல்யாணம் செய்து வைப்பார் யாரும் இல்லை. நீங்கள்தான் செய்து வைக்க வேண்டும்" என்று சொல்லி வருத்தப்பட்டாள் அந்தப் பெண்.

அந்தப் பெண் சொன்ன வார்த்தையைக் கேட்டதும் இவர்களுக்குப் பயம் உண்டாயிற்று; கூச்சல் போட்டார்கள். இவர்களுடைய கூச்சலைக் கேட்டதும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் அங்கே கூடிவிட்டார்கள். பல போலீஸ் அதிகாரிகளும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அந்தப் பெண்ணை மிரட்டி விசாரித்தார்கள். அவள் பயப்படாமல் பதில் சொன்னாள். "அடையாளம் காட்ட முடியுமா?" என்று கேட்டார்கள். "இவன் என்னுடைய மூத்த பிள்ளை. துஷ்டத்தனமான காரியங்களைச் செய்வான். இவனுடைய முழங்காலுக்கு மேல் சூடு போட்டிருக்கிறேன், பாருங்கள்" என்று அந்தப் பெண் சொன்னாள். அந்த அடையாளத்தை எல்லோரும் பார்த்தார்கள். இவள் குறி ஜோஸ்யம் சொல்லுகிறாள் என்று எல்லோரும் சொல்லிவிட்டார்கள். வீட்டை விட்டுப் போகமாட்டேன் என்று அந்தப் பெண் சொன்னபடியால், போலீஸார் அவளை வெளியே போகும்படிச் செய்தார்கள். அந்தப் பெண் இரண்டு நாள் கழித்து மறுபடியும் வந்து தன் பிள்ளைகளைப் பார்த்து அவர்களுடன் வசிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள். அவள் எவ்வளவு மன்றாடிக் கேட்டுக்கொண்டும் அந்தப் பிள்ளைகள் அவளை உள்ளே புக விடாமல் அடித்துத் துரத்திவிட்டார்கள். அவள் வருத்தப்பட்டுக் கொண்டே பிச்சை யெடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு கஷ்டப்பட்டாளாம். முன் ஜன்மத்தில் சேர்த்து வைத்திருந்த ஸொத்தைப் பற்றித் தெரிந்திருந்தும் இந்த ஜன்மத்தில் அது உபயோகப்படவில்லை. ஆகையால், ஸந்தோஷமாக, கோபுரம் கட்டுவதற்குக் கொடுங்கள்; ஸத்விஷயத்தில் உங்களது பணத்தை உபயோகப்படுத்துங்கள்; அதனால் அளவற்ற பலன் கிட்டும்.

சுபமஸ்து

sadagopan.org

கைங்கர்யம் செய்கிறவர்களுக்கு நம்மால் முடிந்தவரை உதவி செய்வது மிகவும் முக்கியமானது. இப்பொழுது, ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் மேற்கு ராயகோபுரத்தில் முதல் நிலை முடிந்து, இரண்டாம் நிலை ஸ்ரீமதாண்டவனுடைய உத்ஸாஹத்தால் கட்டப்பட்டு வருகிறது. விமென்ட், செங்கல் முதலியவை வேண்டிய அளவு வரவழைக்கப்பெற்று வருகின்றன. இரண்டாம் நிலை பதினேழரை அடி உயரம். பத்தடி உயரம் கட்டியாகி விட்டது. 180 அடி நீளம், 90 அடி அகலம், பங்குனி உத்தரத்துக்குள் இரண்டாம் நிலை பூர்த்தி பெற்றுவிடும்.

பிறகு மூன்றும் நிலை கட்ட வேண்டும். ஸ்ரீமதாண்டவனைப் போல் எனக்குக் கைகொடுக்கப் போகிறவர் யார் என்று இது வரை நிச்சயமாகத் தெரியவில்லை. அதற்காக ஸ்ரீரங்கநாதன் எனக்குக் கவலையை உண்டுபண்ணவில்லை. பக்தர்களிடமிருந்து பிரதிதினமும் பணம் வந்துகொண்டே இருக்கிறது. தைரியமும் வளர்ந்துகொண்டே வருகிறது.

ஆரம்பத்தில் சொன்னபடி எல்லா வஸ்துக்களிலும் உள்ளும் புறமும் வியாபித்திருக்கும் நாராயணன் எல்லோருடைய மனத்தையும் திருப்பி, கோபுர கைங்கர்யத்துக்குச் சக்திக்கு மீறிக் கொடுக்கும்படி செய்து, தெற்குக் கோபுரத்தைப் பூர்த்தி செய்துவைத்து, பூர்த்திபெற்ற கோபுரத்தின் உள்ளேயும் வெளியிலும் ஸந்துஷ்டனாக இருந்துகொண்டு, கோபுரத்துக்கு உதவி செய்தவர்கள், ஸேவிக்கிறவர்கள், பண்டிதர், பாமரர், பரலோகம் உண்டு என்கிறவர்கள், இல்லை என்கிறவர்கள், ஸந்தேஹப்படுபவர்கள் இவர்கள் அனைவருக்கும் ஸகல விதமான ஆனந்தத்தையும் உண்டுபண்ணி ஆனந்திக்கச் செய்ய வேண்டும் என்று என்னுடைய ஆசார்யர்களை அநவரதம் பிரார்த்திக்கிறேன்.

இப்பொழுது ஆனந்தஸாகரத்தில் ஆதிசேஷ தல்பத்தில் சயனித்துக்கொண்டிருக்கிற ஸ்ரீரங்கநாயிகாஸமேத ஸ்ரீரங்கநாதனுடைய ஸங்கல்பத்தினாலும், நவரத்தினங்கள் இழைத்த ஸ்வர்ணடோலையில் ஸந்துஷ்டராக எழுந்தருளியிருக்கிற ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனுடைய பரிபூர்ண அனுக்ரஹத்தினாலும் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய ராஜகோபுரத்தில் இரண்டாவது நிலையைத் திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவன் கட்டுவது ஜகத்திலுள்ளவர் யாவரும் அறிந்த விஷயமாகும். பங்குனிமீ ஸ்ரீமதாண்டவன் அவதார நக்ஷத்திரமான புஷ்ய நக்ஷத்திரத்தில் இரண்டாவது நிலை பூர்த்தியாகிவிடும் என்பது எல்லோருடைய

sadagopan.org

அபிப்பிராயமாகும். சுமார் பத்து லக்ஷம் ரூபாய்க்கு மேல் செலவாகும் என்பதில் ஸந்தேகமில்லை. ஸ்ரீமதாண்டவன் பரம உத்ஸாஹத்தோடு அடிக்கடி கோபுரத்தின்மேல் ஏறிக் கட்டுமான வேலையைக் கடாக்ஷித்தாகிறது. இது முடிந்தவுடன் மூன்றுவது நிலை கட்ட ஆரம்பிக்க வேண்டும்.

திருவல்லிக்கேணி அட்வொகேட் ஸ்ரீ என். ஜி. கிருஷ்ண ஐயங்கார் மூன்றுவது நிலையைக் கட்டுவதாக ஒப்புக்கொண்டது யாவரும் அறிந்ததே. அந்த ஸ்வாமியை நாம் தனியாக விடக் கூடாது. மூன்றுவது நிலை கட்டுவதற்கும் சுமார் எட்டு லக்ஷம் ரூபாய் பிடிக்கும் என்று தோன்றுகிறது. நாம் எல்லோரும் சேர்ந்து ஐந்து லக்ஷம் ரூபாயாவது வஸூல் பண்ணிக் கொடுத்தால் அந்த ஸ்வாமிக்குக் கொஞ்சம் ஸௌகர்யமாக இருக்கும்.

ஒரு ஸமயம் காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீசங்கர பகவத்பாதாள் மூன்றுவது நிலையைக் காட்டுவார்கள் என்று வதந்தி இருக்கிறது அவ்விதம் அவர்கள் அபிப்பிராயப்பட்டால் ஸ்ரீ என். ஜி. கிருஷ்ண ஐயங்கார் விட்டுக் கொடுப்பார் என்று நம்புகிறேன். ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் மூன்றுவது நிலையைக் கட்டுவதாக இருந்தால் அவர்கள் நம்மிடத்தில் முன்பு கொடுத்திருக்கிற ஒரு லக்ஷம் ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று நிச்சயம் பண்ணியிருக்கிறன். முதல் நிலையில் அந்த ரூபாய் செலவழிந்திருந்தாலும் எப்படியாவது கொடுக்க வேண்டியதுதான் ந்யாய்யம் என்று தோன்றுகிறது.

இந்தக் கோபுர கைங்கர்யத்தில் யார் யார் எந்த எந்தப் புண்ணியம் பண்ணியிருக்கிறார்களோ? அது ரங்கநாதனுக்குத் தான் தெரியும். அவர்களுக்குக் கோபுர கைங்கர்யத்திற்குச் சீக்கிரமாகக் கொடுக்கும்படி ஸ்ரீரங்கநாதன்தான் தோன்றப் பண்ண வேண்டும். நல்ல காரியங்களில் சேர்க்கப்படுகிற சொத்து தான் நம்முடையது. நமக்கு அதனால் பகவான் பரிபூர்ணமான அநுக்ரஹத்தைப் பண்ணுகிறான். பெரியோர்கள் சேர்த்து வைத்த சொத்தாக இருந்தாலும், "தர்மம் சர" என்கிறபடி, தர்ம காரியங்களில் அதை உபயோகப்படுத்த வேண்டும். "அறஞ்செய விரும்பு" என்றபடி, தர்மம் செய்ய நினைத்தாலும் பலன் உண்டு என்றால், தர்மங்களைச் செய்தால் பலன் கிடைப்பதற்கு என்ன ஸந்தேகம்? எப்படியோ பகவந்நியமனத்தினால் இந்தக் கோபுர கைங்கர்யத்தை ஆரம்பித்துவிட்டேன். கோபுரத திருப்பணி எல்லோருக்கும் ஸந்தோஷகரமாக நடந்து வருகிறது. ஏழை ஜனங்கள் வேலை செய்து ஸந்தோஷமாகச் சாப்பிடுகிறார்கள். இன்னும் இரண்டு வருஷங்களுக்கு ஸ்ரீரங்கநாதன் கோபுரவேலை மூலமாகச் சாப்பாட்டிற்குக் கஷ்டமில்லாமல் ஏழை ஜனங்களுக்கு படி அளப்பான். கோபுர வேலை முடிந்து ஸம்ப்ரோக்ஷணம் நடைபெறும் வரையில் ஒரு கோடி ரூபாய் கட்டாயமாக வேண்டி

sadagopan.org

sadagopan.org

மிருக்கும். இந்தக் கலியுகத்திலும் எத்தனையோ கோடி தர்மிஷ்டர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரூபாய் வீதம் அனுப்பினால் போதும். சிரமமில்லாமல் கோபுர கைங்கர்யம் பூர்த்தியாகிவிடும்; ஸந்தேகமில்லை.

"எத்தனையோ கோடி தர்மிஷ்டர்கள் இருப்பதாகச் சொல்லுகிறீர்களே. உங்களுக்கு எப்படித் தெரிகிறது?" என்று கேட்கலாம். சொல்லுகிறேன். கேளுங்கள். இந்த இந்தியாவில் எத்தனை லாட்டரிச் சீட்டுக் கம்பெனி நடக்கிறது? தினந்தோறும் பேப்பரில் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறோம்? ஒரு சீட்டிற்கு ஒரு ரூபாய்தான் வாங்குகிறார்கள். முதல் பரிசுக்கு மூப்பது லக்ஷம் கொடுப்பதாக எழுதுகிறார்கள். கோடிக் கணக்கில் ஒரு ரூபாய் கொடுத்து வாங்குகிறார்கள். ஒவ்வொரு மாதத்தில் ஒவ்வொரு லாட்டரிக் கம்பெனிக்கும் கோடி ரூபாய் சேர்ந்து விடுகிறது. உடனே சீட்டுக்களைக் குலுக்கிப் போட்டு ஒரு சீட்டை எடுக்கிறார்கள். பரிசு வந்த சீட்டிற்குப் பணத்தைச் சொன்னபடி கொடுத்துவிடுகிறார்கள் இயலாதிரிய எல்லா லாட்டரியிலும் மாத மாதம் கோடிக் கணக்கில் பணம் ஸுலபமாகச் சேர்ந்துவிடுகிறது. இதன் ஸாராம்சம்—லாட்டரிச் சீட்டு வாங்குபவன் தர்மசிந்தையோடு வாங்குகிறான். எப்படி பான்னால், நமக்குப் பரிசு விழுந்தால் தல்ல காரியம் பண்ணலாம் என்று நினைக்கிறான். சீட்டு நமக்கு விழாவிட்டால் ஒரு ரூபாய்தானே செலவு? சீட்டு எவனுக்கு விழுகிறதோ அவன் எவ்வளவு புண்ணியத்தைச் செய்திருக்க வேண்டும்! நம்முடைய ஒரு ரூபாய் அவனுக்குச் சேருகிறது. அந்தப் புண்ணியசாலிக்குச் சேருவதனால் நமக்குப் புண்ணியம் வருகிறது என்று நினைக்காதவன் இல்லை. ஆகையால் பரிசுச் சீட்டு வாங்கும் அத்தனை கோடி பேரும் தர்ம சிந்தை உள்ளவர்கள் என்பதற்குத் தட்டில்லை. ஆகையால் நாம் கோபுரத்திற்காக ஒரு ரூபாய்ச் சீட்டு வாங்கினால் நமக்கும் ப்ரைஸ் விழுந்தே தீரும். என்ன ப்ரைஸ் என்கிறீர்களா? ஸ்ரீரங்கநாதனுடைய திவ்யகடாக்ஷம்தான் உயர்ந்த ப்ரைஸ் என்று நினைத்துக்கொள்ளுங்கள். ஒரு ரூபாய்க்குமேல் வேண்டாம். இன்றைக்கே அனுப்ப ஆரம்பியுங்கள். பரிசுச் சீட்டு குறைந்த பக்ஷம் பதினாவது வாங்குகிறார்களே என்றால், அது அவர்களுடைய இஷ்டம். பத்து லக்ஷம், எட்டு லக்ஷம், ஐந்து லக்ஷம் என்று சொல்லுகிறவர்கள், சொன்னவர்கள் சிக்கிரமாக ஏற்பாடுசெய்து விடலாம். இதரர்களுக்கு இந்தத் தர்மத்தில் ஸம்பந்தம் இல்லாமற் போய்விடும். ஆகையால் ஒவ்வொருவரும் முந்திக்கொள்ள வேண்டும். முதலில் நீங்கள் கொடுங்கள், பிறரைக் கொடுக்கப் பண்ணுங்கள். கொடுக்கிறவர்களைப் பார்த்து ஸந்தோஷப்படுங்கள். இந்தத் தர்மத்திற்குக் கொடுக்கிறவர்களுக்குக் கடன் கொடுங்கள்.

இந்தத் தர்மத்தை ஆரம்பித்து நடத்துகிறவர்களுக்கு வட்டி வாங்காமல் கடன் கொடுங்கள். இதில் முக்கியமாக எனக்கு நூறு ரூபாய் முதல் பத்தாயிரம் ரூபாய் வரையில் கடன் கொடுங்கள். மூன்றாவது வருஷம் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். இதற்கு வட்டி லக்ஷ்மீநரஸிம்மன் அநுக்ரஹம்தான். இதற்காக ரசீதுப் புஸ்தகங்கள் போட்டிருக்கிறேன். ஒவ்வொரு

புஸ்தகத்திலும் நூறு நூறு ரூபாய் ரசீதுகள்தாம்: ஒரு ரசீதும் எடுத்துக்கொள்ளலாம்; பத்து ரசீதும் எடுத்துக்கொள்ளலாம். அவரவர் சக்திக்குத் தகுந்தபடி ரசீதுகள் எடுத்துக்கொண்டு கடன் கொடுக்கலாம். சிலர், "இது ஏமாற்று வழி. அழிய சிறிதருக்குக் கடன் கொடுத்துத் திரும்பி வாங்கப்போகிறார்களா? —என்று யோசித்து ஏற்பாடு பண்ணியிருக்கிற விஷயம்" என்று சொல்லுகிறார்கள். எஜ் எண்ணம் அப்படி மோசமானதன்று. கட்டாயம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் இப்படி ஆரம்பித்திருக்கிறேன். தப்படமாக ஆரம்பிக்கவில்லை. எப்படியாவது கோபுர கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்ய இப்படியும் ஒரு வழி ஆரம்பித்திருக்கிறேன். இதுவரையில் நாற்பது ரசீதுப் புஸ்தகங்கள் வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் வந்து கொண்டிருக்கிறது. எப்படியாவது எல்லோரும் சிரத்தை எடுத்துக்கொண்டு ராஜகோபுரத்தைப் பூர்த்தி செய்து ஸ்ரீரங்க நாதன் அநுக்ரஹத்தையும் ஸ்ரீலக்ஷ்மிநரஸிம்ஹன் கடாக்ஷத்தை யும் பெற்று ஆனந்திப்பீர்கள் என்று பூர்ண நம்பிக்கையோடு இருக்கிறேன். என் நம்பிக்கையையும் பூர்த்தி செய்து வையுங்கள்.

சுபமஸ்து

இன்று பெரியதொரு லாபம் கிடைத்தது. அந்த லாபத்தை எல்லோருக்கும் தெரியப்படுத்தாமல் இருக்க முடியவில்லை; என்ன லாபம் என்கிறீர்களா? இந்த லாபத்தைப்பற்றிக் கேட் கிறவர்களும் ஸந்தோஷம் அடைவார்கள். கோபுரத்தின் இரண் டாம் நிலையைத் திருக்குடமுதை ஸ்ரீமதாண்டவன் நிர்மித்து வருகிறார் என்பது அனைவரும் அறிந்த விஷயம். சித்திரை மாதம் இருபது தேதிக்குள் பூர்த்தி பெற்றுவிடும் என்பதில் ஸந்தேஹமே இல்லை.

மூன்றும் நிலையை உடனே கட்ட ஆரம்பிக்க வேண்டும் அல்லவா? "ஹே ரங்கநாத! ஹே லக்ஷ்மீநரஸிம்ஹ! என்னைப் பரீக்ஷை பண்ணுகிறீர்களே. இது உங்களுக்கு நியாயமாகத் தோன்றுகிறதா? நீங்கள் எந்தத் தர்மிஷ்டர்கள் மனத்தில் புகுந்து மூன்றும் நிலையைக் கட்ட நியமிக்கப்போகிறீர்களோ? தெரியவில்லையே?" என்று பிரார்த்தித்துக்கொண்டிருந்த ஸமயத் தில்தான் முன் சொன்ன லாபம் கிடைத்தது.

இரண்டு திவ்யதேசத்து எம்பெருமான்களும், "மூன்றும் நிலையைக் கட்டுபவரும் பெரிய மடாதிபதியாகவே இருக்க வேண்டும்" என்று திருவுள்ளம் பற்றி, ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு, பழைய பெரியவாளான சந்திர சேகர ஸரஸ்வதி யதிராஜருடையவும், புதுப் பெரியவாளான ஜயேந்த்ர ஸரஸ்வதி யதிராஜருடையவும் திருவுள்ளத்திலே புகுந்து, ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீரங்கநாதனுடைய ராஜகோபுரத் தில் மூன்றும் நிலையை நீங்கள் பூர்ணமாகக் கட்டிக் கொடுத்து, பூர்வாச்ரமம் முதல் உங்கள் அபிமானத்துக்குப் பாத்திரரான ஸ்ரீஅஹோபில மடம் ஜீயருக்குக் கைகொடுங்கள்" என்று நியமித்திருக்கிறான் என்று தெரிகிறது.

sadagopan.org

நான் சிந்தித்துக்கொண்டிருந்த தருணத்தில்தான், "கவலைப்பட வேண்டாம். மூன்றும் நிலையை நம் மடத்து மூல மாகவே கட்டி வைக்கிறோம். இதுவரை கட்டுவதற்கு என்ன செலவாயிற்று? மூன்றும் நிலையைக் கட்ட என்ன செலவாகும்? கோபுரத்தைக் கட்டிவரும் ஸ்தபதியிடமிருந்து ஒரு எஸ்ட் வாங்கி அனுப்பவும்" என்று ஸ்ரீகாஞ்சி மடாதிபதிகளிடமிருந்து தகவல் கிடைத்தது:

பம்பாய் மடம் ஆராதகர் சோதியம்பாக்கம் சேஷாத்ரி யாசார்ய ஸ்வாமிகளை நாம் ஸ்ரீகாஞ்சி ஆசார்யர்களிடம் அனுப்பி யிருந்தோம். மடாதிபதிகள், அவர் மூலம்தான் இந்த விஷயத் தைத் தெரிவித்தார்கள்; ஸ்தபதியிடமிருந்து எஸ்டிமேட் வாங்கி அனுப்பியிருக்கிறோம்:

இது பெரிய லாபம் அல்லவா? இதைக்காட்டிலும் பெரிய லாபம் என்ன இருக்கிறது? கட்டாயமாக, மூன்றும் நிலையை ஸ்ரீகாஞ்சி ஜகத்குரு காமகோடி பீடாதிபதிகளே கட்டிவிடு வார்கள். அவர்கள் கோபுரத்துக்காக நம்மிடம் ஏற்கனவே கொடுத்திருக்கும் லக்ஷம் ரூபாயை அவர்கள் கேட்காமல் போனா லும் அவர்களிடம் கொடுத்துவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்

வறட்சியால் சிரமப்படும் ஜனங்களுக்கு, மாண்புமிகு நமது முதல் அமைச்சர் உதவி புரிவது போல், ஸ்ரீரங்கம் கோபுரத்தில் வேலை செய்கிற சுமார் இருநூறு ஏழைஜனங்களுக்கு வறட்சியால் ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தை விலக்கவே சுமார் பத்து லக்ஷம் ரூபாய் செலவில் மூன்றும் நிலையைக் கட்டி வைக்கக் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸங்கல்பித்துக்கொண்டிருக்கிறார்கள்:

அறநிலையப் பாதுகாப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு இராம வீரப்பன் அவர்கள், ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் விஷயமாக மிகவும் உத்ஸாஹத்துடன் பேசியிருப்பதைப் பேப்பர்களில் பார்த்திருப்பீர்கள்.

அரசாங்கத்திடம் நாம் பணம் கேட்கவில்லை என்று தெரிவித் திருக்கிறார். அது உண்மைதான். அவர் கூறின விஷயம் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கிறபடியால்தான் காஞ்சி மடாதிபதிகள் கைகொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்; மேலும், எத்தனை மடாதிபதிகள் கைகொடுக்கப் போகிறார்கள் என்பது போகப் போகத்தான் தெரியும்.

மடாதிபதிகளிடப் பன்மடங்கு பணத்தை மூட்டைகட்டி வைத்துக்கொண்டிருக்கும் எத்தனை புண்ணியசாலிகள் கோபுரம் கட்ட எப்பொழுது முன்வருவார்கள் என்பது ஸ்ரீரங்கநாதனுக் குத்தான் தெரியும். கறுப்பாக இருந்தாலும், நீலமாக இருந்தாலும், பச்சையாக இருந்தாலும் அந்தப் பணம் கோபுர கைங்கர்யத்தில் சேர்ந்துவிட்டால் வெளுப்பாக ஆகிவிடும் என்பதில் ஸந்தேஹமே இல்லை.

sadagopan.org

திருப்பதி உண்டியில் போடுவது கறுப்புப் பணமா? வெளுப்புப் பணமா? அதைப் போல், எந்தப் பணமாக இருந்தாலும் ஸ்ரீரங்கம் தசாவதாரன் ஸந்நிதியில் இருக்கும் மடத்து ஸ்வாமியின் கைப்பெட்டியில் சேர்த்துவிட்டால் கோபுர கைங்கர்யத்தில் சேர்த்து அபரிமிதமான பலனைக் கொடுத்துவிடும்.

கோபுர கைங்கர்யத்தை உத்தேசித்து லாட்டரிச் சீட்டு வாங்குங்கள். ப்ரைஸ் விழுந்தால் பாதிப் பணத்தைக் கோபுரத்துக்குக் கொடுங்கள். சிலர் அவ்விதம் செய்திருக்கிறார்கள்; லாட்டரிச் சீட்டு வாங்கி மடத்துக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

கோபுரம் கட்டுவது புகழுக்காக அல்ல; எல்லோரும் ஸேவித்துப் புண்ணியத்தை ஸம்பாதித்து நல்ல பலனைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான். கூலிவேலை வேறிடத்தில் செய்வதைவிட, கோபுரத்துக்காகச் செய்தால் சாப்பாட்டுக்கும் ஆகும்; புண்ணியமும் வரும். அதே போல் பணத்தைக் கோபுரத்துக்காகச் செலவழித்தால் புகழுண்டு, புண்ணியமுமுண்டு.

சுபமஸ்து.

ஒரு ஸாரமான விஷயத்தை இந்த வயதில் தெரிந்து கொண்டேன். அந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்திருந்தால் நான் சொல்வதையும் புரிந்துகொண்டு ஸரியாக இருந்தால் ஸந்தோஷப்படுங்கள்.

சாஸ்திரங்கள் கூறியிருக்கும் நல்ல காரியங்களெல்லாம் கலியுகத்தில் ஸரிவர நடைபெறு; அதர்மிகள்தாம் தலைதூக்கி நிற்கும்; ஜனங்கள், நல்ல லோகங்களுக்குப் போகும் வழிகளைக் கூடக் காண்பது அரிதாகிவிடும்; யமலோகத்திலுள்ள நரகங்களில் ஹிம்ஸைப்படும் பாவிகளுடைய சப்தங்கள்தாம் அதிகமாகும் என்றெல்லாம் அனேக விதமான தோஷங்களைச் சொல்லிக் கலியுகத்தை தூஷிக்கிறார்கள். அது அவ்வளவு ஸரியல்ல.

முந்தின யுகங்களில், ஹிரண்யன், ராவணன், சிசுபாலன், ஜராஸந்தன் முதலிய அரசாகள் ஜனங்களைப் பலபடியாக ஹிம்ஸித்தனர். பகவானை மனத்தால்கூட நினைக்கக்கூடாது; பகவந்மந்திரங்களைச் சொல்லக்கூடாது என்றெல்லாம் நிர்ப்பந்தப் படுத்தி வந்தனர். பகவானைப் புகழ்ந்தவர்களைப் பலபடியாக ஹிம்ஸித்தும் வந்தனர்.

இந்தக் கலியுகத்தில், அரசர்களோ, இப்பொழுது பரிபாலனம் செய்யும் மந்திரிகளோ யாரும் அவ்விதம் செய்ததில்லை. செய்கிறவர்களாகவுமில்லை. இந்தக் கலியில்தான் பெரிய தர்ம காரியங்கள் நடக்கின்றன. அரசாங்கத்தார் மிகவும் உதவிபுரிகின்றனர். புராதனமான கோவில்களைப் பழுதுபார்த்துப் பத்தோபஸ்துச் செய்கிறார்கள். கோவில், மடம் இவற்றில் பூஜை ஸரிவர நடைபெற ஏற்பாடு செய்கின்றனர்.

sadagopan.org

வேதம் படிக்கிறவர்களுக்கு அரசு மானியம் செய்து தருகிறது. பாடசாலையிலுள்ள உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடுக்கின்றனர். எந்த மதஸ்தரும் நாஸ்திக வாதத்தை மனப் பூர்வமாகச் செய்கிறதில்லை என்பதை அவரவர் பெயர்களைப் பார்த்தே நன்றாகப் புரிந்துகொள்ளலாம். இதற்கு ஸாக்ஷிகள் தேவையில்லை.

ஸ்ரீரங்கநாதன் நியமனத்தாலேயே ராஜகோபுரத்தில் பதின் மூன்று நிலைகள் கட்ட ஆரம்பித்தேன். ஸ்ரீரங்கநாதன் முதல் நிலையைப் பூர்த்தி செய்துகொண்டான். நான் ஆரம்பித்த காரியத்துக்கு ஸ்ரீரங்கநாதன், திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளத்தில் புகுந்து இரண்டாம் நிலையைக் கட்டிவைக் கும்படி நியமித்திருக்கிறான். ஸ்ரீமதாண்டவனும் இரண்டாம் நிலையைக் கட்டி முடித்துவிட்டுப் பரம ஸந்துஷ்டராக எழுந்தருளியிருக்கிறார். மிகவும் ஆச்சர்யமாக இரண்டாம் நிலை அமைந்திருக்கிறது.

"மூன்றும் நிலை கட்டுவதைப்பற்றி நீ கவலைப்படவேண் டாம்; ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹ கராவலம்ப ஸ்தோத்திரத்தை இயற்றிய ஸ்ரீ பகவத்பாதர்கள் ஸ்தாபித்த காஞ்சி காமகோடி மடத்தில் பீடாதிபதி ஸ்தானத்தை அலங்கரித்துக்கொண்டிருப்ப வர்களும், உனக்குப் பூர்வாச்ரமம் முதல் அபயம் கொடுத்துக் கொண்டிருப்பவருமான இரண்டு மகான்களிடம் விஜ்ஞாபனம் செய்; நான் அந்தப் பெரியவர்களுடைய உள்ளத்தில் புகுந்து உன் பிரார்த்தனையை அங்கீகரிக்கச் செய்கிறேன்" என்று அரங்க நகரப்பன் நியமித்தான்.

நானும் எம்பெருமானுடைய நியமனப்படி அவர்களைப் பிரார்த்தித்தேன். "ரங்கநாதன் நியமனப்படி, மூன்றும் நிலை யைப் பூர்த்தி செய்துவைக்க நாங்களே நிர்மாணித்திருந்தோம்; உங்கள் விருப்பப்படி மூன்றும் நிலையைக் கட்டித் தருகிறோம்" என்று தெரிவித்தனர். ப்ளான் போட்டுத் தரும்படி அங்கிருந்து மனுஷ்யர்களை அனுப்பிச் செய்ய வேண்டிய காரியங்களைத் நிர்மாணித்திருக்கின்றனர்.

வைகாசி மாதம் ஏழாம் தேதி புதன்கிழமை அனுஷ நக்ஷத் திரம் கூடிய சுபதினத்தில் மூன்றும் நிலை கட்ட ஆரம்பிக்கலாம் என்று அவர்கள் அபிப்பிராயப்படி நிர்மாணித்திருக்கிறது. அதற்கு மேலே கட்ட வேண்டிய எல்லா நிலைகளுக்குமே அந்த மகான்கள் உதவிபுரியத் நிர்மாணித்திருப்பதாகத் தெரிகிறது. அந்த மடத்தில் அபிமானமுள்ள அனேக வைதிக லௌகிகப் பிரமுக்களும் அதிகமான ஸந்தோஷத்துடன் இருப்பதாகத் தெரிகிறது.

மேலும் அனேக மடாதிபதிகள் இந்தக் கோபுர நிர்மாணத் தில் சிரத்தை எடுத்துக்கொண்டிருப்பதாகவும் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. நிச்சயம் தெரிந்தபிறகு அடுத்த மாதம் திருவிம்மப்ரியாவில் அருள்மொழியில் எழுதுகிறேன். வெளி நாடுகளுக்குப் போயிருக்கிற அனேகம் உத்தியோகஸ்தர்கள் அவ்விடத்து டாலர்களை அனுப்புகிறார்கள். எத்தனை பக்கங்கள் எழுதினாலும் போதாது. நல்ல காரியங்களில் சிரத்தை இல்லாத வர்கள் இருப்பதாகவே தெரியவில்லை.

sadagopan.org

இந்தக் கலியுகத்தில் அனேக மதாசார்யர்கள் அவரவர் சிஷ்யர்களுக்கு ஹிதோபதேசம் பண்ணி ஸன்மார்க்கத்தில் அவர் களைச் செல்லும்படிச் செய்துகொண்டிருப்பதுதான் இதற்குக் காரணம். படிக்காத ஆண் பெண்கள் கிடையாது. கெட்ட கார்யங்களையும் நல்ல கார்யங்களையும் தெரிந்துகொள்ளாதவர் யாருமில்லை. எல்லோருக்கும் தர்மநிஷ்டை இருக்கிறது. அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்கிறார்கள். இந்த வறட்சிக் காலத்தில் அனேகம் ஏழை ஜனங்களுக்கு உபகாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் தோன்றுகிறபடி யால், கோபுர கைங்கர்யம் மூலமாகச் செலவழித்துப் பயனடை கிறார்கள். தினந்தோறும் மணியார்டர் மூலமாகவும் செக்மூல மாகவும் ஸ்ரீரங்க கோபுரத்திற்குப் பணம் வந்துகொண்டே இருக்கிறது. இதனால் இனமும் ஸந்தோஷம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது:

ஒரு விஷயம்: "எத்தனை கோபுரம் கட்டினாலும் எவ்வளவு தானம் பண்ணினாலும் வைகுண்டத்திற்குப் போய்விடமுடியாது என்று கீதையில் சொல்லியிருப்பதாகப் பெரியோர்கள் சொல்லு கிறார்களே? தானம் தர்மம் முதலியவை செய்து என்ன பிரயோஜனம்?" என்று கேட்கிறார்கள். அவர்கள் கேட்பது நியாயம்தான். இம்மாதிரி கைங்கர்யங்களாலே வைகுண்டம் வந்துவிடாது. அப்படியானால் எதற்காகத் தானம் தர்மம் செய்ய வேண்டும் என்கிறீர்களா? சொல்லுகிறேன் கேளுங்கள்: இவ்வுலகில் நாம் பிறந்திருக்கிறோம் அல்லவா? இவ்விடத்தில் எந்தக் குறையும் இல்லாமல் நாம் இருக்கிறவரையும் ஸுகமாக இருக்க வேண்டாமா? அதற்காகத்தான் தானதர்மம் முதலியன செய்யவேண்டும். குழந்தைகள் இல்லாதவர்களுக்கு நல்ல குழந்தைகள் பிறக்கும். தீர்க்கமான ஆயுஸ் வேண்டுமானாலும் தானதர்மங்கள் பண்ணினால் ஆயுஸ் விருத்தியடையும். இவ்வுல கத்திலும், ஸ்வர்க்கம் முதலான உலகங்களிலும் பலவித ஆனந் தங்களை அனுபவிக்கலாம். ஆரோக்கியம் உண்டாகிறது. தான தர்மம் செய்வதனால் மழை பொழிகிறது. தான்யம் விருத்தி யடைகிறது. பசு முதலான பிராணிகள் க்ஷேமமடைகின்றன. நல்ல கார்யங்கள் செய்வதற்குச் செல்வம் விருத்தியடைகிறது. இவை எல்லாம் சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற விஷயங்கள்:

இதற்கு மேல், புண்ணிய கார்யங்களைப் பண்ணினால் விவேகம் உண்டாகிறது: அதாவது பகுத்தறிவு—நல்ல அறிவு உண்டானால் தன்னைத் தெரிந்துகொள்ளுகிறான். பிறகு தனக்கும் உயிரான பரமாத்மாவைத் தெரிந்துகொள்ளுகிறான். பிறகு பரமாத்மாவின் இருப்பிடமான வைகுண்டத்தைத் தெரிந்து கொள்ளுகிறான். அந்த வைகுண்ட ஆத்மாக்களைத் தெரிந்து கொள்ளுகிறான். அவர்களைப் போல் நாமும் ஆகிவிட வேண்டும் என்று நினைக்கிறான். என்ன செய்தால் அந்த வைகுண்டப் போய் அவர்களைப் போல் ஆனந்தம் பெறலாம் என்று பெரியோர்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு அவர்கள் நியமனப்படி சரணாகதி பண்ணிக்கொள்ள நினைக்கிறான். இவ்வளவு விஷயமும் அவன் பண்ணுகிற புண்ணிய கார்யங்களால்தான் தோன்றுகிறது. பிறகு சரணாகதி பண்ணிக்கொள்ளுகிறான். மோக்ஷமடைகிறான், வைகுந்தம் போகிறான். அவ்விடத்தில் ஸ்ரீமந்நாராயணன் திரு வடிகளில் பரிசர்யை பண்ணிக்கொண்டு ஆனந்தமடைகிறான். ஆகையால் கோபுரம் கட்ட வேண்டியதற்கு முடிந்த வரையில் ஸந்தோஷமாக உபகாரம் செய்யுங்கள். க்ஷேமமடையுங்கள்.

---

sadagopan.org

ஸ்ரீஅழகியசிங்கரின்
அருள்மொழி

अद्य मे सफलं जन्म जीवितं च सुजीवितम् ।
यद्रङ्गिगोपुरे सौधं तृतीयं द्रष्टुमुत्सहे ॥

அத்ய மே ஸபலம் ஜந்ம ஜீவிதம் ச ஸுஜீவிதம் |
யத் ரங்கிகோபுரே ஸௌதம் த்ருதீயம் த்ரஷ்டுமுத்ஸஹே ||

ஸ்ரீரங்கம் ராயகோபுரத்தின் இரண்டாம் நிலை பூர்த்தி பெற்றுவிட்டது. திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவன், தைர்யத்துடனும் உத்ஸாஹத்துடனும் பன்னிரண்டு லக்ஷம் ரூபாய்ச் செலவில் இரண்டாம் நிலையைப் பூர்த்தி செய்து வைத்து விட்டார். ஸ்ரீரங்கநாயிகா ஸமேதனான ஸ்ரீரங்கநாதன் பரம ஸந்தோஷத்தை அடைந்திருக்கிறான்.

காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான பெரியவர்கள் இரண்டு பேர் மனஸிலும் புகுந்து மூன்றும் நிலையைக் கட்டித் தரும்படி அவர்களே நியமித்திருக்கிறான். இந்த விஷயத்தில் ஏற்கனவே அந்தப் பெரியவர்களுக்கு இருந்த ஸந்தோஷத்தை விருத்தி செய்திருக்கிறான். அந்த மஹான்கள் அதற்கு வேண்டிய காரியத்தை உடனே செய்ய ஆரம்பித்துவிட்டனர். "வேண்டிய பணத்தை அப்போதைக்கப்போது அனுப்புகிறோம். எங்களுக்குப் பதிலாக நீங்களே செய்து முடியுங்கள்" என்று எனக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

இந்த வருஷம் வைகாசி மாதம் இருபத்துமூன்றும் தேதி வெள்ளிக்கிழமை பன்னிரண்டு மணிக்குமேல் சுப முகூர்த்தத்தில் வாத்திய கோஷங்களுடன், நல்ல ஸ்தபதிகளைக் கொண்டு மூன்றும் நிலையின் கட்டுமானப் பணி தொடங்கிவிட்டது. காமகோடி பீடாதிபதிகளின் உபயமான மூன்றும் நிலை, இந்த வருஷ ஆவணி மாதப் பூர்த்திக்குள் நிறைவு பெற்றுவிடும் என்று தெரிகிறது. ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகள் ஏற்கனவே கொடுத்திருக்கும் ஒரு லக்ஷம் ரூபாயை வைத்துக்கொண்டு மூன்றும் நிலையைத் தொடங்கிவிட்டேன். ஒரு வாரத்துக்குள் இரண்டு லக்ஷம் ரூபாய் அனுப்புவார்கள் என்று தெரிகிறது. மூன்றும் நிலை பூர்த்திபெறச் சுமார் பதிது லக்ஷம் ரூபாய் பிடிக்கலாம்.

sadagopan.org

ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகள் மேலும் அனேக மடாதிபதிகளுக்குச் சிபார்சு செய்யப்போகிறீர்கள். கோபுரம் கட்டுவதில் எனக்கும் என்னோடு சேர்ந்தவர்களுக்கும் இருக்கும் உத்ஸாஹத்தை அந்தப் பெரியவர்கள் கோடி மடங்கு வளரச் செய்துவிட்டனர். அவர்கள் செய்யும் உபகாரத்தை எத்தனை பக்கம் எழுதினாலும் போதாது. இதில் மிகை கிடையாது.

ஆந்திரப் பிரதேச முதல் மந்திரி, ஸ்ரீமான் அஞ்சய்யா அவர்கள், கோபுர கைங்கர்யத்துக்காக உடனே ஒரு லக்ஷம் ரூபாய் கொடுக்கும்படி உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது. முன்பு மந்திரி ஸபையிலேயே இரண்டு லக்ஷம் கொடுக்கும்படி உத்தரவிடப்பெற்றிருந்தது. ஒரு லக்ஷம் ரூபாய் அப்பொழுதே கிடைத்துவிட்டது. இரண்டாவது லக்ஷம் சீக்கிரமே கிடைத்துவிடும் என்று தோன்றுகிறது. தர்மத்துக்காகக் கோடிக் கணக்கில் செலவழிக்கும் திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து ராயகோபுர கைங்கர்யத்துக்கு எவ்வளவு கொடுத்து ஒத்தாசை செய்யலாம் என்பதைத் தீர்மானிப்பதற்காக ஸ்ரீமான் அஞ்சய்யா அவர்களை ஸ்ரீரங்கத்துக்கு நேரில் வந்து கோபுரத்தைப் பார்க்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீநிவாஸன் இருவரும் அவர் மனத்தில் புகுந்து பூர்த்திசெய்து வைக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன். கவலையில்லை. நிச்சயம் பூர்த்தி செய்துவிடுவர்; மேலும் எந்த எந்த தார்மிகரைக் கோபுர கைங்கர்யத்துக்குக் கொடுக்கும்படி

ஸ்ரீரங்கநாதன் நியமிக்கிறானே தெரியவில்லை: தமிழ்நாடு அரசும் பரம உத்ஸாஹத்துடன் கோபுர விஷயமாக ஆலோசித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது: ஸ்ரீரங்கநாதன் தன் கோபுரத்தைத் தானே பூர்த்தி செய்துகொள்வான் என்பது நிச்சிதமான விஷயம்.

ஸ்ரீரங்கநாதன், ஸ்ரீலங்காவில் விபீஷணனுக்குச் சொல்லியனுப்பியிருப்பதாகவும் தெரிகிறது. வெளிநாடுகளிலிருந்து வருகிற டாலர்களையெல்லாம் விபீஷணன் பணமாகத்தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து: 'தர்மம்சர' 'அறஞ்செய விரும்பு' என்றபடி, தர்மம் செய்வதுதான் மனிதனுகப் பிறந்தவனுக்கு முக்கியமான காரியம். பகவத் விஷயத்திலே தர்மம் செய்வது தர்மங்களில் சிறந்தது: அதிலும் கோவில் கட்டுவது, குளம் வெட்டுவது முதலியன சிறந்தவை. இவை யாவற்றையும்விட மிகமிக உயர்ந்த தர்மம் கோபுரம் கட்டுவது. இந்த விஷயங்களை அறியாதார் யாருமிலர்:

sadagopan.org

கோபுரம் கட்டினால், உயர்ந்த உலகங்களுக்குப் போவதற்குப் பாதி வழி ஏறிவிடுகிறோம். அங்கிருந்து கொஞ்ச தூரம் தானே மேலுலகங்கள். நமக்குப் பணத்தைக் கொடுத்தது பகவான்தானே? அவன் நமக்குக் கொடுக்கிற பணத்தில் கொஞ்ச மாவது அவன் விஷயத்தில் தர்மம் செய்ய வேண்டாமா? யோசித்துப் பாருங்கள். தான்யங்களை விதைத்தால் ஒன்றுக்கு நூறு பங்காகக் கிடைக்கவில்லையா? அதே போல் பகவானுக்கு நாம் ஸந்தோஷமாகக் கொஞ்சம் கொடுத்தாலும் ஒன்றுக்கு ஆயிரம் மடங்காக அவன் திருப்பிக் கொடுப்பான். இது சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற விஷயம். வித்துவான்களைக் கேட்டுப் பாருங்கள்.

இத்தகைய கைங்கர்யங்களில் சடுபட்டால் மோக்ஷத்தில் ஆசை ஏற்படும். ஆசை ஏற்பட்டால் சரணாகதி செய்வான். சரணாகதி செய்தால் வைகுண்டம் அடைந்து பேரானந்தத்தைப் பெறுவான். இவனுக்கு மறுபிறவி கிடையாது. தர்மம் செய்கிறவர்களை மேன்மேலும் உத்ஸாஹப்படுத்த வேண்டும். கொடுக்கிறவர்களைத் தடுக்கக்கூடாது. செய்யாதவர்களைச் செய்யும்படிச் செய்ய வேண்டும். அவரவர்களுடைய வர்ணாச்ரமங்களுக்குத் தக்கபடி தர்மம் செய்ய வேண்டும்.

உள்ள ஸொத்தை யாருக்குக் கொடுக்கலாம் என்று யோசித்துப் பாருங்கள். பந்துக்களுக்குத்தானே கொடுக்க வேண்டும்? நமக்குப் பெருமாள்தான் தகப்பன், அவனேதான் தாயார், பிள்ளையும் அவனேதான்; கைவல்ய பந்துவும் அவனேதான் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஸ்திரீகளும் தங்களுக்குக் கணவன்மூலம் கிடைத்திருக்கும் ஸொத்துக்களில் யதாசக்தி கோபுர கைங்கர்யத்துக்காகச் செலவழித்தால், ஸொத்துக் கிடைத்ததற்கு நல்ல பலன் ஏற்படும்.

எல்லோருக்கும் தெரிந்த விஷயங்களையேதான் நான் திருப்பித் திருப்பி எழுதுகிறேன். இதற்குக் காரணம் நீங்கள் அனைவரும் சக்திக்குச் சற்று அதிகமாகவே கோபுர கைங்கர்யத்தில் பங்கு கொண்டு பயன் பெற வேண்டும் என்ற ஆசைதான்.

எந்த விதமாகவோ, ஸ்ரீரங்கநாதன் தன் கோபுரத்தைப் பூர்த்தி செய்துகொள்ளப்போகிறான். நாமும் அவன் திருவுள்ளப்படி அதில் சேர்ந்துகொள்ள வேண்டும். எல்லோருடைய க்ஷேமத்தையும் உத்தேசித்து இதைத்தான் நான் உங்களுக்கு அடிக்கடி நினைவுபடுத்துகிறேன். யோசித்துப் பார்த்துக் கர்ணனே நீங்கள் தோற்கடிக்க வேண்டும்.

நம்முடைய நித்தியப்படிச் செலவில் கால் ரூபாய் மிச்சம் செய்தால் போதும். அதைக் கொண்டு நான்கு கோபுரம் கட்டலாம். ஸந்தேஹமில்லை. ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத திவ்ய கடாக்ஷத்துடன் ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹ திவ்ய கடாக்ஷமும் எல்லோருக்கும் மேன்மேலும் விருத்தியடைய வேண்டும்.

சுபமஸ்து

sadagopan.org

अद्य मे सफलं जन्म जीवितं च सुजीवितम् ।
यद्रङ्गिगोपुरे सौधं तृतीयं पश्यतश्शुभम् ॥

அத்ய மே ஸபலம் ஜந்ம ஜீவிதம் ச ஸுஜீவிதம் |
யத் ரங்கிகோபுரே ஸௌதம் த்ருதீயம் பச்யத:சுபம் ||

ஸகல ஜனங்களுக்கும் பரமானந்தத்தை வ்ருத்தி பண்ணுகிற ஸ்ரீரங்கநாதனுடைய தெற்கு வாசல் ராஜகோபுரத்தில் மூன்றாவது நிலை ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனால் ஸுமார் பன்னிரண்டு லக்ஷம் ரூபாயில் கட்டப்பட்டுப் பூர்த்திபெற்று ஆனந்தகரமாக இருப்பதைப்பற்றி எல்லோரும் பேப்பர்கள் மூலமாகவும் நேரில் பார்த்தவர்கள் மூலமாகவும் தெரிந்து கொண்டிருக்கலாம்.

இப்பொழுது ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஆசார்யர்கள் பரம உத்ஸாஹத்தோடு ஸ்ரீரங்கம் தெற்கு வாசல் ராஜகோபுரத்தின் மூன்றும் நிலையைக் கட்டஸங்கல்பம் செய்துகொண்டிருப்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான்.

இதுவரையில் மூன்றும் நிலையில் மூன்றில் ஒரு பங்கு கட்டியாகிவிட்டது. ஆவணி மாதம் முடிவதற்குள் மூன்றும் நிலை பூர்த்தி பெற்றுவிடும் என்பதில் ஸந்தேஹமில்லை. வேண்டிய பணத்தை ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அடிக்கடி அனுப்பி உத்ஸாஹப்படுத்துகிறார்கள்.

மேலும் எவ்வளவோ மடாதிபதிகளுக்கும் தனிகர்களுக்கும் சிபார்சு செய்திருக்கிறார்கள். எப்படியாவது கோபுரம் பூர்த்தி பெற்று ஸம்ப்ரோக்ஷணம் செய்துவிடவேண்டுமென்று உத்ஸாஹத்தோடு இருக்கிறார்கள்.

sadagopan.org

ஸ்ரீரங்கத்திற்கு எவ்வளவோ அலங்காரங்கள் இருந்த போதிலும் இந்த ராஜகோபுரம் கட்டிப் பூர்த்தியானதும் இந்த ராஜகோபுரமே ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தை அழகுபடுத்துவதில் பிரதான மாக—முக்கியமாக இருக்கப்போகிறது. இந்தக் கோபுரத்தை முக்கியமாக வைத்துக்கொண்டு தமிழ்நாட்டையே கொண்டாடப் போகிறார்கள். நம் இந்தியாவையே இது பெருமைப்படுத்து வதாக அமையப்போகிறது. இப்படிப்பட்ட கோபுரத் திருப் பணியில் ஸம்பந்தமுள்ளவர்களுக்கும் ஸகல க்ஷேமங்களும் திவ்ய தம்பதிகளின் அநுக்ரஹத்தால் மேன்மேலும் விருத்தியடையும் என்பது ஶாஸ்த்ரங்களால் தெரிகிறது. அநுபவங்களிலும் அப்படித்தான் இருக்கிறது. நான் கண்டதும் அதுவேயாம்.

கோபுர கைங்கர்யத்தில் எப்படி ஸம்பந்தம் வைத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவிக்கிறேன். இன்றைதாறும் 'ஸ்ரீரங்க ராஜகோபுரம் சீக்கிரத்தில் கட்டிப் பூர்ணமாக வேண்டும்' என்று அவரவர்கள் தங்கள் தங்கள் தெய்வங்களைப் பிரார்த்திப்பது ஒருவிதமான ஸம்பந்தம். கோபுரம் கட்டு வதற்குத் தங்களால் முடிந்தவரையில் பணம் கொடுத்து உதவு வது இரண்டாம் ஸம்பந்தம்; மூன்றும் ஸம்பந்தம்-கொடுக்கக் கூடியவர்களைக் கொடுக்கும்படி செய்வது. பணம் கொடுக்க இஷ்டமில்லாதவர்களையும், விஷயத்தின் சிறப்பைக் கூறிக் கொடுக்கும்படிச் செய்வது நான்காவது. தாராளமாகக் கொடுப்பவர்களைக் கொடுக்க வேண்டாம் என்று தடுக்காமல் இருப்பது ஐந்தாவது. செங்கல், சிமிட்டி, இரும்புக் கம்பி முதலிய ஸாமான்களைக் கொடுப்பது ஆறும் உபகாரம். கோபுரம் கட்டுவதற்குப் பணம் கொடுத்தவர்களைப் புகழ்ந்துப் பேசுவது ஏழாவது. கோபுரம் கட்டுவதை நேரில் பார்த்து ஸந்தோஷப்படுவது எட்டாவது. ஒரு செங்கல்லையாவது கீழே இருந்து எடுத்துச்சென்று இப்பொழுது கட்டும் இடத்தில் கொண்டுவைப்பது ஒன்பதாவது. கோபுரம் கட்டுவதைப்பற்றி எவ்விதத்திலும் அஸூயைப்படாமல் இருப்பது பத்தாவது; மேலும் இதுபோன்ற பலவித ஸம்பந்தங்களையும் நீங்களே தெரிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட ஸம்பந்தங்களில் ஏதாவது ஒரு ஸம்பந்தம் இருந்தாலும் நம்முடைய பாவங்கள் ஒழிந்து நரக ஸம்பந்தம் போய்விடும்.

sadagopan.org

பகவத் ஸம்பந்தம் எந்த விதமாக ஒருவனுக்கு ஏறபட்டா லும் அவன் பாகவதன். "நகலு பாகவதா யமவிஷயம் கச்சந்தி" என்கிறபடி நரக ஸம்பந்தம் போய்விடும்.

மேலுலக ஸம்பந்தங்கள் ஏற்படும். இதர பலத்தை ஆசைப் படாமல் கோபுர கைங்கர்யத்தில் பகவத் ப்ரீதியை மாத்திரம் நினைத்து ஸம்பந்தம் வைத்துக்கொண்டால் நல்ல புத்தியை உண்டுபண்ணி ஆசார்ய ஸம்பந்தத்தை ஏற்படுத்தி, பகவானைச் சரணடையச் செய்து ஸ்ரீவைகுண்டத்திற்கு ஏற்றி ஸ்ரீமந்நாரா யணனை ஸேவிக்கச் செய்து பரமானந்தத்தை அநுபவிக்கச் செய்யும். கோபுர கைங்கர்ய ஸம்பந்தம் மறுபிறவியை ஒழிக் கும்; ஆரோக்கியத்தைத் தரும்; எல்லா ஆனந்தங்களையும் இங்கும் தரும். ஶாஸ்த்ரம் சொல்லியபடிதான் எழுதியிருக்கிறேன்; பெரிய வித்வான்களைக் கேட்டுத் தெளியுங்கள். "அச்யுத: ப்ரீயதாம்" என்று சொல்லிக் கொடுங்கள். எவ்வளவு என்று கேட்கா தீர்கள். கோபுரம் கட்டி முடிப்பதற்கு வேண்டியதைக் கொடுங்கள். ஸமயத்திற்கு நம் கையில் இல்லாவிட்டாலும் தர்மபத்னி கொடுப்பாள். கலந்து செய்யுங்கள். மகாலக்ஷ்மி யின் அம்சம் அவளிடத்தில்தான் இருக்கிறது.

சுபமஸ்து

மகான்களே! ஸ்ரீரங்கத்தில் கோபுரம் வளர்ந்து கொண்டே வருகிறது. காஞ்சி, ஸ்ரீகாமகோடிபீடாதிபதிகள் நிர்மித்துவரும் மூன்றும் நிலை சீக்கிரத்தில் பூர்த்திபெற்றுவிடும். நான்காம் நிலைக்கும் அவர்கள் மூலமாகவே ஏற்பாடாகியிருக்கிறது என்று தெரிகிறது.

பதின்மூன்று நிலைக்கும் ஸகாயம் செய்யப் போவதாக உத்ஸாகமாகச் சொல்வதாகவும், தகுந்த மனுஷ்யர்கள் இங்கு வந்து சொல்கிறார்கள். எனக்கும் தைரியம் பிறந்திருக்கிறது. இந்த கோபுரம் பூர்த்திபெற்றவுடன் அதைஸேவிப்பவர்கள் எல்லோரும், ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள கோபுரத்தை ஸேவித்து ஆனந்தம் அடைவார்கள் என்பதில் சிறிதளவும் ஸந்தேகமில்லை.

ஸ்ரீவைகுண்டத்தில் கோபுரம் இருக்கிறதா? என்று கேட்கி றீர்களா?. "கொடியணி நெடுமதில் கோபுரம் குறுகினர்" என்று ஆழ்வார் அருளிச் செய்திருக்கிறார். ஆகையால் அங்கு கோபுரம் இருக்கிறது என்பதில் ஸந்தேகமில்லை.

ஸ்ரீரங்கநாதன் நமக்கு ஸம்பத்தைக் கொடுத்திருக்கிறான். அவன் கொடுத்த ஸம்பத்திலிருந்து, அவன் கோபுரத்துக்குக் கொஞ்சம் கொடுக்கப்போகிறோம்; நாம் கொஞ்சம் கொடுத்த வுடன், ஸ்ரீரங்கநாதன் மறுபடியும் நமக்கு அளவற்ற செல்வத் தைக் கொடுக்கப்போகிறான்.

sadagopan.org

சிலருக்கு உடனே கொடுப்பான். சிலருக்குச் சிலநாள் கழித்துக்கொடுப்பான். சிலர் செய்த தர்மத்துக்குப் பலனாக, அவர்கள் பிள்ளை, பெண் இவர்களுக்குச் செல்வத்தைக் கொடுப்பான். சிலருக்கு மறுபிறவியில் கொடுப்பான். சிலருக்கு ஸ்ரீவைகுண்டத்தில் கொடுப்பான்.

இந்தக் கோபுரத்தில் கூலி வேலை செய்கிற ஒரு கிழவி, நான் கோபுரத்தின்மேல் ஏறி வேலைகளை கவனித்து வரும்போது என்னை ஸேவித்து என்னிடம் ஒரு ரூபாய் பத்து பைசா கொடுத்தாள். எதற்கு இதை என்னிடம் கொடுக்கிறாய்? என்று கேட்டேன். "என்னமோ தோணிச்சு. கோபுரத்துக்குக் கொடுக்கணும்னு. கொடுத்தேன்" என்றாள். அடுத்த நாள் எல்லா கூலி ஆட்களும் ஒன்று, இரண்டு, அரை, கால் இப்படி அவர்கள் சக்திக்கு ஏற்பக் கொடுத்தனர். நூற்றுஐம்பது ரூபாய் சேர்ந்துவிட்டது. சிறுதுளி பெருவெள்ளம் என்பதை அறியாதார் யார்?

செக், ரொக்கம் இவற்றை என் பெயருக்கும் அனுப்பலாம். ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் மடத்துக்கு அனுப்பினாலும் அனுப்புங்கள். எல்லாம், ஸ்ரீரங்க கோபுரத்தில் சேர்ந்துவிடும். ஸிமெட் தற்சமயம் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. சீக்கிரமாகவே வேலை நடந்து வருகிறது. நம் தமிழ் நாடு அரசாங்கத்தாரும் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கின்றனர். ஸ்ரீமான் அஞ்சைய்யா அவர்கள் நேரில் வந்து பார்த்து, கோபுரத்துக்கு வேண்டியதைச் செய்யப் போகிறார்கள். சீக்கிரத்தில் கோபுரம் நிறைவு பெற்று, எல்லோரும் ஸந்துஷ்டர்களாகப் போகிறோம்.

ஆவணி மாதம் ஏழாம் தேதி ஸ்ரீரங்கம் தசாவதாரன் ஸந்நிதியில், ஸ்ரீமாலோல வித்வத் ஸதஸ் ஆரம்பிக்கப் போகிறது. வித்வான்கள் எல்லோரும் வந்திருந்து ஆனந்திக்க வேண்டும். இந்த வித்வத் ஸதஸ்ஸில் நடக்கும் வேதாந்த வாக்கியார்த்தங்களைக் கேட்டு ஸந்தோஷப்பட எல்லா ஆஸ்திகர்களும் அவசியம் வரவேண்டும்.

நாஸ்திகவாதம் பண்ணுகிறவர்களாக இருந்தாலும் இந்த ஸதஸ்ஸுக்கு வந்து வாதாடி ஆஸ்திகர்களாக ஆகலாம். ஸ்மார்த்தர், வைஷ்ணவர், மாத்வர் என்ற வ்யத்யாஸமின்றி எல்லா வித்வான்களும் கனபாடிகளும் அவசியம் வந்து ஆனந்திக்கவேண்டும். அனேக உபந்நியாஸங்களும் நடைபெறும்.

வித்வான்கள் ஒரு அதிகரணமாவது நன்றாக மனப்பாடம் செய்து சொன்னால் அழகாக இருக்கும். ஸூத்திரங்கள் பூராவையும் ஒப்பித்தால் ஸம்பாவனை சற்று அதிகமாகச் செய்யப்பெறும். ரஹஸ்யத்ரயஸார ச்லோகங்கள் பூராவையும் ஒப்பித்தால் தனியாக ஸம்பாவனை உண்டு.

இதை எழுதிக் கொண்டிருக்கும்போது, அச்சுதன் கோபி என்பவர் ஆறாயிரம் ரூபாய்க்கு இரண்டு செக்குகளும், ராம் என்பவர் மூவாயிரம் ரூபாய் ரொக்கமும் ஒருவர் மூலம் கொடுத்தனுப்பினார்கள். இவர்களில் ஒருவர் மலையாள தேசத்தைச் சார்ந்தவர். மற்றவர் ஸிந்திக்காரர்.

சுபமஸ்து

sadagopan.org

அத்ய மே ஸபலம் ஜந்ம ஜீவிதம் ச ஸுஜீவிதம்|
ஸ்ரீரங்ககோபுரே ஸௌதம் திருதியம் பஸ்யதஃ ஸுபம்||

ஸ்ரீலக்ஷ்மீநிருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தால், மாலோல வித்வத் ஸபை மிகவும் நன்முக நிறைவுபெற்றது. நிருக்குடந்தை ஸ்ரீமதாண்டவன் அனேகமாக நினந்தோறும் எழுத்தருளி ஸபையை அலங்கரித்தார். வித்வான்கள் விஷயம் சொல்லும் போது அவற்றில் பல ஆக்ஷேபங்களைத் தெரிவித்தார்; வித் வான்கள் சொல்லும் ஸமாதானத்தைக் கேட்டு ஆனந்தித்தார். ஸ்ரீமதாண்டவனால் ஸதஸ் மிகவும் பரிமளித்தது; எல்லோரும் அதைக்கண்டு ஆனந்தித்தனர்.

நிர்விக்னமாக ஸதஸ் பூர்த்தி பெற்றது; நேரில் வர இயலாதவர்களுக்கும் ஸம்பாவனை அனுப்பப் பெற்றுவிட்டது. இந்த வருஷ ஸதஸ்ஸில் அபூர்வமான பல விஷயங்களைத் தெரிந்துகொண்டதாக வித்வான்கள் கூறினர்கள். எல்லா வித்வான்களும் ஸ்ரீகோபுரத்தை ஸேவித்து மிகவும் ஸந்தோஷ மடைந்தனர்.

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதிகள் நிர்மித்து வரும் மூன்றும் நிலையில் மூன்று பங்கு கட்டி பூர்த்தி பெற்றிருக்கிறது. பார்ப்பதற்கு இப்பொழுதே அழகாக அமைந்திருக்கிறது. புரட்டாசி மாதம் பதினைந்து தேதிக்குள், மூன்றும் நிலை பூர்த்தி பெறும் என்று ஸ்தபதிகள் சொல்கின்றனர். பூர்ண மானதும் எல்லோரும் மிகவும் ஸந்தோஷிக்கப் போகிறோம். ஆசார்யாளுடைய மனஸ்ஸைப் போலவே அமைந்திருக்கிறது மூன்றும் நிலை.

ஸ்ரீமான் அஞ்சய்யா அவர்கள் கூடிய சீக்கிரம் ஸ்ரீரங்கம் வரப்போகிறார்கள். கோபுரத்தைப் பார்த்து, திருப்பதி தேவ ஸ்தானம் மூலம் இந்தக் கோபுரத்தில் பங்கு எடுத்துக்கொள்ளப் போகிறார்கள். மேலும், அனேக மடாதிபதிகளும், கட்ட வேண்டிய பத்து நிலைகளில் யதாசக்தி பங்குபெறப் போவ தாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முந்திக்கொள்பவர் களுக்குத்தான் அந்தப் பாக்கியம் கிடைக்கும்.

விமெண்ட், செங்கல் முதலியவை தாராளமாகக் கிடைப்ப தற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. பணம், ஒத்துழைப்பு வந்து விட்டால் கோபுரம் வெகு சீக்கிரம் பூர்த்தி பெற்றுவிடும். ஆனந்த விகடனை அனைவரும் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

ராயகோபுரத்தின் முதல் நிலையும் இரண்டாவது நிலையும் கட்டிப் பூர்த்தியான விஷயம் தெரிந்து எல்லோரும் ஆனந்தமடைந்திருக்கிறார்கள். மூன்றாவது நிலையை ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் கட்டி வைப்பதும் ஜகத் ப்ரஸித்தமான விஷயம். மூன்றும் நிலை இந்தப் புரட்டாசி மாதம் மூப்பதாம் தேதி பூர்த்தியாகிவிடும். அந்தப்பெரியவாள் மனஸ்போலவே வெகுஅழகாக அமைந்திருக் கிறது. நேரில்வந்து பார்க்கிறவர்கள் பரமானந்தமடைகிறார்கள்.

sadagopan.org

ஐப்பசி மாதம் முதல் வாரத்தில் நாலாவது நிலை கட்ட ஆரம்பிக்க நல்ல நாள் பார்க்கப்பட்டிருக்கிறது. அனேக புண்ய வான்கள் கட்டுவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். யார் முன்னிட்டுக் கொள்ளப்போகிறார் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. நம் ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹன் நியமனத்தினால் நாம் நாலாவது நிலையைக் கட்ட ஆரம்பிக்கிறோம். அதை எந்த மஹான் ஏற்றுக்கொள்ளப்போகிறாரோ; அவரிடத்தில் அந்தக் கைங்கர்யத்தை ஒப்புவிக்க உத்தேசித்துள்ளோம். நாலாவது நிலையைக் கட்ட உத்தேசித்திருப்பவர்களுக்கு ஸ்ரீரங்கநாதனும், ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனும் பரிபூர்ணமாக அநுக்ரஹம் பண்ண வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

சுபமஸ்து

ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் மூன்றாவது நிலை ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் நியமனப்படி கட்டி முடித்துவிட்டது. நாலாவது நிலை கட்ட ஆரம்பித்தாகிவிட்டது. நாலாவது நிலை கட்டுவதற்குச் சுமார் ஏழு லக்ஷம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பரிசுச் சீட்டு (லாட்டரி சீட்டு) வாங்குவது போல் ஏழு லக்ஷம் புண்யசாலிகள் ஒவ்வொரு ரூபாய் அனுப்பினால் போதும். அதைக் கொண்டு நாலாவது நிலை கட்டிப் பூர்த்தியாகிவிடும். இம்மாதிரியே ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு ரூபாய் கொடுத்தால் பாக்கி ஒன்பது நிலையும் கட்டி, கோபுரம் பூர்த்தியாகிவிடும். ஒவ்வொரு ரூபாய் கொடுத்து ஸ்ரீரங்கநாதனின் பரிபூர்ண அநுக்ரஹத்தைப் பெறுங்கள். நல்ல ஸமயம் இது.

சுபமஸ்து

अद्य मे सफलं जन्म जीवितञ्च सुजीवितम् ।
तृतीयं रङ्गिणस्सौधं गोपुरे पूर्णमीक्षतः ॥

அத்ய மே ஸபலம் ஜந்ம ஜீவிதம் ச ஸுஜீவிதம் ।
த்ருதீயம் ரங்கிணஃ ஸௌதம் கோபுரே பூர்ணமீக்ஷத ॥

ஸந்தோஷமான ஸமாசாரம். ஆந்திர மாநில முதல்வர் ஸ்ரீமான் அஞ்சய்யா அவர்கள், டிஸம்பர் பதிநான்காம் தேதி ஸ்ரீரங்கம் வருகிறார். கோபுரத்தில் நான்காம் நிலை கட்ட

sadagopan.org

ஆரம்ப முகூர்த்தம் செய்யப் போகிறார்; தந்திமூலம் இந்த ஸமாசாரம் கிடைத்திருக்கிறது. அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்;

தை மாத திருவிம்ஹபிரியாவில், விஸ்தாரங்களைப் பார்த்து ஸந்தோஷப்படலாம். கார்த்திகை மாதம் பன்னிரண்டாம் தேதி மூன்றும் நிலை பூர்த்தி பெற்றுவிட்டது. மிகவும் அழகாக அமைத்திருக்கிறது. ஆஸ்திகர்கள் அடிக்கடி வந்து பார்த்து ஸந்தோஷப்படுகின்றனர். காஞ்சி காமகோடி ஆசார்யர்களின் திருவுள்ளம் போல் கட்டப்பெற்றிருக்கிறது.

பங்குனி மாதத்துக்குள், நான்காம் நிலை பூர்த்திபெறும்; ஸ்ரீமான் அஞ்சய்யா அவர்களே, திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பில் ஐந்தாம் நிலையைக் கட்டி முடித்துவிடுவார்கள்; ஸந்தோஷப்பட வேண்டியதில்லை. அதற்கு மேல், எந்த எந்த நிலையை எந்த எந்த மஹான்கள் கட்டப்போகின்றனர் என்பதைப் பிறகு தெரிவிக்கிறேன். ஸ்ரீரங்கநாதன் என் தைரியத்தை விருத்தி செய்துகொண்டே இருக்கிறான்.

ஆஸ்திகர்கள் பணத்தை அனுப்பிக்கொண்டே இருந்தால், முன்செலவுக்கு அதை உபயோகப்படுத்திச் சுலபமாகக் கட்டிக் கொண்டே வரலாம். ஸ்ரீரங்கநாதன் அநுக்கிரகத்தை விருத்தி செய்துகொண்டே இருக்கலாம்;

கோபுரம் கட்டுவதில் முக்கியமான பலன் என்னவென்றால், கூலிவேலை செய்கிற ஏழைகள் பிழைத்து வருகின்றனர்; அவர்கள் கோபுர கைங்கர்யம் செய்வதனால் நல்ல புண்ணியத்தை ஸம்பாதித்து நல்ல லோகத்தை அடைவார்கள்;

கோபுரம் கட்டப் பணம் கொடுப்பவர்களுக்கு, அவர்கள் வேண்டாம் என்றாலும் புண்ணியம் சேர்ந்து கொண்டே இருக்கும். அவர்களுக்கு நல்ல ஸந்ததி மேன்மேலும் விருத்தி யடையும்; கோபுரத்துக்குக் கொடுக்கிற பணத்தைவிடப் பல மடங்கு அவர்களுக்கு ஸ்ரீரங்கநாதன் கொடுப்பான்.

கோபுரத்தைப் பார்க்கும்போது, ஸ்ரீரங்கநாதன் அவர்கள் மனத்தில் புகுந்து கொள்வான். பாவங்களைப் போக்குவான். அவர்கள் மனத்தைத் தன் விஷயத்திலேயே திருப்பிவிடுவான்; எல்லா ஐச்வர்யங்களையும் கொடுப்பான்;

பகவானை நினையாதவர் யாருமே இல்லை; "நாஸ்திகர்கூட பகவானை நினைக்கிறார்களா என்று கேட்கிறீர்களா? ஆம், அவர்கள்தாம் எப்போதுமே பகவானை நினைத்துக்கொண்டிருக் கிறார்கள். பகவான் இல்லை, இல்லை என்று சொல்லும்போது, பகவானை நினைத்துத்தானே, தெய்வம் இல்லை; தேவதைகள் இல்லை என்று சொல்ல வேண்டும்;

அப்படிப்பட்டவர்கள், இப்பொழுது அமைக்கப்பெற்று வரும் ஸ்ரீரங்க கோபுரத்தைப் பார்த்தார்களேயானால், கோவி லுக்குள் இருக்கிற ரங்கநாதன் ஆதிசேஷன்மேல் படுத்துக் கொண்டிருக்கிறபடியே, பார்க்கிற அந்த நாஸ்திகனுடைய மனஸிலே உடனே மின்னல் போல் தோன்றுகிறான்;

sadagopan.org

உடனே, அந்த நாஸ்திகன் நினைக்கிறான், 'தெய்வம் இல்லை என்று சொல்லுகிறோமே; கோவிலுக்குள் தெய்வம் இல்லாமலா இவ்வளவு பெரிய கோபுரம் கட்டப்பெறுகிறது? இனி, நாம் வெடிக்கைக்குக்கூட, தெய்வம் இல்லை என்று சொல்லக்கூடாது' என்று தீர்மானிக்கிறான். இப்படிப்பட்ட பெரிய காரியத்தில் நாமும் கலந்துகொள்ள வேண்டும் என்றும் நிச்சயிக்கிறான். இது உண்மையான விஷயம்; மனத்தைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளலாம்:

श्रीरङ्गे गोपुरं दृष्ट्वा रङ्गनाथं स्मरन्ति ये ।
पापाद्विमुक्तास्सर्वे ते भुञ्जते चाखिलं फलम् ॥

ஸ்ரீரங்கே கோபுரம் த்ருஷ்ட்வா ரங்கநாதம் ஸ்மரந்தி யே।
பாபாத் விமுக்தாஸ் ஸர்வே தே புஞ்ஜதே சாகிலம் பலம்॥

கபமஸது

ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் மூன்றுவது நிலை அழகாகக் கட்டி முடித்துவிட்டது. நான்காவது நிலை ஆரம்பித்துப் பதினைந்து வரிசைகளாகக் கட்டப்பெற்று வருகிறது. ஸுமார் மூன்றடி உயரம் கட்டியாகிவிட்டது. பங்குனி மாதம் 20-ஆம் தேதிக்குள் பூர்த்தியாகிவிடும்.

கபமஸ்து

ஒரு நல்ல விஷயம்

ஸ்ரீரங்கநாதனுடைய கோபுரம் சீக்கிரத்தில் பூர்த்தியடைந்து விடும் என்ற நம்பிக்கை பூர்ணமாக இருக்கிறது. முதல் நிலை பூர்த்தியானவுடன், ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் இரண்டாம் நிலையைக் கட்ட வேண்டிய பாரத்தை ஏற்றுக்கொண்டு ஸுமார் பதினெரு லக்ஷ ரூபாய்ச் செலவில் கட்டி முடித்ததும் யாவரும் அறிந்த விஷயம்.

பிறகு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஆசார்யர்கள் மூன்றுவது நிலை கட்ட வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொண்டு ஸுமார் ஒன்பது லக்ஷத்து எழுபதினாயிரம் ரூபாயில் மிகவும் உத்ஸாஹத்தோடு கட்டி முடித்திருப்பதையும் பார்த்து மகிழ்ந்தோஷிக்காதவர் யாருமில்லை. மேலும் இரண்டு மூன்று நிலைகள் கட்டுவதற்கு அநேக தார்மிகர்களிடத்தில் நியமித்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

நான்காவது நிலையை ஆந்திரப் பிரதேச முதல மந்திரி ஸ்ரீமான் அஞ்சய்யா அவர்கள் கட்டுவதாக ஒப்புக்கொண்டிருக்

sadagopan.org

கிராமங்கள் ஐந்தாவது நிலையைக் கட்டித் தருவதாக ஒப்புக் கொண்டு தான்காவது நிலை கட்டுமான வேலையை ஆரம்பித்து வைத்தார். இதற்கு முன் இரண்டு லக்ஷம் ரூபாய் திருப்பதி தேவஸ்தானம் கொடுத்திருப்பதை வைத்துக்கொண்டு நான்காவது நிலை கட்ட ஆரம்பித்து நான்கில் ஒரு பாகம் வேலை முடிந்திருக்கிறது. சீக்கிரத்தில் நாலாவது ஐந்தாவது நிலைகளைக் கட்டி முடிப்பதற்கு ரூபாய் அனுப்பிவிடுவார்கள் என்று நம்பிக்கொண்டிருக்கிறேன்.

கோயம்புத்தூர் லக்ஷ்மி மில்ஸ் முதலாளி ஸ்ரீமான் ஜி. கே. தேவராஜுலு அவர்கள் ஆறாம் நிலையைக் கட்டுவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக 1983-ஆம் வருஷ முடிவிற்குள் கோபுரத்தின் பதினாறு நிலைகளும் கட்டி முடித்துவிடும் என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். இதைக் கேட்டதும் நமக்கும் மற்றவர்களுக்கும் உண்டாகும் ஸந்தோஷத்திற்கு எல்லையே இல்லை.

சில மடாதிபதிகள் கோபுரத்தை வந்து பார்ப்பதற்கே பயப்படுகிறார்கள். தங்களையும் கோபுரம் கட்டும்படி ஸ்ரீரங்கநாதன் செய்துவிடுவாரோ என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

நாம் முன்னின்று கட்டுவதில் ஒரே ஒரு சிரமம்தான் இருக்கிறது. அதாவது முதலில் கடன் வாங்கியாவது கட்ட வேண்டியிருக்கிறது. பிற்பாடு அவர்கள் அனுப்பிவிடுகிறார்கள். முன்னின்று கட்டுவதனால் பத்து லக்ஷத்திற்கு மேல் கடன் வாங்கியிருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் இந்தக் கடன் அடைந்துவிடும்.

பம்பாயிலிருந்து ஸ்ரீமான் ஆர். ராமாநுஜ ஐயங்கார் வந்திருந்தார். கோபுரத்தின் மூன்று நிலைகளையும் பார்த்துவிட்டு ஸந்தோஷப்பட்டார். அவர், "அதிகமாகக் கவலைப்பட வேண்டாம். பெருமாள் பூர்த்தி செய்துவிடுவார்" என்று சொன்னதிலிருந்து, "இதரர்கள் கட்டினது போக மீதி எத்தனை நிலை கட்ட வேண்டியிருந்தாலும் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று உத்ஸாஹப்படுத்தினார் போல் தோன்றிற்று. சீக்கிரத்தில் பணம் அனுப்பி வைப்பார் என்று எண்ணுகிறேன். சொன்னபடி செய்யும் பெரியவர்களில் அவரும் ஒருவர்.

சிறிய வேலைகள் எவ்வளவோ செய்ய வேண்டியிருப்பதனால் ஆயிரக் கணக்காக இரண்டு கைவிரல்களின் கணக்கில் (பத்து ரூபாய் வீதம்) அனுப்பித் தங்கள் நாமத்தால் புண்ணியங்களை ஸம்பாதித்து அதனால் பலனாக நீங்கள் ஆனந்தத்தை அடைய வேண்டும் என்று பெருமாளிடத்தில் பிரார்த்திக்கிறேன்.

நேரில் வந்து கோபுரத்தைப் பார்த்து ஸந்தோஷப்படுங்கள்; தர்மகாரியத்தைக் காது கொடுத்துக் கேட்டாலும், கண்குளிரப் பார்த்தாலும், தர்மத்தைச் செய்யும்படி பண்ணினாலும், தர்ம கார்யங்களைச் செய்தாலும், தர்மகாரியங்களைத் தடுக்காமல் இருந்தாலும், தர்மகாரியங்களைச் செய்கிறவர்களைத் தாஷிக்காமல் இருந்தாலும் எல்லோருக்குமே ஸ்ரீரங்கநாயகாஸமேத ஸ்ரீரங்கநாதன் க்ஷேமமாகப் பலனைத் தருவான். இவ்வ தம்பதிகள் எல்லோரையும் ரக்ஷிப்பார் என்று நம்பியிருங்கள்.

கமலம்

sadagopan.org

अद्य मे सफलं जन्म जीवितं च सुजीवितम् ।
श्रीरङ्गगोपुरे सौधं तुरीयं पश्यतो मम ॥

ஹே புண்ணியசாலிகளே! கேளுங்கள். ஸ்ரீமான் அஞ்சையா அவர்கள் ஸ்ரீரங்கநாதனுடைய தெற்கு ராஜகோபுரத்தில் நான்காவது நிலை கட்டுவதற்கு ஆரம்ப விழாச் செய்தது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதற்காக ஒன்பது லக்ஷம் ரூபாய் ஸாங்க்ஷன் செய்திருக்கிற விஷயமும் பேப்பர்களில் பிரசுரமாகியிருப்பதும் அறிந்ததே. இதற்கு முந்தி திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து கொடுக்கப்பட்டிருந்த இரண்டு லக்ஷம் ரூபாயையும், ஒன்பது லக்ஷம் ரூபாயிலிருந்து கழித்துக்கொண்டேன். பீதி ஏழு லக்ஷம் ரூபாய், நான்காவது நிலை கட்டுவதற்கு வர வேண்டியிருந்தது. இந்த ஏழு லக்ஷம் ரூபாயில் (4-3-82-இல்) 82-ஆவது வருஷம் மார்ச்சு மாஸம் நாலாம் தேதி திருப்பதிக் கோவில் அதிகாரிகள் மூலமாக மூன்று லக்ஷம் ரூபாய்க்கு ஒரு 'செக்' அனுப்பப்பட்டதைப் [illegible] [illegible] அனுப்பியிருப்[illegible] [illegible] தொடுக்கிறப்பதை [illegible] [illegible]ரண்டு நான்காவது நிலை கட்ட ஆரம்பித்து நான்கில் ஒரு பாகம் [illegible] [illegible] முடிந்திருக்கிறது. சீக்கிரத்தில் நாலாவது ஐந்தாவது [illegible] [illegible] [illegible] [illegible]க்கிறேன்.

கோயம்புத்தூர் லக்ஷ்மி மில்ஸ் முதலாளி ஸ்ரீமான் ஜி. கே. தே[illegible] ராஜு அவர்கள் ஆறும் நிலையைக் கட்டுவதாக ஒப்புக்கொண்டு[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] நிலைகளும் கட்டி முடிந்துவிடும் என்று நிபுணர்[illegible] சொல்லுகிறார்கள். இதைக் கேட்டதும் நமக்கும் மற்றவர்[illegible] [illegible]க்கும் உண்டாகும் ஸந்தோஷத்துக்கு எல்லையில்லை.

[illegible] [illegible] பார்த்துப் பயப் படுகிறார்கள். தங்களையும் கோ[illegible] [illegible] கட்டும்படி ஸ்ரீரங்கநாதன் செய்துவிடுவானோ என்று நினைக்கிறார்[illegible] [illegible] என்னவோ தெரியவில்லை.

[illegible] [illegible] ஆதாவது முதலில் கடன் வாங்[illegible] [illegible]யாவது கட்ட வேண்டியிருக்கிறது. பிற்பாடு அவர்கள் அனுப்பிவிடு[illegible] [illegible]ர்கள். மூன்னின்று கட்டுவதில் பதது [illegible] [illegible] [illegible] ஸ்ரீமான் ஆர். ராமானுஜ ஐயங்கார் [illegible]ந்திருந்தார். கோபுரத்தின் மூன்று நிலைகளையும் பார்த்துவிட்டு ஸந்தோ[illegible] [illegible]ப்பட்டார். அவர், "அதிகமாகக் கவலைப்பட வேண்டாம். [illegible] [illegible] [illegible] [illegible]கரர்கள் கட்டினது போக மீதி எத்தனை நிலை கட்ட வேண்டியிருந்தா[illegible] [illegible]ம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று உத்ஸாஹப்படுத்தினா[illegible] [illegible] [illegible] [illegible] சொன்னபடி செய்யும் பெரியவர்களில் அ[illegible] [illegible]ம் ஒருவர். சிறிய வேலைகள் எவ்வளவோ செய்ய வேண்டியிருப்பதனால் ஆயிரக் கணக்காக இரண்டு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பலனை நீங்கள் அ[illegible] [illegible]த்தை அடைய வேண்டும் என்று பெருமாளிடத்தில் பிரார்த்திக்கி[illegible]

sadagopan.org

மஹான்களே! யோசித்துப் பார்த்தால் நாம் செய்வது ஒன்றுமில்லை. பகவான் நம்மைச் செய்யும்படி செய்தாலேயானால் நம்மால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை. ஆனால் பெரியோர்கள் மனதிலுள் ஒரு கார்யத்தை நினைத்தார்களேயானால் பகவான் அதைப் பூர்த்திசெய்து வைத்தே தீருவான்.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஆசார்யாள் சில வருஷங்களுக்குமுன் ஸ்ரீரங்கநாதனே ஸேவிக்க ஸ்ரீரங்கத்திற்கு விஜயம் செய்தபோது ஸ்ரீரங்கத்தில் உள்ள தெற்குக் கோபுரத்தை கடாக்ஷித்து, 'இதைப் பூர்த்தியாகக் கட்டினால் ஸ்ரீரங்கம் பூலோக வைகுண்டம் என்பதற்கு மிகவும் பொருத்தமாக இருக்கும்' என்று, 'ஸுபேந மநஸா த்யாதம்' என்கிறபடி நினைத்து, ஸமீபத்தில் உள்ள பக்தர்களிடத்தில் தெரிவித்ததாக, சுபமான விஷயத்தைத் தெரிந்துகொண்டிருந்தேன். அந்த மஹானுடைய மனோரதத்தை ஸ்ரீரங்கநாதன் பூர்த்தி செய்ய ஸங்கல்பித்துக் கொண்டு, ஸர்வவிதத்திலும் அசக்தனான எனனை ஸ்ரீ அஹோபில மடத்தில் நாற்பத்துநான்காவது பீடத்தில் ஸ்ரீலக்ஷ்மீநருஸிம்ஹனின் ஆராதகனாகச் செய்து ஸ்ரீ அஹோபிலத்தில் இம்மாதிரியான சின்ன கோபுரத்தைக் கட்ட நியமித்து, தைர்யத்தை உண்டு பண்ணினான். பிறகு தன்னுடைய க்ஷேத்ரமான ஸ்ரீரங்கத்தில் இத்தப் பெரிய கோபுரத்தைக் கட்டும்படி செய்துவிட்டான் ஸ்ரீரங்கநாதன். இப்பொழுது ஐந்தாவது நில ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி அவர்களால் (புதுப் பெரியவாளால்) நல்ல நாளில் அஸ்திவாரம் போடப்பட்டு வெகு வேகமாக வேலை நடைபெற்று வருகிறது. இதற்கு அனேகம் மந்திரிகளையும் தர்மிஷ்டர்களையும் வரவழைத்து ஆசீர்வாதம் பண்ணி ஐந்தாவது நிலையை நீங்கள்தாம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நியமித்து இருப்பது யாவரும் அறிந்ததுதான். மைஸூர் அரசாங்க முதல் மந்திரி மாண்புமிகு ஸ்ரீமான் குண்டுராவ் என்கிற தர்மப்ரபு ஐந்தாவது நிலையைத் தங்கள் ராஜ்யத்தின் சார்பில் கட்டித் தருவதாக ஒப்புக் கொண்டுள்ளதாகக் கேள்விப்படுகிறோம். ஐந்தாவது நிலைக்கு வேண்டிய பணம் கட்டாயம் கிடைத்துவிடும். ஐந்தாவது நிலையில் இப்பொழுது மூன்று பாகம் கட்டியாகிவிட்டது. தார்மிகர்கள் வேண்டிய அளவு கடனும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆறு, ஏழு, எட்டு, ஒன்பதாவது நிலைகளையும் தர்மிஷ்டர்கள் (கட்டித் தருவதாக) ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சீக்கிரத்தில் கோபுரம் கட்டிப் பூர்த்தியாகிவிடும். எல்லோரும் ஸேவித்து ஆனந்திக்கலாம். வேண்டிய அளவு பணம் கொடுத்து ஒத்தாசை பண்ண வேண்டும் என்று அடிக்கடி எழுத ஸங்கோசமாக இருக்கிறது.

* * *

sadagopan.org

தர்மிஷ்டர்களே! ஸ்ரீரங்கத்தில் தெற்குக் கோபுர கைங்கர்யம் நடந்துகொண்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அவரவர்கள் தங்கள் தங்கள் சக்திக்கு அநுகூலமாக நேரிலும் 'செக்' மூலமாகவும், மணியார்டர்கள் மூலமாகவும் பணம் அனுப்பிக்கொண்டே யிருக்கிறார்கள். அனேக தர்மிஷ்டர்கள் தங்களுடைய சக்திக்கு மீறியும் அனுப்புகிறார்கள்.

ஐந்தாம் நிலை நவாவுக்குள் பூர்த்தி பெற்றுவிடும். சந்தேகமில்லை.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் வடதேசத்தில் இருந்துகொண்டு, தம்மிடத்தில் வருகிறவர்கள் எல்லோரிடமும் ஸ்ரீரங்கம் கோபுர விஷயமாக, உதாஸீனத்தோடு லக்ஷக் கணக்கில் பணம் கொடுக்கும்படி நிர்ப்பந்தப்படுத்திச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். லந்தித்தவர்களும் 'ஸ்ரீ ஆசார்யாள் ஆஜ்ஞையை சிரஸா வஹித்து ஒப்புக்கொண்டு அதற்கு வேண்டிய பிரயத்தனங்களைப் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். மூன்றும் நிலை நான்காம் நிலை கட்டி முடித்த பணத்தில் கொடுக்க வேண்டிய பாக்கி சுமார் ரூ. 6 லக்ஷம் சீக்கிரம் வந்து விடும் என்று நினைக்கிறேன்.

ஐந்தாம் நிலைக்கும் முன்பணம் போட்டுக் கட்டிக்கொண்டிருக்கிறேன். ஸ்ரீரங்கநாதன் எந்தத் தர்மிஷ்டர்களுக்குள் புகுந்து கொடுக்கும்படி செய்யப்போகிறானோ தெரியவில்லை. ஸ்ரீரங்கநாதன் என்னுடைய உத்ஸாஹத்தைக் குறைக்கவில்லை. தினந்தோறும் கோபுரத்தில் ஏறி வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். வேலை நடக்கும்போது பார்க்கும் ஸமயத்தில் என்னை யார் என்று எனக்கே அறிய முடியவில்லை. அவ்விடத்தில் என்னைப் பார்க்கிறவர்களும் 'நீங்கள் யார்' என்று எங்களால் அறிய முடியவில்லையே என்று சொல்லுகிறார்கள்.

மேலே கட்ட வேண்டிய நிலைகளைக் கட்ட ஒப்புக் கொண்டிருக்கிறவர்கள் பரம ஸந்தோஷத்தோடு கட்ட, ஆரம்ப முஹூர்த்தம் செய்ய ஸித்தமாக இருக்கிறார்கள். ஆறும் நிலையைக் கட்டப்போகிறவர் அஷ்டலக்ஷ்மி கோயில் கட்டிவைத்து, அஷ்டலக்ஷ்மி கடாக்ஷம் பெற்றவர் என்பதையும் அறிவிக்கிறேன்.

ஸ்ரீரங்கத்தில் தெற்குப் பெரிய கோபுரத்தில் ஐந்தாம் நிலை பூர்ணமாகக் கட்டியாகிவிட்டது. இதற்கு ஏற்பட்டிருக்கிற செலவு முழுத் தொகையையும் காமகோடி பீடாதிபதிகளுடைய ஆஜ்ஞையை ஏற்றுக்கொண்டு மைஸூர் ஸ்ரீமான் முதல் மந்திரி குண்டுராவ் அவர்கள் கொடுத்துவிடுவதாக, அவசியமான அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டுவிட்டார்கள். ஐந்தாம்

sadagopan.org

நிலைக்குக் கவலை இல்லை. ஆறும் நிலை கட்டுவதற்கும் அநேக ஆஸ்திகர்களுக்கு ஸ்ரீமான்களான ஆசார்யாள் ஆஜ்ஞை செய்திருக்கிறார்கள். அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வந்து ஆறும் நிலைக்கு அஸ்திவார முகூர்த்தம் செய்த பிறகு அடுத்த ஸஞ்சிகையில் தெரிவிக்கிறேன். இனிமேல் எந்தக் கஷ்டமும் இராது என்று நினைக்கிறேன். ஆஸ்திகர்கள் எல்லோரும் சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நித்யப்படி பணம் வந்துகொண்டிருக்கிறது. சில்லறைச் செலவுகள் நன்றாக, சிரமமில்லாமல் நடக்கின்றன.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் நியமனத்தினால் கர்நாடக மாநில முதல்வர் ஸ்ரீமான் குண்டுராவ் அவர்கள் ஐந்தாவது நிலையைக் கட்டி முடித்தார். ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் நியமனத்தினாலேயே ஸ்ரீமான் இளையராஜா அவர்கள் ஆறுவது நிலையைக் கட்டிக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு லக்ஷம் லக்ஷமாகக் கொடுத்துக்கொண்டு வருகிறார். மேலே கட்ட வேண்டிய ஏழாவது நிலைக்கு அஞ்ஜய்யா அவர்கள் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது.

சுபமஸ்து

ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் ஆறுவதுநிலை துவக்க விழாவின்போது திரு இளையராஜா அவர்கள் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்களிடம் கட்டுமான பணிக்கு காசோலை கொடுக்கிறார்.

sadagopan.org

ஸ்ரீமான் இளையராஜாவின் கைங்கர்யமாக ஸ்ரீரங்க ராஜ கோபுரத்தில் கட்டப்பட்டு வருகிற ஆறுவது நிலை பங்குனி மாதத்தில் பூர்த்திபெற்றுவிடும். வேலை சீக்கிரமாக நடந்து வருகிறது. மேலே கட்டப்பட வேண்டிய நிலைகளுக்கும் அநேக தர்மிஷ்டர்கள் போட்டியிடுகிறார்கள். சுலபமாகப் பூர்த்தியாகி விடும்.

இந்தக் கோபுர கைங்கர்யத்திற்கு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளான சங்கர பகவத்பாதர்கள் வடதேசத்தில் இருந்துகொண்டு பெரிய பெரிய தனிகர்களுக்கு உத்தரவிட்டு அவர்களை இந்தக் கைங்கர்யத்தில் ஈடுபடும்படிச் செய்து ஒத்தாசை பண்ணுவதனால் எனக்கு அதிக சிரமம் இல்லை. எல்லோரும் கொண்டாடக்கூடிய விஷயம். இப்படியே நீடித்து நடக்கவேண்டுமாய் ஸ்ரீரங்கநாதரைப் பிரார்த்திக்கிறேன்.

இப்பொழுது ஸ்ரீரங்கத்தில் தெற்கு ராஜகோபுரத்தில் ஆறுவது நிலை—மாடி முகிகால் பங்கு கட்டப்பட்டுள்ளது. பங்குனி மாத முடிவிற்குள் முழுவதும் கட்டி முடிந்துவிடும். ஸந்தேஹமில்லை. இந்த ஆறுவது நிலை கட்டுவதற்கு ஸ்ரீமான் இளையராஜா அவர்கள் நாலு லக்ஷத்து ஐம்பதாயிரம் ரூபாய் (4,50,000) கொடுத்துவிட்டு மீதி ரூபாய்களை வேண்டியபோது கொடுத்துக்கொண்டு வருகிறார். ஒருவிதமான கஷ்டமும் இல்லை. வேலை வேகமாக நடந்து வருகிறது.

ஏழாவது நிலையைத் திருச்சி—ஸ்ரீரங்கம் மஹாஜனங்கள் கட்ட முயற்சி எடுத்துக்கொண்டு வேண்டிய அளவு திரவ்யம் சேர்க்க ஆரம்பித்துவிட்டார்கள். ஒவ்வொரு கோர்ட்டில் உள்ள அதிகாரிகளும் வக்கீல்களும் மிகவும் உத்ஸாஹத்தோடு, அவரவர் இஷ்டப்பட்டுக் கொடுப்பதை ஏற்றுக்கொண்டு வசூல் செய்து வருகிறார்கள். இப்படியே ஸ்கூலில் உபாத்தியாயர்களும் மாணவ மாணவிகளும் வசூல் செய்து வந்து கொடுக்கிறார்கள்.

முனிசிபாலிடி கமிஷனர் முதலான அதிகாரிகளும் பணம் திரட்டுகிறார்கள். கடை வியாபாரிகளுக்கு இருக்கும் உத்ஸாஹத்திற்கோ அளவே இல்லை. அவர்களே ஏழாவது நிலையைக் கட்டி விடுவார்கள் போலிருக்கிறது. ஏழாவது நிலை கட்டுவதற்கு சுமார் 6,00,000 (ஆறு லக்ஷம்) ரூபாய் போதுமானதுதான். ஆனால் வசூல் அதிகமாக ஆகும் என்று தோன்றுகிறது. ஸ்ரீரங்க நாதன் திருக்கடாக்ஷம் எல்லோருக்கும் பூரணமாக இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

* * * *

sadagopan.org

ஸ்ரீரங்கம் தெற்குப் பெரிய கோபுரத்தில் பங்குனி மாதப் பூர்த்தியில் ஆறாவது நிலை பூர்த்தியாக முடிந்துவிட்டது. இதற்கு ஸ்ரீமான் இளையராஜா அவர்கள் தட்டுத்தடங்கல் இல்லாமல் செலவுக்கு வேண்டிய பணம் கொடுத்துக்கொண்டு வந்தார். எவ்வளவு என்பதை அடுத்த மாதம் ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரீயாவில் தெரிவிக்கிறேன். ஏழாவது நிலை ஆரம்ப உத்ஸவத்தை மந்திரி ஸ்ரீமான் ராஜ வீரப்பன் அவர்கள் திருச்சி-ஸ்ரீரங்கவாஸிகளான புண்ய புருஷர்களுக்காக நடத்தி வைத்தார். கைராசிக்காரர் இவர். சித்திரை வைகாசி ஆனி முப்பதுக்குள் ஏழாவது நிலை பூர்த்தி பெற்றுவிடும் என்பதில் ஸந்தேஹமில்லை. திருச்சி-ஸ்ரீரங்கவாஸிகள் மிகுந்த உத்ஸாஹத்தோடு தங்கள் சக்திக்கும் அதிகமாகப் பணம் கொடுத்து மற்றவர்களையும் உத்ஸாஹப்படுத்துகிறார்கள்.

ஸகல ஆபிஸர்களும், ஸகல வியாபாரிகளும், ஸகல தனிகர்களும், ஸகல ஏழைகளும் ஏழாவது நிலையைக் கட்டி முடிக்க உத்ஸாஹத்தோடு இருக்கிறார்கள். இவர்களுக்கு ஸ்ரீரங்கநாயிகாஸமேத ஸ்ரீரங்கநாதன் மேன்மேலும் அருள்செய்யப் பிரார்த்திக்கிறேன்.

* * *

ஆதிஶேஷதல்பஶாயியான ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீரங்கம் தெற்கு ராஜகோபுரத்தில் ஆறாவது நிலையை ஸ்ரீமான் இளையராஜா மூலமாகப் பூர்த்தி செய்து கொண்டான். மிகவும் அழகாக அமைந்திருக்கிறது இது. தேரில் வந்து கோபுரத்தின் மேலே ஏறிப் பார்க்கிறவர்கள் பரமானந்தம் அடைகிறார்கள்.

ஏழாவது நிலையில் நான்கில் ஒரு பங்கு வேலை முடிந்துவிட்டது. ஆனிமாத முடிவுக்குள் பூர்த்தி ஆகிவிடும். ஸ்ரீரங்கம் திருச்சியில் உள்ள ஆஸ்திகர்களைக் கொண்டு ஏழாவது நிலையைப் பூர்த்தி செய்து கொள்ள ஸ்ரீரங்கநாதன் திருவுள்ளம்பற்றியிருக்கிறான். ஒவ்வொருவருடைய மனத்திலும் புகுந்து அளவுக்கு அதிகமாகக் கொடுக்கும்படிப் பண்ணுகிறான். என்னிடத்திலும் சிலர் கொடுக்கிறார்கள். அந்த ரூபாய்களை ஏழாவது நிலைக்கே உபயோகப்படுத்தப் போகிறேன்.

எட்டாவது நிலையை ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் உ. வே. ஹிட்லர் திருமலாசார்யர் மூலமாகவே கட்டி முடிக்கப்போகிறான் ஸ்ரீரங்கநாதன். இம்மஹான் ஸ்ரீரங்கம் கோயிலில் அநேகம் திருப்பணிகளைப் பண்ணினவர் என அறியவும். எல்லோருக்கும் ஸ்ரீரங்கநாயிகாஸமேத ஸ்ரீரங்கநாதனுடைய அநுக்ரஹத்தினால் ஸகல ஸம்பத்துக்களும் மேன்மேலும் வளர வேண்டும் என்று தில்ய தம்பதிகளை பிரார்த்திக்கிறேன்.

ஒரு விஷயம்—ஸ்ரீரங்கத்தில் ராஜகோபுரம் கட்டுவதற்கு ஸந்தோஷத்தோடு பணம் கொடுத்தாலும், சிலருடைய நிர்பந்தத்திற்காகப் பணம் கொடுத்தாலும், டம்பத்திற்காகப் பணம் கொடுத்தாலும், சிலர் சொன்ன பிறகு தர்மம் மனத்தில் பட்டு பக்தியோடு பணம் கொடுத்தாலும், தன்னிடத்தில் இல்லாமல் பிறரிடத்தில் யாசித்து வாங்கிப் பணம் கொடுத்தாலும், கொடுகிறவர்களைத் தடுக்காமல் இருந்தாலும், கோபுர வேலைக்குக் கொடுக்க நமக்கு ஒன்றும் இல்லையே என்று வருந்தப்பட்டாலும் எல்லோருக்கும் ஸ்ரீரங்கநாதன் அவர் அவர்களுக்குத் தகுந்தபடி புண்ணியத்தைக் கொடுக்கிறான்.

இந்த தர்மத்தைக் காதால் கேட்டாலும் தேரில் பார்த்தாலும், செய்யும்படிப் பண்ணினாலும், இந்த தர்மம் பண்ணுவது மிகவும் ஸரிதான் என்று சொன்னாலும், நினைத்தாலும், அவர்களையும் புண்யம் செய்தவர்களாகவே ஸ்ரீரங்கநாதன் நினைத்து அநுக்ரஹிக்கிறான். இவ்விஷயத்தை—

"தர்ம: சிருதோ வா த்ருஷ்டோ வா ஸம்ருதோ வாகதி
தோ ऽபி வா |
அநுமோதிதோ வா ராஜேந்த்ர! புநாதி புருஷம் ஸதா ||

என்கிற ஶாஸ்த்திரத்தினால் அறியலாம்.

sadagopan.org

இந்த தர்மத்தில் ஸம்பந்தப்பட்டவர்களுக்கு மனஸ் சுத்தமாகிவிடுகிறது. பகவத் கதைகளைக் கேட்க ஆசை உண்டாகிறது. பிறகு பகவானுடைய அநுக்ரஹத்தைப்பெற்று நல்ல பதவிகளை அடைந்தவர்களைப்போலே நாமும் நல்ல பதவிகளை அடைய வேண்டும் என்கிற ஆசையினால் அவர்கள் செய்தது போல் நல்ல காரியங்களைச் செய்யத் தோன்றுகிறது. பிறகு அவர்களைப்போல் நல்ல காரியங்களைச் செய்கிறான். அதனால் நல்ல பதவிகளை அடைகிறான்.

இப்படிப்பட்ட காரியங்களைப் பலத்தை விரும்பாமல் பகவத் ப்ரீத்யர்த்தம் கோபுரம் கட்ட என்னால் முடித்தவரையில் கொடுக்கிறேன் என்று கொடுத்தான் அப்பொழுது அவன் மனத்தில் ஸ்ரீவைகுண்டத்தை அடைய ஆசையைத் தோன்றப் பண்ணும் அவன் செய்த புண்யம். பிறகு ஆசார்யாநுக்ரஹத்தினால் வைகுண்டம் அடைய வேண்டியதற்கு அவர் அவர்கள் ஆசார்யர்கள் சொல்லுகிறபடி காரியங்களை செய்து நல்லதை அடைந்து ஆனந்திப்பார்கள்.

லாபம்

ஸ்ரீரங்கம் தெற்கு ராஜகோபுரத்தில் ஏழாவது நிலை இந்த ஆனி மாதம் முப்பதாம் தேதிக்குள் முழுவதும் முடிந்துவிடும். ஏழாவது நிலைக்கு வேண்டிய செலவுகளைத் திருச்சியில் உள்ள பிரமுகர்களும், ஸ்ரீரங்கத்தில் உள்ள பிரமுகர்களும் ஏற்றுக் கொண்டு கமிட்டி ஏற்படுத்தி வசூல் பண்ணுகிறார்கள்.

நல்ல ஸமயத்தில் காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜயேந்த்ரஸரஸ்வதி ஸ்வாமிகள் மூன்றாவது நிலைக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியில் மூன்று லக்ஷம் ரூபாய்கள் (300000) அனுப்பியிருக்கிறார்கள். கவலையை விட்டுவிட்டு ஸுகமாக இருக்கிறேன். மற்றும் நான்காவது ஐந்தாவது நிலைகளுக்கு வரவேண்டிய பாக்கித் தொகைகளையும் கொடுப்பதாக உத்தரவு போட்டுள்ளார்கள். சீக்கிரம் வந்துவிடும்.

ஸ்ரீமான் இளையராஜாவும் பாக்கியுள்ள பணத்தை இந்த மாதத்திற்குள் அனுப்பிவிடுவார். ஸந்தேஹம் இல்லை. இன்றிலிருந்து ஒரு வருஷத்திற்குள் கோபுரத்தில் பதின்மூன்று நிலைகளும், விமானமும் கட்டப்பட்டு பூர்த்தியாய்விடும். எல்லோரும் பார்த்து ஸேவித்து ஸந்தோஷிக்கலாம்.

ஆஸ்திகர்களுக்கு ஒரு நல்ல விருந்து. ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய கோயில் தெற்கு ராஜகோபுரத்தில் எவ்விதத்திலும் உதிர்ருஷ்டமான ஏழாவது நிலை பூர்ணமாக, அழகாக முடிந்துவிட்டது. இது ஆஸ்திகர்களுடைய காதுகளுக்குப் பெருவிருந்து. தினம் வந்து பார்த்தாலேயானால் கண்களுக்கும் விருந்து அளிக்கப்பட்டதாகும். இந்த ஆனி மாதம் 29-ஆம் தேதியிலேயே எட்டாவது நிலை கட்ட மஹாஸம்ப்ரோக்ஷணம் ஆரம்பம் செய்தாகிவிட்டது. ஆவணி மாதம் 30-ஆம் தேதிக்குள் எட்டாவது நிலை பூர்த்தியாகிவிடும். அஷ்டாக்ஷரத்தில் நிஷ்டை துல்யமான இந்த நிலையை ஸேவித்தாலேயே அஷ்டாக்ஷரத்தின் தேவதையான ஸ்ரீமந்நாராயணனுடைய பரிபூர்ணமான கடாக்ஷத்திற்குப் பாத்திரமாவார்கள் என்பதில் என்ன ஸந்தேஹம்? சொல்லுங்கள்.

sadagopan.org

அதற்கு மேற்பட்ட ஐந்து நிலைகளும் இப்பொழுதே கண்ணுக்குத் தெரிவன போல் ஜ்வலிக்கின்றன. பார்க்கிறவர்களை எல்லோரும் முடித்துவிட்டது என்றே சொல்லுகிறார்கள்; வேண்டிய ரூபாய் வந்துவிடும். எல்லோருக்கும் நம்பிக்கை வந்துவிட்டது. காஞ்சி காமகோடி ஆசார்யாளுடைய உபதேசம் எல்லோரையும் சீக்கிரத்தில் பணம் அனுப்பும்படித் தூண்டுகிறது.

மூன்போட்டுக் கட்டின ரூ 20 00,000 (இருபது லக்ஷம் ரூபாய்)தான் வர வேண்டும். அதுவும் சீக்கிரத்தில் ஸ்ரீரங்கநாதன் நியமனத்தினால் வந்துவிடும். ஏழாவது நிலைக்குத் திருச்சி ஸ்ரீரங்கம் முதலிய இடங்களிலிருந்து இரண்டரை லக்ஷம் ரூபாய்கள்தாம் கிடைத்திருக்கின்றன. மீதியும் வந்துவிடும் என்று குறி சொல்லுகிறார்கள். அதுவும் பலிக்கும் என்று நம்பியிருக்கிறேன்.

* * * *

ஸ்ரீரங்கநாதனுடைய நியமனத்தினால் கட்டிக்கொண்டு வருகிற தெற்குவாசல் பெரிய ராஜகோபுரத்தில் எட்டாவது நிலையை ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் ஹிட்லர் திருமலாசாரியர் ஸ்வாமி கட்டுவது நிச்சயமாகிவிட்டது. முதல் தடவையாக ஒரு லக்ஷம் ரூபாய் ஆஸ்திகர்களிடமிருந்து வஸூல்செய்து கொடுத்திருக்கிறார். இன்றைய தினம்வரை எட்டாவது நிலையில் பாதிப் பாகம் கட்டியாகிவிட்டது. மற்றுமுள்ள பாதிப் பாகம் இருபது தினங்களில் கட்டிப் பூர்த்தியாகிவிடும். ஸந்தேகமில்லை. ஸுமார் ஐந்தரை லக்ஷம் ரூபாய் வேண்டியிருக்கும். வஸூலாவது போக மீதியைத் தம்முடையதாகச் செலவழிக்க உத்தேசித்திருக்கிறார். அவருக்குச் செலவு வைக்காமல் தர்மிஷ்டர்கள் தாராளமாகக் கொடுத்து உதவுவார்கள் என்று நம்புகிறேன்.

ஒரு விஷயம்—நாற்றெட்டுக் கோயில்கள் ஆழ்வார்களால் பாடப்பட்டவை. இந்தக் கோயில்களை-ஸ்தலங்களைத் திருப்பதிகள் என்று வழங்குகிறார்கள்.

இவற்றுள் ஸ்ரீவைகுண்டத்தில் கோடிக்கணக்கான மதில்களோடும் கோபுரங்களோடும் கூடின கோயில் ஒன்று இருக்கிறது. அந்தக் கோயிலில்தான் ஆதிசேஷ தல்பத்தில் ஸ்ரீ பூமி நீளா ஸமேதனான நாராயணன் ஸர்வாபரணபூஷிதனாய், ஸர்வ ரத்னசோபிதமான கிரீடத்தைச் சிரஸ்ஸில் தரித்துக்கொண்டும், சங்கம் சக்கரம் கதை முதலிய ஆயுதங்களைக் கைகளில் தரித்துக் கொண்டும் பீதாம்பரத்தை உடுத்துக்கொண்டும். நீலமேக சியாமளனாய், அனந்த கருட விஷ்வக்ஸேனாதிகளான நித்ய ஸூரிகளுக்கும், பக்தியோ ப்ரபத்தியோ பண்ணி ஸ்ரீவைகுண்டத்தை அடைந்த முக்தர்களுக்கும் எப்பொழுதும் ஸேவை ஸாதித்துக்கொண்டிருக்கிறான்.

sadagopan.org

ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கிற கோயிலைப் போன்று பூமண்டலத்தில் ஸ்ரீரங்கநாதன் கோயில்தான் இருக்கிறது. இதைப் போல் வேறு எந்த இடத்திலும் ஏழு ப்ராகாரங்களோடு கூடின கோயில் கிடையாது என்பது யாவரும் அறிந்ததே. இந்த ஸ்ரீரங்கம் கோயிலிலும் ஸ்ரீரங்கநாதன் ஆதிசேஷ தல்பத்தில் படுத்துக்கொண்டு, கிழக்குத் திசையில் திருவடியை நீட்டிக் கொண்டும், மேற்குத் திசையில் திருமுடியை வைத்துக் கொண்டும், தெற்குத் திக்கிலுள்ள இலங்கையிலிவாழ் விபீஷணரைப் பார்த்துக்கொண்டும் ஸேவை ஸாதிக்கிறது தெரிந்த விஷயமேதான். தெற்குத் திக்கைக் கடாக்ஷிக்கிறபோது தெற்குக் கோபுரம் ஸ்ரீரங்கநாதன் கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகாமல் இருக்கிறதும் தெரிந்த விஷயமேதான். அந்த மொட்டைக் கோபுரம் ஸ்ரீவைகுண்ட கோபுரம் போல் பூர்த்தியாகி, கலசங்களோடு இருக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி, ஆஸ்திகர்களுக்குத் தோன்றப்பண்ணித் திருப்பணியை நடத்திக்கொண்டு வருகிறான். இந்தக் கோபுரத்தில் எட்டாவது நிலை ஆவணி மாதம் ஹஸ்த நக்ஷத்ரத்தில் பூர்த்தியாகிவிடும். இந்த நிலையை ஸேவிக்கிறவர்களுக்கு, அஷ்டாக்ஷரத்தை ஜபிக்கிறவர்களுக்கு எவ்வளவு பலனோ அவ்வளவு பலன் கிடைக்கும் என்பதில் ஸந்தேகமில்லை. நல்ல ஸந்தர்ப்பத்தில் நல்ல பலனை அடையுங்கள்.

* * * *

எட்டும் இரண்டும் அறியாத எம்மை இவை அறிவித்து
எட்டெழுத்து இடம் தரும் எங்கள் மாதவனார்
முட்ட வினைத் திரள் மாள முயன்றிடும் அஞ்சல் என்னூர்
கட்டவிழ் வாசகத்தால் களிகூர நிலை பெற்றனமே.

இது ஸ்ரீஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸூக்தி. அநாதிகாலமாக நாம் ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கிக் கிடக்கிறோம். எது நல்லது, எது தீயது என்பதை அறியாமல் தவிக்கிறோம். ஏதோ ஒரு ஸுக்ருத விசேஷத்தால் நமக்கு எம்பெருமான் ஸதாசார்ய ஸம்பந்தத்தை உண்டுபண்ணுகிறான். இப்படி ஸம்ஸரித்துப் போந்த நமக்கு அஷ்டாக்ஷரம், த்வயம், சரமச்லோகம் என்கிற ரஹஸ்யத்ரயத்தை உபதேசிக்கச் செய்கிறான். அதன் மூலமாக நாம் நல்லறிவை அடைகிறோம்.

sadagopan.org

எட்டும் இரண்டும் பத்து என்கிற அறிவுகூட நமக்கு மூன்பு இல்லை. அப்படி இருக்க, அஷ்டாக்ஷரம் த்வயம் சரம ச்லோகம் இவற்றை அறிய வாய்ப்பு ஏது? எம்பெருமானுடைய அநுக்ரஹத்தால் ஆசார்ய ஸம்பந்தம் ஏற்பட்டு, நமக்கு நல்லறிவு உண்டாகிறது. இப்படி ரஹஸ்யத்ரயத்தை அர்த்தத்துடன் நமக்கு அறிவித்து, தத்வஜ்ஞானத்தை உண்டுபண்ணித் தன் திருவடிகளிலே சரணாகதி செய்துவைக்கிறான். எவராலும் எட்ட முடியாததான மோக்ஷத்தைத்தர அவன் ஒருவன்தான் ஸமர்த்தன். 'மோக்ஷமிச்சேத் ஜநார்தநாத்' என்றபடி, மஹாவிஷ்ணு ஒருவனுக்கே மோக்ஷபலனைக் கொடுக்கச் சக்தி உண்டு. இப்படி ஒருவராலும் கொடுக்க முடியாததும், எம்பெருமானை அறியாதவர்களுக்குக் கிடைக்க முடியாததுமான பரமபதத்தை மாதவன் அளிக்கிறான். அநாதிகாலமாக நாம் செய்த பாவங்களனைத்தையும் அழிப்பதற்கு ஊக்கமும் அடைந்திருக்கிறான். "என்னிடம் சரணாகதி செய்துள்ள நீ எதற்கும் எவ்வகையிலும் அஞ்ச வேண்டாம், சோகிக்க வேண்டாம்" என்று கீதோபநிஷத்தில் சரம ச்லோகத்தால் உறுதி அளிக்கிறான். ஆகவே நாம் கலங்க வேண்டிய அவசியமே இல்லை. நம்முடைய பரத்தை அனன் பெற்றுக்கொண்டு, ஸகலவித க்ஷேமங்களையும் கொடுக்கவித்தனாக இருக்கிறபடியால், நாம் கலங்குவதற்கு ப்ரஸக்தியே இல்லை என்று ஸ்ரீஸ்வாமி தேசிகன் பரமாசார்யன் ஸாதித்திருக்கிறார்.

எட்டாவது நிலையைப் பார்த்ததும் இந்தப் பாசுரம் எனக்கு நினைவுக்கு வந்தது. பதின்மூன்று நிலைகள் எட்டவேண்டுமென்று ஸ்ரீரங்கநாதன் எனக்கு நியமித்துள்ளான். முதலில் இந்தக் கைங்கர்யம் எப்படிப் பூர்த்தியடையும் என்று எண்ணினேன். அவ்வப்பொழுது ஸ்ரீரங்கநாதன் தைர்யத்தையும் விச்வாஸத்தையும் கொடுத்துத்தான் வருகிறான். இப்பொழுது பூர்ண நம்பிக்கையும் தைர்யமும் வந்துவிட்டன. இந்த எட்டாவது நிலையைப் பார்த்ததும் மற்ற நிலைகளும் கீழ்நிலைகளைப் போலவே சீக்கிரத்திலேயே பூர்த்தி அடைந்துவிடும் என்ற தீர்மானம் வந்துவிட்டது. கலங்கா நிலை ஏற்பட்டுவிட்டது. இதை ஸேவிக்கிறவர்களுக்கும் எல்ல நிலைகளையும் ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீஅழகியசிங்கர் மூலமாகப் பூர்த்திசெய்துவிடுவான் என்கிற நிலை உண்டாகிவிடும்.

sadagopan.org

எட்டும் இரண்டும் பத்து. மறுபடியும், எட்டும் இரண்டும் என்று சேர்த்துக்கொள்ள வேண்டும். எட்டு—அஷ்டாக்ஷரம். இரண்டு—த்வயம். சரமச்லோகம்; ஆக மூன்று (மந்திரங்கள்). பத்தும் மூன்றும் பதின்மூன்று. இந்த ராயகோபுரத்தில் பதின் மூன்று நிலைகளை எப்படிக் கட்டுவது என்பதை அறியாத எனக்கு, கட்டும் வகையை அறிவித்தான். இந்தக் கைங்கர்யம் எவர்க்கும் எட்டாதது; ஒருவராலும் சிந்திக்கப்படாதது. அந்தச் சமயத்தில் இருந்த எந்த அரசர்களும் மடாதிபதிகளும் இதைச் சிந்திக்கவில்லை. இந்தப் பணியில் என்னை ஸ்ரீரங்க நாச்சியாரோடு கலந்து ஸ்ரீரங்கநாதன் அநுக்ரகித்திருக் கிறான். ஒரு பெரிய கைங்கர்யம் என்றால், பல தடைகள் வரத்தான் வரும். ஆயினும், அவை நீர்பட்ட பஞ்சு போல் அழிந்துவிடுகின்றன. இதற்கு ஏற்படும் விக்னங்கள் அனைத் தையும் அழிப்பதற்கு வழியையும் அவனே செய்துவைக்கிறான். "நீ இந்தப் பெரிய கைங்கர்யத்தில் புகுந்துவிட்டனை, என்ன செய்வேன்? என்று பயப்பட வேண்டாம், ஸ்ரீரங்கத்தில் வாஸம் செய்துகொண்டு இந்தக் கைங்கர்யத்தைச் செய்துவந்தால் சீக்கிரத்தில் பூர்த்தியடைந்துவிடும்" என்று அவன் அநுக் கிரகம் செய்திருக்கிறபடியால், எனக்கு ஏதும் பயமில்லை. அதிரவ ஸ்ரீரங்கே ஸுகம் ஆஸ்வ' என்று அவனது கட்டளைக வாசகத்தால் கலங்கா நிலை பெற்றுள்ளேன்.

ஆவணி மாஸத்தில் பூர்த்தியடையும் எட்டாவது நிலையைப் பார்த்து எல்லோரும் மகிழ்ச்சியடையுங்கள். எட்டாவது நிலை யைப் பார்ப்பவர்களும், இதற்கும், மற்றநிலைகளுக்கும் உபகரிக் கிறவர்களும், 'அஷ்டதிக்கயாதனாம் ச' என்றபடி, எல்லாத் திசைகளிலும் பிரஸித்தி பெறுவார்கள். எட்டு மாமலர் எண் சித்தி எண்பக்தி எட்டு யோகாங்கம் எண்செல்வம் எட்டு மாகுணம் எட்டெட்டெனும் கண் எட்டிரதம் மேலதவும் எட்டினரே' என்றபடி, எல்லாச் சுபங்களும் கிட்டும், எட்டும். பூர்ண நம்பிக்கையுடன் ஈடுபடுங்கள். ஸ்ரீரங்கநாயகியினுடை யவும் ஸ்ரீரங்கநாதனுடையவும் பரிபூர்ணமான அருள் உங்க ளுக்கும் கிட்டும்.

சுபமஸ்து

இந்த வருஷமும் மாலோல வித்வத் ஸதஸ் ஸ்ரீலக்ஷ்மீநரு ஸிம்மனுடைய அநுக்ரஹத்தினால் மிகவும் நன்முக நடந்தது. பல இடங்களிலிருந்தும் பிரஸித்த வித்வான்கள் பலர் எழுந்தருளி யிருந்தனர். அபூர்வ விஷயங்களில் வாக்வாரித்தங்களை நடத்தி ஸபைக்கு அழகு தந்தனர். வேதாத்யயனம் செய்தவர்களும் நிறைய வந்தனர்.

sadagopan.org

ஸ்ரீரங்கம் ராஜகோபுரத்தில் எட்டு நிலைகள் பூர்த்தியடைந்து விட்டன. ஆவணிமீ 24உ ஹஸ்தத்தன்றே ஒன்பதாவது நிலைக்கு ஆரம்ப மஹோத்ஸவமும் செய்தாயிற்று. இரண்டு மாதங்களில் இந்த ஒன்பதாவது நிலையும் பூர்த்தி பெற்றுவிடும். வேலைகள் மிகவும் விரைவாக நடந்து வருகின்றன. பரம ஆஸ்திகர் ஒருவர் இந்த நிலைக்குஆகும் ரூபாய்களைத் தாமே தருவதாக ஒப்புக்கொண்டுள்ளார். ஆகவே இது முடிந்துவிட்டதாகவே நினைக்கலாம்.

பிறகு நான்கு நிலைகளே உள்ளன. ஒவ்வொரு நிலைக்கும் இரண்டு மாதகாலம் பிடிக்கும். எப்படியும் அடுத்த வருஷம் ஆவணி மாதத்திற்குள் பூர்ண கோபுரத்தை நாம் அனைவரும் ஸேவித்து மகிழலாம். ராஜகோபுர மஹா ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவத்திலும் அன்வயித்து க்ருதார்த்தர்களாகலாம்.

இதுவரை என் மனஸ்ஸில் இருந்த கவலை இப்பொழுது தீர்ந்துவிட்டது என்றே சொல்லலாம். இந்தக் கோபுரத்தில் எட்டு நிலைகளையும் முடித்து ஒன்பதாவது நிலையை ஆரம்பிக்கும் அளவுக்கு, உபகாரப் பண்ணின ஸ்ரீரங்கநாதன் மீதியுள்ள நான்கு நிலைகளையும் ஸுலபமாகப் பூர்த்திசெய்து வைப்பான் என்பதில் ஸந்தேஹமே இல்லை.

இத்தனை நாட்களாக இந்த மஹா கைங்கர்யத்தில் ஸ்ரீரங்கநாதன் செய்துள்ள உபகாரங்களையெல்லாம் சேர்த்து நினைக்கும் போது ஆனந்தம் உண்டாகிறது; மெய்சிலிர்க்கிறது; ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது. எப்படி எப்படியோ உதவியுள்ளான். இரண்டு ஒன்று சொல்லுகிறேன்—

ஒரு நாள்—வயதான ஒருவர் என்னிடம் வந்தார். அவர் ஆயிரத்துநூறு ரூபாய்களைத் தட்டில் வைத்து ஸமர்ப்பித்தார். பத்து நூறு ரூபாய் நோட்டுகளும் நான்கு பதது ரூபாய் நோட்டுகளுமாக இருந்தன. ஆயிரத்துக்குமேல் நாற்பது ரூபாய் வைத்திருக்கிறீரே; அதற்கு என்ன காரணம் என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னார்:— நான்கு மாதங்களுக்குமுன் கோபுர கைங்கர்யத்திற்காக ஆயிரம் ரூபாய் ஸமர்ப்பிக்க வேண்டும் என்று எண்ணி எடுத்து வைத்தேன். பின்பு திடீரென்று மனம் மாறிவிட்டது. ஸமர்ப்பிக்க வேண்டாம் என்று நிறுத்தி வைத்துக்கொண்டேன். நான்கு மாதங்கள் நடுவே ஓடிவிட்டன. நேற்று இரவு ஒரு பிரமுகர் என் கனவில் வந்து அந்த ஆயிரம் ரூபாய்களை ஏன் கோபுரத்திற்காக ஸமர்ப்பிக்கவில்லை? யாருடைய பணம் அது? என்னுடையதானே? உடனே எடுத்துக்கொண்டு சென்று நீ அழகியசிங்கர் ஸ்வாமியிடம் ஸமர்ப்பித்துவிட்டு வா. நான்கு மாதங்களாக விளம்பித்ததற்கு வட்டியாக மாதம் பத்து ரூபாய் வீதம் சேர்த்து ஸமர்ப்பித்துவிடு" என்றார். காலையில் எழுந்து ஓடோடி வந்தேன். முன்பு திட்டமிட்டபடி ரூபாய் ஆயிரமும் நான்கு மாத வட்டிக்காக ரூபாய் நாற்பதுமாக ஸமர்ப்பித்துவிட்டேன் என்றார். அந்தப் பிரமுகர் யாராக இருக்க வேண்டும். நீங்களே யோசித்துப் பாருங்களேன். ஸ்ரீரங்கநாதனேதான்.

sadagopan.org

மற்றொரு ஸமயம் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த மதிவ ஸம்ப்ரதாயச் சிறுவன் ஒருவன் ஓடி வந்தான். அம்மா கொடுக்கச் சொன்னதாக ரூபாய் ஆயிரம் ஸமர்ப்பித்தான். "ஏழையாயிருக் கும் உங்களுக்கு இந்த ஆயிரம் ரூபாய் ஏது? எப்படி கிடைத்தது? இந்தக் கைங்கர்யத்திற்குத் தருகிறீர்களே?" என்று கேட்டேன். அதற்கு அந்தப் பையன் சொன்ன பதில்—என் தகப்பனார் கால மாகிப் பல வருஷங்களாகிவிட்டன. அவர் இருந்த காலத்தில் சேர்த்தது போக நாலாயிரம் ரூபாய்களை பாங்கியில் வைத்திருந் தார். எங்கள் தாயார் அந்த ரூபாய்களை எடுக்காமல் எப்படியோ கஷ்டப்பட்டு எங்களைக் காப்பாற்றி வருகிறார். நேற்று இரவு எங்கள் அம்மாவின் கனவில் அப்பா வந்து, "பாங்கியில் உள்ள பணத்திலிருந்து ஒரு ஆயிரம் ரூபாய்களை, கோபுர கைங்கர்யத் திற்காக ஸமர்ப்பித்து விட்டுவா! உங்களுக்கு ஒரு குறையும் வராது" என்று சொன்னாராம். பொழுது விடிந்ததும் என்னிடம் அம்மா இந்த ரூபாய்களைத் தந்து தங்களிடம் ஸமர்ப்பித்துவர அனுப்பினாள். என்றான்.

இப்படியெல்லாம் செய்பவன் ஸ்ரீரங்கநாதனே என்பது எல்லோருக்கும் ஸுலபமாகப் புரியும். கொம்பப் புண்யம் பண்ணினவர்களுக்கு ஸ்ரீரங்கநாதன் நேரில் ஸேவை தந்து நியமிக்கிறான். இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள்!

ஆகையால் ஸ்ரீரங்கநாதன் நியமனத்தால் நான் எடுத்துக் கொண்ட ப்ரயத்னம் இப்பொழுது ஸபலமாகிவிட்டது என்றே நினைக்கிறேன்.

சுபம்.



sadagopan.org

ஸத்தோஷத்துடன் எல்லோரும் கேளுங்கள். த்ரௌபதியை எல்லோரும் கைவிட்ட ஸமயத்தில், கைகொடுத்து ரக்ஷித்தவன் யார் என்பதை எல்லாரும் அறிந்திருப்பீர்களே? அதைப் போல், பூரங்கத்தில் அநேக தர்மிஷ்டர்களுடைய ஒத்தாசையால் கோபுரத்தில் எட்டு நிலைகளைப் பூர்ணமாகக் கட்டி முடித்துவிட்டு, ஒன்பதாவது நிலையைக் கட்ட எவர்களோ எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்களோ அவர்கள் திடீரென்று கைவிட்டு விட்டவுடனே, அதே பெயருள்ள என் ப்ரிய சிஷ்யன், மூன்று கண்ணன் அவனுக்குப் புடவை கொடுத்தது போல், லக்ஷக் கணக்கான ரூபாய்களை வாரி வழங்கி, என் கவலையை இருந்த இடம் தெரியாமல் போக்கி, எனக்கு ஸந்தோஷத்தை விருத்தியடையச் செய்தான்! ஒன்பதாவது நிலை முக்கால் பங்கு பூர்த்தியாகி விட்டது; தீபாவளிக்குள் பூர்ணமாக முடிந்துவிடும்; ஸந்தேஹமில்லை. ஒன்பதாவது நிலைக்கு நாலு லக்ஷம் ரூபாயையும் என் ஆர். கண்ணனே கொடுக்கிறான். ஒன்பதாவது நிலையைக் கிருஷ்ணன் கட்டுகிறபடியால், பத்தாவது நிலையை ராமசந்திரன் கட்ட ஒப்புக்கொண்டு நாலு லக்ஷம் ரூபாய் வரும் பண்ணிக் கொடுத்துவிட்டார். கவலை இல்லை. பதினோராவது நிலையை லக்ஷ்மி கடாக்ஷம் பெற்ற என் ப்ரிய சிஷ்யன் கட்டிவைப்பதாகச் சொல்லியனுப்பியிருக்கிறான். இதற்கு மேல் போட்டியில் இருக்கிறது. யாருக்குப் புண்ணியம் பலிக்கிறதோ, தெரியவில்லை. அதிகமாக ஆறு மாஸத்துக்குள் கோபுரம் பூர்த்தியாகி விடும். பிறகு பூச்சுவேலைகள், த்வாரபாலகர்கள், தசாவதார மூர்த்திகள், பிம்பங்கள் வைப்பது, எல்லாம் நடக்க வேண்டும். யாருடைய புண்ணியம் பலிக்கிறதோ, மேதைதான் தெரியும்.

கேள்வி—"கோபுரம் கட்டுவதனால் மோக்ஷம் வந்துவிடுமா?" என்று கேட்கிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன்,—நாலு வேதங்களையும் ஒருவன் பூர்ணமாகத் தெரிந்துகொண்டிருக்கிறான். அவனுக்கு மோக்ஷம் வந்துவிடுமா? செத்துப்போகிற வரையில் ஒருவன் ஏகாதசி உபவாஸம் இருந்துகொண்டு வருகிறான். அவனுக்கு மோக்ஷம் வந்துவிடுமா? ஒருவன் கோடிக்கணக்கில் தானங்கள் பண்ணுகிறான். அவனுக்கு மோக்ஷம் வந்திடுமா? ஒருவன் எத்தனை யாகங்கள் உண்டோ அவ்வளவையும் பண்ணினால் என்றால் அவனுக்கு மோக்ஷம் வந்துவிடுமா?

ஒருவன் கடைசிக் காலம் வரையில், பொய் சொல்லுகிறதில்லை, பரஸ்திரீகளைக் கெடுப்பதில்லை, கெட்ட வஸ்துக்களைச் சாப்பிடுவதில்லை, ஜப தபங்களை விடுகிறதில்லை, ஸ்நான ஸந்தியாவை விடுகிறதில்லை என்று நிச்சயித்துக்கொண்டு அப்படியே நடந்து வந்தால்; அவனுக்கு மோக்ஷம் வந்துவிடுமா? நித்யம் காவேரீ ஸ்நானம் பண்ணுகிறான். அவனுக்கு மோக்ஷம் வந்துவிடுமா? அல்லது கங்கா ஸ்நானம், சேது ஸ்நானம், புஷ்கர ஸ்நானம் முதலிய ஸ்நானங்களைச் செய்கிறான்; அவனுக்கு மோக்ஷம் வந்துவிடுமா?

sadagopan.org

ஒரு ஸ்திரீ, பதிவ்ரதையாகவே இருக்கிறாள்; அவளுக்கு மோக்ஷம் வந்துவிடுமா? ஒருவன் அர்ச்சகனாகவே இருந்து, பெருமாளுக்கு ஆராதனம் பண்ணிக்கொண்டு வருகிறான்; அவனுக்கு மோக்ஷம் வந்துவிடுமா? இதைப் போல் அநேக நல்ல காரியங்களைச் செய்கிறவர்களைச் சொல்லி அவர்களுக்கு மோக்ஷம் வந்துவிடுமா? என்று அவர்களைக் கேட்டேன். அதற்கு அவர்கள், 'இவர்கள் எல்லோருக்கும் மோக்ஷம் வரும்' என்று சொன்னார்கள். 'எப்படி?' என்று நான் அவர்களைக் கேட்டேன்.

வேதாக்ஷராணி யாவந்தி பதிதானி த்விஜாதிபி:।
தாவந்தி ஹரிநாமானி கீர்த்திதானி ந ஸம்ஶய: ॥

என்று பலன் சொல்லியிருக்கிறது:

யானி கானி ச பாபானி ப்ரஹ்மஹத்யாதிகானி ச ।
தானி ஸர்வாணி நஶ்யந்தி க்ருதே து ஹரிவாஸரே ॥

இப்படியே பலன் சொல்லியிருக்கிறபடியால், மோக்ஷம் வரும் என்று சொன்னார்கள்.

நான்—

நாஹம் வேதைர்ன தபஸா ந தானேன ந சேஜ்யயா ।
ஶக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவானஸி மாம் யதா ॥
பக்த்யா த்வனன்யயா ஶக்ய: அஹமேவம்விதோऽர்ஜுன ।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேன ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥

என்று 'மோக்ஷம் வராது' என்று பகவான் சொல்லியிருக்கிறாரே! என்று கேட்டேன்; "ஒன்றும் புரியவில்லை" என்றார்கள்.

எல்லாருக்கும் புரியும்படி பெரியோர் சொல்லுவார்கள். அவர்கள் சொல்லவில்லை என்றால், ஒரு நாள் டோலே உத்ஸவத்தில் நான் பண்ணின உபந்யாஸத்தைக் கேட்டிருந்தவர்கள் இதற்குப் பதில் எழுதி, உங்கள் கேள்விக்கும் பதில் சொல்லுவார்கள்.

பஶ்யந்தி கோபுரம் பூர்ணம் ரங்கநாதஸ்ய யே நரா: ।
பாபான்முக்தா: ப்ரபத்யா தே கச்சந்தி ஹரிமந்திரம் ॥
தூராத் த்ருஷ்ட்வா கோபுரம் து பத்தாஞ்ஜலிபுடா நரா: ।
கச்சந்த்யேவ ஹரிம் பக்த்யா வைகுண்ठம் தாம ஶாஶ்வதம் ॥

இந்த ஶ்லோகத்திற்படி அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும்.

sadagopan.org

ஐப்பசி மாதம் 26-ஆம் தேதி (12-11-83) ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதி தெற்கு ராஜகோபுரத்தில் ஒன்பதாவது நிலை பூர்த்தியாகக் கட்டி முடித்துவிட்டது. இந்த நிலையைக் கட்ட நான்கு லக்ஷம் ரூபாய் கொடுத்த நம் பிரிய சிஷ்யருடைய மனஸ்ஸைப்போல இது மிகவும் அழகாக அமைத்திருக்கிறது: பத்தாவது நிலையும் வெகு சீக்கிரத்தில் கட்டிப் பூர்த்தியாகி விடும்:

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் பெரியவாள் நியமனத்தின் பேரில் ஸ்ரீ பெரியவாளின் சிஷ்யர் ஒருவர் மிகவும் உத்ஸாகத்தோடு நம் மடத்தின் பெயரால் கட்டுகிறார். இதற்கு, 14-11-83, திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அங்குரார்ப்பணம் நடை பெற்றது. அப்பொழுது கேரள ராஜ்ய கவர்னர் ஸ்ரீ பாத் ராமசந்திரன் அடிக்கல் நாட்டினார். இந்த ஆரம்ப முஹூர்த்தத் திற்குத் தமிழக அரசு அறநிலையத்துறை அமைச்சர் திரு. ராம வீரப்பன், சத்துணவுத்திட்ட அமைச்சர் திரு ஸௌந்தரராஜன், மாவட்டக் கலெக்டர், அறநிலையத்துறைக் கமிஷனர், ஆந்திரப் பிரதேச முதலமைச்சரின் விசேஷ ஆலோசகர் ஸ்ரீ மூக்கூர் தேவநாதன் முதலியவர்கள் வந்திருந்து சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய தெற்கு ராஜகோபுரத்தில் பத்தாவது நிலை இந்த மார்கழி மாஸத்தில் பூர்ணமாகக் கட்டி முடித்துவிடும். இதுவரையில் மிகவும் அழகாக அமைத்திருக்கிறது. வந்து பார்க்கிறவர்கள் பரம ஸந்தோஷத்தை அடைகிறார்கள், பதினோராவது நிலையைப் பூர்ணமாகக் கட்ட ஒப்புக் கொண்டு கலக்ஷ்பண்ணாமல் இருக்க ஸ்ரீமான் மூக்கூர் சென்னை அஷ்டலக்ஷ்மி கோயில் தர்மகர்த்தா—நம் பிரிய சிஷ்யர்—மூன்று லக்ஷம் ரூபாய் கொடுத்துவிட்டார். மேலும் எவ்வளவு செலவானாலும் கொடுத்துவிடுவதாய்ச் சொல்லியிருக்கிறார். அவர் அதேக தர்ம சிந்தையுள்ளவர்களிடத்தில் லக்ஷம் பண்ணித்தான் கொடுத்திருக்கிறார்.

இம்மாதிரி பெரிய கோபுரம் பூமண்டலத்தில் எங்குமில்லை என்று இப்போதே சொல்லுகிறார்கள். பதினேழு நிலைகளையும் கட்டி முடித்து அதன் மேல் விமானமும் கட்டி முடித்துவிட்டால், எப்படித்தான் சொல்லப்போகிறார்களோ! தெரியவில்லை. பன்னிரண்டாவது நிலை கட்டுவதற்கு மூன்று பேர்கள் போட்டியிடுகிறார்கள். எப்படி? யாருக்கு? அந்த அதிருஷ்டம் கிடைக்கப் போகிறதோ தெரியவில்லை. பதினேழாவது நிலையையும் விமானத்தையும் பூர்ணமாகக் கட்டித் தமிழ்நாட்டுக்குப் பெரிய புகழை நிலைநாட்ட, ஸத்துணவு ஸ்தாபனரான நம் ஸ்ரீமான் எம்.ஜி. ஆர். அவர்கள் உத்ஸாகத்தோடு இருக்கிறார்கள். வெகு சீக்கிரத்தில் எல்லாம் பூர்த்தியாகிவிடும். ஸ்ரீரங்கநாதன் கடாக்ஷமும் எல்லோருக்கும் மேன்மேலும் விருத்தியடையும் என்பதில் எவ்வளவும் ஸந்தேகமில்லை.

sadagopan.org

ஸ்ரீலக்ஷ்மீ ஸமேதர்களான ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனுடையவும் ஸ்ரீரங்கநாதனுடையவும் ஸம்பூர்ண கடாக்ஷத்தால் ஸ்ரீரங்கத்தில் ராஜகோபுரம் கட்ட ஆரம்பித்துப் பத்தாவது நிலை பர்யந்தம் எந்தவித விக்னமும் இல்லாமல் பூர்த்தியாகியிருக்கிறது. இதற்கு மேல் இந்த மார்கழி மாஸம் 15-ஆம் தேதிக்கு மேல் கட்ட ஆரம்பித்துப் பதினோராவது நிலை அரைப் பங்கு ஆகியிருக்கிறது. இந்த நிலைக்கு மூன்றரை லக்ஷம் ரூபாய் (கூலி உட்பட) வேண்டியதாக இருக்கிறது. இதை முக்கூர் ஸ்ரீமான் பட்டண்ணா என்கிற ஸ்ரீநிவாஸவரதன் ஏற்றுக்கொண்டு மஹா ஸந்தோஷத்தோடு வஸூல் பண்ணிக் கொடுத்து விட்டார். எந்த விதமான கவலையுமில்லாமல் (வரும் தை மாத முடிவுக்குள்) பதினோராவது நிலை பூர்த்தியாகிவிடும். அந்த ஸமயத்தில் அந்தப் பதினோராவது நிலை பூர்த்தி விழாக் கொண்டாட்டமும், பன்னிரண்டாவது நிலையின் ஆரம்ப விழாவும் ஒன்றுகலவித்துச் கொள்ளலாம் என்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

அந்த விழாவை நடத்துவதற்கு முக்யமாக ஆந்த்ரப் பிரதேச முதல் மந்திரி ஸ்ரீமான் என். டி. ராமராவ் அவர்களை அழைத்துக் கொண்டு வருகிறார். மற்றும் சில பிரமுகர்களையும் அழைத்துக் கொண்டு வருகிறார். நாம் எல்லோரும் அதில் கலந்துகொண்டு ஆனந்திக்க வேண்டும். அநேகமாக வரும் ஆனி மாஸம் முடிவதற்குள் 12-13-ஆவது நிலைகளும் கட்டி முடிந்துவிடும். பிறகு விமானம் ஒன்றரை மாஸத்துக்குள் முடிந்துவிடும். எல்லோரும் சேர்ந்து ஸந்தோஷப்பட வேண்டியதான ஸமயம் சீக்கிரத்தில் வந்துவிட்டது. அதற்குப் பிறகு கோபுரம் முழுக்கப் பூச்சு வேலை செய்தாக வேண்டும். அதற்குப் பிறகு ஸம்ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும். எந்த மஹான்கள் இந்தக் கைங்கர்யத்தில் ஸம்பந்தம் எடுத்துக் கொள்ளுகிறார்களோ அவர்களுக்கும் ஸ்ரீரங்கநாதனுடைய கடாக்ஷம் பூர்ணமாக உண்டாக வேண்டும்.

நடந்த தைமாதத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய கோயில் தெற்கு ராஜகோபுரத்தில் பதினோராவது நிலை பூர்ணமாகக் கட்டி முடிந்துவிட்டது. இந்த நிலை கட்டுவதற்கு வேண்டிய ரூபாய் மூன்று லக்ஷத்தையும் முக்கூர் ஸ்ரீமான் பட்டண்ணா என்கிற ஸ்ரீநிவாஸவரதாசார்யர் தடங்கல் இல்லாமல் கொடுத்துவிட்டார். மிகவும் அழகாக அமைந்திருக்கிறது. மேலே ஏறிவந்து பார்க்கிறவர்களும் பரம ஸந்தோஷம் அடைகிறார்கள். மேலே பன்னிரண்டாவது நிலைக்கும் அஸ்திவாரம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பங்குனி மாதம் முடிவுக்குள் பூர்த்தி ஆகிவிடும். ஸந்தேஹமில்லை.

sadagopan.org

ராஜகோபுரத்திற்கு மஹாராஜாவின் நன்கொடை

ஸ்ரீரங்கம் ஸ்ரீராஜகோபுரம் திருப்பணிக்கு, திருவனந்தபுரம் அரண்மனை திருவிதாங்கூர் மஹாராஜா ஸ்ரீ ஸ்ரீபத்மநாப தாஸர் அவர்கள் ரூபாய் 50,000 (ஐம்பதினாயிரம்) வழங்கினார்.

கேரள அரசுத் தலைமைச் செயலாளர் ஸ்ரீ R. கோபாலஸ்வாமி I. A. S., மற்றும் கேரள அரசுத் தலைமை மின் எஞ்ஜினீயர் (ரிடையர்டு) ஸ்ரீ வரதராஜன் ஸ்வாமி ஆகியவர்கள் இந்த ஏற்பாட்டைச் செய்தது குறிப்பிடத்தக்கது.

—ஸ்ரீகார்யம், ஸ்ரீ அஹோபில மடம்

ஸ்ரீரங்கத்தில் ராஜகோபுரத்தில் பதினோராவது நிலை அஷ்ட லக்ஷ்மீ கோயில் தர்மகர்த்தா முக்கூர் ஸ்ரீநிவாஸவரதாசார்யர் என்ற பட்டண்ணாவினால் கட்டப்பட்டுப் பூர்த்தியாகிவிட்டது யாவருக்கும் தெரிந்ததே! இப்பொழுது பன்னிரண்டாவது நிலையை ஸ்ரீபௌண்டரீகபுரம் ஆண்டவன் ஆச்ரமத்துச் சிஷ்யரான சென்னை-ஷெனாய்நகர் ஸ்ரீ பி.ஏ.ரங்காசார்யர் என்கிற தர்மிஷ்டர் ஸொந்த ஸொத்திலிருந்து கட்டுகிறார். ஸரிபாதி கட்டி முடிந்து இருக்கிறது. பங்குனி மாதம் பதினைந்தாம் தேதிக்குள் பூர்த்தி ஆகிவிடும். எல்லோரும் பார்த்து ஸந்தோஷிக்கலாம். பதின்மூன்றாவது நிலையையும் விமானத்தையும் நம் தமிழ்நாடு அரசாங்கத்தார் கட்டி முடிக்கப்போகிறார்கள். எல்லாம் ஸ்ரீரங்கநாதன் நடத்துகிற வேடிக்கை.

ஒரு விஷயம்—நல்ல காரியங்களைச் செய்யவும் நம்மால் முடியாது; கெட்ட காரியங்களைச் செய்யவும் நம்மால் முடியாது. பகவானுடைய அநுக்ரஹம் இருந்தால்தான் நல்லது செய்ய முடியும். நமக்கு ஏற்பட்டிருக்கிற கடமைகளைச் செய்துகொண்டு வந்தால் நல்ல கதியைக் கொடுத்து, தான தர்மங்களைச் செய்யும் படிச் செய்கிறான். பிறகு மோக்ஷம் அடைய வேண்டும் என்கிற புத்தியை உண்டுபண்ணுகிறான். பிறகு ஆசார்ய கடாக்ஷத்தினால் சரணாகதியைப் பண்ணி மோக்ஷம் அடைகிறான். இந்த ஜீவாத்மா அவன் கடாக்ஷம் இல்லாமல் நாமாகவே பண்ணிவருவது ஒன்றுமில்லை.

இந்த ரீதியில் ஸ்ரீரங்கநாதன் அநேகம் புண்ணியசாலிகளை ஸகல க்ஷேமங்களையும் அடைவதற்காக இந்தக் கோபுர கைங்கர்யத்தில் ஈடுபடும்படிச் செய்து, அவர்களால் ஸமர்ப்பிக்கப்பட்ட த்ரவ்யத்தினால் எந்தக் கவலையுமில்லாமல் வெகு சீக்கிரமாகத் தன்னுடைய கோபுர கைங்கர்யத்தைப் பூர்த்திசெய்து கொள்கிறான்; இனி, கோபுரம் முழுவதும் பூச்சுவேலை செய்ய வேண்டும். இதற்கு ஸிமெண்ட் மூட்டைகள் மட்டும்தான் வேண்டும். இந்தக் கைங்கர்யத்தில் எந்த எந்த தார்மிகர்களை நியமிக்கப்போகிறானோ? தெரியவில்லை. கறந்த பசுக்களையும் கறப்பான். புதுப் பசுக்களையும் கறப்பான். தார்மிகர்கள் போட்டி போட்டுக்கொண்டு கொடுக்க முன் வருகிறபடியால் முந்திக்கொள்வது நலம். சீக்கிரத்தில் எல்லோரும் ஆனந்தத்தை அடையப்போகிறோம்.

சுபம்

sadagopan.org

ஸ்ரீரங்கநாதன் அநுக்ரஹத்தினால் ஸ்ரீரங்கத்தில் தெற்குப் பெரிய கோபுரத்தில் பன்னிரண்டு நிலைகள் நன்முகக் கட்டி முடிந்துவிட்டன. பதின்மூன்றும் நிலை இந்தப் பங்குனி மாதம் அமாவாசையை தினம் கட்ட ஆரம்பித்த வேகமாக வேலை நடந்து வருகிறது; வரும் சித்திரை மாதம் இருபது தேதிக்குள் பதின்மூன்றுவது நிலை கட்டிப் பூர்த்தியாகிவிடும்; பதின்மூன்றுவது நிலையையும் அதற்கு மேல் விமானத்தையும் தமிழ்நாட்டு அரசாங்கத்தார் கட்டி அதன் பூசு வேலையையும் செய்து முடிப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இனிக் கவலை இல்லை. ஆவணி மாஸம் ஸதஸ்ஸின்போது ஸேவித்து ஆனந்திக்கலாம்.

விமானத்தில் பதின்மூன்று கலசங்கள் அழகாக அமைத்திருக்கும். இவைகளுக்குக் கலசங்கள் திருக்குடந்தையில் ஒரு தர்மிஷ்டர்; ஸ்ரீரங்கம், திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவன் பிரியசிஷ்யர்; ஸ்ரீமதாண்டவன் நியமனப்படி செய்துகொண்டிருக்கிறார். அவையும் சீக்கிரத்தில் பண்ணி முடிந்துவிடும். எவ்விதத் தடங்கலும் இல்லாமல் ஸ்ரீரங்கநாயகியைக் கலந்துகொண்டு ஸ்ரீரங்கநாதன் நன்முக நடத்திக்கொண்டு வருகிறான். அடிக்கடி எல்லாருக்கும் ஸ்ரீரங்கம் பெரிய கோபுர விஷயமாகத் தொன்றப் பண்ணி, செலவிற்குத் தட்டுப்பாடில்லாமல் கொடுத்து வரும்படி செய்துகொண்டிருக்கிறான். எனக்கு உத்ஸாஹமாக இருக்கிறது. இப்பொழுது ஸந்தோஷப்படாதவர்கள் ஒருவரும் இல்லை. எப்பொழுது கோபுர ஸம்ப்ரோக்ஷணம் நடக்கும் என்று நானா தேசங்களிலிருந்து தபால்மூலம் கேட்டு வருகிறார்கள்.

சுபமஸ்து

ஸ்ரீரக்தாக்ஷி ஆ சித்திரை மீ 20-ஆம்உ ஸ்ரீரங்க கோபுரத்தில் பதின்மூன்றுவது நிலை பூர்ணமாக முடிந்துவிட்டது. மேல் விமானம் கட்ட ஆரம்பமாகியிருக்கிறது. எல்லோரும் உத்ஸாகமாக வேலை செய்கிறார்கள். வரும் ஆனி மீ 15-உக்குள் விமானம் பூர்த்தியாகக் கட்டி முடிந்துவிடும். பதின்மூன்றுவது நிலையையும் விமானத்தையும் நம் தமிழ்நாடு அரசாங்கத்தார் கட்டுவதாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மனஸ்ஸைப் போல நன்முக அழகாக முடியும் என்பதில் ஸந்தேஹமில்லை. அது முடிந்தவுடன் பூசுவேலையை ஆரம்பிக்க வேண்டும். அதுவும் ஆறு மாஸ காலத்துக்குள் முடியலாம் என்று தோன்றுகிறது. அடுத்த தை மாஸத்தில் ஸம்ப்ரோக்ஷணம் நடக்கலாம். பூசுவேலை முதலானவைகளுக்கு, சக்திக்கு அதிமாக ஒவ்வொருவரும் பணம் அனுப்பினால் சுலபமாக முடித்துவிடும். எல்லோரும் ஆனந்திக்கலாம்.

சுபமஸ்து

sadagopan.org

எல்லோரும் ஸந்தோஷப்படுவதற்காக இதை எழுதுகிறேன். ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ரங்கநாதனுடைய கடாக்ஷத்திற்குப் பாத்திரமான தெற்கு வாசல் ராஜகோபுரத்தில் பதினேழு நிலைகளும் பூர்த்தியாகக் கட்டி முடித்துவிட்டனர். இப்பொழுது பதினேழாவது நிலைக்கு மேல் விமானம் கட்ட ஆரம்பித்து ஒரு பாதி கட்டி முடித்திருக்கிறது. இந்த ஆனி மாதம் இருபத்தைந்து தேதிக்குள் பூர்த்தியாகக் கட்டி முடித்துவிடும் என்பதில் ஸந்தேஹமில்லை. வேலை வேகமாக நடைபெற்று வருகிறது. இதைக் கட்டி முடித்ததும் பூசசு வேலை ஆரம்பிக்க வேண்டும். புண்ணியசாலிகளான தர்மிஷ்டர்கள் ஒவ்வொருவரும் ஐந்து மூட்டைகளுக்குக் குறையாமல் விபிபி வாங்கிக் கொடுத்தார்களேயானால் போதும். பூசுவதற்குக் கூலி ஆனைகம் ஆஸ்திகர்கள் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். முந்திக்கொள்வது நல்லது.

நம் தமிழ்நாட்டு அரசாங்கத்தாரும் உத்ஸாஹத்தோடு இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து ஸாங்க்ஷன் பண்ணின பணம் வந்ததும் எவ்வளவு ரூபாய் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அருள்மொழியில் தெரியப்படுத்துகிறேன். கொஞ்சம் அவகாசம் படாதீர்கள், கட்டாயம் வந்துவிடும்.

சுபமஸ்து

ஸ்ரீரங்கநாதன் தனதுடைய திருவுள்ளப்படி ஸ்ரீரங்கத்தில் தெற்குக் கோபுரத்தை ஸம்பூர்ணமாக அதாவது பதினேழு நிலைகளோடு விமானத்தையும் கட்டி முடித்துக்கொண்டான். லக்ஷத்து ஐம்பதாயிரம் அடைந்தேன் நான். விமானத்திற்குமேல் கலசங்கள் கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். பிறகு பூசசு வேலை தான் பாக்கி. அதையும் ஆறு மாதங்களில் முடித்துவிடுவார்கள்.

பக்தர்கள் தங்கள் சக்திக்கு அதிகமாகவே விமெண்ட் மூட்டைகள் வாங்கப் பணம் அனுப்பி வருகிறார்கள். இதுவரையில் ஆயிரம் மூட்டைகளுக்கு வேண்டிய பணம் வந்துவிட்டது. புண்யம் ஸம்பாதிக்க வேண்டும் என்று எண்ணம் உள்ளவர்களுக்கு இதுதான் ஸமயம்.

நான் இப்படி எழுதிக்கொண்டிருக்கும் ஸமயத்தில் ஒரு பக்தர் சிரித்துக்கொண்டே, "விமெண்ட்டுக்குப் பணம் அனுப்பி விட்டால் போதுமா? ஸம்ப்ரோக்ஷணத்திற்குப் பணம் வேண்டாமா? இந்த மஹோத்ஸவத்திற்குச் சுமார் மூன்று லக்ஷம் ரூபாயாவது பிடிக்குமே" என்று கேட்டார். அதற்கு நான், "அந்த ஸமயத்தில் எல்லோருக்கும் தெரியப்படுத்திவிட்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாள் தடபுடலாகத் தானதர்மம் பண்ணிவிடுவார்கள். ஸம்பாவனை முதலியவற்றுக்காகப் பிடிக்கும் பணத்தை மற்றும் அதிகம் பேர்கள் ஏற்றுக்கொண்டு நன்கு நடத்திவிடுவார்கள். கவலையே இல்லை" என்று சொன்னேன். இதைக் கேட்டு அவரும் ஸந்தோஷம் அடைந்தார்.

எல்லோரும் திருநக்ஷத்திரத்திற்கு வந்து கோபுரத்தை ஸேவித்து ஆனந்தம் அடையலாம்.

சுபமஸ்து

sadagopan.org

எல்லோரும் ஸந்தோஷிக்கக் கூடிய விஷயம் – ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ரங்கநாதன் திருவுள்ளப்படி ராஜகோபுரம் பூர்ணமாகக் கட்டி முடிந்தது. இந்தத் திவ்யதேசத்தில் உள்ளவர்கள் எல்லோரும் பார்த்தும் கேட்டும் ஸந்தோஷப்படுகிறார்கள்.

தாம்ரத்தினால் – செம்பினால் பண்ணப்பட்ட கலசங்களுக்குத் தங்கரேக் போட்டுக் கலசங்களைக் கோபுரத்தில் வைக்க வேண்டியது தான் பாக்கி இருக்கிறது. பதின்மூன்று கலசங்களுக்கும் தங்க முலாம் பூச வேண்டும். ஒரு கலசத்திற்குத் தங்கம் ரேக் இழைக்க ஸுமார் மூன்று லக்ஷம் ரூபாய் ஆகிறது. செப்புக் கலசங்களைப் பண்ணிக் கொடுக்கிற ஸ்ரீமான் செட்டியார் அவர்களே ஒரு கலசத்திற்குத் தங்க ரேக் இழைத்துக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். திருக் குடந்தை ஸ்ரீமதாண்டவன் ஒரு கலசத்திற்குத் தங்கம் இழைத்துத் தருவதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கிறார். ஸ்ரீ அஹோபில மடத்தின் மூலம் இரண்டு கலசங்களுக்குத் தங்கம் பூசித் தருவ தாக ஒப்புக்கொண்டிருக்கிறேன் ஸ்ரீரங்கம் முனிஸிபால்டி கமிஷ னர் அவர்கள் ஒரு கலசத்திற்கு வஸூல செய்து தங்கம் பூசித் தருவ தாக ஒப்புக்கொண்டிருக்கிறார் ஸ்ரீமதாண்டவன் சிஷ்யரான கும்ப கோணம் ஸ்ரீ சம்பத் ஸ்வாமி ஒரு கலசத்திற்கு வஸூல் செய்து பூசிக்கொடுப்பதாக ஒப்புகொண்டிருக்கிறார் ஸ்ரீமான் உப. கேசவ ஐயங்கார் குமாரர் ஆடிட்டர் ஜனரல் கே. பாஷ்யம் ஒரு கலசத்திற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார். மற்றக் கலசங்களையும் தர்மிஷ்டர்களான மஹான்கள் தங்கள் கைங்கர்யங்களாக ஏற்றுத் தங்கத்தைப் பூசி (இழைத்துத்) தந்திடுவார்கள். கவலைப்பட வேண்டாம் என்று ஸ்ரீரங்கநாதன் தைர்யப்படுத்தியிருக்கிறான். நானும் உத்ஸாஹத் துடன் இருக்கிறேன். இதற்குத் தகுந்தாற்போல் மணியார்டர்கள் வந்துகொண்டே இருக்கின்றன. இந்தக் கோபுர கைங்கர்யத்தில் எந்த எந்தப் புண்ணியவான்களுக்கு ஸம்பந்தம் கிடைக்குமோ என்று தெரியவில்லை. நேரில் வந்து பார்த்தார்களேயானால் ஆயிரக் கணக்கில், ஏன் லக்ஷக்கணக்கில் கொடுக்க வேண்டும் என்று தோன்றிவிடும்.

இந்தக் கோபுரமானது எனது ப்ரயத்தனத்தால்தான் கட்டிப் பூர்த்தியாயிற்று என்பதில்லை. ஸ்ரீரங்கநாதன் ஸ்வஸ்மை ஸ்வப்ரீ தயே ஸ்வயமேவ காரிதவான்.

நமது தமிழ்நாட்டரசாங்கத்தார் பதின்மூன்றாவது நிலைக்கும் அதற்கு மேல் விமானத்தைக் கட்டுவதற்கும் வேண்டிய ரூபாயைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட ரூபாய் ஏழு லக்ஷத்தையும் ஒரே தடவையில் ட்ராப்டாகக் கொடுத்துவிட்டார்கள். மேலும் கொடுத்து உதவுவார்கள் என்று நம்புகிறேன்.

sadagopan.org

ஸ்ரீரங்கத்தில் தெற்கு ராஜகோபுரம் ஸம்பூர்ணமாகக் கட்டி முடிந்தது ஸந்தோஷிக்கத் தகுந்ததே. பதினேழு கலசங்கள் வைக்க வேண்டும். இதுவரையில் பத்துக் கலசங்கள்தாம் பண்ணி முடித்திருக்கின்றன. கார்த்திகை மாதத்திற்குள் மற்றவைகளையும் செய்து கொடுத்துவிடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதன் பிறகுதான் கலசங்கள் கும்பகோணத்திலிருந்து ஸ்ரீரங்கத்திற்குக் கொண்டுவர வேண்டும். எல்லாக் கலசங்களுக்கும் தங்க முலாம் பூசித்தான் கோபுரத்தின் மேலே வைக்க வேண்டும். எட்டுக் கலசம் வரை தங்க முலாம் பூச எட்டுப் பேர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கோபுரத்திற்குச் சிமெண்டு பூச்சு வேலை செய்ய வரும்படி வந்து கொண்டிருக்கிறது. சீக்கிரத்தில் முடிந்துவிடும். அடுத்த ஆவணி மாதம் ஸம்ப்ரோக்ஷணம் பண்ணிவிடலாம் என்று எண்ணுகிறேன். ஸ்ரீரங்கநாதனின் திருவுள்ளம் எப்படியோ தெரியவில்லை. சிலர் சிமெண்டு மூட்டைகளாகவும் கொடுக்கிறார்கள். ஒரு ரூபாய், இரண்டு ரூபாயாக மணியார்டர் செய்கிறார்கள். இவ்விதம் ஒரு நாளைக்கு இருநூறு ரூபாய்க்கு மேல் வருகிறது. நேரிலும் அனேகம் பேர் கொடுக்கிறார்கள். ஒருவர் வந்தார்; அவர் எதிர்பாராத விதமாகப் பத்தாயிரம் ரூபாய்க் கட்டு ஒன்று கொடுத்தார். என்ன இது? என்று கேட்டேன். 'இன்றைக்குத்தான் ஸ்ரீரங்கநாதன் கோபுரத்திற்கு இத்தத் தொகையை ஸமர்ப்பிக்கும்படித் தோன்றப் பண்ணினார்' என்றார். ஒருவர் ஒரு பவுன் கொடுத்து, 'இதைக் கலசத்திற்குப் பூச வைத்துக்கொள்ள வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். ஒருவர் வந்து தாம் தனியாக ஒரு கலசத்திற்குத் தங்க முலாம் பூச ஏற்பாடு செய்வதாகச் சொன்னார். ஆனால் தம் பேரைச் சொல்லக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். 'ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதன் வரவு என்று எழுதிக்கொள்ளுங்கள்' என்கிறார். இவ்விதம் விசித்திரம் விசித்திரமாக வரும்படி வருகிறது. சீக்கிரத்தில் எல்லோரும் ஸந்தோஷப்படும்படி பூர்த்தியாகி, கோபுர ஸம்ப்ரோக்ஷணம் நடைபெறும்.

சுபமஸ்து

எல்லோரும் ஸ்ரீரங்கநாதன் தெற்குக் கோபுரத்தை ஸேவித்து ஆனந்தப்படுகிறார்கள். பதினேழு நிலைகளும் அதற்கு மேல் விமானமும் கட்டிப் பூர்த்தியாகிவிட்டது. விமானத்தின் மேல் கிழக்கு மேற்கு இரண்டு பாகங்களிலும் ஸிம்மலலாடம் பத்து அடி

sadagopan.org

உயரமுள்ளது கட்டி முடிந்துவிட்டது...இந்த ஐப்பசி மாதம் பதினேந்தாம் தேதி பதினேழு கலசங்களையும் வைத்துக் கட்டப் போகிறார்கள். பிறகு பூசு வேலைதான் பாக்கி. ஸிமின்டிற்கு அதிகம் பேர் பணம் அனுப்பி இருக்கிறார்கள். கோபுரத்தைப் பார்க்க வருகிற ஜனங்களைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. பார்க்கிறவர்கள் கண்களிலிருந்து ஜலம் வழிகிறது. கைகளை கூப்பியபடியே நிற்கிறார்கள். அடுத்த ஆவணி மாதம் கும்பாபிஷேகம் செய்து விடலாம்.

இப்படி இருக்கும் ஸமயத்தில் அறநிலைய மந்திரி ஸ்ரீமான் வீரப்பன், மற்றொரு மந்திரி ஸ்ரீமான் ஸௌந்தரராஜன் ஆகியவர்களுடைய முயற்சியில் ஸ்ரீரங்கநாதனே புகுந்து வடக்குவாசல் கோபுரத்தையும் பூர்ணமாகக் கட்ட நியமித்திருக்கிறான். அதற்கு வேண்டிய காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. நாளது ஐப்பசி மாதம் பதினாம்தேதி அல்லது பன்னிரண்டாம் தேதியில் அஸ்திவாரம் போடப்போகிறார்கள். ஏழு நிலைகள் கட்டப்படும். முதல் நிலைச் செலவு நம் ஸ்ரீமதழகிய சிங்கர் மடத்தைச் சேர்ந்தது. இரண்டாவது நிலை கட்டுவதை ஸ்ரீமதழகிய மணவாளன் ஏற்றுக்கொள்வார். அனேக ஆஸ்திகர்கள் ஆயிரக் கணக்கில் பணம் கொடுத்து உதவுவார்கள் என நம்புகிறேன். ஸுமார் பதினேந்து லக்ஷத்திலிருந்து இருபத்தைந்து லக்ஷத்திற்குள் பூர்த்தி ஆகிவிடும் என்று ஸ்தபதிகள் சொல்லுகிறார்கள். எல்லாம் ஸ்ரீரங்கநாதன் விளையாட்டு என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட விஷயத்தில் செலவழிக்கிற பணம்தான் நிரம்முடையது என்று நினைத்துப் பல ஆஸ்திகர்கள் பணம் அனுப்புகிறார்கள்.

சுபமஸ்து

ஓர் ஆஸ்திகரின் நன்கொடை

அண்ணாமலை பல்கலைக்கழக இணை வேந்தர் டாக்டர் எம். ஏ. எம். ராமஸ்வாமி அவர்கள் ஸ்ரீரங்கம் ஸ்ரீ ராஜகோபுரத் திருப்பணிக்கு, மாண்புமிகு அமைச்சர் இராம. வீரப்பன் மூலம் ரூபாய் ஒரு லக்ஷத்திற்கான டிராப்ட்டை அனுப்பி வைத்தார்.

இந்த ஏற்பாடுகளை ஸ்ரீமான் கோவிலடி ஸ்ரீ என். கே. எஸ். ராகவன், ஸ்ரீமான் கே. எம். ராமசேஷன் இவர்கள் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப்படிக்கு,
பனமுக வித்வான்
ஸ்ரீ வீ. நரஸிம்ஹாசாரியார்
ஸ்ரீகாரியம், ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீரங்கம்.

sadagopan.org

ஸ்ரீரங்கத்தில் ராஜகோபுரத்தை சேவிக்கிறவர்கள் பரம சந்தோஷத்தை அடைகிறார்கள். கோபுரத்தில் விமானத்தில் கிழக்கு-மேற்கு இரண்டு பக்கங்களிலும் ஏழேழு நிலைகளும் இரண்டும் கட்டியாகிவிட்டது. நடுவில் பதினாறு கலசங்கள் வைக்க வேண்டியதுதான் பாக்கி இருக்கிறது. சில காரணங்களால் ஐப்பசி மாதத்தில் வைக்க முடியவில்லை. இந்தக் கார்த்திகை மாதம் முடிவுக்குள் கலசங்களையும் வைத்துக் கட்டிவிடலாம். பூச்சுவேலை ஆரம்பித்து வேகமாக நடந்து வருகிறது. பக்தர்கள் உற்சாகத்துடன் பணம் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். வருகிற ஆவணி மாதம் ஸம்ப்ரோக்ஷணம் பண்ணிவிடலாம் என்று சொல்லுகிறார்கள்.

தவிர, தெற்கு கோபுரம்போல் வடக்குப் பக்கத்தில் சின்னதான ஒரு கோபுரம் கட்ட அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறது. ஸ்ரீரங்க தாதன் நியமனத்தில் அதையும் கட்ட ஆரம்பித்து இருக்கிறது, சுமார். இருபது லக்ஷம் ரூபாய்கள் வேண்டியிருக்கின்றன. இதுவரையில் ஐந்து லக்ஷம் ரூபாய்கள் வரையில் சேர்ந்துள்ளன.

இந்த வடக்குக் கோபுரம் கிழக்கு-மேற்கில் 65 அடி நீளம், தெற்கு வடக்கில் 50 அடி அகலம் அளவில் ஏழு நிலைகளும், ஏழு கலசங்களும் கொண்டதாக இருக்கும் என்று முடிவு செய்திருக்கிறது. இந்தக் கோபுரத்தையும் ஆவணிக்குள் கட்டி ஸம்ப்ரோக்ஷணம் பண்ணிவிட வேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

அடுத்த மாலோல ஸபையை ஸம்ப்ரோக்ஷண ஸமயத்தில் வைத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதான் நடத்தி வைக்க வேண்டும்.

वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः
श्रीभाष्यगीतार्थरहस्यसारान् ।
संतुष्टचित्ताः विमृशन्ति यत्र
सभा सतां तां प्रणमामि मूर्ध्ना ।।

வேதாந்தவிஜ்ஞானஸுநிச்சிதார்த்தா:
ஸ்ரீபாஷ்ய கீதார்த்த ரஹஸ்யஸாரான் !
ஸந்துஷ்டசித்தா: விம்ருசந்தி யத்ர
ஸபா ஸதாம் தாம் ப்ரணமாமி மூர்த்நா !

சுபம் அஸ்து

sadagopan.org

பரம ஸந்தோஷத்தோடு எழுதுகிறேன். ஸ்ரீரங்கநாதனுடைய தெற்கு கோபுரம் பூர்ணமாகக் கட்டி முடிந்துவிட்டது. கோபுரத்தின் உள் பக்கத்தில் முக்கால் பாகம் பூச்சு வேலை முடிந்துவிட்டது. விமானத்தின் வெளிப்பக்கம் பூசி ஆகிவிட்டது. பதினேழாவது நிலையின் வெளிப்பக்கம் பூச ஆரம்பித்திருக்கிறார்கள். மார்கழி மாத முடிவிற்குள் எல்லாக்கலசங்களும் வைக்கப்பட்டுவிடும். அடுத்த வருஷம் ஆவணி மாதம் மூல நக்ஷத்திரத்தில் ஸம்ப்ரோக்ஷணத்தை பகவத் ஸங்கல்பப்படி நடத்திவிடலாம் என்று நினைக்கிறேன்.

வடக்கு கோபுரத்தையும் கட்ட ஆரம்பிக்கப் போகிறோம். எல்லோரும் ஸந்தோஷத்துடன் பணம் அனுப்புகிறார்கள். பதினைந்து லக்ஷம் ரூபாய் வேண்டியிருக்கிறது. இதற்கு ஒரு வழி தோன்று கிறது. இது வரையில் கோபுர கைங்கர்யத்திற்குப் பணம் கொடுக்காதவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் கொஞ்சம் கொஞ்சம் அனுப்பினால் போதும். இது வரையில் கொடுத்து ஒத்தாசை பண்ணியவர்கள் நாங்களும் கொடுக்கிறோம் என்று ஸந்தோஷத்துடன் கொடுத்தார்களேயானால் 'எப்படிக் கட்டி முடிக்கிறது' என்று கவலைப்பட ப்ரஸக்தியே இல்லை. எதற்காக வடக்கு கோபுரத்தைக் கட்ட வேண்டும் என்றால்? இதற்கு பதில் சொல்லத் தெரியவில்லை. ஸ்ரீரங்கநாதனைக் கேளுங்கள். ஸ்ரீரங்க நாயகித் தாயார் அநுக்ரஹத்தால்தான் அழகாகக் கட்டி முடிக்க வேண்டும். தெய்வமில்லை என்று சொல்லுகிறவர்கள் ஸ்ரீரங்கத்தில் யாருமே இல்லை. கோபுரத்தைப் பார்த்தவுடனே ஸ்ரீரங்கநாதனை நினைக்கிறார்கள். உடனே அவர்கள் பாபங்கள் போய்விடுகின்றன. அதனால் நல்ல புத்தி வந்துவிடுகிறது. கோபுரத்திற்கு நம்மால் இயன்றதை ஏதாவது கொடுக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். ஐந்து ரூபாய் கொடுக்க வேண்டுமென்று பையில் கையை விடுகிறார்கள். அவர்களின் கைவிரல்கள் பதினைந்து ரூபாயை எடுத்து விடுகின்றன. ஸ்ரீரங்கநாதனின் நியமனம் - உத்தரவு என்று நினைத்து அப்படியே கொடுத்துவிடுகிறார்கள். எத்தனையோ வேடிக்கைகள் நடக்கின்றன. அனைதையும் எழுதி முடியாது.

ஸம்ப்ரோக்ஷணத்திற்கு எவ்வளவு பணம் வேண்டியிருக்குமோ? தெரியவில்லை. உடனே 'கவலைப்பட வேண்டாம்' என்று யாரோ சொல்லுவது போல் தோன்றுகிறது எனக்கும் இதற்குமேல் எழுதத் தோன்றவில்லை. லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து.

sadagopan.org

श्रीरङ्गे गोपुरं दृष्ट्वा रङ्गनाथपदाम्बुजम् ।
स्मृत्वा पापात् प्रमुच्यन्ते नरास्सर्वे शुभाश्रयाः ।

ஸ்ரீரங்கே கோபுரம் த்ருஷ்ட்வா ரங்கநாதபதாம்புஜம் ।
ஸ்ம்ருத்வா பாபாத் ப்ரமுச்யந்தே நராஸ் ஸர்வே
சுபாச்ரயா: ॥

சுபமஸ்து

மிகவும் ஸந்தோஷத்துடன் இருக்கிறேன். கோபுரத்தின் பூச்சு வேலை மூன்று மாதங்களில் முடிந்துவிடும் என்று எண்ணுகிறேன். பூச்சு வேலைக்கு வேண்டிய பணம் வந்துகொண்டிருக்கிறது.

கலசங்களை வைப்பதற்கு வேண்டிய வேலைகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன. கோபுரத்தை ஸேவிக்க வரும் பக்தர்கள் கலசங்களை இப்படியே வைக்க ஸம்மதிக்கவில்லை. கலசங்களுக்குத் தங்க முலாம் (ரேக்) பூசித்தான் வைக்க வேண்டும் என்கிறார்கள். இரண்டாவது நிலை கட்ட முழுப் பணமும் கொடுத்த திருக்குடந்தை ஸ்ரீமத் ஆண்டவன் மூன்று லக்ஷம் ரூபாய் செலவில் ஒரு கலசத்திற்குத் தங்க முலாம் பூசிக் கொடுப்பதாய்த் திருவுள்ளம் பற்றியிருக்கிறார். ஸ்ரீமதஹோபில மடத்திலிருந்து இரண்டு கலசங்களுக்கு தங்க முலாம் பூசத் தீர்மானித்துள்ளேன். சேலம் ஆடிட்டர் ஸ்ரீராமசந்திரன் மூலமாக ஒரு கலசத்திற்குத் தங்கம் பூசப்படுகிறது. பதின்மூன்று கலசங்களையும் உபயமாகப் பண்ணிக் கொடுக்கிற கும்பகோணம் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் ஒரு கலசத்திற்கு தங்கப் பூச்சுப் பூசிக்கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். ஸ்ரீரங்கம் திவ்யதேசவாஸிகளான பக்தர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கலசத்திற்குத் தங்கம் பூசித்தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நமது தமிழ்நாட்டின் அரசாங்கத்தார் எத்தனை கலசங்களுக்குத் தங்க ரேக் பூசிக் கொடுப்பார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. இரண்டு கலசங்களுக்காவது பூசிக் கொடுப்பார்கள் என்று ஸம்பந்தப்பட்டவர்கள் சொல்லுகிறார்கள். மற்றவர்களும் பங்கு கொண்டால் ஸ்வல்பமாகப் பூர்த்தி செய்துவிடலாம். எனக்குத் தெரியாமல் போய்விட்டதே நானும் இதில் பங்குகொண்டிருப்பேனே என்று யாரும் பிறகு சொல்லாமல் இருப்பதற்காகத்தான் இந்தப் பத்திரிகையில் (ஸ்ரீ நருஸிம்ஹப்ரியாவில்) எழுதினேன். இந்தத் தங்கப் பூச்சில் கலந்துகொண்டால் இவ்வுலகில் இருக்கிற வரையில் ஸகலவித ஆனந்தங்களையும் அநுபவித்துவிட்டுத் தங்கமயமான ஸ்ரீவைகுண்டத்திலும் பரமானந்தத்தை அநுபவிக்கலாம். சுபமஸ்து

sadagopan.org

ஸ்ரீரங்கம் ராஜகோபுரத்திற்கான பதின்மூன்று கலசங்கள் திரு S.R.G. ரங்கநாதன் செட்டியார் அவர்களின் உபயமாக ஸமர்ப்பிக்கப்படுகின்றன என்பதை முன்னமே தெரிவித்திருக்கிறோம்.

1■—3—85 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் கும்பகோணத்திலிருந்து புறப்பட்டுத் தஞ்சை - திருச்சி வழியாகப் பொது ஜனங்களுக்கு சேவை தந்து 11—3—85 திங்கட்கிழமை காலை 4-30 மணிக்கு ஸ்ரீரங்கம் ராஜகோபுரத்திற்கு அருகே கலசங்கள் வந்து சேர்ந்தன. வேத கோஷத்துடன் மாலை மரியாதைகள் செய்யப்பட்டுக் கலசங்கள் வரவேற்கப்பட்டன. பிறகு, உத்திர வீதி, சித்திரை வீதிகளில் வேதபாராயணத்துடனும் வாத்யக் கச்சேரியுடனும் வைபவமாக எடுத்துச் செல்லப்பட்டுத் தெற்குத் திருவாயில் வழியாக அரங்கன் திருமுற்றத்தை அடைந்தன.

பரம பாவனங்களான இந்தக் கலசங்களைக் கண்டவர்கள் யாவரும் கண்பெற்ற பயனைப் பெற்றதாகக் கருதினர்கள். இவற்றைக் காணாத பிறர்களின் கண்கள் "கண்ணல்ல கண்டாமே" என்ற திருமங்கையாழ்வார் திருவுள்ளப்படியேயாயின.

ஆலயத்திற்கு அழகு தருவது கோபுரம். அந்தக் கோபுரத்திற்கும் அழகு தருவன இந்தக் கலசங்களேயாம். வீதிவலம் வரும் வகையில் இதை இந்தக் கலசங்களே நிரூபித்தன.

கூடிய சீக்ரத்தில் இந்தக்கலசங்கள் கோபுரத்தின் உச்சியில் உதய பர்வதத்தின் மேல் ஒருங்கே தோன்றிய ஸூர்யன்களோ இவை என்னும்படி அமர்ந்து விளங்கி நம் தமிழகத்துக்கே அழகு செய்து அனைவரையும் அழைத்து அரங்கத்தம்மானின் அருள் பெறும்படி செய்யப்போகின்றன.

உள்பூச்சு வேலைகள் முடிந்து வெளிப் பூச்சுவேலை நடந்து வருகிறது.

ஆனி மாதமே ஸம்ப்ரோக்ஷணம் செய்ய வேணுமென்று ஆசையுள்ளது. ஆனால் ஸ்ரீரங்கநாதன் எப்பொழுது திருவுள்ளமுற்றி இருக்கிறானோ. பிறகு தெரிவிக்கிறோம். ஸ்ரீரங்கநாதன் எம் கனவில் நியமித்த காரியத்தை தானே நிறைவேற்றிக்கொண்டான். இனி எனக்குப் பரமும் - பயமும் உண்டோ?

प्रथमां मे जनार्दन:

sadagopan.org

மிகவும் ஸந்தோஷத்துடன் இதை எழுதுகிறோம். ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் பூர்த்தியாகிவிட்டது. பதின்மூன்று நிலைகளிலும் உள் பக்கம் ஸிமெண்ட் பூசி ஆகிவிட்டது. ஸிம்ஹ லலாடம் முதலியவையும் அது அதற்கு உரிய இடங்களில் அமைக்கப்பட்டுவிட்டன. மேலிருந்து வெளிப்பக்கம் பூச்சு நடக்கிறது. ஏழு நிலைகள் பூச்சு ஆகிவிட்டது. மீதி பூச்சு வேலையும் மூன்று மாஸங்களில் பூர்த்தியாகிவிடும். பத்தர் களான பொதுஜனங்களும் கோபுர கைங்கர்யத்துக்காக மிகவும் உத் ஸாஹத்துடன் த்ரவ்யத்தை அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள்..

ஸம்ப்ரோக்ஷண வைபவத்தை சீக்ரத்திலேயே ஸேவிக்கவேண் டுமென்ற ஆர்வம் எல்லோருக்கும் இருந்துகொண்டேயிருக்கிறது. ஸ்ரீரங்கநாதனும் கஜேந்த்ராழ்வானுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்வதற்கு அதிக த்வரையைக் காட்டினாற்போல், பக்தகோடிகளு டையவும் நம்முடையவும் மனோரதத்தைப் பூர்த்தி செய்ய மிகவும் த்வரிக்கிறான் போலும்.

நம்முடைய மனதில் புகுந்து கோபுர கைங்கர்யத்தை நிறை வேற்றிக் கொள்ள ஆசைப்பட்டதுபோல் மஹாஜனங்களுக்கு ச்ரேயஸ்ஸை உண்டுபண்ண அவர்களுடைய மனங்களிலும் புகுந்து தனத்தையும், ஸிமண்ட் முதலியவைகளையும் கொடுக்கும்படி செய்து ஸாக்ருதத்தை உண்டுபண்ணுகிறான்.

இப்போது முதல் ஆவரணத்தில் மூலவர் நிலையில் சில்பவேலை நடைபெற்று வருகிறது. ஸ்ரீரங்கநாதன் கர்பக்ருஹத்தில் எந்த ஸந்நிவேசத்தில் ஸ்ரீரங்கநாதன் எழுந்தருளியிருக்கிறாரோ அதே ஸந்நிவேசத்தில் ஸ்ரீரங்கநாதனே ராஜகோபுரத்திலும் ப்ரதம ஆவரண த்வாரத்தில் அமைக்கிறார்கள்.

அங்கு ப்ரணவாகார விமானம்போல் இங்கும் விமானம் அமைத் தாகிவிட்டது. கர்பக்ருஹத்தில் ஸ்ரீரங்கநாதன் எவ்விதம் எழுந்தருளி யிருக்கிறார் என்பதை இந்த ராயகோபுர வாஸலில் இருந்துகொண்டே இதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். கர்பக்ருஹம் அங்கு கீழே உள்ளது. இங்கே கோபுரத்தில் ப்ரதம ஆவரண த்வாரத்தில் உள்ள படியால் தூரத்தில் இருந்து ஸேவித்தே பாக்யத்தைப் பெறலாம்.

sadagopan.org

நமது க்ருஹங்களில் பெருமானே எழுந்தருளப் பண்ண ஒரு கோவில் போன்ற அமைப்பை மரத்தால் ஏற்படுத்துகிறோம். அதற்கு ஸ்ரீவைஷ்ணவ பரிபாஷையில் 'கோவில் ஆழ்வார்' என்று வ்யவஹாரம். விஷ்ணு ஆலயங்களிலுள்ள கோபுரத்துக்கு அந்த பரிபாஷையில் 'திருக்கோபுரத்து நம்பிகள்' என்று வ்யவஹரிப்பதுண்டு.

இதனால் நாம் தெரிந்து கொண்டது என்ன என்றால்—கோபுரம் என்பது செங்கல், கருங்கல் இவற்றால் ஏற்பட்ட வெறும் பொருள் அல்ல. அது விசேஷப்பொருள். எம்பெருமானுடைய ஸங்கல்பத்தால் அதில் ஒரு அதிஷ்டான தேவதை மந்த்ர மூலமாக வந்து அமர்ந்து விடுகிறது— அது பகவான் என்றும் சொல்லலாம்.

ஆக, கோபுரத்தைத் தர்சித்த மாத்திரத்திலேயே பாபங்கள் விலகிவிடுகின்றன. ஸுக்ருதத்தைச் ஸம்பாதித்துக் கொள்ளுகிறோம். ஆகவே 'கோபுர தர்சனம் கோடி புண்ய ப்ரதம்—' என்ற வசனம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கோபுரத்தின் உள்ளேயே விமானத்தையும் ஸ்ரீரங்கநாதனையும் அமைக்கிறபடியால் விமான தர்சனமும், ஸ்ரீரங்கநாத தர்சனமும் இங்கேயே கிடைக்கின்றன.

கர்ப க்ருஹத்திலுள்ள எம்பெருமானே ஸேவிப்பதற்கு காலம், வ்யக்தி முதலியவைகளைக் கொண்டு பல நியமங்கள் உண்டு. இங்கே கோபுரத்தையும் அதில் உள்ள விமானத்தையும், அதனுள் உள்ள ஸ்ரீரங்கநாதனையும் ஸேவிப்பதற்கு எந்த நியமமும் தேவையில்லை. எல்லா காலத்திலும் எல்லா வ்யக்திகளும் எல்லா அவஸ்தைகளிலும் ஸேவித்துப் பாக்யத்தைப் பெறலாம். இதற்கு பக்தி, விச்வாஸம் இவைதான் வேண்டும்.

ரயில், பஸ் முதலியவைகளில் திருச்சிக்கு வந்து ஸ்ரீரங்கம் வரும் பஸ்ஸில் ஏறி தெற்கு கோபுர வாயிலில் இறங்கிய உடனேயே— ஸேவிக்க வேண்டும் என்ற நினைவில்லாதவர்களுக்கும் கோபுரம், விமானம், ஸ்ரீரங்கநாதன்— ஸேவைகள் கிடைத்து விடுகின்றன.

இப்படி ஸர்வஜ்ஞனான தன்னே அநாயாஸமாக ஸேவித்து ஸகலவித ச்ரேயஸ்ஸையும் எல்லோரும் அடைய ஸர்வாந்தர்யாமியான அவனே ஸங்கல்பித்துள்ளான்.

sadagopan.org

இன்னும் இதில் செய்ய வேண்டிய திருப்பணிகளுக்கு ஆஸ்திக மக்கள் அதிக அளவில் உதவிசெய்து ஸகலச்ரேயஸ்ஸுகளையும் பெறுவதுடன் ஸம்ப்ரோக்ஷண வைபவத்திலும் கலந்துக் கொண்டு கண்கள் படைத்தப் பயனைப் பெற வரவேண்டும்.

நாளது குரோதன வைகாசி மாஸத்தில் ஸ்ரீ ராஜகோபுர ஸம்ப்ரோக்ஷணத்தைக் கட்டாயம் ஸ்ரீரங்கநாதன் நடத்திக்கொள்வான் என்று நினைக்கிறேன். वातु प्रणतरक्षायां विलम्बमसहिष्णुव ।
सदा पञ्चायुधीं बिभ्रत् स नः श्रीरङ्गनायक. ।।

யார் பண்ணினபுண்யத்திலுளோ ஸ்ரீரங்கத்தில் ராஜகோபுரம் பூர்ணமாகக் கட்டி முடிந்துவிட்டது. உள்பக்கம் முழுவதும் பூசியாய் விட்டது. மேல்புறத்தில் விமானத்திலிருந்து ஆருவது நிலை வரையிலும் வெளிப் பூச்சு ஆகிவிட்டது. ஐந்து நிலைகள்தான் பாக்கி. விமானத்தில் கஜலக்ஷ்மி, பக்ஷிராஜன் முதலிய விக்ரஹங்களும் அமைந்து இருக்கின்றன. பதின்மூன்றுவது நிலையிலும் நான்கு பக்கங்களிலும் ஸுமார் 25 விக்ரஹங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. முதல் நிலையில் தென்பாகத்தில் திவ்யமான மண்டபத்தோடு ஸ்ரீரங்கநாதன் மூலவர் பிம்பம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இது வரையில் செலவுக்கு எந்த விதமான கஷ்டமுமில்லாமல் ஸ்ரீரங்கநாதன் கொடுக்கும்படி பக்தர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். வருகிற தை மாஸம் ஸம்ப்ரோக்ஷணம் செய்யத் தீர்மானித்திருக்கிறது. சீக்கிரத்தில் பத்ரிகை போட்டு அனுப்புவதாக உத்தேசம். ஸம்ப்ரோக்ஷணத்திற்கு [செலவுக்கு] ஸுமார் ஐந்து லக்ஷம் ரூபாய் வேண்டியிருக்கும். அநேகம் பக்தர்கள் ஸாமான்களாக அனுப்புவதாகவும் சொல்லுகிறார்கள். நன்றாகவே நடக்கும் என்று தோன்றுகிறது. இதுவரையில் எவ்வித விக்நமும் இல்லாமல் கட்டி முடிந்தது போல ஸம்ப்ரோக்ஷணமும் நிர்விக்நமாக நடந்துவிடும் என்று ஸந்தோஷத்துடன் எதிர்பார்க்கிறேன்.

இவ்வளவும் வருவது ஸ்ரீரங்கம் ராஜகோபுர தர்சனத்தினால் என்பதை அறியவும். ராஜகோபுரத்தை ஒருதரம் கண்டவர்கள் ஆஸ்திகர்களாக ஆகிவிடுகிறார்கள். கோபுரத்தைக் கண்டு பரிகாசம் செய்தாலும், தூஷித்தாலும், அஸூயைப்பட்டாலும், ஸ்ரீரங்கநாதன் கோபுரம் என்றுதானே நினைக்க வேண்டியிருக்கிறது? அப்பொழுது ஸ்ரீரங்கநாதன் அவர்களுடைய மனஸ்ஸில் இறங்கிவிடுகிறான். கொஞ்சம் கொஞ்சமாக அந்த மனஸ்ஸில் உள்ள கல்மஷத்தைப் போக்கிக் கொஞ்சம் கொஞ்சமாக விச்வாஸத்தை வளர்த்து அவர்களைப் பக்தர்களாக ஆக்கி, தன்னை அறியும்படியான புத்தியை அடைய ஒரு ஆசார்ய ஸம்பந்தத்தை அடையும்படி செய்துவிடுகிறான். மேன்மேலும் அவர்கள் பக்தர்களாக ஆகிவிடுகிறார்கள்.

sadagopan.org

இப்பொழுதும் தங்களை 'நாஸ்திகர்கள்' என்று சொல்லுகிறவர்களும் தங்களுக்குள்ள பெயர்களை மாற்றிக்கொள்ளாமல் பகவானுடைய பெயரையேதானே வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? அவர்களை-பகவானுடைய பெயர்களை வைத்துக்கொண்டிருப்பவர்களை நாம் நாஸ்திகர்கள் என்றுஞ் நம்மைப் போல் மதி கெட்டவர்கள் யாரும் இல்லை என்று அறியவும்.

ஆகையால் கோபுர தர்சனத்தால் எல்லோரும் தாங்கள் செய்திருக்கிற பாபங்களை ஒழித்து, புண்யங்களை அதிகப்படுத்திக்கொண்டு ஸகல க்ஷேமங்களையும் அடைகிறார்கள் என்பதில் ஸந்தேகமில்லை.

சுபமஸ்து

ஸ்ரீரங்கநாதன் தெற்கு ராஜகோபுரம் அழகாகக் கட்டி முடித்து விட்டது. பூச்சுவேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. சீக்கிரத்தில் முடிந்துவிடும். தை மாதத்தில் ஸம்ப்ரோக்ஷணம் பண்ண வேண்டுமென்று உத்தேசம்.

கோபுரத்தைப் பார்த்து ஸந்தோஷப்படாதவர்களே இல்லை. ஸ்ரீரங்கநாதன் கடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாகாதவர்களில்லை. கோபுரத்தை ஸேவித்துவிட்டு அவர்கள் கைகூப்பிக்கொண்டு நிற்பதைப் பார்த்தால் இது கலியுகமா? க்ருதயுகமா? என்று ஸந்தேஹிக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுதுதான் எல்லோரும் அவரவர்கள் தங்கள் தங்கள் சக்திக்கு மேல் தானம் கொடுக்கிறார்கள்.

கோபுரத்தைப் பார்த்து அவர்கள் கைகூப்புவதை ஸ்ரீரங்கநாதன் தன்திருவடியை நினைத்துக் கையைக்கூப்புவதாகத் திருவுள்ளம் பற்றுகிறான். உடனே அவர்களின் பாபங்களைப் போக்குகிறான். அவர்களுக்கு மேலும் பக்தியை உண்டுபண்ணுகிறான். உடனே அவர்கள் நல்ல கதியை அடைவதற்கு உபாயத்தைத் தேடுகிறார்கள். சாஸ்த்ரம் படித்த பெரியோர்களிடத்திலிருந்து நல்ல விஷயங்களைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். அவர்கள் உபதேசித்தபடியே நல்ல காரியங்களைச் செய்கிறார்கள். நல்ல கதியை அடைவதற்கு-என்ன காரியங்களைச் செய்கிறார்கள் தெரியுமா? ப்ராஹ்மணன் முதலான நாலு வர்ணத்தவர்களும் பகவானாலே ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்கள் என்று தெரிந்துகொள்ளுகிறார்கள். அந்த அந்த ஜாதிகளுக்கு ஏற்பட்ட கடமைகளைச் செய்ய ஆரம்பிக்கிறார்கள். எல்லோரும் ஸமாச்ரயணம் பண்ணிக் கொள்ளுகிறார்கள். பரிசுத்தராகிறார்கள். அதன் பிறகு ஸ்ரீவைகுண்டத்தை அடைய, பகவானிடத்தில் சரணாகதி பண்ணுகிறார்கள். இவர்கள் இவ்வுலகிலும் ஸுகமாக வாழ்ந்து கடைசிக் காலத்தில் ஸ்ரீவைகுண்ட லோகத்தை அடைகிறார்கள். மறுபிறவி இல்லாமல் அங்கேயே பகவானோடு பரமானந்தத்தை அநுபவித்துக்கொண்டிருப்பார்கள்

sadagopan.org

ஸ்ரீரங்கநாதன் ராஜகோபுரம் அழகாகக் கட்டி முடித்து விட்டது. வெளியில் பூச்சுவேலை நடைபெற்று வருகிறது. இன்னும் மூன்று நிலைகள்தான் பூச வேண்டும். உள்பக்கம் முழுவதும் பூசி முடிந்துவிட்டது. கலசம் வைப்பதற்கு வேண்டிய மரம் இப்பொழுது தான் கிடைத்தது. அந்த மரங்களே அழகாகச் சீவி, பல நூற்றாண்டுகள் கெடாமல் இருப்பதற்கு வேண்டிய சீதியில் வர்ணம் முதலியவைகளே அடித்து. கோபுரத்தின் மேலே ஏற்றிக்கொண்டிருக் கிறார்கள். கலசங்களே அந்த மரங்களில் வைத்து ஆணிகள் அடிக்க வேண்டியதுதான் பாக்கி. இந்த வேலை ஆவணி மாதத்திற்குள் பூர்த்தியாகிவிடும். ஆவணி மாதம் ஸதஸ்ஸிற்கு வருபவர்கள் எல்லோரும் சேவித்து ஸந்தோஷப்படலாம். தை மாதத்தில் ஸம்ப்ரோக்ஷணம் பண்ண வேண்டுமென்று உத்தேசம்.

சுபமஸ்து

ஸ்ரீரங்கத்தில் ஏழு வருஷங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட ராய கோபுர கைங்கர்யம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன், ஸ்ரீரங்கநாதன் அநுக் ரஹத்தால் பூர்த்தியாகிவிட்டது. பல கைங்கர்யங்களே என் மூலமாக எம்பெருமான் நடத்தி வைத்திருந்தபோதிலும் அவ்வப்பொழுது ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனும் ஸ்ரீரங்கநாதனும் ஸ்வப்னத்தில் எழுந் தருளித் தட்டி எழுப்பி "ராயகோபுர கைங்கர்யத்தைப் பூர்ணமாகச் செய்து வைப்பதுதான் எல்லாக் கைங்கர்யங்களுக்கும் சிகரமாக அமையும். எங்களுக்கும் பரம ஸந்தோஷத்தைக் கொடுக்கும்" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

இந்தக் கைங்கர்யம் பூர்த்தி ஆகுமா? என்று முதலில் அதிசங்கைப் பட்டதுண்டு. ஸ்ரீதிருமங்கை ஆழ்வார் மற்றும் விஜயநகரத்து மன்னர்கள் போன்றவர்கள் காலத்திலும் பூர்ணமாகாத இந்தத் திருப் பணி எப்படிப் பூர்த்தியடையும் என்று நினைத்தது உண்டு. ஆனாலும் அந்த அந்த ஸமயங்களில் எம்பெருமான் நியமித்துக்கொண்டே இருந்தபடியால் எப்படியும் அவன் ஸங்கல்பத்தால் பூர்த்தியடையும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

"பாண்டியன் ஸபையில் பரதத்துவ நிர்த்தாரணம் செய்து சங் கத்தை(பரிசை) அறுத்து எடுத்துக்கொண்டு வா" என்று ஸ்ரீமத் பெரி யாழ்வாரை எம்பெருமான் நியமித்தது போல் என்னையும் எம்பெருமான் நியமிக்கிருன். இது அநாயாஸேன முடியும் என்று எண்ணி இதில் நான் ப்ரவர்த்தித்தேன். அவனால் நியமிக்கப்பட்ட கார்யம் பூர்த்தியா காமல் போகுமா? அவன் ஸத்யஸங்கல்பன் அன்றே?

sadagopan.org

உலகிலுள்ள மக்கள் அனைவரும் தங்களுடைய பாபங்களைப் போக்கடித்துக் கொண்டு உத்தமமான புண்யத்தை ஸம்பாதித்து நற் கதி பெற வேண்டும் என்று பகவான் நினைத்து அவர்களுடைய மனத்தில் தான் புகுந்து அநேக விதமான ஸௌகர்யங்களைக் கோபுரத்துக்குச் செய்விப்பித்து இந்தக் கைங்கர்யத்தைப் பூர்த்திசெய்து வைத்துக் கொண்டான் எம்பெருமான். இப்பொது கோபுர கைங்கர்யம் பூர்ணமாகி விட்டது. ஸம்ப்ரோக்ஷணத்தை எதிர்பார்க்கிறது. கூடிய சீக்கிரத்தில் எம்பெருமான் அதையும் நடத்தி வைத்துக்கொள்வான். அதையும் சீக்கிரத்தில் நாம் ஸேவிக்கலாம்.

இப்போது ஜனங்கள் இருவிதமான புண்யத்தை ஸம்பாதித்துக் கொண்டனர். கோபுரம் பூர்த்தியாவதற்கு எல்லோருமே தங்கள் சக்திக்கு அநுகுணமாகத் தாங்கள் ஸம்பாதித்த த்ரவ்யத்தை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். நன்றாக யோசித்துப் பார்த்தால் இந்தக் கைங்கர்யத்தில் ஒரு ரூபாயாவது கொடுக்காமல் இருந்தவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். இது ஒரு வகைப் புண்யம்.

மற்றொன்று அவ்வப்பொழுது ஸ்ரீரங்கத்துக்கு வந்து பூர்ணமான கோபுரத்தை ஸேவித்து "ஸ்ரீரங்கநாதா! ஸ்ரீரங்கநாதா!" என்று சொல்லிக்கொண்டு போகாதவர் யாரும் இல்லை. உலகத்தில் ஆஸ்திகர்கள், நாஸ்திகர்கள், ஆஸ்திக நாஸ்திகர்கள், நாஸ்திக ஆஸ்திகர்கள் என்று பலவகை உண்டு.

1. எப்பொழுதுமே தெய்வம் ஆலயம் வேதம் முதலியவை உண்டு என்று சொல்பவர்கள் ஆஸ்திகர்கள். 2. எப்போதுமே இவை இல்லை என்று சொல்பவர்கள் நாஸ்திகர்கள். 3. முதலில் இவை எல்லாம் உண்டு என்று சொல்லிப் பிறகு பிறருடைய கலக்கத்தால் இல்லை என்று சொல்லும் ராக்ஷஸர்கள்— ஆஸ்திக நாஸ்திகர்கள். साक्षरा विपरीताश्चेत् राक्षसा एव केवलम् என்று ஒரு பொன்மொழி. साक्षरा என்கிற பதத்தை மாற்றிப் படித்தாலும் राक्षसा என்றுதான் வரும். சப்தம் கார்யம் இரு வகையிலும் இவர்கள் ராக்ஷஸர்கள். இவர்கள்தாம் அதிகமான க்ரூரச் செயலைச் செய்பவர்கள். எப்பொழுதுமே ஒரு கக்ஷியிலிருந்து மற்றொரு கக்ஷிக்குத் தாவினால் தாவின கக்ஷியைப் பலப்படுத்தி ஸ்தாபிப்பார்கள் என்பதை லோகத்தில் பார்த்திருக்கிறோம். 4. நாஸ்திக ஆஸ்திகர்கள்—முதலில் இவர்கள் பெரியோர்களின் பழக்கமில்லாததால் ஒன்றும் தெரியாதவர்கள். வேதம், தெய்வம் முதலியவைகளை அறியாதவர்கள். பிறகு மஹான்களுடைய ஸம்ஸர்க்கம் ஏற்பட்டு ஆஸ்திக்யத்தைப் பெற்றவர்கள். எம்பெருமானிடத்திலும் வேதங்களிலும் அதிக ஈடுபாட்டைப் பெற்றவர்கள்.

sadagopan.org

இப்பொழுது பூர்ணமான கோபுரத்தை சேவிப்பவர்கள் ஆஸ்திகர் களாகவே ஆவார்கள். நாஸ்திகராகவோ ஆஸ்திக நாஸ்திகராகவோ இருக்கமாட்டார்கள்.

கோபுரத்தை சேவித்தவுடனேயே ஸ்ரீரங்கநாதனுடைய நினைவு யாருக்குத்தான் வராது?

நம்மாழ்வார் ஒரு ஸமயம் எம்பெருமானிடத்தில் வைராக்யம் கொண்டு 'எம்பெருமானும் வேண்டாம். அவன் பெயரும் வேண்டாம். அவன் ஊரும் வேண்டாம்' என்று நினைத்து அவ்விடத்தை விட்டுவிட்டு எம்பெருமானுடைய திருநாமமே நடை யாடாத இடமான ஒரு குட்டிச் சுவர் அருகில் அமர்ந்துவிட்டாராம். அந்த ஸமயம் அவ்வூரில் ஒரு திருடன் சுமக்க முடியாத ஒரு மூட்டையைத் தலையில் தூக்கிக்கொண்டு அவ்விடம் வந்து சேர்ந்தான். சுமை தாங்க முடியாமல் 'அட நாராயணா!' என்று சொல்லி மூட்டையைக் கீழே போட்டுவிட்டானும். அதைக்கேட்டு ஸ்ரீநம்மாழ் வார் இங்கும் எம்பெருமான் நம்மைக் கைவிடவில்லை என்று சொல்லி மயிர்க்கூச்செறிந்தாராம். அதன் மூலமாகவே 'செல்வ நாராயணன் என்ற சொல் கேட்டலும்' என்ற பாசுரம் ஏற்பட்டது என்று ஓர் ஐதி ஹ்யம்.இங்கும் நாஸ்திகனாக இருப்பவனும் ஸ்ரீரங்கம் வந்து கோபுரத் தைப் பார்த்தவுடன் ஸ்ரீரங்கநாதனுடைய நினைவைப் பெறுவான். ஸேவார்த்திகளுடைய 'ரங்கநாதா!'' என்ற சொல்லையும் கேட்ப்பான். அவன் புளகாங்கிதகாத்ரன் ஆவான். எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுவான். ஸத்கதியையும் பெறுவான் என்பதில் ஸந்தேஹமே இல்லை.

அஜாமிள உபாக்யானத்தை நாம் கேட்டிருக்கிறோம். அவச மாக நாராயணநாமத்தைக் கேட்டு ஸர்வ பாபங்களிலிருந்தும் விடு படுவான் என்பது சாஸ்த்ர ஸம்மதம்.

அஜாமிளன் தன் கடைசிப் பிள்ளைக்கு நாராயணன் என்று பெயரை வைத்தான். தனக்கு உடல்நிலை சரியாக இல்லாதிருந்த அந்திம காலத்தில் கடைக் குட்டியான இவனைப் பல தடவை பார்க்கக் கூப்பிட்டும் வராத காரணத்தால் கோபம் கொண்டு ''தாஸீபுத்ரா! நாராயணா!'' என்று கூப்பிட்டான். நாராயண சப்தத்தைச் சொன்ன மாத்ரத்தாலேயே அதைக் கேட்ட விஷ்ணுதூதர்கள் யமதூதர்களை விரட்டியடித்தனர். அவனும் நற்கதி பெற்றான்.

sadagopan.org

ஓரிடத்தில் நிறைய விறகு அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதைக் கரியாக்கி வியாபாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தால் அதில் புத்தி பூர்வகமாகவே நெருப்பை வைத்தான். அது கரியாகி விட்டது. மற்றொருவன் விறகு வியாபாரம் செய்ய எண்ணிக் கட்டை களை அடுக்கி வைத்திருந்தான். வழியில் போகும் ஒருவன் தனக்கும் தெரியாமல் தீக்குச்சியைக் கிழித்துப் போட்டுவிட்டான். அது தீப் பிடித்ததும் கரியாகிவிட்டது. ஏன்? நெருப்பு தன் தன்மையைக் காட் டாமல் இருக்குமா? தெரிந்தோ தெரியாமலோ நெருப்புப் பட்டதும் கட்டை கரியாகத்தானே ஆகிவிடும். அதுபோல எம்பெருமானுடைய நாமத்தைத் தெரிந்தோ தெரியாமலோ சொன்னாலும் அது ஸர்வ பாபங்களையும் போக்கடித்து ஸத்கதியைக் கொடுக்கத்தான் செய்யும். ஆக, கோபுரதர்சனம், அதன் மூலம் ஸ்ரீரங்கநாதநாதனுடைய நினைவு, எல்லா மக்களுடைய பாபங்களையும் போக்கடிப்பதுடன் உயர்ந்த கதியையும் கொடுக்கும் என்பது திண்ணம்.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதருடைய அநுக்ரஹத்தினால் தெற்கு பாகத்தில் புதிதாகக் கட்டப்பட்ட பெரிய கோபுரத்தில் பதின்மூன்று கலசங்களையும் வைத்துப் பூர்த்தியாகிவிட்டது. விமானத்தின் மேலே ஏறி ஸேவிப்பதற்கு அழகாகப் படிகள் கட்டப்பட்டிருக்கின்றன. விமானத்தில் கலசங்களைப் பிரதக்ஷிணம் செய்வதற்கு ஸௌகர்யமாக விமானத்தின் இரண்டு பக்கங்களிலும் கைப்பிடிச் சுவர்கள் கட்டப் பட்டிருக்கின்றன. பூச்சுவேலை மூன்று மாதங்களில் முடிந்துவிடும். அனேகமாக ஸம்ப்ரோக்ஷணம் தை மாதத்திலேயே நடக்கலாம் என்று தோன்றுகிறது.

கோபுரத்தைப் பார்க்கிற ஜனங்கள் யாரும் கைகூப்பாதவர்கள் இல்லை. அவ்விதம் கைகூப்புகிறவர்கள் ஸ்ரீரங்கநாதனை நினைக்காமல் இருக்க முடியாதாகையால் அவர்கள் பாபத்திலிருந்து விடுபடு கிறார்கள். பாபம் போனால் பயமும் போய்விடுகிறது. அதனால் அனேக கஷ்டங்களிலிருந்து விடுபடுகிறார்கள். கோபுர தர்சனம் பண்ணியவர்களுக்குச் சில தினங்களில் நன்மைகள் ஏற்படுகிறபடியால் உடனே கோபுர கைங்கர்யத்திற்குக் காணிக்கை ஸமர்ப்பிக்கிறார்கள். கோபுர ஸேவையால்தான் எனக்கு லாபம் கிடைத்தது என்று சொல்லியே கொடுக்கிறார்கள். பூமண்டலத்திலிருந்து தங்கள் லோகத்திற்கு வருகிறவர்கள் குறைந்து விட்டார்களே என்று வருத்தப்படுகிறவன் யமதர்மராஜன் ஒருவன்தான்.

sadagopan.org

உலகிலுள்ளவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களில் இப்பொழுது நாம் ஸமுத்ரத்தில் மூழ்கிக் கிடக்கிறோம் என்பது ஒன்று. எந்த ஸமுத்திரத்தில் எனிருல் ஸம்ஸார ஸாகரம்தான். எவ்வளவு காலமாக என்றால், அனேக கோடி யுகங்களாக முழுகிக் கிடக்கிறோம். ஸம்ஸார ஸாகரத்தில் முழுகிக் கிடக்கிற நாம் என்ன செய்தால் கரை ஏறலாம் என்பதைத் தெரிந்துகொள்வது இரண்டாவது. எதனால் நாம் இப்படிப் பிறவிக் கடலில் முழுகுகிறோம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியமல்லவா? அளவில்லாத பாபங்களைச் செய்ததனால்தான் பிறவிக் கடலில் முழுகிக் கஷ்டங்களை அநுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆசார்யனை அடைந்து அவன் உபதேசத்தால் பகவானை ப்ரார்த்தித்தால்தான் அவன் க்ருபையால் பாப புண்ணியங்களிலிருந்து விடுபட்டு வைகுந்தமடைந்து பகவானுக்கு ஸகல கைங்கர்யங்களையும் செய்துகொண்டே ஸகல ஆனந்தங்களையும் அநுபவித்துக் கொண்டிருக்கலாம் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய அநுக்ரஹத்தினால் தெற்குப் பாகத்தில் புதிதாகக் கட்டப்பட்ட பெரிய கோபுரத்தில் பதினேழுன்று கலசங்களையும் வைத்துப் பூர்த்தியாகிவிட்டது. எல்லோரும் ஸேவித்து ஆனந்தமடைகின்றனர்.

கோபுரத்தை ஸேவித்து ஆஸ்திகர்களாக ஆகாதவர்கள் யாரும் இல்லை. கோபுரத்தை ஸேவிப்பவர்களின் கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகுகின்றது. கோபுரத்தைக் கண்டு கூப்பாத கைகள் இல்லை. 'ரங்கநாத' என்று சொல்லாதவர்கள் இல்லை அது என்ன ரங்கநாதன் மஹிமையோ தெரியவில்லை. கோபுரத்தை ஸேவித்தவர்கள் மேலும் ஸ்ரீவைகுண்ட கோபுரத்தை ஸேவிப்பதற்கு வழி தேடுகிறார்கள் என்பதை அவச்யம் சொல்ல வேண்டியிருக்கிறது.

நான் என்கிற ஆத்மா மிகவும் சிறியது என்று தெரிந்து கொள்ள வேண்டும். அது அழியாத பொருள் என்றும் தெரிந்துகொள்ள வேண்டும். பகவானாலும் அழிக்க முடியாத வஸ்து என்றும் தெரிந்து கொள்ள வேண்டும். அதிலுள்ளதென்றும் நல்லவையும் கெட்டவையு மான காரியங்களைச் செய்யச் சக்தி அதற்கு உள்ளதென்றும் தெரிந்து கொள்ள வேண்டும். அவைகளின் பலன்களான ஸுகதுக்கங்களையும் அநுபவிக்கக் கூடியது என்று தெரிந்துகொள்ள வேண்டும். இந்தப் புண்ணிய பாவங்களிலிருந்து விடுபட்டால்தான் ஸ்ரீவைகுண்ட கோபுரத்தைப் பார்க்க முடியும் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

sadagopan.org

ஸ்ரீமந்நாராயணன்தான் பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்கக் கூடியவன் என்பதையும் அறிய வேண்டும். என்ன செய்தால் பாவங்களிலிருந்து விலக்கிச் சுத்தமாக்கி வைகுந்தம் அருளுவான் என்பதையும் நன்முகத் தெரிந்து கொள்ள வேண்டும். கீதையில் 'மாம் சரணம் வ்ரஜ, ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று அவனே அருளிச் செய்திருக்கிறபடியால் அவனின் திருவடிகளில் சரணாகதி பண்ணினால் அவன் நம்முடைய புண்ணிய பாவங்களை எல்லாம் ஒழித்துச் சுத்தமாக்கி நமக்கு வைகுந்தம் தந்து அனேக ஆயிரம் கோபுர ப்ராகாரங்களையும் தன்னுடைய கோயில் மண்டபாதிகளையும், ஆதிசேஷ தல்பத்தில் தன்னையும் அநுபவிக்கச்செய்து அளவில்லாத ஆனந்தத்தையும் அளிக்கிறான் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். இவ் விஷயங்களைத் தெரிந்துகொள்வதோடு நின்றுவிடாமல் எல்லோரும் உடனே தாமதிக்காமல் சரணாகதி பண்ணிக்கொண்டு ஸர்வவிதமான ஆனந்தத்தையும் அடைந்து இன்புற்றிருப்பீர்களாக.

அநேகமாக கோபுர ஸம்ப்ரோக்ஷணம் சித்திரை மாஸம் நடக்கலாம். தேதி முதலானவற்றைப் பிறகு அருள்மொழியில் விசதமாகத் தெரிவிக்கிறோம்.

புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஸ்ரீரங்கநாதனின் கோபுரத்தைப் பார்க்கப் பார்க்க 'நவோ நவோ பவதி' என்கிறபடி தினந்தோறும் புதிது புதிதாகவே தோன்றுகிறது. முதல் நிலையில் ஸ்ரீரங்கநாதனும் ஸ்ரீரங்கநாயகியும் ஸேவை ஸாதிப்பது சொல்ல முடியாத அளவு ஆனந்தத்தை உண்டுபண்ணுகிறது. அக்ஷய வருஷம் சித்திரை மாதம் நிச்சயமாக ஸம்ப்ரோக்ஷணம் நடத்தலாம் என்று தீர்மானம் செய்திருக்கிறோம். சீக்கிரத்தில் ஸம்ப்ரோக்ஷண பத்திரிகை போட்டு அனுப்புகிறோம். இந்த ஸம்ப்ரோக்ஷணத்திற்கு ஸுமார் பதினேந்து லக்ஷம் ரூபாய் வேண்டியிருக்கும். எந்த எந்த மஹான்கள் புண்ணியம் செய்திருக்கிறார்களோ இந்தச் செலவில் பங்கு கொள்வதற்கு, தெரியவில்லை. ஸ்ரீரங்கநாதன் தனது ஸஹதர்மிணியான ஸ்ரீரங்க நாச்சியாரோடு கலந்து எப்படிப் பூர்த்தி பண்ணிக்கொள்ளப் போகிறானோ? எனக்கு ஒன்றும் பரமில்லை.

ஸ்ரீரங்கநாதனுடைய பெரிய கோபுரம் பூர்த்தியாகக் கட்டி முடிந்துவிட்டது. அதிமனோஹரமாக இருக்கிறது. பூச்சு வேலையும் முடிந்துவிட்டது. மின்விளக்குகள் (எலக்டிரிக் லைட்டுகள்) போட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதல் நிலையில் ஸ்ரீரங்கநாதன் மூலவர் சயனத் திருக்கோலத்தில் தெற்கு முகமாக எழுந்தருளப் பண்ணப் பட்டிருக்கிறார். வடக்குப் பக்கத்தில் தாயாரை எழுந்தருளப் பண்ணியிருக்கிறார்கள். கம்பீரமான ஸேவை. ஆனந்தமாக இருக்கிறது. கோயிலுக்கு வருகிறவர்களில் முக்கால்வாசிப் பேர்கள் கோபுரத்தின் மேலே ஏறிப் பார்க்கிறார்கள். ஸந்தோஷப்படுகிறார்கள். கோபுரத்தைப் பற்றியே பேசிக்கொண்டு போகிறார்கள்.

sadagopan.org

ஸம்ப்ரோக்ஷணம் வைகாசி மாதம் பதினான்காம் தேதி வைத்துக் கொள்ளத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது கூடிய சீக்கிரத்தில் பத்திரிகை போட்டு அனுப்புகிறோம். விவரங்களைத் தெரிந்துகொள்ள லாம். எல்லாம் ஸ்ரீரங்கநாதன் திருவுள்ளப்படி நன்கு நடந்து கொண்டு வருகிறது. எனக்கே ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது. எப்படியோ முடிந்துவிட்டது. ஸ்ரீரங்கநாதன் கிருபைதான் காரணம், ஸர்வம் ஸமஞ்ஜஸம். சுபமஸ்து

ஸ்ரீரங்கநாதன் கோபுரவேலை பூர்த்தியாகிவிட்டது. ஸம்ப்ரோ க்ஷணத்திற்கும் நாள் வைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது பக்தர்களின் பிரார்த்தனைக்கிணங்க, கோபுரத்தின் தெற்குப் பாகத்தில் ஒவ்வொரு நிலையின் வாசலின் முன்புறத்திலும் இரண்டு த்வாரபாலகர்கள் விதம் இருபத்தாறு வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள து, வேலை நடந்து வருகிறது.

வடக்குப் புறத்தில் தாயாரை எழுந்தருளப் பண்ணியிருப்பதால் இருபத்தாறு த்வாரபாலிகைகளை வைக்க முடிவு செய்யப்பட்டு அதற்கான வேலையும் நடந்து வருகிறது. ஒவ்வொரு நிலையிலும் நான்கு மூலைப் பக்கங்களிலும் கருடன் வைக்கவும் முடிவு செய்யப் பட்டுள்ளது. ஸ்ரீரங்கத்துக்கு வருகிறவர்கள் எல்லோரும் கோபுரத்தை ஸேவித்து நாம் இருக்கும் ஆச்ரமத்துக்கு வந்து தங்கள் ஸந்தோஷத் தைச் சொல்லிவிட்டுப் போகிறார்கள். இதைக் கேட்டு நாமும் பரம ஸந்தோஷம் அடைகிறோம்.

ஒரு நாள் ஒரு ஸ்த்ரீ வந்தாள். அவள் ஏழை போல் காணப் பட்டாள். அப்படிப்பட்டவள் பத்தாயிரம் ரூபாய்கள் ஸமர்ப்பித்தாள். ''ரொம்ப நாட்களாக ப்ரயத்னப்படுகிறேன். இன்றுதான் பாக்யம் கிடைத்தது'' என்று விஜ்ஞாபித்தாள். மற்றொரு ஸமயம் ஒரு ஸ்த்ரீ கையில் போட்டிருந்த மோதிரத்தைக் கழற்றி ஸமர்ப்பித்தாள்.

இவற்றைவிட ஒரு ஆச்சர்யம். ஒரு புண்யவதி புதியதாகத் திருமாங்கல்யம பண்ணிக் கட்டிக்கொண்டு பழைய திருமாங்கல்யத்தை யும் இரண்டு குண்டுகளையும் ஸமர்ப்பித்தாள். பக்தர்கள் இம் மாதிரியாகத் தங்களால் இயன்றதை ஸமர்ப்பித்து வருவதைப் போல் கோபுரத்திலும் சில அதிகப்படியான வேலைகளும் ஆரம்பித்து நடை பெற்று வருகின்றன.

sadagopan.org

ஸ்ரீரங்கநாதன் கோபுரவேலை பூர்த்தியாகிவிட்டது. ஸம்ப்ரோக்ஷணத்தைப்பற்றிப் பிறகு அறிவிக்கப்படும்.

'கோபுரம் கட்டுவது எதற்காக?' என்று சிலர் கேட்கிறார்கள். எல்லோரும் நற்கதியை அடைவதற்காகத்தான் ஸ்ரீரங்கநாதனுக்குக் கோபுரத்தைக் கட்டினோம். கோபுரத்தை நீங்கள் கட்டினால் மற்ற ஜனங்கள் எல்லோரும் எப்படி நல்ல கதியை அடைய முடியும்? இதற்குப் பதில் சொல்லுகிறோம். கேளுங்கள். நல்லவர்கள் யாவரும் கோபுரத்தைப் பார்த்தபுடன் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? இதோ பெரியதாகத் தெரிகிறதே, இது ஸ்ரீரங்கநாதனுடைய கோயில்கோபுரம் என்று சொல்லுகிறார்கள். அப்போது ஸ்ரீரங்கநாதன் அவர்களுடைய மனத்தில் தோன்றுகிறான் அல்லவா? உடனே நல்லவர்கள் கையைக் கூப்பி சேவிக்கிறார்கள். நாஸ்திகர்கள் நிந்திக்கிறார்கள். நாஸ்திகர்கள் நிந்தித்தாலும் ஸ்ரீரங்கநாதனின் திருநாமத்தை (பெயரை)ச் சொல்லித்தானே நிந்திக்கிறார்கள்? தன் பெயரை அவர்கள் சொன்னவுடனே ரங்கநாதன் அவர்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்கிறார்!

ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் வா ஸ்தோபம் ஹேளனமேவ வா |
வைகுண்டநாமக்ரஹணம் அசேஷாகஹரம் விது: ||

என்கிறபடி ரங்கநாதன் என்று பேர் வைத்து அழைத்தாலும், பரிஹாஸம் பண்ணினாலும், கும்பலில் கோவிந்தா போட்டாலும் எல்லாப் பாபங்களும் நாசத்தை அடைந்துவிடுகின்றன என்று சாஸ்த்ரம் கூறுகிறது. ஆகையால், எல்லோரையும் எப்படியாவது கரையேற்றுகிறது கோபுரதர்சனம். ஸந்தேகமில்லை.

நல்ல எண்ணத்தோடு கையைக் கூப்பி சேவித்தவனுக்கு வரும், பலனைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

தவதங்க்ரிமுத்திச்ய கதாபி கேநசித்
யதாததா வாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி: |
ததைவ முஷ்ணத்யசுபாந்யசேஷத:
சுபானி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே ||

என்கிறபடியே கோபுரத்தைப் பார்த்தவுடன் ரங்கநாதனே என்னிக் கையைக் கூப்புகிறார்கள். அதனால் அவர்களுடைய ஸகல பந்தங்களும் போய்விடுகின்றன. ஆகையால் மனுஷ்யனாய்ப் பிறந்தவர்கள் எல்லோருக்கும் கோபுரதர்சனத்தினால் க்ஷேமம் உண்டாகும் என்பதில் ஸந்தேகமில்லை.

கோபுர ஸம்ப்ரோக்ஷணத்தைப்பற்றி அடுத்த மாத ஸஞ்சிகையில் எழுதப்படும்.

sadagopan.org

ஸ்ரீநிருஸிம்ஹ ப்ரியா பத்திரிகையை வாசிக்கும் வாசகர்களே! இதுவரை நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வந்த ஒரு நல்ல செய்தியை இப்பொழுது தெரிவிக்கிறோம்.

நாளது அக்ஷய வருஷம் பங்குனி மீ 11 தேதி (25-3-87) புதன் கிழமை ச்ரவண (திருவோண) நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதித் தெற்கு வாசலில் புதிதாகக் கட்டப்பட்ட ராஜகோபுரத்தின் மஹா ஸம்ப்ரோக்ஷணம் ஸ்ரீரங்கநாயிகா ஸமேத ஸ்ரீரங்கநாதன் நியமனப்படி நடைபெற இருக்கிறது.

மஹா ஸம்ப்ரோக்ஷணத்தை உத்தேசித்து ஐந்து தினங்கள் முன்னதாக ஆரம்பித்து தினந்தோறும் வேத ப்ரபந்த பாராயணங்களும் யாக சாலையில் ஹோமமும் பூர்ணாஹுதியும் நடைபெறும். வேதாத்யயனம் பண்ணிய ஸ்ரீவைஷ்ணவர்கள், ஸ்மார்த்தர்கள் மதிவார்கள் யாவரும் பாராயண கைங்கர்யத்தில் பங்கு கொள்ள வேண்டியது. ஆஸ்திகர்கள் எல்லோரும் வந்திருந்து இந்த மஹோத்ஸவத்தைத் கண்டு களித்திட வேண்டும். நம் வாழ்நாளில் நாம் செய்த புண்ணியத்தால் நமக்குக் கிடைத்த இந்த ஸந்தர்ப்பத்தை நாம் இழந்துவிடக் கூடாது.

ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவத்தைக் கண்டு களிக்கும் ஆஸ்திகர்களும் ,மற்றுமுள்ளாரும் ஸம்ப்ரோக்ஷணத்திற்குத் தங்கள் சக்திக்கு அநுகுணமாக த்ரவ்யத்தைப் பணத்தைத் ஸமர்ப்பித்து பெரும் பாக்யத்தை அடைந்து ஸ்ரீரங்கநாதன் அருளால் நீங்காத செல்வத்தைப் பெற்று மகிழ்திட வாழ்த்துகிறோம். ஸம்ப்ரோக்ஷணத்திற்கு வருபவர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது ஐந்து ரூபாயாவது ஸமர்ப்பித்து ஸந்தோஷமாக இருங்கள்.

ஸம்ப்ரோக்ஷணத்தைப் பற்றிய விவரங்கள் அவ்வப் போது தினசரிப் பத்திரிகைகள் மூலம் தெரிவிக்கப்படும்.

sadagopan.org

மநுஷ்யாநந்தம் என்பது ஒன்று உண்டு. ஒருவன் அரோகத்துடன் காத்ரனுய் வேதாந்தப்ரவசனம் பண்ணிக்கொண்டு, உலகிலுள்ளவர்கள் விஸ்மயிக்கக் கூடிய ரீதியில் நிரதிசய ஐசுவர்யத்தை உடையவனுய் நீண்ட நாள் ஜீவித்திருந்தால் அதை மநுஷ்யாநந்தம் என்று வேதம் கூறுகிறது. 'நச்வரமான ஐச்வர்யத்தை நாம் ஐசுவர்யமாக எண்ணவில்லை. பகவானுக்குத் தொண்டு செய்வதையே நாம் ஐசுவர்யமாக எண்ணுகிறோம். கிங்கரத்வாதிராஜ்யம்' என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

ஸதா-எப்பொழுதும் செய்யக்கூடிய கைங்கர்ய ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகமானது முக்ததசையில்தான் கிடைக்கும். அங்கே போய் நான் நிரந்தரமாகச் செய்யக்கூடிய கைங்கர்யத்தை இந்த தசையிலேயே பூலோக வைகுண்டமெனப்படும் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் ஸ்ரீரங்கநாதன் எனக்கு அநுக்ரஹித்தருளினன். முக்தாநுபூதிம் இஹமே ப்ரததௌ முகுந்த: தந்யம் அத்யைவதமே ஜந்ம. இவ்வு எனக்கு இந்த ராஜகோபுர கைங்கயத்திற்காகத்தான் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து ஸ்ரீரங்கவிமானத்தில் ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளினனே என்று நினைப்பதுண்டு.

கோபுர ஸம்ப்ரோக்ஷணத்தை நேரில் ஸேவிப்பவர்கள், டி-வியில் பார்ப்பவர்கள், காதால் கேட்பவர்கள் யாவருக்கும் புண்ணியம் உண்டு.

இந்த உயர்ந்த ராஜகோபுர கைங்கர்யத்தை அன்று அவனே ஆரம்பித்தான்; இன்று அவனே பூர்த்தி செய்துகொண்டான் என்று நான் முன்பு எழுதியது உங்கள் நினைவில் இருக்கலாம் அதாவது இந்த கோபுரநிர்மாண கைங்கர்யத்தை ஸ்ரீரங்கநாதன் தன் ப்ரீதிக்காகத் தானே செய்து முடித்துவிட்டான்-'கோபுர நிர்மாணக்யம் கர்ம ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே ஸ்வயமேவ காரிதவாந்' என்று அநுஸந்தானம் பண்ணும் காலம் கூடிய சீக்கிரத்தில் வரும்' என்று.

அந்த நல்ல காலம் வந்துவிட்டது. நானும் அவ்வாறே ஸாதிவிகதியாகம் செய்து ஸந்துஷ்டனுகிறேன்.

sadagopan.org

sadagopan.org

HH SrI lakshmInrusimha divya pAdukA sevaka SrI vaNN SaThakopa

SrI VedAnta deSika yatIndra mahAdeSikan

44th paTTam SrImad Azhagiya Singar of SrI MaTham

sadagopan.org